# பொருளியல்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் - 13

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது.)**

**வணிகத்துறை**
**விஞ்ஞான தொழினுட்பப் பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**
**www.nie.lk**

# பொருளியல்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் - 13

**(2018 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கானது)**

வணிகத் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

web : www.nie.lk
Email : info@ nie.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

பொருளியல் - தரம் 13
ஆசிரியர் வழிகாட்டி

© தேசிய கல்வி நிறுவகம்,
மகரகம.
முதலாம் பதிப்பு 2018

ISBN:

வணிகத் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.
www.nie.lk

அச்சுப்பதிப்பு:
இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,
ஹோமாகம கட்டுவான வீதி, தொழினுட்பக் குடியிருப்பு, இலக்கம் 145 இல்
அமைந்துள்ள சவிந்த கிரபிக் சிஸ்டம்ஸ் (தனியார்) கம்பனியில்
அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்டது.



# கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

இலங்கை மாணவர்களுக்குத் தரமானதொரு கல்வியைப் பெற்றுக்கொடுத்தல் எனும் இலக்கைக் கொண்ட கல்வி அமைச்சின் பொறுப்பை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர்களிடமிருந்து கிடைக்கின்ற பங்களிப்பு மகத்தானதாகும். துரிதமாக மாற்றமுறும் ஒரு சமூகத்தில் நவீன மாற்றங்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கக்கூடிய பிரஜைகளை உருவாக்குவதில் ஆசிரியரின் பொறுப்பு மகத்தானதாகும்.

காலத்தின் தேவைகருதி இற்றைப்படுத்தப்பட்ட பாடத்திட்டத்தை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் அமுல்படுத்துவதில் ஆசிரியருக்குக் கைகொடுக்கும் ஆசிரியர் வழிகாட்டியானது கல்வியில் மிக முக்கியமானதொரு சாதனமாகும். உலகக் கல்வி நோக்கங்களை நிறைவுசெய்யும் நோக்குடன் அரசு கொண்டுசெல்லும் செயலொழுங்குகள் வெற்றியளிப்பது வகுப்பறைக்குள் ஏற்படுகின்ற விழிப்புணர்ச்சி மூலமேமாகும். இதற்காக ஆசிரியரைப் பலப்படுத்துவதற்குக் கல்வி அமைச்சானது தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்கின்றது.

அறிவு மேலோங்கியுள்ள ஒரு சமூகத்தில், புதிய கல்வி ஆய்வுகளுக்குத் தூண்டுதல் வழங்கி, பாரம்பரிய அறிவு ஞானத்தை அடிப்படையாகக் கொண்ட சரியான சமநிலை ஆளுமையுடன்கூடிய எதிர்கால சந்ததியொன்றைக் கட்டியெழுப்பும் இலக்கை நோக்கிப் பயணிக்கும் ஆசிரியர்களுக்கு சிரம் பணிகிறேன். உலகின் ஏனைய பிரபல்யமிக்க நாடுகளுடன் போட்டியிடக்கூடிய மாணவர்களுக்கு, எமது தாய்நாட்டைச் சிறந்ததொரு களமாக்குவதில் ஆசிரியர்களின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாசிரிய வழிகாட்டியை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட வளவாளர்களுக்கும் தேசிய கல்வி நிறுவகத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன், அச்சிட்டு விநியோகிக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைப்பு வழங்கிய கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அகில விராஜ் காரியவசம்**
**கல்வி அமைச்சர்**

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாட விதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புக்களின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப் பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்ட துடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடைநிலையிலிருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற் காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப் படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்ப தனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற் படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக் கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பட்ட பாடப் பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# முன்னுரை

சமுதாய முன்னேற்றத்துக்காகப் பெரும் சேவையாற்றுவோரில் ஆசிரியர்களே முன்னிலை வகிக்கின்றனர். சுயமான வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுவோர் ஆசிரியர்களே.

2017 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் புதிய பாடத்திட்டத்திற்கிணங்க உயர்தரத்திலான கற்பித்தல் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்ள ஆசிரியர்களுக்கு வசதிகளைப் பெற்றுக்கொடுக்கும் நோக்குடன், இவ்வாசிரியர் வழிகாட்டியை அச்சிட்டு விநியோகிப்பதற்கு கல்வி வெளியீட்டுத் திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்கின்றது. தேசிய கல்வி நிறுவகம் மூலம் ஆக்கப்பட்டுள்ள இவ்வாசிரியர் வழிகாட்டியானது, மாணவர்களுக்குச் சிறந்ததொரு கற்றல் சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான வழிகாட்டல்களை ஆசிரியர்களாகிய உங்களுக்குப் பெற்றுத் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்.

இம்முயற்சி, ஒரு சிறந்த பெறுபேற்றைத் தருவது இவ்வாசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்திப் பெறும் அனுபவங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பயன்படுத்துவதற்கு எடுக்கும் முயற்சியின் மூலமேயாகும். இந்நற்செயலுக்காக அர்ப்பணிக்கக் கூடிய உங்களுக்கு எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. டீ. பத்மினி நாளிகா**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய,
பத்தரமுல்ல.
28.03.2018

## கலைத்திட்டக் குழு

| | |
|---|---|
| **ஆலோசனையும் அனுமதியும்:** | கல்விசார் அலுவல்கள் சபை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| **பாட இணைப்பாளர்:** | திரு. டி. எல். சி. ஆர். அஜித் குமார<br>விரிவுரையாளர்,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**கலைத்திட்ட ஆலோசனைக் குழு:**

| | |
|---|---|
| திருமதி. பி. எச். குசுமாவதி | பணிப்பாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. டி. எல். சி. ஆர். அஜித் குமார | விரிவுரையாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. டி. அதபத்து | சிரேஷ்ட விரிவுரையாளர்<br>பொருளியல் துறை<br>ருஹுனு பல்கலைக்கழகம். |
| பேராசிரியர் திரு. இ. தயாரத்ன | வணிகத் துறை<br>ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம். |
| பேராசிரியர் திரு. பிரசன்ன பெரேரா | பொருளியல் துறை<br>பேராதனை பல்கலைக்கழகம். |
| கலாநிதி திரு. எம். கணேஷமூர்த்தி | பொருளியல் துறை<br>கொழும்பு பல்கலைக்கழகம். |
| பேராசிரியர் திருமதி கே.யூ.ஏ.தென்னக்கோன் | பொருளியல் துறை<br>களனிப் பல்கலைக்கழகம். |
| திருமதி. எம். கமனி பெரேரா | கல்விப் பணிப்பாளர், வணிகப்பிரிவு<br>கல்விஅமைச்சு |
| கலாநிதி (திரு) வி. எம். சுமனரத்ன | பொருளியல் துறை<br>றுகுணு பல்கலைக்கழகம். |
| திருமதி. எல். அஜந்தாவிதாரன | பிரதி அதிபர்<br>கோதமி பாலிகா வித்தியாலயம்,<br>கொழும்பு. |
| திருமதி. அமரா விஜயவர்தன | ஆசிரியர் சேவை I<br>பெல்லன்விலகடவல மகாவித்தியாலயம். |
| திருமதி. ஏ. எம். எப். மதனியா | பிரதிக் கல்விப் பணிப்பாளர்<br>தென் மாகாணக் கல்வித் திணைக்களம். |

**கலைத்திட்டக்குழு அங்கத்தவர்கள்:**

| | |
|---|---|
| திருமதி. பி. எச். குசுமாவதி | சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திருமதி. எம். ஏ. இந்திரா பத்மினி பெரேரா | சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. எஸ். கே. பிரபாகரன் | சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. ஆனந்த மத்துமகே | விரிவுரையாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திரு. எஸ். ஆர். ரத்னஜீவ | உதவி விரிவுரையாளர், வணிகத் துறை<br>தேசிய கல்வி நிறுவகம். |
| திருமதி. ஐ. பி. எஸ். பத்மினி | ஆசிரியர் சேவை I<br>புனித ஜோசப் பாலிகா வித்தியாலயம்,<br>கேகாலை. |
| திரு. டப்ளியூ. லயனல் | ஆசிரியர் சேவை I<br>விசாகா மகளிர் கல்லூரி, கொழும்பு. |
| திரு. கே. பி. கருணாரத்ன | ஆசிரியர் சேவை I<br>விஜயபா தேசிய பாடசாலை, ஹுன்கம. |
| திரு. பி. எஸ். திலகரத்ன | ஆசிரியர் சேவை I<br>சரசவி உயன மகா வித்தியாலயம். |
| திருமதி. ஹசீனா முசாதிக் | ஆசிரியர் சேவை I<br>திருக்குடும்பக் கன்னியர் மடம், கொழும்பு 4 |
| திருமதி. எல். டி. ரி. நிஷானி | ஆசிரியர் சேவை I<br>கோத்தமி பெண்கள் பாடசாலை, கொழும்பு. |
| திருமதி. பி. ஆர். எஸ். இராஜசிங்க | பிரதி அதிபர்,<br>பொலேஹொட ம.வி. ஹொரண. |
| திரு. பி. எல். ஏ. நந்தசேன | ஆசிரியர் சேவை I<br>சவுத்லண்ட் பெண்கள் பாடசாலை, காலி. |
| திருமதி. பி. டி. தம்மிக்கா | ஆசிரியர் சேவை II<br>பொலேஹொட ம.வி. ஹொரண. |
| திருமதி. எம். ஜி. ஜே. பவித்ராணி | ஆசிரியர் சேவை II<br>சிறிமாவோ பெண்கள் பாடசாலை, கொழும்பு. |
| திரு. எம். எம். ஏ. அலீம் | ஆசிரியர் சேவை II<br>ரணவிம தேசிய பாடசாலை, பேராதெனிய. |

**தமிழ் மொழி பெயர்ப்பு:**

| | |
|---|---|
| திரு. எஸ். கே. பிரபாகரன் | சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>வணிகத் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |
| கலாநிதி. த. முத்துக்குமாரசுவாமி | ஓய்வுபெற்ற அதிபர்,<br>இந்துக் கல்லூரி,<br>கொழும்பு – 04. |
| திருமதி எ. எம். எப். மதனியா | பிரதிக் கல்விப் பணிப்பாளர்,<br>தென் மாகாண கல்வித் திணைக்களம்,<br>காலி. |
| திருமதி. ஹசீனா முசாதிக் | ஆசிரியர் சேவை I<br>திருக்குடும்பக் கன்னியர் மடம்<br>கொழும்பு 4. |
| செல்வி. ஐ. இலேன் கூஞ்ஞே | ஆசிரியர் சேவை III<br>திருக்குடும்பக் கன்னியர் மடம்,<br>கொழும்பு 4. |
| திரு. எம். எச். புஹாரி | ஆலோசகர் (ஓய்வுநிலை)<br>கல்விப் பணிமனை<br>கேகாலை. |

**செவ்வைபார்த்தல்:**

| | |
|---|---|
| திரு. டி. அதபத்து | சிரேஷ்ட விரிவுரையாளர்,<br>பொருளியல் துறை,<br>ருஹுனு பல்கலைக்கழகம். |
| திரு. டி. எல். சி. ஆர். அஜித் குமார | விரிவுரையாளர்,<br>வணிகத் துறை,<br>தேசிய கல்வி நிறுவகம். |

**கணினி அமைப்பு:**

| | |
|---|---|
| செல்வி. கமலவேணி கந்தையா | தேசிய கல்வி நிறுவகம். |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

கல்விப் பொதுத் தராதரப் பத்திர(உயர்தர) பொருளியல் பாடத்திட்டமானது எட்டு வருடங் களுக்கொருமுறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற பாடத்திட்ட மறுசீரமைப்புக் கொள்கைக்கமைய நவீனமயப்படுத்தப்பட்டு 2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப் படுகின்றது. முதற் தடவையாக 2009 ஆம் ஆண்டின்போது தேர்ச்சிகளை அடிப்படை யாகக் கொண்டு அறிமுகப்படுத்தப்பட்ட பொருளியல் கல்வித் திட்டம் இற்றைப்படுத்தப்பட்டு 12, 13 ஆம் தரங்களுக்கான 12 தேர்ச்சிகளை உள்ளடக்கியதாக மீள அடிப்படையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தரம் 13 இற்கு ஏற்றவாறு பாடத்திட்டத்தின் முதலாவது தேர்ச்சியிலிருந்து பதினொராவது தேர்ச்சி வரையில் காணப்படுகின்ற 42 தேர்ச்சி மட்டங்களிற்காக வகுப்பறையில் செயற்படுத்தக் கூடிய செயல்முறை ரீதியாகக் கற்றல் - கற்பித்தல் முறையொன்று இங்கு முன்மொழியப்பட்டுள்ளது.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) பொருளியல் பாடத்திட்டத்தின் தரம் 13 இற்கான சகல தேர்ச்சி மட்டங்களும் உள்ளடங்கும் வகையில் இவ்வாசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள், அத் தேர்ச்சி மட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் பாடவேளைகளின் எண்ணிக்கை மற்றும் தேர்ச்சி மட்ட இறுதியின் போது அடையப்பட வேண்டிய கற்றல் பேறுகள் என்பன முதலாவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதோடு, மேலதிகமாகப் பாடத்தைத் திட்டமிடுவதற்காக முன்மொழியப் படுகின்ற ஆலோசனைகளையும் பாடவிடயங்களையும் தெளிவுபடுத்திக் கொள்வதற்கான வழிகாட்டலொன்றும் முன்மொழியப்பட்டுள்ளது.

இங்கு உத்தேச பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைகளுக்கமைய பொருளியல் பாடத்திற்குரிய பாடவிடயங்கள் தொடர்பான அறிவு மட்டுமன்றி அது தொடர்பாக மாணவர்களது மனப்பாங்கு, திறன், பலங்களும் விருத்தியடையும் வகையில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் செயல்முறை திட்டமிடப்பட்டுக் கொள்ளப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது. இதற்காகத் தேவைப்படும் வழிகாட்டல்கள் இவ் ஆசிரியர் வழிகாட்டியின் மூலம் கிடைக்கப்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு பாடத்தைத் திட்டமிடுவதற்கான ஆலோசனைக்கு ஏற்ப, பாடவிடயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்கும் ஆசிரியர் வழிகாட்டியில் குறிப்பிடப்படுகின்ற விடயங்களைப் பரிசீலனை செய்து, வகுப்பறைக் கற்றல் - கற்பித்தல் கருமங்களுக்குத் தேவையான பாடத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுச் செயற்பாட்டு ரீதியான கற்றலுக்காக மாணவர்களை ஈடுபடுத்துதல் சகல ஆசிரியர்களினதும் கடப்பாடாகும்.

பொருளியலானது செயற்பாட்டுரீதியான பாடமொன்றாக இருப்பதனால் அன்றாடம் வணிகத் துறையில் இடம்பெறும் மாற்றங்கள் தொடர்பாக அவதானத்துடன் இருப்பது மட்டுமன்றிப் பாடத்திட்டத்திற்குரிய பாட விடயங்களில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி ஆசிரியர்களினால் பாடக்குறிப்புக்கள் தயாரிக்கப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**செயற்றிட்டத் தலைவர்**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி | iii |
| பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| முன்னுரை | v |
| கலைத்திட்டக் குழு | vi- viii |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் | ix |
| உள்ளடக்கம் | x |
| கற்றற் பேறுகளும் மாதிரிச் செயற்பாடுகளும் | 1 - 217 |

# கற்றல் பெறுபேறுகளும் மாதிரிச் செயற்பாடுகளும்

**தேர்ச்சி 7.0:** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.1:** பணம், பணத்தின் வகை மற்றும் பணத்தின் தொழிற்பாடுகளை ஆராய்வார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- பணத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நல்ல பணத்தின் பண்புகளை விளக்குவார்.
- பணத்தின் தொழிற்பாடுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- பண வகைகளின் விசேட பண்புகளை முன்வைத்து அவற்றுக்கு உதாரணங்களையும் முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டல்கள்:**

- முற்காலத்தில் பணமாகப் பயன்படுத்தப்பட்ட சிப்பி, உலோகத் துண்டுகள், பழைய நாணயங்கள் மற்றும் நிகழ்காலத்தில் பணமாகப் பயன்படுத்தப்படும் தாள் மற்றும் குற்றி நாணயங்கள், காசோலைகள், திறைசேரி உண்டியல்கள், கடனட்டைகள், வரவு அட்டை ஆகியவற்றை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.
- அவை தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டறியவும்.
- அவற்றின் அடிப்படையில் கீழ்த் தரப்படும் அம்சங்கள் மேலெழும் வகையில் கலந்துரையாடலை நிகழ்த்துக.
  - முற்காலத்தில் பணமாக, சிப்பி, உலோகத் துண்டுகள் போன்றன பயன்படுத்தப்பட்டன என்பது.
  - தற்காலத்தில் பணமாக உலோகங்கள் மற்றும் தாள்கள், காசோலை, திறைசேரி உண்டியல், கடனட்டைகள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன என்பது.
  - பண்டைய பணப் பரிமாற்றச் செயற்பாடுகளின்போது காணப்பட்ட குறைபாடுகளானவை, தற்கால பணப்பாவனையில் தவிர்க்கப்பட்டுள்ளன என்பது.

**கற்றலுக்கான உத்தேச வழிகாட்டல்கள்:**

- பின்வரும் நிதிக் கருவிகளால் உமது குழுவிற்குக் கிடைத்த நிதிக் கருவி தொடர்பாகக் கவனத்தைச் செலுத்துக.
  - 1 000 ரூபா பெறுமதியான பணத்தாள் ஒன்று.
  - 10 000 ரூபா பெறுமதியான காசோலையொன்று.
  - 10 000 ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியலொன்று.
  - 10 000 ரூபா பெறுமதியான கடன் பத்திரமொன்று.

- உங்கள் குழுவுக்குக் கிடைக்கப் பெற்றுள்ள நிதிக் கருவியைக் கவனிக்குக.
- அதில் காணப்படக்கூடிய பண்புகள் எவை?
- அந்தப் பண வகையின் மூலம் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய தொழிற்பாடுகள் யாவை?
- உமக்குக் கிடைத்த நிதிக் கருவியை ஏனைய நிதிக் கருவிகளுடன் ஒப்பீடு செய்து அவற்றின் விசேட பண்புகளை இனங்காண்க.

- மாணவர்களின் விடைகளை வகுப்பில் முன்வைக்கச் செய்யவும்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பண்டங்கள் மற்றும் சேவைகளைப் பரிமாற்றம் செய்யும்போது கொடுப்பனவு ஊடகமாகப் பொதுவாக ஏற்றுக் கொள்ளக்கூடிய எதுவும் பணமாகக் கருதப்படுகிறது.
- **நல்ல பணம் ஒன்றின் பண்புகள்:**
    - பொதுவாக் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
    - நீண்டகாலத்துக்கு நிலைத்திருத்தல்.
    - ஓரினத் தன்மை
    - சிறு அலகுகளாகப் பிரிக்கக்கூடியதாக இருத்தல்.
    - இலகுவாகக் கொண்டு செல்லக்கூடியதாக இருத்தல்.
    - பெறுமதி நிலையானதாக இருத்தல்.
    - சட்டரீதியான அங்கீகாரம்.
    - பணத்தின் கிடைப்பனவு மிகையாகவோ மிகவும் குறைவானதாகவோ இல்லாதிருத்தல்.
    - போலிப் பணத்தை உருவாக்க முடியாதிருத்தல்.
    - இலகுவாக இனங்காணக்கூடியதாக இருத்தல்.
- பணத்தின் பிரதான தொழிற்பாடுகள் நான்காகும். அவையாவன,
    (1) பரிமாற்றூடகமாகத் தொழிற்படல்.
    (2) பெறுமதித் திரட்டாகத் தொழிற்படல்.
    (3) கணக்கீட்டு அலகாகத் தொழிற்படல்.
    (4) பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவியாகத் தொழிற்படல்.
- பரிமாற்றூடகமாகத் தொழிற்படுதல் என்பதனால் கருதப்படுவது கொடுக்கல் வாங்கலின் போது அல்லது பொருட்கள் சேவைகளினதும் உற்பத்திக் காரணிகளினதும் பரிமாற்றத்தின் போது **இடைத்தரகராகச்** செயற்படுவதாகும்.
- இத் தொழிற்பாடு காரணமாகப் பணத்தினை வேறு சொத்துக்களிலிருந்து தெளிவாக வேறுபடுத்தி அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். பண்டமாற்று முறையில் காணப்பட்ட தேவைகளின் இரட்டைப் பொருந்துகையின்மை மற்றும் காவிச் செல்லல், களஞ்சியப் படுத்தல், சிறிய அலகுகளாகப் பிரித்தல் ஆகிய பிரச்சினைகள் பணப் பயன்பாட்டின் மூலமாகப் பெருமளவில் தீர்க்கப்பட்டன.

- பண்டமாற்று முறையில் இரு பிரிவினரினதும் விருப்பங்களை பரஸ்பர முறையில் தீர்க்கக் கூடியதாக இருப்பின் அது தேவைகளின் இரட்டை பொருந்துகை எனப்படும்.
- பண்டமாற்று முறையில் தேவைகளின் இரட்டை பொருந்துகையின்மை ஏற்படுகையில் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வது சிக்கலான விடயமாக இருந்தது.
- பணப் பயன்பாட்டின் மூலம் பணமானது **இடையீட்டாளராக** செயற்படுவதனால் தேவைகளின் இரட்டைப் பொருந்துகை அவசியமில்லை.
- ஆபத்து மற்றும் வசதியீனங்கள் இன்றி எதிர்காலத் தேவைகளுக்காகச் சொத்துக்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பணத்தைப் பயன்படுத்துதல் பணம் பெறுமானத் திரட்டாகத் தொழிற்படுகிறது என்பதனால் கருதப்படுகிறது. பண்டங்களாகச் சொத்துக்களைக் களஞ்சியப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினை அவை விரைவாக அழிவடைதல் ஆகும். எனினும் பணத்தின் வடிவில் சொத்துக்களை மாற்றும்போது இத்தகைய குறைபாடுகள் ஏற்படமாட்டாது.
- அதிகமானோர் பெறுமானத் திரட்டாக பணத்தைப் பயன்படுத்துவது, பணம் பூரண திரவத்தன்மை கொண்ட சொத்தாக இருப்பதனாலாகும். பணத்தின் கொள்வனவுச் சக்தி நிலையாக இருத்தல் பணத்தின் இத்தொழிற்பாட்டினை செயற்றிறன் மிக்கதாக்கும்.
- பணம் கணக்கீட்டு அலகொன்றாகத் தொழிற்படுதல் என்பதனால் கருதப்படுவது அனைத்துப் பொருட்களினதும் சேவைகளினதும் சொத்துக்களினதும் பெறுமானங்களுக் கிடையேயான வேறுபாட்டை அறிந்து கொள்வதனூடாக பரிமாற்றச் செயற்பாடுகள் செயற்றிறனுள்ள வகையில் நடைபெறுவதற்கு வழி ஏற்படுகிறது என்பதாகும்.
- பணம் பெறுமதியின் அளவீடாகத் தொழிற்படுவதனால் வணிகக் கணக்கீடு, தேசியக் கணக்கீடு, அரச வரவு செலவு திட்டம் தயாரித்தல், சென்மதி நிலுவை அட்டவணையைத் தயாரித்தல் போன்ற நிதி அறிக்கைப்படுத்தல்கள் இலகுபடுத்தப்பட்டுள்ளன.
- பணம் பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவியாகத் தொழிற்படுதல் என்பதனால் கருதப்படுவது, காலம் கடந்து செய்யப்படுகின்ற கொடுப்பனவு நடவடிக்கைகளைச் செயற்றிறனுள்ள வகையில் நடைபெறச் செய்வதற்குள்ள ஆற்றலாகும். வணிக நிறுவனங்கள் பண்டங்களைக் கடனுக்கு விற்பனை செய்யும்போதும் நிதிநிறுவனங்கள் கடன் வழங்கும் போதும் அக்கொடுப்பனவுகளைத் தீர்ப்பனவு செய்வதற்குக் காலம் செல்கின்றது. நிச்சயமற்ற தன்மையோ ஆபத்தோ இன்றி அக்கொடுப்பனவுகளை முடித்துக் கொள்வதற்குப் பணத்தின் பயன்பாடு காரணமாக முடியுமாகின்றது.
- பணத்தின் பெறுமதி நிலையாக இருப்பது பிற்போடப்பட்ட கொடுப்பனவுக் கருவி எனும் பணத்தின் தொழிற்பாடு மிகவும் செயற்றிறனாக அடைவதற்குக் காரணமாகிறது.
- தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பணத்தின் வகைகள் கீழே காட்டப்படுகின்றன.
  - சட்ட முறைப்பணம்
  - வங்கிப் பணம்
  - கிட்டிய பணம்
  - பணப் பதிலீடு
  - இலத்திரனியல் பணம்

- சட்டமுறைப் பணம் என்பது சட்டரீதியான பெறுமதியொன்று உள்ளடக்கப்படாவிட்டாலும் குறிப்பிட்ட பெறுமதியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக **நாணய அதிகாரியினால்** வெளியிடப்படுகின்ற நாணயங்களும் தாள்களும் ஆக இருப்பதுடன், சட்டமுறைப் பணமானது நாட்டினுள் எந்த வகையான கொடுக்கல் வாங்கல்களையும் மேற் கொள்வதற்கு சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் பூரண திரவத்தன்மை கொண்ட தாகவும் காணப்படும்.
- காசோலையொன்றை எழுதுவதன் மூலம் பயன்படுத்தக்கூடிய கேள்வி வைப்புக்களில் காணப்படும் பண மீதி வங்கிப் பணம் என அழைக்கப்படும். கேள்வி வைப்புக்களும் உயர்ந்த திரவத் தன்மை கொண்டவையாகும்.
- பெறுமானத் திரட்டாகத் தொழிற்படுகின்றதெனினும் பரிமாற்றூடகமாகத் தொழிற்படாத உயர் திரவத்தன்மையுள்ள சொத்துக்கள் கிட்டிய பணம் என அழைக்கப்படும். கிட்டிய பணம் இலகுவாகப் பரிமாற்றூடகமாகப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

  உ+ம்:- நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், திறைசேரி உண்டியல், செலாவணி உண்டியல், வாக்குறுதிச்சீட்டு ஆகியவற்றைக் கிட்டிய பணத்திற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- பெறுமானத் திரட்டாகத் தொழிற்பட முடியாதெனினும் தற்காலிகமாகப் பரிமாற்றூடகமாகத் தொழிற்படும் கருவிகளே பணப் பதிலீடு என அழைக்கப்படும். கடனட்டைகளும் வரவு அட்டைகளும் பணப்பதிலீடுகளுக்கு உதாரணமாகக் காட்டக்கூடியவையாகும். சட்ட முறைப் பணமோ காசோலைப் பயன்பாடோ இன்றிக் குறுங்காலத்தில் கொடுக்கல் வாங்கல்களுக்காக இப்பணப் பதிலீடுகளைப் பயன்படுத்தலாம்.

  குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தினால் தனிநபர்களுக்குக் குறுங்காலக் கடனொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான கருவியொன்றாகக் கடன் அட்டையைக் குறிப்பிடலாம். கடனட்டைகள் தற்காலிகமாகப் பொருட்கள் சேவைகளின் பரிமாற்றத்துக்காகப் பயன்படுத்தப்படும் ஊடக மொன்றாகும்.

- கடனட்டைகள் பணமாகக் கருதப்படுவதில்லை. இதற்கு இரு விடயங்கள் காரணமாக அமைகின்றன.
  - பணத்தினால் நிறைவேற்றப்படும் சகல தொழிற்பாடுகளும் கடனட்டைகள் மூலம் நிறைவேற்றப்படாமை.
  - கடனட்டை மூலம் வாடிக்கையாளனுக்கு வழங்கப்படும் உச்சக் கடன் எல்லையைத் தாண்டிய பின்னர் மேலும் கடனட்டையைப் பயன்படுத்திக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ள வேண்டியிருப்பின், குறிப்பிட்ட நிதிநிறுவனத்துக்குக் கடன் பணத்தைச் செலுத்த வேண்டும் (பணமாகக் கருதப்படுவது நிதி நிறுவனத்துக்குச் செலுத்தப்படும் பணமே தவிரக் கடனட்டையன்று).
- வாடிக்கையாளர்கள் நிதிநிறுவனமொன்றில் குறிப்பிட்டளவான பணத்தொகையொன்றை வைப்புச் செய்கின்றபோது தன்னியக்க டெலர் இயந்திரம் ஒன்றின் மூலம் மீண்டும் பணத்தைப் பெறுவதற்கு, வேறு கணக்கொன்றுக்கு மாற்றுவதற்கு பயன்படுத்துகின்ற உபகரணம் வரவு அட்டையாகும்.

- வரவு அட்டை பணமாகக் கருதப்படாமைக்குக் காரணம் பணத்தினால் நிறைவேற்றப் படும் சகல தொழிற்பாடுகளும் இதன் மூலம் நிறைவேற்றப்படாமையாகும்.
- பணத்தை இலத்திரனியல் முறையினைப் பயன்படுத்திச் சேர்த்து மென்பொருள் ஒன்றின் மூலம் கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தும் முறைமையே இலத்திரனியல் பணம் எனப்படும் வரவு அட்டை, கடனட்டை, E. Banking, Easy Cash Bit Coin என்பவற்றை இலத்திரனியல் பணத்துக்கு உதாரணங்களாகக் காட்டலாம்.

**தேர்ச்சி 7.0:** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.2:** பணத்துக்குக் கேள்வியொன்று ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளையும் பணத்தின் கேள்வியைத் தீர்மானிக்கும் காரணிகளையும் ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- பணத்தின் கேள்வியினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பணத்துக்குக் கேள்வி ஏற்படுவதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- பணத்துக்குக் கேள்வி ஏற்படுவதற்கான காரணங்களை வரிப்படங்களைப் பயன்படுத்தி விளக்குவார்.
- பணத்துக்குக் காணப்படும் கேள்வியினைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டல்கள்:**

- மாணவர்களுக்குப் பணம் தேவைப்படுகின்றதா என விசாரிக்கவும்.
- அவ்வாறு பணம் தேவைப்படுவதற்கான காரணங்களை மாணவர்களிடம் வினவி வரிசைப் படுத்தவும்.
- கீழே தரப்படும் விடயங்கள் கண்டறியப்படும் வகையில் கலந்துரையாடலை மேற் கொள்ளவும்.
  - மாணவர்களைப் போலவே சகல மக்களும் பல்வேறு நடவடிக்கைகளுக்காகப் பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பர் என்பது.
  - அவ்வாறு பொதுமக்கள் பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பதற்குக் காணப்படும் விருப்பம் பணத்தின் கேள்வி என அழைக்கப்படும் என்பது.
  - பணத்தின் கேள்வியில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் என்பது
- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்து கற்றலுக்கான அறிவுறுத்தல்களை வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**கற்றலுக்கான உத்தேச வழிகாட்டல்கள்:**


- ஒரு தனிநபருக்கு பணம் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் பல கீழே தரப்படுகின்றன. அவற்றுள் உமது குழுவிற்குக் கிடைக்கும் சந்தர்ப்பம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துக.
  - அரிசியைக் கொள்வனவு செய்வதற்கு
  - வீட்டில் தோன்றும் திடீர் தேவைகளுக்கு
  - பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு
- உமது குழுவிற்குக் கிடைத்த சந்தர்ப்பம் தொடர்பாகக் கவனஞ் செலுத்துக.
- இவ்வாறு பணம் தேவைப்படுகின்ற ஏனைய சந்தர்ப்பங்களுக்கு உதாரணங்களை முன்வைக்குக.

- உமக்கு மாதாந்தம் குறித்தளவு வருமானம் கிடைப்பதாகக் கருதுக. அப்பணத்தில் எந்தளவு தொகை உரிய சந்தர்ப்பத்திற்கு ஒதுக்கப்படும் எனத் தீர்மானிக்குக.
- அம் மாதாந்த வருமானம் இருமடங்காக அமையுமாயின் அந்நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் பணத்தின் அளவைத் தீர்மானிக்குக.
- அதன்படி வருமானம் அதிகரிப்பதோடு மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் பணத்தின் அளவுகளுக்கிடையிலான தொடர்புகளைக் காட்டுவதற்காக வரிப்படமொன்றை அமைக்கும்படி அறிவுறுத்தவும் (குத்தச்சில் ஒதுக்கும் பணத்தையும் கிடையச்சில் வருமானத்தையும் குறிப்பிடுக).
- அவ்வரிப்படத்தை அடிப்படையாகக் கொண்டு வருமானத்துக்கும் மேற்குறித்த நடவடிக்கை களுக்காக ஒதுக்கப்படும் பணத்துக்கும் இடையிலான தொடர்பினை முழு வகுப்புக்கும் முன்வைக்கவும்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் பணத்தைப் பணமாகத் தம்மிடம் வைத்திருப்பதற்குப் பொது மக்களிடம் காணப்படும் விருப்பம் பணத்தின் கேள்வி (திரவத்தேர்வு) என அழைக்கப்படும்.
- பணத்துக்குக் கேள்வி ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் பிரதான காரணங்கள் மூன்றாகும்.
  - (1) கொடுக்கல் வாங்கல் நோக்கம்
  - (2) பாதுகாப்பு நோக்கம்
  - (3) உத்தேச நோக்கம்
- தனிநபர் ஒருவரின் வருமானமும் அவர் செய்கின்ற செலவும் ஒன்றுக்கொன்று பொருந்தாமை காரணமாக அன்றாடக் கொடுக்கல் வாங்கல் செய்யும் நோக்கில் பணத்தைத் தம்மிடம் வைத்திருத்தல் கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்காக ஏற்படும் பணத்தின் கேள்வி என அழைக்கப்படும்.
- வருமானம் உழைக்கின்ற காலத்துக்கும் செலவு செய்கின்ற காலத்துக்கும் இடையேயான கால இடைவெளிக்குள் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களை சுமுகமாக மேற்கொள்ள பணத்தை தம்மிடம் வைத்திருப்பது அவசியமாகும்.
- பிரதானமாக தனிநபர்களின் வருமான மட்டத்திற்கு ஏற்ப கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பணத்துக்கு ஏற்படும் கேள்வி மாற்றமடைகிறது.


- கொடுக்கல் வாங்கல் நோக்கில் பணத்துக்கு ஏற்படுத்தப்படும் கேள்விக்கும் வருமானத் திற்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படுகின்றது. அதனைப் பின்வருமாறு வரிப்பட ரீதியில் காட்டலாம்.




- மேலேயுள்ள வரிப்படத்தின்படி தனிநபர் வருமானம் அதிகரிக்கும்போது அன்றாட கொடுக்கல் வாங்கல்களுக்காகக் கூடுதலான பணத்தொகையைத் தம்மிடம் வைத்திருப்பதற்குத் தூண்டப்படுவர். வருமானம் குறைகின்றபோது அன்றாட கொடுக்கல் வாங்கல்களுக்காகக் குறைந்தளவான பணத்தொகையினைத் தம்மிடம் வைத்திருப்பதற்குத் தூண்டப்படுவர்.
- வருமானத்துக்கு மேலதிகமாகக் கொடுக்கல் வாங்கல் நோக்கத்துக்காகப் பணத்துக்கு ஏற்படும் கேள்வியில் வட்டி விகிதம், விலைமட்டம், பணச் சந்தையின் புதிய நிலைமைகள் மற்றும் நிறுவனக் காரணிகளும் தாக்கம் செலுத்தும்.
- முன்திட்டமிட முடியாத எதிர்பாராமல் ஏற்படும் செலவுகளை வினைத்திறனுடன் தீர்த்துக் கொள்ளும் நோக்கில் தனிநபர்கள் பணத்தினைத் தம்மிடம் வைத்துக் கொள்வது பாதுகாப்பு நோக்கத்தின் காரணமாகப் பணத்துக்கு ஏற்படும் கேள்வியாகும்.

  உ+ம்:- திடீர் விபத்துக்கள், நோய்வாய்ப்படல் போன்ற சந்தர்ப்பங்களில் பயன்படுத்து வதற்காகப் பணத்தைத் தம்மிடம் வைத்திருத்தல்.


- பாதுகாப்பு நோக்கம் காரணமாகப் பணத்துக்கு ஏற்படும் கேள்விக்கும் வருமானத்திற்கும் இடையில் நேரான தொடர்பு காணப்படும் அது கீழ்த்தரப்படும் வரிப் படத்தினால் காட்டப்படுகின்றது.




$\left(M_p^d\right) = f(y)$ - பாதுகாப்பு நோக்கில் பணத்திற்கு ஏற்படும் கேள்வி

y - வருமானம்

- மேலுள்ள வரிப்படத்தின்படி தனிநபர் வருமானம் அதிகரிக்கும்போது மக்கள் பாதுகாப்புக் காரணங்களுக்காகக் கூடுதலான பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பதற்குத் தூண்டப்படுவதுடன் வருமானம் குறைவடையும்போது பாதுகாப்பு நோக்கத்துக்காகக் குறைந்தளவான பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பதற்குத் தூண்டப்படுவர்.
- நிதிப் பத்திரங்களில் பணத்தை முதலீடு செய்வதனால் எதிர்காலத்தில் நன்மை பெறும் நோக்கில் பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பது உத்தேச நோக்கத்திலான பணத்தின் கேள்வியாகும். அல்லாவிடின் சொத்தொன்றாகப் பணத்தைத் தம்மிடம் வைத்திருப்பது உத்தேச நோக்கத்திலான பணத்தின் கேள்வியாகும்.
- மக்கள் பல்வேறு சொத்துக்களைத் தம்மிடம் வைத்திருப்பதற்குத் தூண்டப்படும் அதேவேளை தமது சொத்துக்களிடையே பணத்துக்கும் நிதிப்பத்திரத்துக்கும் இடையிலான தெரிவு வட்டி வீதத்தின் அடிப்படையில் நடைபெறுகிறது. இதன்படி வட்டி விகிதத்துக்கும் சொத்து என்ற வகையில் பணத்தின் கேள்விக்குமிடையே எதிரான தொடர்பு ஒன்று காணப்படுகின்றது. இவ் எதிரான தொடர்பினைக் கீழ்த் தரப்படும் வகையில் வரிப்படம் மூலம் காட்ட முடியும்.




- மேலுள்ள வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு வட்டி வீதம் அதிகரிக்கும்போது உத்தேச நோக்கிலான பணத்தின் கேள்வி குறைவடையும். வட்டி வீதம் குறைவடையும் போது உத்தேச நோக்கிலான பணத்தின் கேள்வி அதிகரிக்கும்.

- வட்டி வீதத்துக்கும் உத்தேச நோக்கிலான பணத்தின் கேள்விக்குமிடையேயான எதிரான தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டாகும்.
- வட்டி வீதத்துக்கும் நிதிப்பத்திரங்களின் விலைக்குமிடையில் காணப்படுவது எதிரான தொடர்பாகும். அதாவது வட்டி விகிதம் அதிகரிக்கும்போது நிதிப் பத்திரங்களின் விலை குறைவடையும் அதேவேளை வட்டி விகிதம் குறைவடையும்போது நிதிப்பத்திரங்களின் விலை அதிகரிக்கும்.
- உண்மையாகவே நிகழ்காலத்தில் வட்டி வீதம் குறைவாயின் நிதிப்பத்திரங்களின் விலை உயர் மட்டத்தில் காணப்படும். எனினும் எதிர்காலத்தில் வட்டி வீதம் உயரும் எனின் அதற்கு எதிராக நிதிப்பத்திரங்களின் விலை குறைவடையும் என மக்களிடையே எதிர்பார்ப்பு ஒன்று உருவாகும். இதனால் நிதிப்பத்திரங்களை கொள்வனவு செய்வதற்கான ஈடுபாடு மக்களிடையே ஏற்படுவதனால் வட்டி வீதம் உயரும்போது உத்தேச நோக்க பணத்திற்கான கேள்வி குறையும். எதிர்காலத்தில் வட்டி வீதம் குறைவடையும் என்றும் அதற்கு நேர்மாறாக நிதிப்பத்திரங்களின் சந்தை விலை உயரும் என்றும் மக்களிடையே எதிர்பார்க்கை தோன்றுமாயின் மக்கள் நிதிப் பத்திரங்களின் விற்பனையில் ஈடுபடுவர். (மேலுள்ள வரைபில் b புள்ளியால் காட்டியவாறு) இதனால் வட்டி வீதம் குறைந்து உத்தேச நோக்க பணக்கேள்வி கூடும்.
- பணத்திற்கான கேள்வியில் தாக்கம் செலுத்தும் காரணிகள் வருமாறு:
  - மெய் வருமானம்
  - வட்டி வீதம்
  - விலைமட்டம்
  - எதிர்பார்க்கை
  - நிறுவனக் காரணிகள்
  - நிதிச் சந்தையில் தோன்றும் நவீன கண்டுபிடிப்புகள்
- மெய் வருமானத்திற்கும் பணத்திற்கான கேள்விக்குமிடையே நேர்கணிய தொடர்பு காணப்படும். அதாவது மெய்வருமானம் கூடினால் பணத்திற்கான கேள்வி கூடும்.
- வட்டி வீதத்திற்கும் பணத்திற்கான கேள்விக்குமிடையே எதிர்கணியத் தொடர்பு காணப்படும். அதாவது வட்டி வீதம் கூடினால் பணத்திற்கான கேள்வி குறையும்.
- விலை மட்டம் கூடும்போதும் பணத்திற்கான கேள்வி கூடும்.
- எதிர்காலத்தில் பணவீக்க வீதம் உயர்வடையும் என எதிர்பார்க்கப்படுகையில் நிகழ் காலத்தில் பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்ய முற்படுவதனால் கையிருப்பில் வைத்திருக்கும் பணத்தினளவு கூடும்.
- நிதிப்பத்திரங்களின் விலை எதிர்காலத்தில் கூடலாம் என எதிர்பார்க்கப்பட்டால் நிகழ் காலத்தில் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கான ஈடுபாடு உயர்வடைவதனால் எதிர்காலத்தில் கொள்வனவு செய்வதற்கு வைக்கும் பணத்தினளவு குறையும்.
- நிறுவனக் காரணிகள் என்பது வருமானம் பெறப்படும் கால இடைவெளியாகும். குறைந்த கால இடைவெளியில் வருமானம் பெறப்படும்போது பணத்திற்கான கேள்வி குறையும். வருமானம் பெறப்படும் கால இடைவெளி கூடும்போது கையிருப்பில் வைத்திருக்கும் பணத்தின் அளவு கூடும்.
- நவீன சந்தையில் தோன்றும் நவீன கண்டுபிடிப்புக்களினாலும், கையிருப்பில் பணத்தை வைத்திருக்கும் அளவு குறையும்.

**தேர்ச்சி 7.0:** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.3:** பண நிரம்பலை விரிவான அடிப்படையில் முன்வைப்பார்.

**பாடவேளைகள்:** 10

**கற்றற் பேறுகள்:**

- பண நிரம்பலை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பண நிரம்பல் தொடர்பான வரைவிலக்கணங்களை ஒழுங்கு முறையில் வரிசைப் படுத்துவார்.
- பண நிரம்பலின் வரைவிலக்கணங்களை விளக்குவார்.
- பண நிரம்பலைத் தீர்மானிக்க காரணிகளை முன்வைப்பார்.
- அடிப்படைப் பணத்தைத் தீர்மானிக்கும் காரணிகளை விளக்குவார்.
- பணப் பெருக்கியினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பணப் பெருக்கிக்கும் அடிப்படைப் பணத்துக்கும் இடையிலான தொடர்பினைச் சமன்பாடு களைப் பயன்படுத்தி விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பண நிரம்பல் என்பது ஏதாவது குறிப்பிட்ட ஒரு காலப் பகுதியில் பொதுமக்களிடையே புழக்கத்தில் இருக்கின்ற மொத்தப் பணத்தொகையாகும். பண நிரம்பல் நிதிக்கூட்டு எனவும் அழைக்கப்படும்.
- பணத்தை வரைவிலக்கணப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் வரைவிலக்கணங்கள் காலத்துடன் இணைந்து வேறுபடுகின்றது. இதற்குப் பிரதான இரண்டு காரணங்கள் உள்ளன.

  (1) நாட்டின் நிதிக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்கள்

  (2) பணமாகக் கருதப்படுகின்ற பூரண திரவத்தன்மை கொண்ட சொத்துக்களில் ஏற்படும் மாற்றங்கள்
- இலங்கையில் பண நிரம்பலை வரைவிலக்கணப்படுத்தும் விதம் கீழே தரப்படுகிறது.
  - ஒடுங்கிய பண நிரம்பல் ($M_1$)
  - விரிந்த பண நிரம்பல் ($M_2$)
  - ஒன்றிணைக்கப்பட்ட பண நிரம்பல்($M_2b$)
  - விரிந்த பண நிரம்பல் ($M_4$)

- ஒடுங்கிய பண நிரம்பல் என்பது பொதுமக்களிடம் உள்ள சட்டமுறைப் பணம் (நாணயங்களும் தாள்களும்) பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் காணப்படும் கேள்வி வைப்புக்கள் என்பவற்றின் மொத்தமாகும்.

$$M_1 = C_P + DD_P$$

$C_P$ = பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணம்

$DD_P$ = பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள்

- விரிந்த பண நிரம்பல் ($M_2$) என்பது ஒடுங்கிய பண நிரம்பல் மற்றும் பொது மக்கள் பெயரில் வணிக வங்கிகளில் இருக்கின்ற தவணை வைப்புக்கள் மற்றும் சேமிப்பு வைப்புக்கள் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.

$$M_2 = M_1 + TSD_{cp}$$

$M_1$ = ஒடுங்கிய பண நிரம்பல்

$TSD_{cp}$ = பொதுமக்கள் பெயரில் வணிக வங்கிகளில் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்

- விரிந்த பண நிரம்பலுடன் ($M_2$) வதியாதோர் வெளிநாட்டுச் சட்ட முறைப் பணக் கணக்குகளில் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புத் தொகையில் 50% ஐயும் வெளிநாட்டு சட்ட முறைப் பண வங்கி அலகுகளில் உள்ள வதிவோருக்குரிய தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களின் மொத்தத்தையும் கூட்டி ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2b$) பெறப்படும்.

$$M_2b = M_2 + TSD_{NRFC} + RD_{FCBU}$$

$M_2$ = விரிந்த பண நிரம்பல்

$TSD_{NRFC}$ = வதியாதோர் வெளிநாட்டுச் சட்டமுறைப் பணக் கணக்குகளில் உள்ள தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 50%

$RD_{FCBU}$ = வெளிநாட்டுச் சட்டமுறைப் பண வங்கி அலகுகளில் காணப்படும் வதிவோருக்குரிய தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள்

ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பலுக்கு அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கி களில் உள்ள பொதுமக்களின் பேரிலான சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் உள்ள பொதுமக்களுக்குரிய சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்களைக் கூட்டும்போது விரிந்த பண நிரம்பல் ($M_4$) பெறப்படும்.

$$M_4 = M_2b + LSB + RFC$$

$M_2b$ = ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பணநிரம்பல்

LSB = அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகளில் உள்ள பொதுமக்களுக்குரிய சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள்

RFC = பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகளில் உள்ள பொதுமக்களுக்குரிய சேமிப்பு மற்றும் நிலையான வைப்புக்கள்

- பண நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகள் கீழே காட்டப்படுகின்றன.
    (1) வங்கி முறைமையில் உள்ள தேறிய உள்நாட்டு சொத்துக்கள்
    (2) வங்கி முறைமையில் உள்ள தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள்.
    (3) ஏனைய தேறிய சொத்துக்கள்

- வங்கி முறைமை கொண்டுள்ள தேறிய உள்நாட்டு சொத்துக்களானவை, வங்கி முறைமை யினால் அரசாங்கத்திற்கு வழங்கப்படும் தேறிய கடன்களையும் வணிக வங்கியினால் தனியார் துறைக்கு வழங்கப்படும் கடன்களையும் உள்ளடக்கியது ஆகும்.
- அரசாங்கமானது பாதீட்டுப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக மத்திய வங்கியிடமிருந்தும், வணிக வங்கியிடமிருந்தும் உண்டியல்கள் மூலம் கடனைப் பெற்றுக் கொள்ளும். அவை சட்டமுறைப் பணமாக பொதுமக்களிடம் சேர்வதன் மூலம் பண நிரம்பலில் ஒரு பிரிவாகச் சேர்வதனால் பண நிரம்பல் அதிகரிக்கும்.
- வணிக வங்கியினால் தனியார் துறையினருக்கு கடன் வழங்கும்போது கேள்வி வைப்புகள் தோன்றும். கேள்வி வைப்பு என்பது பண நிரம்பலில் ஒரு பிரிவாக இருப்பதனால் பண நிரம்பல் கூடும்.
- வங்கி முறைமை கொண்டுள்ள தேறிய வெளிநாட்டு சொத்து என்பது மத்திய வங்கி, வணிக வங்கி கொண்டுள்ள வெளிநாட்டு சொத்து, வெளிநாட்டு பொறுப்பு என்பவற்றிற் கிடையிலான வேறுபாடு ஆகும்.
- மத்திய வங்கி கொண்டுள்ள தேறிய வெளிநாட்டு சொத்து பின்வருமாறு காட்டப்படலாம்.
    - மத்திய வங்கியிடமுள்ள வெளிநாட்டுப் பணம்
    - வெளிநாடுகளில் பிணைகள் மீது மத்திய வங்கி மேற்கொண்ட முதலீடுகள்
    - மத்திய வங்கியின் பெயரில் உள்ள விசேட எடுப்பனவு உரிமைகள் (SDR)
- மத்திய வங்கி கொண்டுள்ள வெளிநாட்டுப் பொறுப்புக்கள் பின்வருமாறு:
    - மத்திய வங்கி வெளிநாடுகளிடமிருந்து பெற்ற கடன்கள்
    - சர்வதேச நிதி நிறுவனங்களும், வெளிநாட்டு வங்கிகளும் மத்திய வங்கியில் மேற் கொண்ட வைப்புகள்.
- வணிக வங்கி கொண்டுள்ள வெளிநாட்டுச் சொத்துக்கள் வருமாறு:
    - வெளிநாட்டு வங்கிகளுக்கு வழங்கிய கடன்களும் உதவிகளும்
    - கழிவுடன் மாற்றிய உண்டியல்கள்
    - வணிக வங்கி கொண்டுள்ள வெளிநாட்டுப் பணம்
    - வெளிநாட்டு வங்கிக் கிளைகளில் உள்ள வணிக வங்கிகளின் பணம்

- வணிக வங்கி உடைமையாகக் கொண்டுள்ள வெளிநாட்டுப் பொறுப்பு பின்வரும் விடயங்களை உள்ளடக்கியுள்ளது.
  - வணிக வங்கிகளால் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து பெற்றப்பட்ட கடன்.
  - வெளிநாட்டு வங்கிகள் உள்நாட்டு வங்கிகளில் மேற்கொண்ட வைப்புகள்.
- வங்கி முறைமை கொண்டுள்ள தேறிய வெளிநாட்டு சொத்து அதிகரிக்கும்போது வங்கியிடமுள்ள ஒதுக்கம் அதிகரித்து கடன் வழங்கல் அதிகரிக்கும். இதனால் கேள்வி வைப்பு விரிவாக்கம் அடைந்து பண நிரம்பல் கூடும்.
- வங்கி முறைமை கொண்டுள்ள ஏனைய தேறிய சொத்துக்கள் என்பது மேலே கூறப்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு தேறிய வெளிநாட்டு சொத்துக்களின் கீழ் சேர்க்கப்படாத, வங்கி முறைமையில் காணப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பவற்றிற்கிடையிலான வேறுபாடுகளாகும்.
- வங்கி முறைமையில் உள்ள ஏனைய தேறிய சொத்துக்கள் உயர்வடையும்போது பண நிரம்பலும் உயர்வடையும்.
- குறிப்பிட்ட ஒரு நாட்டில் மொத்தப் பண நிரம்பலுக்கு அடிப்படையாகவுள்ள மத்திய வங்கிக்குரிய நேரடி நிதிப் பொறுப்புக்கள் அடிப்படைப் பணம் என அழைக்கப்படும் இவை உயர் வலுப் பணம், ஒதுக்கும் பணம் எனும் பெயர்களாலும் அழைக்கப்படும்.

  நாட்டின் மொத்தப் பண நிரம்பல் அடிப்படைப் பணத்தைப் போலப் பல மடங்காகும்.
- அடிப்படைப் பணம் கீழ்த் தரப்படும் கூறுகளைக் கொண்டது.
  - பொதுமக்களிடம் உள்ள சட்டமுறைப் பணம் ($C_P$)
  - வணிக வங்கிகளில் உள்ள சட்டமுறைப் பணம் ($C_{CB}$)
  - வணிக வங்கிகள் மூலம் மத்திய வங்கியில் பேணப்படுகின்ற வைப்புக்கள் (RR)
  - அரசைப் பிரதிநிதிப்படுத்தும் நிறுவனங்கள் மத்திய வங்கியில் பேணிச் செல்கின்ற வைப்புக்கள் ($D_{OI}$)
- மத்திய வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பில் உள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் அடிப்படையில் அடிப்படைப் பணத்தை விளக்க முடியும்.

| **பொறுப்புக்கள்** | **சொத்துக்கள்** |
|---|---|
| • பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணம் $C_P$ | • வணிக வங்கிகளுக்குக் கொடுத்த கடன் $A_{KB}$ |
| • வணிக வங்கிகளிடமுள்ள சட்ட முறைப் பணம் $C_{CB}$ | • அரசுக்குக் கொடுத்த கடன் $CG_{CB}$ |
| • வணிக வங்கிகளுக்குரிய மத்திய வங்கியில் உள்ள வைப்புக்கள் RR | • வெளிநாட்டு ஒதுக்குகள் $FA_{CB}$ |
| • வேறு நிறுவனங்களின் வைப்புக்கள் $D_{OI}$ | • வேறு சொத்துக்கள் $OA_{CB}$ |
| • அரசின் வைப்புக்கள் $DG_{CB}$ | |
| • வெளிநாட்டுக்கடன் $FB_{CB}$ | |
| • வேறு பொறுப்புக்கள் $OL_{CB}$ | |
| மொத்தப் பொறுப்புக்கள் $TL_{CB}$ | மொத்தச் சொத்துக்கள் $TA_{CB}$ |

- மேலுள்ள இருப்பு நிலைக் குறிப்பின்படி அடிப்படைப் பண நிரம்பலுக்குரிய மத்திய வங்கியின் பிரதான பொறுப்புக்களைப் பின்வருமாறு காட்ட முடியும்.

  (1) பொதுமக்களிடமுள்ள சட்டமுறைப் பணம் ($C_P$)
  (2) வணிக வங்கிகளிலுள்ள சட்டமுறைப் பணம் ($C_{CB}$)
  (3) மத்திய வங்கியிடமுள்ள வணிக வங்கிகளுக்குரிய வைப்புக்கள் (RR)
  (4) வேறு நிறுவனங்களுக்குரிய மத்திய வங்கியிலுள்ள வைப்புக்கள் ($D_{OI}$)

- மத்திய வங்கியின் இருப்பு நிலைக் குறிப்பின்படி அடிப்படைப் பணத்தில் தாக்கம் செலுத்துகின்ற காரணிகளைத் (தீர்மானிக்கும் காரணிகள்) பின்வருமாறு இனங்காண முடியும்.

  (1) மத்திய வங்கியிடமுள்ள தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ($CG_{CB}$ - $DG_{CB}$)
     - மத்திய வங்கியினால் வணிகவங்கிகளுக்கு வழங்கப்படும் முற்பணங்கள் ($A_{KB}$)
     - மத்திய வங்கியினால் அரசுக்கு வழங்கப்படும் தேறிய கடன் (NCE)
  (2) மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ($DA_{CB}$ - $FB_{CB}$)
  (3) மத்திய வங்கியின் வேறு சொத்துக்கள் ($NOA_{CB}$)

  மேலே தரப்பட்ட உருப்படிகளில் தேறிய சொத்துக்கள் அதிகரிக்கும்போது அடிப்படைப் பண நிரம்பல் அதிகரிக்கும் அதேவேளை அவற்றின் தேறிய சொத்துக்கள் குறைவடையும் போது அடிப்படைப் பண நிரம்பல் குறைவடையும்.

  (அடிப்படைப் பணத்தில் இடம்பெறாத ஏனைய பொறுப்புக்கள் மற்றும் மத்திய வங்கியின் சொத்துக் கூறுகளின் அடிப்படையில் அடிப்படைப் பணத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காண முடியும் என்பதை மாணவருடன் கலந்துரையாடவும்.)

- பொருளாதாரத்தின் மொத்தப் பண நிரம்பல் மற்றும் அடிப்படைப் பணம் என்பவற்றுக் கிடையிலான தொடர்பு பணப் பெருக்கியினால் காட்டப்படும். அதனைப் பின்வருமாறு சமன்பாடு மூலம் காட்டலாம்.

  $$\boxed{M = kH}$$

  M - பண நிரம்பல்
  k - பணப் பெருக்கி
  H - அடிப்படைப் பணம்

- அதன்படி பணப்பெருக்கியைக் கீழ்த் தரப்படும் வகையில் கணிப்பிடலாம்.
  பணப்பெருக்கிக்கும் அடிப்படை பணத்திற்குமிடையிலான தொடர்பு

  $$\boxed{k = \frac{M}{H}}$$

  இலங்கையில் பண நிரம்பலை பல்வேறு முறைகளில் கணிப்பிடுவதனால் பணப் பெருக்கியையும் $M_1$, $M_2$ , $M_2b$, $M_4$ , $M_5$ என்ற வகையில் பல்வேறு முறைகளில் கணிப்பிடலாம்.
  உ+ம்:-

  $$\underset{(M_1)}{\text{பணப்பெருக்கி}} = \frac{\text{ஒடுங்கிய பணநிரம்பல் } (M_1)}{\text{அடிப்படைப் பணம்}}$$

  $$\underset{(M_2)}{\text{பணப்பெருக்கி}} = \frac{\text{விரிந்த பணநிரம்பல் } (M_2)}{\text{அடிப்படைப் பணம்}}$$

**தேர்ச்சி 7.0:** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.4:** விலைமட்டத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்கள், கோட்பாடுகள் மற்றும் அளவீடுகளைப் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 10

**கற்றற் பேறுகள்:**

- விலைமட்டத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- விலைமட்டத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்களை விளக்குவார்.
- பணவீக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பல்வேறு அணுகுமுறைகளின் கீழ் விளக்குவார்.
- பணவீக்கத்தின் விளைவுகளைக் கூறுவார்.
- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படக்கூடிய நடவடிக்கைகளை விளக்குவார்.
- இலங்கையில் பொது விலைமட்ட மாற்றத்தை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் விலைச் சுட்டெண்களை இனங்காண்பார்.
- விலைச் சுட்டெண் அடிப்படையில் இலங்கையின் விலைமட்டம் தொடர்பான போக்குகளைப் பரீட்சிப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருட்களினதும் சேவைகளினதும் பெறுமதி விலை எனக் கருதப்படும்.
- விலை மாற்றமடையும் போது குறிப்பிட்டளவான பணத் தொகையில் இருந்து கொள்வனவு செய்யக்கூடிய பொருட்கள் சேவைகளின் அளவு (பணத்தின் பெறுமதி) மாற்றமடையும்.
- தனி விலை, சார்பு விலை மற்றும் பொது விலை மட்டம் என்ற வகையில் பொருளொன்றின் அல்லது சேவையொன்றின் விலையுடன் தொடர்பான பிரதான மூன்று வடிவங்கள் காணப்படுகின்றன.
- குறித்த பண்டமொன்றுக்கு அல்லது சேவையொன்றுக்குரிய சந்தை விலையே தனி விலையாகும்.

  உம்:- பேனையொன்றின் விலை 25 ரூபாவாகும்.

  ஒரு கிலோ அரிசியின் விலை 100 ரூபாவாகும்.

- பொருட்களின் விலைகளுக்கிடையிலான விகிதம் சார்பு விலையாகும்.

  உம்:- அரிசி ஒரு கிலோவின் விலை பேனையொன்றின் விலையின் நான்கு மடங்காகும். (1 : 4)

- சகல பொருட்கள் சேவைகளினதும் தனி விலைகளின் சராசரிப் பெறுமதி பொது விலைமட்டம் எனும் பெயரால் அழைக்கப்படும்.

- பொது விலைமட்டத்துடன் தொடர்பான எண்ணக்கருக்கள் பல உள்ளன.
  - பணவீக்கம்
  - பணச்சுருக்கம்
  - பண வீக்கமின்மை

- பொது விலை மட்டத்தில் ஏற்படும் தொடர்ச்சியான அதிகரிப்பு பணவீக்கம் என அழைக்கப் படும்.
- பணச்சுருக்கம் என்பது பொது விலை மட்டத்தில் தொடர்ச்சியாக ஏற்படும் வீழ்ச்சியாகும்.
- பணவீக்க விகிதம் படிப்படியாகக் குறைவடைதல் பணவீக்கமின்மையாகும்.
- பணவீக்கத்துக்கான காரணங்கள் கோட்பாட்டு ரீதியான அணுகுமுறையின் கீழ் விளக்கப் படுகின்றன.
- அதன்படி பணவீக்கத்துக்குரிய காரணங்களை விளக்குவதற்கான பிரதான கோட்பாடுகள் இரண்டாகும்.

  (1) கேள்வித் தூண்டல் பணவீக்கக் கோட்பாடு

  (2) செலவுத் தூண்டல் பணவீக்கக் கோட்பாடு

- நிரம்பலுடன் ஒப்பிடுகையில் கேள்வி அதிகரிப்பதன் காரணமாகப் பொது விலை மட்டம் அதிகரிக்கும் என்பது கேள்வித் தூண்டல் பணவீக்கக் கோட்பாடு என்பதனால் கருதப்படும்.
- அதாவது மொத்தக் கேள்வியில் மிகை காரணமாகப் பொதுவிலை மட்டம் அதிகரிப்ப தாகும்.
- வரையறுக்கப்பட்ட அளவான பொருட் தொகையைத் துரத்திச் செல்லும் மிக அதிகளவான பணத்தொகை என்பதனால் கூறப்படுவதும் இதுவேயாகும்.
- கேள்வித் தூண்டல் பணவீக்கக் கோட்பாட்டின் மாற்று அணுகுமுறைகள் இரண்டு காணப்படுகின்றன.

  (1) பண அளவுக் கோட்பாடு


  (2) கெயின்ஸின் கோட்பாடு

- பண அளவுக் கோட்பாடு என்பது பரிமாற்றுச் சமன்பாட்டை அடிப்படையாகக் கொண்டு விலை மட்டத்தின் நடத்தை தொடர்பாக முன்வைக்கப்படும் ஒரு கோட்பாடாகும்.
- பணத்தின் அளவு மாற்றத்துக்கும் விலைமட்ட மாற்றத்துக்கும் இடையே நேரான தொடர் பொன்று காணப்படுவது பண அளவுக் கோட்பாட்டின் மூலம் காட்டப்படுகிறது.
- அதாவது பணத்தின் அளவில் ஏற்படும் மாற்றமொன்று விலைமட்டத்தில் விகிதசம மாற்றமொன்றை ஏற்படுத்தும்.

  உ+ம்:- பணத்தின் அளவு (நிரம்பல்) 10 மடங்கினால் அதிகரிப்பின் விலைமட்டமும் 10 மடங்கினால் அதிகரிக்கும்.


- பணத்தின் அளவுக்கும் விலைமட்டத்துக்கும் இடையில் காணப்படும் இத்தொடர்பினைக் காட்டுவதற்காகப் பண அளவுக் கோட்பாட்டில் பயன்படுத்தப்படுவது $MV = PT$ எனப்படும் பரிமாற்றச் சமன்பாடாகும்.
- பரிமாற்றச் சமன்பாடானது முன்னர் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட அடிப்படையில் முற்றும் உண்மையான ஒரு கூற்றாகும்.

- அது சமன்பாடாகக் காட்டப்பட்டாலும் கூட அது திட்டவட்டமான ஓர் உண்மையாகும். எனவே அதனை MV = PT என அழைக்க முடியும்.
- இங்கு MV என்பது பணத்தினால் நிறைவேற்றப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியாகும் (M = பணநிரம்பல், V = சுற்றோட்ட வேகம்). PT என்பது பொருளா தாரத்தின் மொத்தக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதியாகும் (P = விலைமட்டம், T = கொடுக்கல் வாங்கல்களின் அளவு).
- இதனால் உண்மையாகவே MV = PT ஆக அமைய வேண்டும்.
- பரிமாற்றச் சமன்பாட்டில் இடம்பெறும் மாறிகளின் நடத்தை தொடர்பான எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு பரிமாற்றச் சமன்பாட்டைக் கோட்பாடொன்றாக (பண அளவுக் கோட்பாடு) மாற்றிக் கொள்ள முடியும்.
- இதற்காகப் பயன்படுத்தப்படும் எடுகோள்கள் இரண்டாகும்.
    (1) பணத்தின் சுற்றோட்ட வேகம் (V) நிலையானது. அது நிலையாக இருப்பது பொதுமக்களின் நிலையான பழக்க வழக்கங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப் படும் காரணியாக இருப்பதனாலாகும்.
    (2) பொருளாதாரத்தின் மெய் உற்பத்தி மட்டம் (T) மாற்றமடையாது காணப்படும் இது நிலையாகக் காணப்படுவது பொருளாதாரத்தில் நிறைதொழில் மட்டம் காணப் படுவதனாலாகும்.
- இவ்வாறு பரிமாற்றச் சமன்பாட்டில் V யும் T யும் நிலையாக இருக்குமெனும் எடுகோளின்படி பணத்தொகைக்கு (M) விகிதசமமாக விலைமட்டம் (P) மாற்றமடைகிறதென பண அளவுக் கோட்பாட்டின் மூலம் காட்டப்படுகிறது.
- கெயின்சின் கோட்பாட்டில் பணவீக்கத்துக்கான காரணங்களை விளக்குவதற்காகக் கருத்திற் கொள்ளப்படுவது வருமானம் மற்றும் செலவுப் பகுப்பாய்வாகும்.
- பொருளாதாரம் ஒன்று நிறை தொழில் மட்டச் சமநிலையினை அடைந்த பின்னர் மேலும் மொத்தக் கேள்வி அதிகரிக்குமாயின் பொருட்கள் சேவைகளின் அளவினை அதிகரிக்க முடியாத காரணத்தினால் பொது விலைமட்டம் அதிகரிக்க தொடங்குகிறது.
- பணவீக்கம் தொடர்பான கெயின்சின் இவ்விளக்கம் கீழே தரப்படும் வரிப்படத்தினால் காட்டப்படுகிறது.



- வரிப்படத்தில் $Y_1$ மூலம் காட்டப்படுவது நிறை தொழில் மட்டமாகும்.
- அந்தச் சந்தர்ப்பத்துக்குரிய மொத்தக் கேள்வி $AD_1$கோட்டினால் காட்டப்படுகிறது.
- நிறைதொழில் மட்ட உற்பத்தி மட்டத்தைத் தாண்டிப் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி அதிகரிக்குமாயின் பொதுவிலை மட்டம் $P_1, P_2, P_3$ என்ற வகையில் தொடர்ச்சியாக அதிகரிப்பது கேள்வியால் தூண்டப்பட்ட பணவீக்கமாகும்.
- செலவுத் தூண்டல் பணவீக்கக் கோட்பாட்டினால் காட்டப்படுவது மூலப்பொருட்களின் செலவு அல்லது உற்பத்திச் செலவு அதிகரித்து மொத்த நிரம்பல் குறைவடைவதனால் பொருட்கள் சேவைகளின் விலை அதிகரிப்பதன் மூலம் பொதுவிலை மட்டத்தில் அதிகரிப் பொன்று ஏற்பட முடியும் என்பதாகும்.
- இங்கு தேசிய வருமானத்தில் பங்காளர்களாவதற்குப் பல்வேறு அமுக்கக் குழுக்கள் செய்கின்ற போராட்டத்தின் விளைவாக மூலப் பொருட்களின் விலைகள் அதிகரித்துப் பொருட்கள் சேவைகளின் விலைமட்டம் அதிகரிக்கின்றனதென இக்கோட்பாட்டாளர்கள் எடுத்துக் காட்டுகின்றனர்.
- இத்தகைய அமுக்கக் குழுக்கள் இரண்டு காணப்படுவதாக கூறும் இக்கோட்பாட்டாளர்கள் அவ்வமுக்கக் குழுக்கள் பணவீக்கம் தொடர்பாகத் தீங்கை ஏற்படுத்துவோராகக் கருதுகின்றனர்.
- அவ்விரு அமுக்கக் குழுக்களாவன,
  - ஒழுங்கமைக்கப்பட்ட உழைப்பு
  - சிலர் உரிமை நிறுவனங்களின் செயற்பாடுகள்
- ஒழுங்கமைக்கப்பட்ட உழைப்பு அதிக வேதனத்தை வேண்டிச் செய்கின்ற ஆர்ப்பாட்டங் களின் விளைவாக வேதன அதிகரிப்பு வழங்கப்படுவதனால் மூலப்பொருட்களின் விலை அதிகரித்து உற்பத்திச் செலவு அதிகரித்து நிரம்பல் குறைவடைந்து விலைமட்டம் அதிகரிக்கிறது. இத்தகைய நிலைமை வேதனத்தால் தூண்டப்பட்ட பணவீக்கம் என அழைக்கப்படும்.
- இன்னொரு பக்கமாகச் சிலர் உரிமை நிறுவனங்களின் செயல் வலயம் காரணமாக இலாபத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டி இருப்பதனால் மூலப்பொருள் விலை அதிகரித்து உற்பத்திச் செலவு அதிகரித்து நிரம்பல் குறைவடைந்து விலை மட்டம் அதிகரிக்கும். இது இலாபத்தினால் தூண்டப்பட்ட பணவீக்கமாகும்.
- வேதனத்தால் தூண்டப்படல் மற்றும் இலாபத்தினால் தூண்டப்படல் என்பவற்றுக்கு மேலதிகமாக மூலப்பொருட்களின் விலை அதிகரித்துச் செலவு அதிகரிப்பதனால் நிறுவன விலை அதிகரித்தல், உற்பத்தியாளர்கள் மீது விதிக்கப்படும் வரி அதிகரித்தல் போன்ற காரணிகளும் தாக்கம் செலுத்துகின்றன.

- செலவுத் தூண்டல் பணவீக்கம் கீழ்த் தரப்படும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளது.




- வரிப்படத்தின்படி $Y_3$ உற்பத்தி மட்டத்தில் விலைமட்டம் $P_1$ ஆகும். செலவு அதிகரிப்புக் காரணமாக மொத்த நிரம்பல் கோடு $AS_1$ இலிருந்து $AS_2$ வரை இடப்புறமாக நகர்ந்துள்ளது.
- எனினும் பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி மட்டத்தில் மாற்றமெதுவும் ஏற்படவில்லை யாதலால் மொத்த நிரம்பல் குறைவடைந்ததன் விளைவாக விலைமட்டம் $P_1 \rightarrow P_2$ வரை அதிகரித்துள்ளது. அது ஒரு பணவீக்க நிலைமையாகும்.
- பணவீக்கமொன்று பொருளாதாரத்துக்குப் பாதகமானதும் பாதகமான பல்வேறு விளைவு களையும் ஏற்படுத்தும். அத்தகைய விளைவுகள் சில கீழே தரப்படுகின்றன.
  (1) வருமான சொத்துப் பரம்பல் பாதகமானதாக அமையும்.
  (2) பொருளாதாரத் தீர்மானம் மேற்கொள்ளும் செயற்பாடு பொருத்தமற்றதாக அமையும்.
  (3) கடன்கொடுத்தோருக்குப் பாதகமாகவும் கடன்பட்டோருக்குச் சாதகமாகவும் அமையும்.
  (4) சேமிப்பாளருக்குப் பாதகமாக அமையும்.
- பணவீக்கம் காரணமாகச் சேமிப்பாளரது சேமிக்கும் ஆற்றல் குறைவடைவதனால் சேமிப்புக் குறைவடைகிறது.
- இன்னொரு வகையில் மெய்வட்டி விகிதம் வீழ்ச்சியடைவதனாலும் சேமிப்புக் குறைவடை யக்கூடும்.

| மெய்வட்டி விகிதம் = பெயரளவு வட்டி விகிதம் - பணவீக்க விகிதம் |
|---|

உ+ம்:- பெயரளவு வட்டி வீதம் = 16%
பணவீக்க வீதம் = 20%
∴ மெய்வட்டி வீதம் = 16% - 20%
= - 4%

- மெய்வட்டி விகிதம் எதிர்கணிய பெறுமதியைப் பெறுவது சேமிப்பாளருக்குப் பாதகமான நிலைமையாகும்.

- இவ்வாறே மெய் வட்டி வீதம் எதிர்கணிய பெறுமதியைப் பெறுவது, நிலையான வருமானம் பெறுவோருக்குப் பாதகமானதாக அமைவதுடன் மாறும் வருமானம் பெறுவோருக்குச் சாதகமானதாக அமையும்.
    - ஓய்வூதியம் பெறுவோர், அலுவலகப் பணியாளர்கள், அரச சேவையில் உள்ளோர் மற்றும் அரசினால் கிடைக்கும் சமூகநலக் கொடுப்பனவுகளில் தங்கியிருப்போர் நிலையான வருமானம் பெறுவோருக்கான உதாரணங்களாகும்.
    - பணவீக்கத்தின்போது நிலையான வருமானம் பெறுவோர் பாதிக்கப்படுவதற்கான காரணம் பண வருமானத்தின் (பெயரளவு வருமானம்) கொள்வனவுச் சக்தி அல்லது மெய்வருமானம் குறைவடைவதாகும்.

$$\text{மெய் வருமானம்} = \frac{\text{பண வருமானம்}}{\text{விலைச் சுட்டெண்}}$$

- மேலுள்ள பாதக விளைவுகளுடன் பின்வருபவையும் தோன்றும்.
    (1) எதிர்கால விலைகள் நிச்சயமற்றதாக அமைவதால் நீண்டகால முதலீட்டாளர்கள் அதைரியமடையும் அதேவேளை குறுங்கால முதலீடுகளில் மட்டும் கவனம் செலுத்தப்படும்.
    (2) சப்பாத்துத் தோல் செலவு மற்றும் விலைப்பட்டியல் செலவு அதிகரித்தல்.
    (3) தனிநபர்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்தலும் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி யடைதலும்
    (4) ஏற்றுமதிப் போட்டித் தன்மைக்குப் பாதிப்பு ஏற்படல்.
    (5) நாணயமாற்று விகிதம் தேய்வடைதல்.
    (6) முழு வறுமை அதிகரித்தல்.

- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய கொள்கை ரீதியான நடவடிக்கைகள் சில கீழே தரப்படுகின்றன.
    - மொத்தக் கேள்வியின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்தல்.
    - மொத்த நிரம்பல் அதிகரிப்பைத் துரிதப்படுத்தல்.
    - நேரடி அரச தலையீடு
    - வினைத்திறனுடைய வளப்பங்கீட்டில் காணப்படும் தடைகளை நீக்குதல்.
- மொத்தக் கேள்வியின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது என்பதனால் கருதப்படுவது வீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டின் மொத்தக் கேள்வியின் அதிகரிப்பைக் குறைந்த மட்டத்தில் பேணிச் செல்ல வேண்டும் என்பது.
- பணவீக்கத்துக்குக் காரணம் காட்டும் கேள்வித் தூண்டல் கோட்பாட்டுக்கிணங்க நிதி விரிவாக்கம் காரணமாகப் மொத்தக் கேள்வியின் அதிகரிப்பொன்றின் மூலம் பணவீக்க மொன்று தோற்றம் பெறுமாயின் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு மொத்தக் கேள்வியினைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- மத்திய வங்கியின் நாணயக் கொள்கை, அரச நிதிக் கொள்கை என்பவற்றைப் பயன்படுத்தி மொத்தக் கேள்வியின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்த வேண்டும்.
- பணவீக்க நிலையொன்று காணப்படும்போது மொத்த நிரம்பல் அதிகரிப்பைத் துரிதப்படுத்த முடியுமாயின் பணவீக்க வேகத்தைக் குறைந்த மட்டத்தில் வைத்திருக்க முடியும் என்பது நிரம்பல் பக்கப் பொருளியலாளர்களது கருத்தாகும்.

- நிரம்பல் பக்கப் பொருளியலறிஞர்கள் நிரம்பல் குறைவடைவதனாலேயே பணவீக்கம் ஏற்படுவதாகக் கூறுகின்றனர்.
- இதனால் அவர்கள் கேள்வி முகாமைத்துவக் கொள்கைகளில் அவ்வளவு கவனம் காட்டுவதில்லை. பதிலாக உற்பத்தி அதிகரிப்பைத் துரிதப்படுத்துவது தொடர்பாகவே கூடிய கவனம் செலுத்துகின்றனர்.
- இதற்காக வரியை நீக்குவதன் முக்கியத்துவத்தை அவர்கள் குறிப்பிடுகின்றனர்.
- வரி நீக்கப்படல் உற்பத்தியாளருக்கும் முதலீட்டாளருக்கும் பாரிய ஊக்குவிப்பாக அமைவதனால் அது உற்பத்தி அதிகரிப்புக்குக் காரணமாகிறது.
- இங்கு உற்பத்தி வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்காகத் தனியார் முதலீட்டை ஊக்குவிக்க வேண்டும் என்பது அவர்களின் கருத்தாகும்.
- பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய எளிமையான கொள்கை ரீதியான நடவடிக்கையாக நேரடி அரச தலையீடு கருதப்படுகிறது.
- விலைக் கட்டுப்பாடு, வருமானக் கட்டுப்பாட்டுக் கொள்கைகள், நேரடி கட்டுப்பாட்டுக் கொள்கைகளுக்கு உதாரணங்களாகும்.
- வேதன விகிதம், விலை என்பன அதிகரிக்கும் அளவு தொடர்பாகச் சில கட்டுப்பாடுகளை விதித்தலே இதன்போது நடைபெறுகிறது.
- இந்நேரடிக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தல் பிரயோக ரீதியில் அவ்வளவு இலகுவான காரியமன்று.
- திட்டமிடல் பொருளாதாரம் ஒன்றில் வேதனம் மற்றும் விலைக் கட்டுப்பாடு ஒரு பொதுவான இலட்சணமாக இருப்பினும் சந்தைப் பொருளாதாரம் ஒன்றில் வேதன விகிதம், விலைகள் தொடர்பாக நேரடித் தலையீடுகள் காணப்படுவது யுத்த நிலைமை போன்ற சில பிரச்சினைக்குரிய நிலைமைகளின் போதேயாகும்.
- வினைத்திறன் வாய்ந்த முறையில் வளப் பங்கீடு செய்வதில் தடைகள் காணப்படுவது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளைப் போலவே அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் காணப்படக்கூடிய ஒரு இலட்சணமாகும்.
- வரி விதிப்பு, மானியத்தை நீக்குதல், கண்காணிப்பு நிறுவனங்கள் மூலம் விலை நிர்ணயித்தல், இறக்குமதிக் கோட்டா முறை போன்றன இத்தகைய தடைகளுக்கு உதாரணமாகும்.
- இத்தடைகளினால் உற்பத்தியாளர்கள் அதைரியப்படுவதனால் பொருளாதார வளர்ச்சி வேகம் வீழ்ச்சியடைகிறது. பொருளாதாரத்தில் வீக்க நிலைமையொன்று உருவாகிறது. எனினும் காணப்படும் தடைகளை நீக்குவதன் மூலம் வளப்பங்கீட்டினை வினைத்திறனுடன் செய்யமுடியுமாக இருப்பதுடன் அதன் மூலம் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியுமாகும்.
- குறிப்பிட்ட காலப் பகுதியினுள் பொது விலை மட்டத்தில் ஏற்படும் மாற்றங்களை அளவிட்டுக் காட்டும் தொகை ரீதியான அளவீடு விலைச் சுட்டெண் என்ற பெயரால் அழைக்கப்படும்.
- விலைச் சுட்டெண் ஒன்றைத் தயாரிக்கும்போது ஒப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் ஆண்டு அடியாண்டு என அழைக்கப்படும்.

- இவ்வடியாண்டில் விலைச்சுட்டெண் = 100 எனக் கருதி ஏனைய ஆண்டுகளில் அவ்விலைச் சுட்டெண் மாற்றமடைந்திருப்பது எவ்வாறு என்பதை அளவிடுவதே நடைபெறுகிறது.
- பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி விலைச் சுட்டெண் தயாரிக்கப்படுவதுடன் எந்த ஒரு விலைச் சுட்டெண்களைத் தயாரிக்கின்றபோதும் பொருட் தொகுதியைத் தெரிவு செய்தல், நிறையிடுதல், மாதிரியைத் தெரிவு செய்தல் போன்ற விடயங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- இவ்விடயங்களைக் கருத்திற் கொண்டு இலங்கையின் பொது விலைமட்ட மாற்றங்களை அளவிடுவதற்காகத் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முக்கியமான விலைச் சுட்டெண்கள் கீழே தரப்படுகின்றன.
  - கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்
  - தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்
  - உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்
  - மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி
- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணுடன் தொடர்பான விசேட இலட்சணங்கள் கீழே தரப்படுகின்றன.
  - 2007 நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்டு 2008 மே மாதத்தில் இருந்து நடைமுறைப் படுத்தப்படும் இலங்கையின் பொது விலை மட்ட மாற்றங்களை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் விலைச் சுட்டெண்ணாகும்.
  - குடிசனமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மூலம் இது வெளியிடப்படுகிறது.
  - 2002 ஆம் ஆண்டு குடிசனமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் மூலம் செய்யப் பட்ட வருமான - செலவு ஆய்வின்படி தயாரிக்கப்படும் ஒன்றாகும்.
  - அடிப்படையாண்டு 2006/2007 ஆகும்.
  - புவியியல் பிரதேசம் கொழும்பு மாவட்டத்துக்கு வரையறுக்கப்படல்.
  - ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சனத்தொகை கொழும்பு மாவட்டத்தில் உள்ள சகல நகர்ப்புற வீட்டு அலகுகளையும் உள்ளடக்கியதாக இருத்தல்.
  - கொழும்பு நகர்ப்புறப் பிரதேசங்களிலுள்ள குடும்பங்களின் மொத்தச் செலவுக்குச் சார்பாக நிறையிடுதல் செய்யப்பட்டிருத்தல்.
  - சுட்டெண்ணுக்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ள பண்டத் தொகுதிகளின் எண்ணிக்கை 10 ஆகவும் பண்ட வகைகள் 95 ஆகவும் இருத்தல்.
  - சுட்டெண்ணைத் தயாரிக்கும்போது மதுபானம், புகையிலை, போதைப் பொருட் களுக்காகச் செய்யப்படும் செலவுகள் கைவிடப்படல்.
  - கொழும்பு நகர்ப்புறத்தை உள்ளடக்கும் வகையில் விலைகளைச் சேகரிக்கும் 14 மத்திய நிலையங்கள் காணப்படல்.
- 2013 ஐ அடியாண்டாகக் கொண்டு (2013 = 100) முழு நாட்டையும் உள்ளடக்கும் வகையில் பொது விலைமட்ட மாற்றங்களை அளவிடுவதற்காக இலங்கையில் தயாரிக்கப் பட்டுள்ள புதிய உத்தியோகபூர்வ நுகர்வோர் விலைச் சுட்டெண் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணாகும்.

- தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் விசேட பண்புகள் கீழே தரப்படுகின்றன.
  - தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மிகவும் விரிந்த புவியியல் பரப்பொன்றை உள்ளடக்கியிருத்தல்.

    இலங்கையின் ஒன்பது மாகாணங்களையும் உள்ளடக்கி விலைச் சுட்டெண்ணைத் தயாரிப்பதற்கு அவசியமான விலைகள் தயாரிக்கப்படுகின்றன.
  - குடிசனமதிப்பு, புள்ளிவிபர திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்டு வெளியிடப் படுகிறது.
  - தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் தயாரிக்கப்படுவது 2012/2013 வருடங்களில் முழு நாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தி தெரிவு செய்யப்பட்ட மாதிரிகளை அடிப்படை யாகக் கொண்டு இருப்பதுடன் அது நுகர்வோர் நடத்தை பற்றிய விரிவான ஒரு பிரதிநிதித்துவமும் ஆகும்.
  - அண்மைக்கால அடியாண்டு பயன்படுத்தப்படுகின்றமை (2013 = 100)
  - நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பிரதான நகரத்தில் விலைகளைச் சேகரிக்க மத்திய நிலையங்கள் மூன்று வீதம் செயற்படுதல்.
- உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் குடிசனமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2015 ஆம் ஆண்டில் இரண்டாம் காலாண்டில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஒரு புதிய விலைச் சுட்டெண்ணாகும்.
- உள்நாட்டு உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பண்டங்கள் மற்றும் சேவைகளுக்காகக் கிடைக்கின்ற சராசரி விலைகளுக்குக் கால அடிப்படையில் ஏற்படும் மாற்றங்கள் இவ்விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்படும்.
- உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணை அறிமுகப்படுத்தியதன் மூலம் சந்தை விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் மிகவும் சரியாகக் காட்டப்படுவதுடன் அதன் போக்குகளைப் பயன்படுத்தி மிகவும் சரியான தீர்மானங்களுக்கு வரக்கூடியதாகவுள்ளது.
- உற்பத்தியாளர் விலைச் சுட்டெண் முக்கியமான ஒரு பேரினப் பொருளாதாரச் சுட்டெண்ணுமாகும்.
- அவ்வாறே குறுங்காலத்தில் ஏற்படக்கூடிய பணவீக்க நிலைமை பற்றி எதிர்வு கூறக்கூடிய சமிக்ஞையாக இருப்பதுடன் பொருளியல் தரவுத் தொகுதிகளுக்கு பணவீக்கத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை நீக்குவதற்குப் பயன்படும் சுருக்கியொன்றாகவும் காணப்படும்.
- பேரினப் பொருளாதாரப் பகுப்பாய்வுச் செயற்பாட்டில் உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணின் தொழிற்பாட்டை இதுவரை நிறைவேற்றிய, மத்திய வங்கியால் கணிப்பிடப் பட்ட மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணுக்குப் பதிலாக பயன்படுத்தப்படுவது உற்பத்தியாளர் விலைச் சுட்டெண்ணாகும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியானது மொத்த உள்நாட்டு உற்பத்தித் தகவல் களினால் வெளிப்படுத்தப்படும் ஒரு சுட்டெண்ணாகும்.
- குறிப்பிட்ட வருடமொன்றின் மொத்த உள்நாட்டு உற்பத்தியினை நடைமுறை விலையிலும் நிலையான விலையிலும் கணிப்பிடுகையில் நடைமுறை விலையில் கிடைக்கும் பெறுமதி உயர்வடைவதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது பொருளாதாரத்தில் விலைமட்டம் உயர் வடைவதாகும்.

- அவ்வாறு நடைமுறை விலை, நிலையான விலை என்பவற்றால் கணிப்பிடப்படும் போது நடைமுறை விலை அதிகரிப்பதை வெளிப்படுத்தும் சுட்டெண் மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி என அழைக்கப்படும்.
- மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி} = \frac{\text{நடைமுறை விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி}}{\text{நிலையான விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

(இங்கு 100 எனக் குறிப்பிடப்படுவது அடியாண்டு விலைச் சுட்டெண் ஆகும். மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியினைத் தயாரிப்பதற்கான அடியாண்டு 2010 = 100 ஆகும்.)

(i) உதாரணம்:- 2010 ஆம் ஆண்டில்,
நடைமுறை விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி = ரூபா மில். 8 000
நிலையான விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி = ரூபா மில். 8 000

எனவே மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி $= \frac{8\ 000}{8\ 000} \times 100 = 100$

(ii) உதாரணம்:- 2011 ஆம் ஆண்டில்,
நடைமுறை விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி = ரூபா மில். 10 000
நிலையான விலையின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தி = ரூபா மில். 8 000

மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி $\left(\frac{10\ 000}{8\ 000} \times 100\right) = \underline{\underline{125\%}}$

2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2011 ஆம் ஆண்டின் விலைச் சுட்டெண் 25% ஆல் அதிகரித்துள்ளது.

- குறித்த விலைச் சுட்டெண் ஒன்றின் பெறுமதி அதிகரிப்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது பொது விலைமட்டத்தின் அதிகரிப்பாகும்.
- அதன்படி விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பு வீதம் என்பது பணவீக்க வீதமாகும்.

அண்மைக்கால இலங்கையில் பயன்படுத்தப்படும் அவ்வவ் விலைச் சுட்டெண்களின் அடிப்படையில் விலைமட்டத்தின் நடத்தை தொடர்பான போக்குப் பின்வருமாறு:

| சுட்டெண் | வருடம் | | விலைச் சுட்டெண்ணின் மாற்ற வீதம் 2016 |
|---|---|---|---|
| | 2015 | 2016 | |
| கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) | 109.8 | 114.7 | - |
| தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் (2013 = 100) | 113.2 | 118.0 | 4.5 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கி (2010 = 100) | 126.8 | 131.4 | 4.2 |

**தேர்ச்சி 7.0:** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.5:** நிதி அமைப்பொன்றின் தொழிற்பாடுகளை விபரிப்பார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- நிதியமைப்பினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையின் நிதியமைப்பின் கூறுகளை விபரிப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- நிதியமைப்பு என்பது உள்நாட்டு, வெளிநாட்டு, வீட்டுத்துறை, நிறுவனத்துறை, அரசு ஆகிய பிரதான பொருளாதார அலகுகளின் நிதி பற்றிய தீர்மானங்களைச் செயற்படுத்தும் சந்தைகள், நிதிநிறுவனங்கள், நிதிக் கருவிகள் மற்றும் நிதி உட்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றின் மொத்தமாகும்.
- நிதியமைப்பானது பின்வரும் கூறுகளைக் கொண்டது.
    - நிதி நிறுவனங்கள்
    - நிதிச் சந்தை
    - நிதிக் கருவிகள்
    - நிதி உட்கட்டமைப்பு வசதி
    - நிதி நிறுவனங்களை மேற்பார்வை செய்யும் கண்காணிப்பு நிறுவனங்கள்
- நிதி நிறுவனங்கள் என்பது பல்வேறு நிதிக் கருவிகளுடனும் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ள பல்வேறு நிதிச் சேவைகளையும் வழங்குகின்ற நிறுவனங்களின் கூட்டு ஆகும்.
- இலங்கையில் நிதி நிறுவனக் கட்டமைப்பு பிரதானமாக 4 பிரிவுகளைக் கொண்டது.
    (1) இலங்கை மத்திய வங்கி
    (2) இடைத்தரகு நிதி நிறுவனங்கள்
    (3) நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள்
    (4) நிதி மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள்
- இடைத்தரகு நிதி நிறுவனம் என்பது மேலதிக நிதி காணப்படும் அலகுகளிலிருந்து சேமிப்பை ஒன்று சேர்த்துக் கொள்கின்றதும் நிதித் தேவை காணப்படும் நிறுவனங்களுக்கு அச்சேமிப்பைப் பெற்றுக் கொடுத்தல் மூலம் இலாபத்தை உழைத்துக் கொள்கின்றதுமான நிறுவனங்களாகும்.

- இலங்கையில் காணப்படும் இத்தகைய இடைத்தரகு நிதி நிறுவனங்கள் கீழே காட்டப் படுகின்றன.
    (1) வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் வங்கி நடவடிக்கைகளைச் செய்வதற்கும் அனுமதி பெற்றுள்ள நிறுவனங்கள்
    (2) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஓய்வூதிய நிதியம்
    (3) காப்புறுதிக் கம்பனிகள்
    (4) முதலீட்டுக் கம்பனிகள்
    (5) அலகுப் பொறுப்பாட்சி
    (6) குத்தகைக் கம்பனிகள்
- வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் மற்றும் அதன் மூலம் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அனுமதி பெற்றுள்ள நிதி நிறுவனங்களின் பிரதான தொழிற்பாடுகள் கீழே காட்டப்படுகின்றன.
    - பல்வேறு வைப்பு வகைகளைப் பொது மக்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் அவர்களின் மேலதிக நிதியைத் திரட்டிக் கொள்ளல்.
    - அவ்வாறு திரட்டப்பட்ட நிதியைக் கடன், முதலீடுகள் என்ற வகையில் பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
- வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கும் அதன் மூலம் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அனுமதி பெற்றுள்ள நிதி நிறுவனங்கள் சில கீழே தரப்படுகின்றன.
    - அனுமதிப்பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்
    - அனுமதிப்பத்திரம் பெற்ற விசேட வங்கிகள்
    - பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்
    - கூட்டுறவுக் கிராமிய வங்கிகள்
    - சணஸ வங்கி
    - வேறு கடன் கொடுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள்
- பொதுமக்களுக்கும் வர்த்தக நிறுவனங்களுக்கும் நிதிச் சந்தையில் நடைபெறும் கொடுக்கல் வாங்கல் வினைத்திறனுடன் நடைபெறுவதற்கு அவசியமான சேவைகளை வழங்குவதற்கும் சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் என அழைக்கப்படும்.
- இத்தகைய நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்குப் பின்வருவனவற்றை உதாரணமாகக் கூட்டலாம்.
    - வணிக வங்கி
    - நிதி முகாமைத்துவ நிறுவனங்கள்
    - நிதி இடைத்தரகர் நிறுவனங்கள்
    - அரச முறிகள் தொடர்பான முதனிலை வர்த்தகர்கள்
- நிதி மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிறுவனங்கள் என்பதனால் கருதப்படுவது நிதியமைப்பொன்றின் நிலைபேறான தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசினால் அமைக்கப் பட்டுள்ள நிறுவனங்களாகும்.

- இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் மற்றும் பரிமாற்று ஆணைக்குழு, இலங்கைக் காப்புறுதிச் சபை என்பன இலங்கையில் உள்ள நிதி மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு நிறுவனங்களாகும்.
- இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் நிதி நிறுவனங்கள் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
  - வங்கித் துறை
    - மத்திய வங்கி
    - அனுமதிப் பத்திரம் பெற்ற வணிக வங்கிகள்
    - அனுமதிப் பத்திரம் பெற்ற விசேட வங்கிககள்
    - வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் ஏனைய நிதி நிறுவனங்கள்
    - அனுமதிப்பத்திரம் பெற்ற நிதிக் கம்பனிகள்
    - கூட்டுறவுக் கிராமிய வங்கி
  - விசேட நிதி நிறுவனங்கள்
    - விசேட குத்தகை நிதிக் கம்பனிகள்
    - முதனிலை விற்பனையாளர்கள்
    - பங்குத் தரகர்கள்
    - அலகுப் பொறுப்பாட்சி நிறுவனங்கள்
    - சந்தை இடைத் தரகர்கள்
    - முயற்சியாளர் மூலதன கூட்டுத் தாபனங்கள்
  - ஒப்பந்த அடிப்படையிலான சேமிப்பு நிறுவனங்கள்
    - காப்புறுதிக் கம்பனிகள்
    - ஊழியர் சேமலாப நிதியம்
    - ஊழியர் நம்பிக்கை நிதியம்
    - அனுமதிக்கப்பட்ட ஓய்வூதிய மற்றும் சேமலாப நிதியம்
    - அரச சேவை சேமலாப நிதியம்
- குறுங்கால, நீண்டகால நிதித்தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிதிக் கருவிகளைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்தலும் நடைபெறுகின்ற மொத்தச் சந்தை நிதிச் சந்தை என அழைக்கப்படும்.
- நிதிச் சந்தை பிரதான இரு பிரிவுகளைக் கொண்டது.
  - பணச் சந்தை
  - மூலதன சந்தை
- ஒரு வருடத்திலும் குறைந்த காலத்தில் முதிர்ச்சி அடைகின்ற திறைசேரி உண்டியல்கள், வணிகப்பத்திரங்கள், வைப்புச் சான்றிதழ்கள் போன்ற வட்டியை உழைக்கின்ற குறுங்காலச் சொத்துக்களின் வியாபாரம் நடைபெறுகின்ற சந்தை பணச் சந்தையென அழைக்கப்படும்.

- பணச் சந்தை கீழே தரப்படும் உப சந்தைகளைக் கொண்டது.
    - (1) வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் பணச் சந்தை
    - (2) திறைசேரி உண்டியல் சந்தை
    - (3) வணிகப் பத்திரங்கள் சந்தை
    - (4) வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை
- வங்கிகளுக்கிடையிலான அழைப்புக் கடன் சந்தை என்பது வணிக வங்கிகள் தமது நாளாந்த திரவத் தன்மையில் காணப்படும் சமநிலையின்மையைச் சரிப்படுத்திக் கொள்கின்ற சந்தையாகும். திரவத் தன்மை பற்றாக்குறைக்கு முகங் கொடுக்கும் வணிக வங்கிகள் திரவத்தன்மை அதிகமாகவுள்ள வங்கிகளிடமிருந்து மிகவும் குறுகிய காலத்துக்கு நிதியைக் கடனாக பெறுதல் இங்கே நடைபெறுகிறது.
- திறைசேரி உண்டியல்கள் என்பதனால் கருதப்படுவது அரசாங்கம் ஒரு வருடத்தை விடக் குறைந்த காலத்துக்குக் கடனைப் பெறுவதற்காகப் பயன்படுத்தும் நிதிக் கருவியாகும். இத்திறைசேரி உண்டியல்கள் சந்தையானது முதலாம் தரச் சந்தை, இரண்டாம் தரச் சந்தை என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. திறைசேரி உண்டியலின் ஆகக்கூடிய முதிர்வுக்காலம் 364 நாட்கள் ஆகும்.
- வர்த்தக நிறுவனங்கள் குறுங்கால நிதியைத் திரட்டிக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் நிதிக் கருவி வணிகப் பத்திரங்கள் என அழைக்கப்படும். நம்பிக்கையின் அடிப்படையில் இவை நடைபெறுகின்றமையால் இவற்றைப் பயன்படுத்தும்போது பிணைகள் அவசியப் படமாட்டாது.
- வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்தல், விற்பனை செய்தலுடன் தொடர்பான சந்தை, வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை என அழைக்கப்படும். நடைமுறையில் உள்ள விலையில் போன்று எதிர்காலத்தில் இணங்கிக் கொண்ட விலையில் வெளிநாட்டு செலாவணியைக் கொள்வனவு செய்தலும் விற்பனை செய்வதும் இங்கு நடைபெறும்.
- ஒரு வருடத்துக்கு மேலான முதிர்ச்சிக் காலத்தையுடைய நிதிக் கருவிகள் மற்றும் கம்பனிகளின் பங்குகள் போன்றன பரிமாற்றப்படும் சந்தை மூலதனச் சந்தை என அழைக்கப்படும்.
- மூலதனச் சந்தை கீழே தரப்படும் உப சந்தைகளை உள்ளடக்கியது.
    - திறைசேரி முறிகள் சந்தை
    - கம்பனி முறிச்சந்தை
    - பங்குச் சந்தை
- நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் அரசு கடன் பெறுவதற்காகப் பயன்படுத்தும் பிரதான கருவி திறைசேரி முறிகள் என அழைக்கப்படும். இவை பரிமாற்றப்படும் சந்தை முதலாந் தரச் சந்தை, இரண்டாம் தரச் சந்தை என இரு பிரிவுகளைக் கொண்டது.
- தனியார் கம்பனிகளினால் நடுத்தர மற்றும் நீண்டகால நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காகக் கம்பனி முறிகளைப் பரிமாற்றும் சந்தையானது கம்பனி முறிச் சந்தை என அழைக்கப்படும்.

- பங்குச் சந்தை என்பது பொதுமக்களுக்குப் பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் வர்த்தக கம்பனிகள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளுக்கு அவசியமான மூலதனத்தைப் பெற்றுக் கொள்கின்ற சந்தையாகும். இக் கொடுக்கல் வாங்கல்கள் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையினூடாக நடைபெறுகிறது.

- இலங்கையின் நிதிச் சந்தையினுள் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் நிதிக் கருவிகள் கீழே தரப்படுகின்றன.
  - அரசாங்கம் வெளியிடும் கடன் கருவிகள்
    - திறைசேரி உண்டியல்
    - திறைசேரி முறிகள்
    - அரசின் கடன் பத்திரங்கள்
  - கம்பனிகள் வெளியிடும் கடன் கருவிகள்
    - வணிகப் பத்திரங்கள்
    - கடன் முறிகள்
  - வணிக வங்கி பயன்படுத்தும் உபகரணம்
    - வைப்புச் சான்றிதழ்
    - சொத்துக்களை அடிப்படையாகக் கொண்ட முறிகள்
    - குத்தகை
    - அழைப்புக்கடன்
    - வியாபாரப் பங்குகள்

- நிதிச் சந்தைகளின் அபிவிருத்தியுடன் பரிமாற்றப்படும் நிதிக் கருவிகளின் தொகையும் அதிகரித்தமையால் அவற்றில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு அக்கருவிகளின் தர ரீதியான தன்மையை இனங்கண்டு முதலீடுகளைத் தெரிவு செய்வதற்காக முறையான வழிகாட்டல் என்ற வகையில் கடன் தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- கடன் தரப்படுத்தல் என்பது கடன் அல்லது நிதிக் கருவியினை வெளியிடுகின்ற நபரின் நிதிச் சக்தி தொடர்பான மதிப்பீடு ஒன்றை முன்வைப்பதாகும். இதன் மூலம் வெளியிடு பவருக்கு அதனை நடாத்திச் செல்வதற்குக் காணப்படும் ஆற்றலும் முதிர்ச்சிக் கால முடிவில் அதனை முழுமையாகத் தீர்த்துக் கொள்வதற்கான ஆற்றலும் பற்றிக் கண்டறியப் படுகிறது.

- கடன் தரப்படுத்தல் நிறுவனங்களுக்கு சில உதாரணங்கள் வருமாறு:
  - மூடிஸ் நிறுவனம்
  - ஸ்டேன்டர்ட் என்ட் புவர்ஸ் நிறுவனம்
  - (f) பிச் ரேடிங்

**தேர்ச்சி 7.0:** **பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.6:** **இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களையும் தொழிற்பாடுகளையும் விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- இலங்கை மத்திய வங்கியை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கை மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை எடுத்துக் கூறுவார்.
- பணக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பணக் கொள்கையின் கருவிகளைப் பெயரிட்டு விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கை மத்திய வங்கி 1949 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் மூலம் 1950 ஆகஸ்ட் 28 ஆம் திகதி நிறுவப்பட்டது. வங்கிப் பொருளியலறிஞரான திரு. ஜோன் எக்ஸ்டர் என்பவரால் முன்வைக்கப்பட்ட அறிக்கையின்படி மத்திய வங்கி நிறுவப்பட்டது.
- இலங்கைப் பொருளாதாரத்தில் பணக் கொள்கையை நடைமுறைப்படுத்தல், நிதி நடவடிக்கைகளுக்கான ஆலோசனை வழங்கல், பொருளாதார உறுதிப்பாடு, விலை உறுதிப்பாடு, நிதி முறைமை என்பவற்றின் உறுதிப்பாட்டைப் பேணுதல் என்பவற்றுக்காக நிறுவப்பட்ட ஒரு சுயாதீன நிறுவனமே மத்திய வங்கியாகும்.
- 2002 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நாணய விதிச் சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்துக்கிணங்க மத்திய வங்கியின் நிகழ்கால நோக்கங்கள் இரண்டாகும்.
  - பொருளாதார உறுதிப்பாட்டையும் விலை உறுதிப்பாட்டையும் பேணுதல்.
  - நிதி முறைமையின் உறுதிப்பாட்டைப் பேணுதல்.
- இவ்விரு நோக்கங்களும் இலங்கையின் உற்பத்தி வளங்களின் அபிவிருத்தியையும் ஊக்குவிப்பையும் ஏற்படுத்தும் நோக்கில் செய்யப்பட வேண்டியமையால் விரிவான அடிப்படையில் மத்திய வங்கியின் நோக்கம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தியேயாகும்.
- பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாடு என்பவற்றால் கருதப்படுவது குறைந்த பணவீக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் பணக் கொள்கையைத் தயாரிப்பதாகும். விலை உறுதிப்பாடும் பொருளாதார உறுதிப்பாடும் முக்கியம் பெறுவதற்கான காரணங்கள் சில கீழே தரப்படுகின்றன.
  - பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல்
  - வினைத்திறனுள்ள வகையில் வளங்களைப் பங்கீடு செய்தல்
  - உற்பத்தியாளரதும், நுகர்வோரினதும் முதலீட்டாளரினதும் ஆபத்துக்களைக் குறைத்தல்.
  - பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தல்.

- பொருளாதார, நிதி, அரசியல் மற்றும் ஏனைய எந்த துறைகளிலும் தோன்றும் உள்ளக, வெளியக அழுத்தங்களினால் தளர்வடையாதிருத்தல் நிதிமுறைமையின் உறுதிப்பாடாகும்.
- மத்திய வங்கியின் அன்றாட நடவடிக்கைகளை அரசு, பொதுமக்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள் என்பவற்றுக்காக தனித்தனியாகவோ பொதுவாகவோ ஆற்றுகின்ற சேவைகள் நாட்டின் பொருளாதாரத்துக்குச் செய்த சேவைகளாகக் குறிப்பிட முடியும். அத்தகைய நடவடிக்கைகள் சில கீழே தரப்படுகின்றன.
- முதன்மை நடவடிக்கைகள்:
  - பணக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
  - நாணயமாற்று விகிதக் கொள்கையை நடைமுறைப்படுத்தல்
  - சட்ட முறைப் பண வெளியீடு
  - உத்தியோகபூர்வ வெளிநாட்டு ஒதுக்குகளின் முகாமைத்துவம்
  - வங்கி, நிதிக் கம்பனிகள், அரச பிணைகள் தொடர்பாக நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற முதலாந் தர வர்த்தகர்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கல், கண்காணிப்பு, மேற்பார்வை ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபடல்.
  - அரசுக்கு ஆலோசனை வழங்கும் வங்கியாகவும் நிதிப் பிரதிநிதியாகவும் செயற்படுதல்.
- பிரதிநிதித்துவ நடவடிக்கைகள்:
  - அரச கடன் முகாமைத்துவம்
  - வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு
  - ஊழியர் சேமலாப நிதி முகாமைத்துவமும் நிர்வாகமும்
  - சிற்றளவான நிதிப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமும் கிராமிய கடன் வழங்கும் திட்டமும்
- பொருளாதார உறுதிப்பாடு, விலை உறுதிப்பாடு, நிதியியல் முறைமையின் உறுதிப்பாடு என்பவற்றை அடைந்து கொள்வதற்கு வட்டி விகிதம், பண நிரம்பல் என்பவற்றில் தாக்கம் செலுத்தும் வகையில் பணக் கருவிகளைக் கையாள்கின்ற செயற்பாடு பணக் கொள்கை என்பதனால் கருதப்படும்.
- இலங்கை மத்திய வங்கி தனது பணக் கொள்கைச் சட்டகத்தை விருத்தி செய்வதுடன் அதனை நெகிழ் தன்மையுள்ள பணவீக்க இலக்குச் சட்டகமாக மாற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.
- தற்கால நிதிக் கொள்கைச் சட்டகத்தின் பிரதான நோக்கங்கள் சிலவாகும்.

  (1) நாணய இலக்கிடல்

  (2) நெகிழ்வுள்ள பணவீக்க இலக்கிடல்
- மத்திய வங்கியின் விருத்தி செய்யப்பட்ட நிதிக் கொள்கைச் சட்டகத்தின் அடிப்படையில் மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்வதற்காகப் பணக்கொள்கை நடைமுறைப் படுத்தப்படுகிறது.
- நாணய இலக்கிடல் என்பதனால் கருதப்படுவது பணப்பெருக்கியின் ஊடாக ஒதுக்கும் பணத்துடன் இணைந்துள்ள இடை இலக்காகிய விரிந்த பண மொத்தத்தைக் கட்டுப்படுத்து வதன் மூலம் இறுதி இலக்காகிய விலை உறுதிப்பாட்டை அடைந்து கொள்வதாகும். இப்பணக் கொள்கையின் தொழிற்பாட்டு இலக்கு என்ற வகையில் ஒதுக்கும் பணம் செயற்பட்டது. எனினும் ஒதுக்குப் பணம் தொடர்ந்தும் தொழிற்பாட்டு இலக்கை இல்லாது விடினும் பணக் கொள்கைக்கு வழிகாட்டுவதற்காகக் கிடைக்கின்ற பிரதான இடைத்தரகுச் சுட்டெண்ணாக ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் $M_Zb$ பயன்படுத்தப்படுகிறது.

- நிகழ்காலத்தில் இலங்கை மத்திய வங்கி தனது செயற்பாட்டு இலக்காக ஒதுக்குப் பணத்துக்குப் பதிலாக நிறையளிக்கப்பட்ட அழைப்புப் பண வீதத்தை (AWCMR) பயன்படுத்தும் அதேவேளை கொள்கை வட்டி விகிதம், பகிரங்கச் சந்தை நடவடிக்கை போன்ற கொள்கை ரீதியான உபகரணங்களின் மீது அதிகரித்தளவில் தங்கியுள்ளது.

- நெகிழ்வுள்ள பணவீக்க இலக்கு என்பதனால் கருதப்படுவது பணவீக்க இலக்கிடல் கிட்டிய பணவீக்கத்தைப் போலவே மெய்ப் பொருளாதாரமும் உறுதிப்படுத்தப்படல் என்பதோடு கடுமையான பணவீக்க இலக்கிடலின்போது நடைபெறுவது மெய்ப் பொருளாதாரம் தொடர்பாகவும் அந்தளவு கருத்திற் கொள்ளாது தனியாகப் பணவீக்கத்தை மட்டும் உறுதிப்படுத்துவதற்கு முயற்சிப்பதாகும்.

- இந்த விருத்தி செய்யப்பட்ட பணக் கொள்கைச் சட்டகத்தின் கீழ் நெகிழ்வுள்ள பணவீக்க இலக்கிடல் நாணய மாற்று விகித முகாமைத்துவத்தின் நெகிழ்வுத் தன்மைக்கு உதவுகின்ற அதேவேளை பணவீக்கத்தை நடுநிலைமைத் தன்மையில் பேணிக் கொள்வதற்கும் காரணமாகிறது.

- பொருளாதாரத்தில் விலை உறுதிப்பாடு, பொருளாதார உறுதிப்பாடு, நிதி உறுதிப்பாடு ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்குப் பண நிரம்பல், வட்டி விகிதம் என்பவற்றில் செல்வாக்குச் செலுத்துவதற்கு மத்திய வங்கியால் பயன்படுத்தப்படும் கருவிகள் பணக் கொள்கைக் கருவிகள் என அழைக்கப்படும். இந்தப் பணக் கொள்கைக் கருவிகள் இரண்டு பிரிவுகளைக் கொண்டது.
  (1) தொகை ரீதியான பணக் கொள்கைக் கருவிகள்
  (2) பண்பு ரீதியான பணக் கொள்கைக் கருவிகள்

- கடன் நிரம்பலைக் குறைப்பதற்காகப் (கட்டுப்படுத்துவதற்காக) பொதுவாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் தொகை ரீதியான பணக் கொள்கைக் கருவிகள் என அழைக்கப்படும்.

- கடனளவையும் கடன் செல்லும் திசையையும் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கியால் எடுக்கப்படும் நடவடிக்கைகள் பண்பு ரீதியான பணக் கொள்கைக் கருவிகள் என அழைக்கப்படும்.

- தொகை ரீதியான பணக் கொள்கைக் கருவிகள் மூன்றாகும்.
  (1) கொள்கை வட்டி விகிதம்
  (2) சட்ட ரீதியான ஒதுக்கு விகிதம்
  (3) பகிரங்கச் சந்தை நடவடிக்கை

- திரவத்தன்மை பிரச்சினைகளை எதிர்நோக்கும் வணிக வங்கிகளுக்கு இறுதிக் கடன் வழங்குவோனாக மத்திய வங்கி செயற்படும் போது மத்திய வங்கியினால் வணிக வங்கிகளிடமிருந்து அறவிடப்படும் வட்டியானது மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதமாகும். இவ்வட்டி வீதம் உயர்த்தப்பட்டால் வணிக வங்கிகள் கடன் பெறும் அளவு குறைந்து, ஒதுக்கம் குறைந்து கடன் வழங்கல் குறைந்து கடனாக்கம் குறைந்து பண நிரம்பலில் ஒடுக்கம் ஏற்படும். மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதம் குறைந்தால் பண நிரம்பல் விரிவடையும்.

- வணிக வங்கிகளினால் மத்திய வங்கியின் விதிகளுக்கேற்ப தமது வைப்புப் பெறுமதியில் குறிப்பிட்ட சதவீதத்தைக் கையிலுள்ள பணமாகவும் வங்கிப் பணமாகவும் வைத்திருப்பது சட்டரீதியான ஒதுக்கு விகிதம் என அழைக்கப்படும். மத்திய வங்கி வணிக வங்கிகளில் பொதுமக்களின் வைப்புக்களில் 10%, 7.5%, 5% என்ற வகையில் மத்திய வங்கியில் வைப்பாக வைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கின்றது.

- பண விரிவாக்கம் ஒன்றை ஏற்படுத்தத் தேவைப்படுமிடத்து மத்திய வங்கி சட்ட ரீதியான ஒதுக்கு விகிதத்தைக் குறைக்கின்ற அதேவேளை வணிக வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரிப்பதனால் கடன் கொடுக்கும் ஆற்றல் அதிகரிக்கிறது. அதேபோன்று பணச் சுருக்கம் ஒன்றை ஏற்படுத்த அவசியப்படும்போது மத்திய வங்கி சட்டரீதியான ஒதுக்கு வீதத்தை அதிகரிக்கும். அப்போது வணிக வங்கிகளின் ஒதுக்குகள் குறைவடைந்து கடன் கொடுக்கும் ஆற்றல் குறைவடைகின்றது.

  உ+ம்:- வணிக வங்கிகளின் பொதுமக்கள் பெயரில் உள்ள
  வைப்புக்கள் = ரூபா மில். 10 000
  சட்டரீதியான ஒதுக்குவீதம் = 10% ஆக காணப்படுவதாக எடுகோள் கொள்வோம்.

  வைத்திருக்க வேண்டிய ஒதுக்குகள் $\frac{10}{100} \times 10\,000 =$ ரூபா 1 000 மில்லியன்

  5% ஆக சட்டரீதியான ஒதுக்குக் குறைக்கப்படின்,

  வைத்திருக்க வேண்டிய ஒதுக்கு $10\,000 \times \frac{5}{100} =$ ரூபா மில். 500

  சட்டரீதியான ஒதுக்கு விகிதத்தைக் குறைத்தமையால் கடன் ஆற்றல் அதிகரித்துப் பண நிரம்பல் அதிகரிக்கிறது.

- பகிரங்கச் சந்தை நடவடிக்கை எனப்படுவது பகிரங்கச் சந்தையில் மத்திய வங்கி உண்டியல்களை விற்கின்ற, கொள்வனவு செய்கின்ற நடவடிக்கையாகும். மத்திய வங்கி திறந்த சந்தையில் உண்டியல்களைக் கொள்வனவு செய்யும்போது மத்திய வங்கியிடமிருந்து பணம், பணச்சந்தை நோக்கிச் செல்லும். மத்திய வங்கி திறந்த சந்தையில் உண்டியல்களை விற்பனை செய்யும்போது பணச் சந்தையிலிருந்து பணமானது மத்திய வங்கியை நோக்கிச் செல்லும். இந்த இரு வகை நடவடிக்கையினாலும் பொருளாதாரத்தில் பண விரிவாக்கமோ பணச் சுருக்கமோ ஏற்படலாம்.

- மத்திய வங்கி துணை தீர் வைப்பு வசதி வீதம், துணை தீர் கடன் வசதி வீதம் என்பவற்றை விதிப்பது கொள்கை வட்டி வீதம் என்பதனால் கருதப்படும்.

- மீளவும் கொள்வனவு செய்தல் என்ற இணக்கத்தின்படி மத்திய வங்கியிடமுள்ள உண்டியல்களைப் பணச் சந்தையில் விற்பனை செய்தல் மீள்கொள்வனவு என அழைக்கப்படும். அது தற்போது நிரந்தர வைப்பு வசதியைப் பெற்றுக் கொடுத்தல் எனவும் அழைக்கப்படும். பணச் சந்தையில் மேலதிகத் திரவத்தன்மை காணப்படும்போது மீள்கொள்வனவு செய்வதன் மூலம் அதனைக் குறைத்துக் கொள்ள முடியுமாகும். இதன் மூலம் வங்கிகளுக்கிடையிலான அழைப்புக்கடன், சந்தையில் வட்டி விகிதத்தின் கீழ் எல்லையால் வரையறுக்கப்படுகிறது.

- மீளவும் விற்பனை செய்தல் என்ற இணக்கத்துடன் மத்திய வங்கி பணச் சந்தையில் உண்டியல்களைக் கொள்வனவு செய்தல் மீள்விற்பனை என அழைக்கப்படுகிறது. இது இன்று மீள்நிதிக்கடன் வசதி பெற்றுக் கொடுத்தல் என அழைக்கப்படுகிறது. பணச் சந்தையில் திரவத் தன்மைப் பற்றாக்குறையொன்று காணப்படுமாயின் மத்திய வங்கி மீள்விற்பனையில் ஈடுபடும். இதன் மூலம் சந்தையில் திரவத்தன்மை நிரம்பல் அதிகரிக்கும். வங்கிகளுக்கிடையிலான அழைப்புச் சந்தையில் வட்டி விகிதம் அதிகரித்தல் இதன் மூலம் கட்டுப்படுத்தப்படலாம். இதனால் மீள்விற்பனை வட்டி விகிதம் அழைப்புக் கடன் பணச் சந்தையின் மேல்எல்லையைக் காட்டும்.

- கடன் அளவையும் கடன் வரும் திசையையும் கட்டுப்படுத்துவதற்கு பயன்படுத்தும் செயற்பாடுகள் பண்பு ரீதியான கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் எனப்படும்.

- பண்புக் கடன் கட்டுப்பாட்டுக் கருவிகள் சில:
  - கடன் வகை தொடர்பாக உச்ச எல்லையை நிர்ணயித்தல்
  - நன்நடத்தைக்கு வழிகாட்டல்
  - தெரிவு செய்யப்பட்ட வட்டி வீதங்களை நிர்ணயித்தல்
  - அடகு பிணைகளை மாற்றுதல்
  - வங்கிக் கடன் கட்டுப்பாடு

**தேர்ச்சி 7.0:** **பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பங்களிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 7.7:** **வணிக வங்கியொன்றின் தொழிற்பாடுகளை விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- வணிக வங்கி என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வணிக வங்கியொன்றின் பிரதான நோக்கங்களை விளக்குவார்.
- வணிக வங்கிகளின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முயற்சிக்கும்போது எதிர் நோக்கும் பிரச்சினைகளை விளக்குவார்.
- வணிக வங்கியொன்றின் தொழிற்பாடுகளை விளக்குவார்.
- வணிக வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பை விளக்குவார்.
- வணிக வங்கியொன்றின் சொத்துக் கட்டமைப்பை விளக்குவார்.
- வணிக வங்கியொன்று பண ஆக்கம் செய்யும் விதத்தை இருப்பு நிலைக் குறிப்பை முன்வைப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- காசோலையொன்றினால், கட்டளையொன்றினால் அல்லது வேறு வழிகளில் கேட்கும் போது மீண்டும் செலுத்தும் நிபந்தனையின் அடிப்படையில் பொதுமக்களிடமிருந்து பண வைப்புக்களை ஏற்றுக் கொள்வதை அதன் பிரதான தொழிற்பாடாகக் கொண்ட இலாப நோக்கத்தையும் கொண்ட நிதி இடைத்தரகர் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்ற மிகவும் பலம் வாய்ந்ததும் பிரதானமானதுமான விசேட நிதி நிறுவனங்களே வணிக வங்கிகள் என அழைக்கப்படுகின்றன.
- வணிக வங்கிகளின் பிரதான நோக்கங்கள் இரண்டாகும். அவையாவன,
    - திரவத்தன்மையைப் பாதுகாத்தல்
    - இலாபத்தை உச்சப்படுத்தல்
- திரவத்தன்மை என்பது முதல் நட்டமின்றி விரைவாகப் பணமாக மாற்றிக் கொள்ளக்கூடிய ஆற்றலாகும். தமது வைப்புக்களைத் தமக்குப் பணம் தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் வங்கியிலிருந்து மீளப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற பொதுமக்களின் நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கு எல்லா சந்தர்ப்பங்களிலும் வணிக வங்கிகள் திரவத் தன்மையைப் பேணிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.
- இலாப நோக்கம் என்பது வங்கி கடன் கொடுத்தல், முதலீடு செய்தல் என்பனவற்றால் உழைக்கும் வட்டி வருமானத்தில் இருந்து வைப்புக்களுக்காக வழங்கும் வட்டிச் செலவைக் கழித்துப் பெறப்படுவது தேறிய வட்டி வருமானமாகும்.
- வணிக வங்கிகள் மேற்குறித்த நோக்கங்களை அடைந்து கொள்ள முயற்சிக்கும்போது நோக்கங்களிடையே முரண்பாடு ஏற்படுகிறது.

- வணிக வங்கிகள் தமது திரவத்தன்மையைப் பாதுகாத்துக் கொள்வதற்கு முயற்சிக்கும் போது இலாபத்தன்மை குறைவடையும் இலாபத் தன்மையைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கும்போது திரவத்தன்மை குறைவடைகிறது. இவ்விரு நோக்கங்களுக்குமிடையில் ஏற்படும் நேரெதிரான செயற்பாடு காரணமாக எப்போதும் திரவத்தன்மைக்கும் இலாபத் தன்மைக்கும் இடையே சமநிலையொன்றைப் பேணவேண்டிய அவசியம் வணிக வங்கிகளுக்கு ஏற்படுகிறது.
- வணிக வங்கிகளின் பிரதான தொழிற்பாடுகளைக் கீழ்த் தரப்படும் வகையில் காட்ட முடியும்.
    - வைப்புக்களை ஏற்றல்:
        - **கேள்வி வைப்புக்களை ஏற்றல் அல்லது நடைமுறைக் கணக்குகளைப் பேணுதல்-** இக்கணக்குகளில் உள்ள பணத்துக்குக் காசோலைகள் மூலம் கொடுக்கல் வாங்கல் களைச் செய்ய முடியும்.
        - **சேமிப்பு வைப்புக்களைப் பேணுதல்** - இவ்வைப்புக்களுக்கு வட்டி செலுத்தல் இடம்பெறும். கணக்குரிமையாளருக்குத் தேவைப்படும்போது பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளவும் முடியும்.
        - **கால / நிலையான வைப்புக்கள்** - குறிப்பிட்ட தினத்தில் முதிர்ச்சி அடைகின்ற வைப்புக்கள் இவ்வகைக்குள் அடங்கும். வாடிக்கையாளனுக்குப் பணத்தை மீளப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக அமைவது முதிர்ச்சிக் காலம் முடிவடைந்த பின்னர் ஆகும். தேவைப்படும்போது அதனைப் பிணையாக வைத்துக் கடன் பெற்றுக் கொள்ள முடியும்.
    - கடன்களும் முற்பணங்களும்
        - குறுங்காலக் கடன்கள்:
            (i) வங்கி மேலதிகப்பற்றுக்கள்
            (ii) தவணைக் கடன்
            (iii) குத்தகைக் கடன்
            (iv) உண்டியல்களைக் கழிவுடன் மாற்றுதல்
            (v) அடகுச் சேவை
        - பிரதிநிதிச் சேவைகளை வழங்குதல்
          (உண்டியல்களை விற்றலும் கொள்வனவு செய்தலும்)
        - பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை வழங்குதல்
            (i) அடகுச் சேவைகளை வழங்குதல்.
            (ii) வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களுக்கு அவசியமான வசதி களை வழங்குதல்.
            (iii) வெளிநாட்டு வங்கி நடவடிக்கைகளின்போது உதவி செய்தல்.
            (iv) வங்கி ஆணை, கடன் பத்திரங்களை வெளியிடல்.
- வணிக வங்கிகளின் நிதிநிலைமைக்கூற்றானது (ஐந்தொகையானது) வருட இறுதியில் வங்கியின் நிதி நிலைமை எடுத்துக் காட்டுகிறது. இது சொத்துக்கள், பொறுப்புக்கள் என இரண்டு பிரிவுகளைக் கொண்டது.

- வணிக வங்கியொன்றின் இருப்பு நிலைக் குறிப்பின் மாதிரியொன்று கீழே காட்டப்படுகிறது.

| **தலைப்பு** | **தொகை (ரூபா-மில்லியன்)** |
|---|---|
| **சொத்துக்கள்:** | |
| (i) திரவத்தன்மைச் சொத்துக்கள் | |
| • கையில் உள்ள பணம்: | |
| • மத்திய வங்கியிடமிருந்து வரவேண்டிய பணமீதி | xxx |
| • உண்ணாட்டு வங்கியிடமிருந்து வரவேண்டிய பணமீதி | xxx |
| • திரட்சியடையும் பணமீதி | xxx |
| • கையிலுள்ளதும் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்தும் வரவேண்டிய வெளிநாட்டு நாணயம் | xxx |
| • திறைசேரி உண்டியல்கள் | xxx |
| • திறைசேரி முறிகள் | xxx |
| • அரசின் வேறு முறிகள் | xxx |
| • வேறு முதலீடுகள் | xxx |
| (ii) கடன்கள் முற்பணங்கள் | |
| • கொள்வனவு செய்த மற்றும் கழிவு செய்த உண்டியல் | xxx |
| • ஏற்றுமதி உண்டியல்கள் | xxx |
| • இறக்குமதி உண்டியல்கள் | xxx |
| • உள்நாட்டு உண்டியல்கள் | xxx |
| • வங்கிமேலதிகப்பற்று | xxx |
| • கடன்கள் | xxx |
| (iii) நிலையான மற்றும் ஏனைய சொத்துக்கள் | |
| **பொறுப்புக்கள்:** | |
| (i) மூலதனக் கணக்கு | xxx |
| (ii) மொத்த வைப்புக்கள் | xxx |
| கேள்வி வைப்பு | xxx |
| கால - சேமிப்பு வைப்புக்கள் | xxx |
| (iii) கடன் பெறுதல் | xxx |
| உள்நாட்டுக் கடன் பெறுதல் | xxx |
| வெளிநாட்டுக் கடன் பெறுதல் | xxx |
| (iv) ஏனைய பொறுப்புகள் | xxx |
| மொத்த சொத்து / பொறுப்பு | xxx |

- வணிக வங்கியொன்றின் சொத்தமைப்பினை மேற்தரப்பட்ட இருப்பு நிலைக் குறிப்பின்படி இவ்வாறு பகுப்பாய்வு செய்ய முடியும்.
- வணிக வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கீழே தரப்படும் பண உருப்படிகள் ஆரம்ப நிலை - முதனிலை ஒதுக்குகள் என அழைக்கப்படும்.
  - கையில் உள்ள பணம்
  - மத்திய வங்கியிடமிருந்து வரவேண்டியுள்ள பணமீதி
  - உள்நாட்டு வங்கிகளிடமிருந்து வரவேண்டியுள்ள பணமீதி
  - திரட்சியடையும் பணமீதி
  - கையிலுள்ளதும் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து வரவேண்டிய வெளிநாட்டுப் பணமீதி
- வணிக வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள கீழே குறிப்பிடப்படும் விடயங்கள் உழைக்கும் சொத்துக்கள் என அழைக்கப்படும்.
  - திறைசேரி உண்டியல்கள்
  - திறைசேரிப் பிணைகள்
  - அரசின் வேறு உண்டியல்கள்
  - கொள்வனவு செய்த மற்றும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள்
  - மேலதிகப்பற்று
  - கடன்கள்
- மேலே தரப்பட்ட உழைப்புச் சொத்துக்களில் ஒரு பகுதியாகக் கீழே தரப்படுவன இரண்டாம் நிலை ஒதுக்குகள் எனவும் அழைக்கப்படும்.
  - அரசின் பிணைகள்
  - வணிகப் பத்திரங்கள்
  - வங்கிகளுக்கிடையேயான அழைப்புக் கடன்கள்
- வணிக வங்கிகளின் மூலம் தமது மிகை ஒதுக்குகளைக் கடன் வழங்குதல் மூலம் காணப்பட்ட அளவைவிடப் பல மடங்கு வைப்புக்களை உருவாக்குதல் பண ஆக்கம் என அழைக்கப்படும்.
- வணிக வங்கிகள் வங்கி அமைப்பொன்றாக நடவடிக்கை மேற்கொள்கையில் பண ஆக்கம் அல்லது வைப்பாக்கத்தைச் செய்ய முடியும்.
- வங்கியமைப்பின் பண ஆக்கச் செயற்பாட்டுக்குப் பின்வரும் எடுகோள்கள் அடிப்படையாக வுள்ளன.
  - எந்த ஒரு வங்கியும் மிகை ஒதுக்கினைக் கொண்டிருப்பதில்லை.
  - ஆரம்ப வைப்புச் செய்யப்பட்ட பின்னர் வங்கியமைப்புக்குப் புதிதாகப் பணத்தின் உள் வருகையோ வங்கிமுறையிலிருந்து வெளியே பணச் செலுத்தல்களோ நடை பெறாமை.
  - சகல கடன்பெறுவோரும் தாம் பெற்ற கடன் பணத்தை முழுமையாக வேறு வங்கி யொன்றில் வைப்புச் செய்தல்.

- வணிக வங்கிகளின் கடன் வழங்கல் இரு விதமாகச் செய்யப்படுகிறது.
  - (i) வணிக வங்கியமைப்பினுள் தனி வங்கியாகச் செயற்பட்டு மிகை ஒதுக்குகளைக் கடனாக வழங்குதல்.
  - (ii) வணிக வங்கியமைப்பொன்றாகச் செயற்படுவதுடன் மிகை ஒதுக்குகள் காணப் படும் அளவை விட பல மடங்கு கடனாக வழங்கல்.
- தனி வங்கியாகச் செயற்பட்டு மிகை ஒதுக்குகளைக் கடனாக வழங்குதல்.
  - வணிக வங்கியொன்றின் மூலம் மத்திய வங்கியின் நியதிக்கு ஏற்ப தமது வைப்புத் தொகையில் குறிப்பிட்டளவான சதவீதத்தைக் கையிலுள்ள பணம் மற்றும் வங்கிப் பணம் என வைத்துக் கொள்ளல் சட்டரீதியான ஒதுக்கு என அழைக்கப்படும்.

  உ+ம்:- வணிக வங்கியொன்றின் கேள்வி வைப்புக்கள் ரூபா 10 000 எனில் வைத்திருக்க வேண்டிய ஒதுக்கினைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

  தேவையான ஒதுக்குகள் = வைப்பு × அவசியமான ஒதுக்கு

  $$= 10\ 000 \times \frac{20}{100}$$

  = ரூபா மில். 2 000

  இவ்வங்கியின் மிகை ஒதுக்குகளாவது ரூபா மில். 8 000 ஆகும்.

  $$= 10\ 000 - 2\ 000$$

  = 8 000/=

- இவ் வணிக வங்கிக்கு வழங்க முடியுமான உச்சக் கடன் அளவு ரூபா மில். 8 000 ஆகும். தனி வங்கியொன்றாகச் செயற்படுவதனால் மிகை ஒதுக்கை மட்டுமே கடனாக வழங்க முடியும்.
- வணிக வங்கியொன்றில் காணப்படுகின்ற இருப்புநிலைக் குறிப்பின் அடிப்படையிலும் மிகை ஒதுக்கினைக் கடனாகக் கொடுக்கும் விதத்தினைப் பின்வருமாறு காட்டலாம்.

| **பொறுப்புக்கள் பெறுமதி<br>ரூபா. மில்லியன்** | | **சொத்துக்கள் பெறுமதி<br>ரூபா. மில்லியன்** | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 10 000 | ஒதுக்குகள் | 6 000 |
| | | கடன் | 4 000 |
| மொத்த பொறுப்புக்கள் | 10 000 | மொத்த சொத்துக்கள் | 10 000 |

- இவ்வணிக வங்கியின் சட்டரீதியான ஒதுக்கு விகிதம் 20% எனில், வைப்புக்களுக்காகத் தேவைப்படும் ஒதுக்குகள் ரூபா 2 000 மில். ஆகும்.

  காணப்படும் ஒதுக்குகள் = ரூபா மில். 6 000

  தேவைப்படும் ஒதுக்குகள் = ரூபா $10\ 000 \times \frac{20}{100}$ = ரூபா மில். 2 000

  மிகை ஒதுக்கின் அளவு = 6 000 - 2 000 = ரூபா மில். 4 000

  இவ்வங்கியினால் வழங்கக்கூடிய புதிய கடன் தொகை ரூபா மில். 4 000 ஆகும்.

- இவ்வங்கி வழங்கக்கூடிய புதிய கடனின் அளவு 4 000 மில்லியன் ரூபாவாகும். வணிக வங்கி அமைப்பாக செயல்பட்டு மிகை ஒதுக்கை கடனாக வழங்கும்.
- வணிக வங்கியமைப்பொன்று கடனாக்கம் செய்யும் நடவடிக்கையானது வைப்பு விரிவாக்கக் குணகத்தின் மூலம் தீர்மானிக்கப்படும். வைப்பாக்கப் பெருக்கி என்பது கேள்வி வைப்பொன்றை அடிப்படையாகக் கொண்டு கடனாக்கம் செய்யும் தடவைகளின் எண்ணிக்கை மிகை ஒதுக்கை விட எத்தனை மடங்காக கேள்வி வைப்புக்கள் அதிகரிக்கும் என்பதனைக் காட்டும் குணகமாகும். வைப்பாக்கப் பெருக்கி யானது சட்டரீதியான ஒதுக்கு விகிதத்தின் தலைகீழ் வடிவத்துக்குச் சமனாகும். வைப்பாக்கப் பெருக்கி பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வங்கி வைப்பாக்கப் பெருக்கி} = \frac{1}{\text{சட்டரீதியான ஒதுக்கு விகிதம்}} = \frac{1}{r}$$

உ+ம்:- சட்டரீதியான ஒதுக்குவீதம் 20%

வங்கி வைப்பாக்கப் பெருக்கி $(k) = \frac{1}{r}$ r = சட்டரீதியான ஒதுக்கு விகிதம்

$$= \frac{1}{20\%} = 1 \times \frac{100}{20}$$
$$= 5$$

- வங்கியமைப்பொன்றினுள் பண ஆக்கம் நடைபெறும் விதத்தினை வணிக வங்கி அமைப்பொன்றின் இருப்பு நிலைக் குறிப்பின் அடிப்படையில் கணிப்பிட முடியும்.
- A எனப்படும் வங்கியில் ரூபா 10 000 மில்லியன் ஆரம்ப வைப்பும் சட்டரீதியான ஒதுக்கு விகிதம் 20% ஆகவும் காணப்படுகின்றதென எடுகோள் கொள்க. அப்போது அவ்வங்கியின் இருப்பு நிலைக் குறிப்புப் பின்வருமாறு அமையும்.

**A வங்கியின் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)**

| பொறுப்புக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | | சொத்துக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 10 000 | ஒதுக்குகள் | 2 000 |
| | | கடன் | 8 000 |
| மொத்தம் | 10 000 | மொத்தம் | 10 000 |

A வங்கியிலிருந்து குறிப்பிட்ட நபரொருவருக்கு ரூபா மில். 8 000 ஐ கடனாகக் கொடுத்த பின்னர் அவ்வாடிக்கையாளன் அப்பணத்தை B வங்கியில் வைப்புச் செய்தான் எனக் கருதுக. அப்போது B வங்கியின் இருப்பு நிலைக் குறிப்புப் பின்வருமாறு மாற்றமடையும்.

### B வங்கியின் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)

| பொறுப்புக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | | சொத்துக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 8 000 | ஒதுக்குகள் | 1 600 |
| | | கடன் | 6 400 |
| மொத்தம் | 8 000 | மொத்தம் | 8 000 |

B வங்கி அவ்வைப்புக்களில் 20% ஆகிய ரூபா மில். 1 600ஐ வைத்துக் கொண்டு ரூபா மில். 6 400ஐ கடனாக வழங்கிய பின்னர் அப்பணத்தை வாடிக்கையாளன் C வங்கியில் வைப்புச் செய்தான் எனக் கருதுவோம். அப்போது C வங்கியின் இருப்பு நிலைக் குறிப்புப் பின்வருமாறு மாற்றமடையும்.

### C வங்கியின் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)

| பொறுப்புக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | | சொத்துக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்) | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 6 400 | ஒதுக்குகள் | 1 280 |
| | | கடன் | 5 120 |
| மொத்தம் | 6 400 | மொத்தம் | 6 400 |

இவ்வாறு வணிக வங்கிகள் தமக்குக் கிடைக்கின்ற வைப்புக்களில் 20% ஐ சட்ட ரீதியான ஒதுக்காக வைத்துக் கொண்டு மிகை ஒதுக்குகளைக் கடனாகக் கொடுப்பதன் மூலம் கேள்வி வைப்பாக்கத்தைச் செய்ய முடியும்.

ஒவ்வொரு வங்கியினதும் பின்வரும் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை) சந்தர்ப்பங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுக.

- ஆரம்ப நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)
- கடன் வழங்கிய பின்னர் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)
- இறுதி நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)

மேலே A, B, C, ........ எனக் காட்டப்பட்ட வங்கியமைப்பில் கேள்வி வைப்புக்களை உருவாக்குவதே பன்முக விரிவாக்கம் என அழைக்கப்படுகிறது.

வணிக வங்கி அமைப்பினுள் நடைபெறுகின்ற கேள்வி வைப்புக்களின் பன்முக விரிவாக்கத்தை வணிக வங்கிகளின் இருப்பு நிலைக் குறிப்பின் மூலம் காட்டலாம்.

| வங்கி | வைப்புக்கள் ரூ. மில். | புதிய ஒதுக்குகள் ரூ.மில். | மிகை ஒதுக்கு ரூ.மில். | கடனாக வழங்கும் பணம் ரூ.மில். |
|---|---|---|---|---|
| A | 10 000 | 2 000 | 8 000 | 8 000 |
| B | 8 000 | 1 600 | 6 400 | 6 400 |
| C | 6 400 | 1 280 | 5 120 | 5 120 |
| D | 5 120 | 1 024 | 4 096 | 4 096 |
| E | 4 096 | 819.20 | 3 276.80 | 3 276.80 |
| ... | ..... | .......... | ............ | ................ |
| ... | ..... | .......... | ............ | ................ |
| ... | ..... | .......... | ............ | ................ |
| Z | ..... | ........... | ............. | ................ |
| வங்கியமைப்பின் முழு மொத்தம் | 50 000 | 10 000 | 40 000 | 40 000 |

இவ்வாறு A யிலிருந்து Z வரையான சகல வங்கிகளும் கேள்வி வைப்புக்களை ஏற்றல் மற்றும் கடன் வழங்கலைச் செய்கின்றபோது வங்கியமைப்பின் சமநிலையைக் கணிப்பிடலாம். வங்கியமைப்பானது மிகை ஒதுக்குப் பூச்சியமாகும் வகையில் பண ஆக்கம் செய்யும்போது மொத்த வைப்பாக்கம் ரூபா 50 000 மில்லியனாகும். அதற்கு அவசியமான ஒதுக்குகள் ரூபா மில்லியன் 10 000 ஆகும். ஆரம்ப வைப்பு ரூபா மில்லியன் 10 000 ஆகும். அதேவேளை அதற்குச் சமனான வங்கியமைப்பின் ஒதுக்கு ரூபா மில்லியன் 10 000 ஆகக் காணப்படல் வங்கியமைப்பின் சமநிலையடைதல் என அழைக்கப்படும்.

அச்சமநிலை மேலே புள்ளிவிபர அட்டவணையில் புதிய ஒதுக்குகள் எனக் காட்டப்பட்டுள்ளது.

வங்கியமைப்பினால் உருவாக்கக்கூடிய உச்சக் கடன் தொகையைக் கீழே தரப்படும் விதமாகக் கணிப்பிடலாம்.

ஆகக்கூடிய உச்சக் கடன் தொகை = ஆரம்ப மிகை ஒதுக்கு தொகை × விரிவாக்கப் பெருக்கி

= ரூபா மில். 8 000 × 5

= ரூபா மில். 40 000

- வங்கியமைப்பொன்றின் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை) தரப்படும்போது ஆக்கக்கூடிய கேள்வி வைப்புக்களின் அளவினைப் பின்வருமாறு கணிப்பிட முடியும்.

**வங்கியமைப்பொன்றின் நிதிநிலைமைக்கூற்று (ஐந்தொகை)**

| **பொறுப்புக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்)** | | **சொத்துக்களின் பெறுமதி (ரூபா. மில்லியன்)** | |
|---|---|---|---|
| வைப்புக்கள் | 50 000 | ஒதுக்குகள் | 10 000 |
| | | கடன் | 40 000 |
| மொத்தப் பொறுப்புக்கள் | 50 000 | மொத்தச் சொத்துக்கள் | 50 000 |

உ+ம்:- மத்திய வங்கி 10% ஆகச் சட்டரீதியான ஒதுக்கு வீதத்தைக் குறைக்குமாயின் ஆக்கக்கூடிய உச்சமட்ட வைப்புப் பெருக்கியினைக் கீழ்த் தரப்படும் வகையில் கணிப்பிடலாம்.

ஆகக்கூடிய உச்ச மட்ட வைப்பு விரிவாக்கம் = காணப்படும் ஒதுக்குகளின் அளவு × விரிவாக்கப் பெருக்கி

= ரூபா மில். 10 000 × 10

= ரூபா மில். 100 000

- பொருளாதாரத்தில் பணநிரம்பல் உருவாகும் விரிவாக்கம் வங்கி வைப்பாக்கப் பெருக்கியினால் காட்டப்படும் அளவை விட வேறுபட்டு அமையலாம். பண ஆக்கத்தைக் கட்டுப்படுத்தும் காரணிகள் இம்மாற்றங்களுக்குக் காரணமாகின்றது. பண ஆக்கத்தைக் கட்டுப்படுத்தும் காரணிகள் கீழே தரப்படுகின்றன.
    - வங்கி முறைமைக்குள் இருந்து வங்கியல்லா நிதி நிறுவனங்களுக்குச் சட்ட முறைப் பணம் செலுத்துதல்.
    - சட்ட முறைப் பணத்தைத் தமது கையில் வைத்திருப்பதற்குப் பொதுமக்கள் காட்டும் விருப்பம்.
    - வங்கிக் கடனுக்குப் போதிய கேள்வி ஏற்படாமை.

**தேர்ச்சி 8.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.1:** **சந்தைத் தோல்விக்கான காரணங்களை விமர்சனம் செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- சந்தை (முறை) தோல்வியடைதல் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சந்தை முறைமை தோல்வியடைவதற்கு ஏதுவாக உள்ள காரணங்களை விளக்குவார்.
- வளப் பங்கீட்டின் வினைத்திறனின்மையை விளக்குவார்.
- பேரினப் பொருளாதார உறுதியை விளக்குவார்.
- வருமானப் பங்கீட்டின் வினைத்திறனின்மையை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சமூக நலன் கருதி அருமையான வளங்களை ஒதுக்கீடு செய்வதில் விலைப்பொறி முறையானது தோல்வியடைவதனைச் சந்தைத் தோல்வி எனக் கருதலாம்.
- சந்தைத் தோல்விக்குப் பின்வரும் காரணிகள் ஏதுவாகும்.
  1. வள ஒதுக்கீட்டின் வினைத்திறனின்மை
  2. பேரினப் பொருளாதார உறுதியின்மை
  3. வருமானப் பங்கீட்டின் சமமின்மை
- வள ஒதுக்கீட்டின் வினைத்திறனிற்கு அவசியமான நிபந்தனையான விலை, எல்லை செலவுக்கு சமப்படும் ($P = mc$) தன்மையிலிருந்து விலகச் செய்வது வள ஒதுக்கீட்டில் வினைத்திறனின்மையாகும்.
- பொருளாதாரம் உடைமையாகக் கொண்டுள்ள அருமையான வளங்கள் சமூகத்திற்குச் சாதகமான முறையில் பங்கீடு செய்யப்படாததனால் வளங்களின் பங்கீடானது வினைத்திறனற்றதாக மாற்றமடைவதுடன் அதில் பின்வரும் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.
  - பொதுப் பண்டங்கள் வழங்கப்படாமை.
  - அரைப் பொதுப்பண்டங்கள் உத்தம மட்டத்தில் வழங்கப்படாமை.
  - சமூகநலப் பண்டங்களை உத்தம மட்டத்தில் வழங்கப்படாமை.
  - சமூகத்திற்குத் தீங்கான பண்டங்களை வழங்குதல்.
  - பொது வளங்களின் மிகைப் பாவனை
  - வெளிவாரிகளைக் கவனத்தில் கொள்ளாமை.
  - நிறைவில் போட்டியும் தனியுரிமையும்
  - நிறைவில் தகவல்கள்
- பொதுப் பண்டம் என்பது கூட்டாக நுகரப்படும் பண்டங்களாகும்.

- பொதுப் பண்டங்கள் பின்வரும் இரண்டு பண்புகளைக் கொண்டவையாகும்.
  1. கொடுப்பனவு மேற்கொள்ளாத நபர்களை நுகர்விலிருந்து விலக்க முடியாது.
  2. நுகர்வில் போட்டியின்மை.
- பொதுப்பண்டமொன்று வழங்கப்படும்போது கொடுப்பனவு வழங்கப்பட்டாலும் வழங்கப்படா விட்டாலும் எல்லோராலும் நுகர்வு செய்வதற்கு வாய்ப்புக் காணப்படுவதனால் சுயநலனை அடிப்படையாகக் கொண்டு செயல்படும் நுகர்வோர்கள் அப்பண்டங்களுக்குக் கொடுப்பனவு செய்ய முன்வரமாட்டார்கள்.
- இவ்வாறே இலாபத்தை நோக்காகக் கொண்டு செயல்படும் சந்தைப் பொருளாதாரத்தில் இத்தகையப் பொதுப்பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு வளங்கள் ஒதுக்கீடு செய்யப்படமாட்டாது.
- தனிநபர் ஒருவரினால் குறித்த ஒரு பொருள் அல்லது சேவையை நுகர்வு செய்யப்படும் போது வேறொரு நபருக்கு அப்பொருளை எவ்வித தடையுமின்றி அதே அடிப்படையில் கொள்வனவு செய்வதற்கு முடியுமாக இருப்பதானது நுகர்வில் போட்டியின்மை எனக் கருதப்படும். இதனால் மேலதிகக் கொள்வனவை மேற்கொள்ளும் நுகர்வோனுக்கான எல்லைச் செலவு பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருக்கும்.
- மணிக்கூட்டுக் கோபுரம், தேசிய பாதுகாப்பு, வீதி வெளிச்சம், கலங்கரை விளக்கம் போன்ற பண்டங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.
- இதனடிப்படையில் பொதுப்பண்டங்களை வழங்குவது தொடர்பாகச் சந்தைப் பொருளாதாரம் தோல்வியடையும் என்பது தெளிவாகும்.
- சம்பிரதாய ரீதியாக நாட்டினுள் காணப்படும் பொதுப் பண்டங்களுக்கு மேலதிகமாக தேசிய எல்லையை கடந்த நிலையில் உள்ள பொதுப் பண்டங்களும் காணப்படுகின்றன. இவை உலகப் பொதுப் பண்டங்களாகக் கருதப்படும்.
- உலகப் பொதுப் பண்டத்தில் பின்வரும் பண்புகளைக் காணலாம்.
  - நுகர்வில் போட்டியின்மை
  - விலக்குதல் விதிக்கு உட்படாதது
  - இப்பண்டங்களால் பெறப்படும் நன்மையை உலக மக்கள் அனைவரும் அனுப விக்கலாம்.
- அறிவு, நிதி உறுதி, உலக சமாதானம், வளிமண்டலம் போன்றவற்றை உலகப் பொதுப் பண்டத்திற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம். இத்தகைய பொதுப் பண்டங்களை வழங்காமையானது சந்தை தோல்விக்கு காரணமாகும்.
- ஒரு குறிப்பிட்ட எல்லையை அடையும்வரை போட்டியற்றதும், நுகர்வை மட்டுப்படுத்க் கூடிய பண்டம் அரைப் பொதுப் பண்டமாகும்.
- அரைப் பொதுப் பண்டத்தின் பண்புகள் வருமாறு:
  (1) ஒரு குறிப்பிட்ட எல்லையை அடையும்வரை நுகர்வில் போட்டியில்லை.
  (2) நுகர்வை மட்டுப்படுத்தலாம்.
- பெருந்தெரு, கடற்கரை, நூதனசாலை என்பவற்றை அரைப் பொதுப் பொருளுக்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- உச்ச எல்லையை அடையும் வரை மேலதிக நபர் ஒருவரின் நுகர்வானது எல்லைச் செலவில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தாது. ஆயினும், விலையொன்றை அறவிடுவதன் மூலம் குறித்த பொருள் அல்லது சேவையை சமூகத்திறன் வாய்ந்த உற்பத்தி மட்டத்தை விட குறைந்தளவில் நுகர வேண்டி ஏற்படும்.

- இவ்வாறே அரைப் பொதுப் பண்டங்களை வழங்கும்போது உற்பத்தியாளர்கள் எல்லைச் செலவை விடக் கூடிய விலையில் விற்பனை செய்யலாம். இந்நிலையில் இதனை விடக் குறைவான விலையை செலுத்தத் தயாராகும் நுகர்வோன் இப்பண்டத்தை நுகர்வு செய்யும் வாய்ப்பை இழக்கிறார். இதனால் செயற்றிறன் வாய்ந்த மட்டத்தை விடக் குறைவாகவே நுகர்வு இடம்பெறும். இந்நிலைமையின் கீழ் அரைப் பொதுப் பண்டங்களானது செயற்றிறனாக நுகர்வாக இருக்காமையானது சந்தை தோல்விக்குக் காரணமாகும்.

- நுகர்வின்போது தனியார் நலனை மிகைத்து பெருமளவில் சமூக நலனைப் பெற்றுக் கொள்ளும் பண்டம் மேன்மைப் பண்டமாகும்.

- கல்வி, சுகாதாரம், சமூக நலச் சேவைகள் போன்ற சமூக நலப்பண்டங்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

- சந்தைப் பொருளாதாரத்தில் மேன்மைப்பண்டங்கள் வழங்குதல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டாலும் இது உத்தம மட்டத்தில் வழங்கப்படுவதில்லை. காரணம் இப்பண்டத்தை வழங்கும்போது வெளிவாரி விளைவுகள் முழுமையாகக் கவனிக்கப்படாது. அதனால் கிடைக்கும் தனியார் நலனும் தனியார் செலவு மட்டுமே கவனிக்கப்படும். இதனால், மேன்மைப்பண்டத்தின் நுகர்வானது சமூக ரீதியான உத்தம மட்டத்தை விடக் குறைந்த மட்டத்திலேயே இடம்பெறும். இது சந்தைத் தோல்விக்குக் காரணமாகும்.

- நுகர்வின் காரணமாகச் சமூகத்திற்கு எதிர்கணிய விளைவை ஏற்படுத்தக்கூடிய பண்டங்கள் மேன்மையற்ற பண்டங்களாகும்.

- குடிவகைகள், சிகரட், போதைப் பொருட்கள் போன்றவை மேன்மையற்ற பண்டங்களுக்கு உதாரணங்களாகும்.

- சந்தை மூலம் சமூகத்திற்குத் தீங்கான பண்டங்களை வழங்கும்போது அப்பண்டத்தை நுகர்வு செய்வதன் மூலம் தோன்றும் வெளிவாரிச் செலவு தொடர்பாகக் கவனம் செலுத்தப்படாமையினால், சமூகத்தின் உத்தம மட்டத்தை விடக் கூடிய மட்டத்தில் உற்பத்தி இடம்பெறுவதுடன் சமூகத்திறன் வாய்ந்த உற்பத்தி மட்டத்தை விடக் கூடுதலான நுகர்வை மேற்கொள்வதற்கு நுகர்வோர் முன் வருவர். இதனால் சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பண்டங்களை வழங்குவதனால் சந்தைத் தோல்வி ஏற்படும்.

- நுகர்விலிருந்து விலக்கப்பட முடியாததும் நுகர்வில் போட்டித்தன்மை கொண்டதுமான பண்டங்கள் பொது வளங்கள் ஆகும்.
  உதாரணம்:- மீன்வளம், புற்தரை, வளிமண்டலம்

- பொது வளங்களில் பின்வரும் பண்புகளைக் காணலாம்.

  1. நுகர்விலிருந்து விலக்க முடியாது.
  2. நுகர்வில் போட்டித்தன்மை காணப்படுதல்.

- நுகர்விலிருந்து விலக்க முடியாததும் போட்டித்தன்மையைக் கொண்டிருப்பதன் காரணமாக எந்தவொரு நபரும் பொது வளங்களின் நுகர்வில் ஈடுபட முடியும். இதனால் பொது வளங்கள் மிகைப் பாவனைக்கு உட்படுத்தப்படுவதனால் வள வீண்விரயம் தோன்றும். சந்தையினுள் பொது வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தக்கூடிய பொறிமுறை தோற்றுவிக்கப்படாததனால், இவ்வளங்களானது வினைத்திறனற்ற முறையில் முகாமை செய்யப்படுவதனால் சந்தைத் தோல்வியடையும்.
- ஏதாவதொரு உற்பத்தி அல்லது நுகர்வுச் செயற்பாட்டின் காரணமாக, ஏனைய பிரிவினர் மீது தோன்றும், அவ்வுற்பத்தி அல்லது நுகர்வுடன் நேரடியாகத் தொடர்புபடும் நபரினால் கவனம் செலுத்தப்படாத நன்மை அல்லது தீமை வெளிவாரி விளைவுகள் எனப்படும்.
- வெளிவாரி விளைவுகளானது நன்மையான வெளிவாரி விளைவுகள், தீமையான வெளிவாரி விளைவுகள் என இரு வகைகளாகப் பிரிக்கப்பட நன்மையான வெளிவாரிகள் நேர்கணிய வெளிவாரிகள் என்றும் (+) தீமையான வெளிவாரிகள் எதிர்கணிய வெளிவாரி விளைவுகள் (-) என்றும் நோக்கப்படும். இவ்வெளிவாரிகள் தொடர்பாகச் சந்தையில் கவனம் செலுத்தப்படாமையினால் சந்தைத் தோல்வி ஏற்படும்.
- நிறைவில் போட்டி, தனியுரிமைச் சந்தை நிலைமைகளின் கீழ் பொருளின் மீது அறவிடப்படும் விலையானது பொருளின் எல்லைச் செலவை மிகைத்துச் செல்லும். இதனால் வளப்பங்கீட்டின் வினைத்திறனுக்கு அவசியமான விலையும் எல்லைச் செலவும் சமப்படும் நிபந்தனை (P=MC) பூர்த்தி செய்யப்படாது. இதனால் நுகர்வோர் சுரண்டப் படுவதனால் சந்தைப் பொருளாதாரம் தோல்வியடையும்.
- நுகர்வோனுக்கும் உற்பத்தியாளருக்கும் தீர்மானங்களை மேற்கொள்வதற்குத் தேவையான தகவல்களைச் சந்தையினால் முழுமையாகவும் சரியாகவும் பெற்றுக்கொள்ள முடியா திருப்பதானது நிறையில் தகவல் எனப்படும்.
- சந்தையில் பூரணத் தகவல் பெறப்படாமைக்கு பின்வரும் காரணிகள் ஏதுவாகின்றது.
  - விளம்பரங்களின் காரணமாக உண்மையான தகவல்களை மாற்றிக் கூறுதல்.
  - சிக்கலான தொழில்நுட்ப காரணங்களால் சில தகவல்களைப் பெற்றுக் கொள்வது சிக்கலாக இருத்தல்.
  - சில விளைவுகள் தொடர்பாக நிச்சமற்ற தன்மை நிலவுதல்.
- சந்தையில் பூரண தகவல்கள் கிடைக்காதபோது உற்பத்தியாளரும் நுகர்வோரும் மேற்கொள்ளும் தீர்மானங்களால் வளங்களின் பகிர்வு வினைத்திறனற்றதாக மாறும். இதன்படி பூரண தகவல்கள் கிடைக்காமையானது சந்தைத் தோல்விக்குக் காரணமாகும்.
- பேரினப் பொருளாதார உறுதியின்மை என்பது பொருளாதாரத்தில் அடிக்கடி உயர்வு தாழ்வு (தளம்பல்) ஏற்படுவதாகும்.
- தனியார் நுகர்வு, முதலீடு போன்ற காரணிகளில் தோன்றும் மாற்றத்தினால் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மொத்தக் கேள்வியில் தோன்றும் தளம்பல்களின் காரணமாகப் பொருளாதாரத்தில் குறுங்கால உறுதியின்மை தோன்றும்.
- வருமான சமமின்மை என்பது நாட்டின் மொத்த வருமானம் அல்லது வளங்களானது எல்லாத் தனிநபர்களும் வாழ்க்கை நடத்துவதற்குத் தேவையான வருமான மட்டத்தைப் பெற்றுக் கொள்ளும் முறையில் மொத்தச் சனத்தொகையிடையே பங்கீடு செய்யப்படா திருப்பதாகும்.

- வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்துவதில் தாக்கம் செலுத்தும் விடயங்கள்
    - இழக்கப்படுகின்ற உழைப்பின் அளவு
    - கல்வி மட்டம்
    - பெற்றுக் கொண்ட சொத்துக்களின் அளவு
    - உற்பத்திக் காரணிகளின் விலை (காரணி விலை) போன்றவை.
- இக்காரணிகளின் விளைவின் அடிப்படையில் வீட்டுத்துறை வருமானப்பங்கீட்டில் சமமின்மை ஏற்படக்கூடியதாக இருக்க, பொருளாதாரத்தில் வளப்பங்கீடும் இவ்வருமானப் பங்கீட்டின் அடிப்படையில் இடம்பெறும். இதன்படி குறைந்த வருமானம் கொண்டவர்களின் கேள்வியை ஈடுசெய்வதற்கு குறைந்த அளவிவான வளங்களும் உயர்ந்த வருமானம் பெறுவோரின் கேள்வியை ஈடு செய்வதற்குக் கூடிய வளங்களும் ஒதுக்கீடு செய்யப்படும்.

**தேர்ச்சி 8.0:** பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.2:** சந்தைத் தோல்வி தொடர்பாக வெளிவாரி விளைவுகளின் தாக்கத்தைப் பரிசீலனை செய்வார்.

**பாடவேளைகள்:** 07

**கற்றற் பேறுகள்:**

- வெளிவாரி விளைவுகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வெளிவாரி விளைவுகளைத் தோற்றுவிக்கும் மூலங்களைப் பெயரிடுவார்.
- வெளிவாரி விளைவுகளைத் தோற்றுவிக்கும் நேர்கணிய எதிர்கணிய மூலங்களைத் தனித்தனியே குறிப்பிட்டு உதாரணங்களை முன்வைப்பார்.
- வெளிவாரி விளைவுகள் காரணமாகச் சந்தை தோல்வியடையும் நிலைமைகளை வரைபடங்களைப் பயன்படுத்தி விளக்குவார்.
- வெளிவாரி விளைவுகள் காரணமாக சந்தை தோல்வியடைவதை தவிர்க்கக்கூடிய செயற்பாடுகளை முன்வைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டல்கள்:**

- நேர்கணிய, எதிர்கணிய வெளிவாரி விளைவுகளைக் காட்டும் பெரிதாக்கப்பட்ட இரண்டு படங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- படத்தின்படி சமூகத்திற்கு தோன்றும் நன்மையான தீமையான விளைவுகளை மாணவர்களிடம் விசாரிக்குக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
    - படத்தில் காட்டப்பட்ட விடயங்கள், சமூகத்திற்கு நன்மையான அல்லது தீமையான விளைவுகளாகும். இதற்கென சமூகத்திற்கு நட்டயீடு அல்லது கொடுப்பனவு எதுவும் வழங்கப்படாது.
    - இந்த வகையில் குறித்த ஒரு பொருளாதார செயற்பாட்டினால் அதனுடன் தொடர்பற்ற வெளிப்பிரிவினருக்கு நட்டயீடு வழங்கப்படாத நன்மை அல்லது தீமை வெளிவாரிகளாகக் கருதப்படும்.
    - வெளிவாரிகளானது உற்பத்தியிலும் நுகர்விலும் தோன்றும்.
    - மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாக அமைத்து கற்றலுக்கு வழிகாட்டலை வழங்கி செயற்பாட்டிலீடுபடுத்துக.

**கற்றலுக்கான உத்தேச வழிகாட்டல்கள்:**

- பின்வரும் தலைப்புகளில் உமது குழுவிற்குக் கிடைத்த தலைப்பில் கவனஞ் செலுத்துக.
    - உற்பத்தியில் வெளிவாரிகள்
    - நுகர்வில் வெளிவாரிகள்
- உங்கள் தலைப்பை விளங்கிக் கொள்வதற்கு மாணவர்களிடையே கலந்துரையாடலை மேற்கொள்க.
- தலைப்பிற்கு ஏற்ப உமக்குக் கிடைத்த அனுபவங்களின் அடிப்படையில் தகவல்களைத் திரட்டுக.
- இத்தகவல்களின் அடிப்படையில் நன்மையான வெளிவாரிகள், தீமையான வெளிவாரிகள் என வகைப்படுத்திக் காட்டுக.
- வெளிவாரிகள் தோன்றுவதற்கான காரணங்களையும் அவற்றின் விளைவுகளையும் இனங்காண்க.
- வெளிவாரிகளைத் தடை செய்வதன் முக்கியத்துவத்தையும் அவற்றை தடை செய்யும் வழிமுறைகளையும் கலந்துரையாடுக.
- உமது வெளிப்பாட்டை வகுப்பிற்கு முன்வைக்க.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வெளிவாரிகள் என்பது ஏதாவதொரு உற்பத்தி அல்லது நுகர்வுச் செயற்பாட்டின் காரணமாக ஏனைய பிரிவினர் மீது தோற்றுவிக்கும் அவ்வுற்பத்தி அல்லது நுகர்வுச் செயற்பாட்டிற்கு நேரடியாகத் தொடர்புபடும் பிரிவினரால் கவனத்தில் கொள்ளப்படாத நன்மை அல்லது தீமையாகும்.
- இன்னுமொரு பிரிவினருக்கு ஏற்படுத்தும் தீமையானது வெளிவாரிச் செலவாகக் கருதப்படும்.
- இன்னுமொரு பிரிவினருக்கு ஏற்படுத்தும் நன்மையானது வெளிவாரி நன்மையாகக் கருதப்படும்.
- வெளிவாரி விளைவுகளானது நன்மையான விளைவுகள் என்றும் தீமையான விளைவுகள் என்றும் இரு வடிவங்களைக் கொண்டிருக்கும் நன்மையான விளைவுகள் நேர் கணியம் என்றும் தீமையான விளைவுகள் எதிர்கணியம் என்றும் வகைப்படுத்தப்படும்.
- வெளிவாரிகளானது அயலவர் விளைவுகள் அல்லது மூன்றாம் நபர் விளைவுகள் என்றும் அழைக்கப்படும்.
- வெளிவாரிகளைத் தோற்றுவிக்கும் மூலங்களின் அடிப்படையில் இரண்டு வகைப்படும்.
    1. உற்பத்தி
    2. நுகர்வு

- உற்பத்தி அல்லது நுகர்வு நடவடிக்கைகளில் வெளிவாரிச் செலவு அல்லது வெளிவாரி நன்மை கவனத்தில் கொள்ளப்பட்டு, வெளிவாரிகளைப் பின்வருமாறு பிரிக்கலாம்.
  1. உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி
  2. உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி
  3. நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி
  4. நுகர்வில் நேர்கணிய வெளிவாரி

**உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவு என்பது,**

ஏதாவதொரு உற்பத்தி செயற்பாட்டின் காரணமாக அதற்கு நேரடி தொடர்பற்ற வெளிப் பிரிவினருக்கு தோன்றும் பிரதிகூலம் அல்லது பாதக விளைவாகும்.

உதாரணம்:-
- உருளைக்கிழங்கு உற்பத்தியின் காரணமாக நீர் நிலையங்களில் படியும் சேற்று நீரின் காரணமாகச் சூழல் மாசடைதல்.
- விவசாயப் பயிர்களுக்குக் கிருமிநாசினிகளைப் பயன்படுத்துவதனால் சுற்றாடல் மாசடைவும் நோயும் ஏற்படுதல்.

**உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரி விளைவு என்பது,**

ஏதாவதொரு உற்பத்தி செயற்பாட்டின் காரணமாக நேரடி தொடர்பற்ற வெளிப்பிரிவினருக்கு தோன்றும் நன்மை அல்லது சாதக விளைவாகும்.

உதாரணம்:-
- பூந்தோட்டம் ஒன்றை வைப்பதனால் தேன் உற்பத்தியில் தோன்றும் அதிகரிப்பு.
- காடு வளர்ப்புச் செயற்பாட்டின் மூலம் நீர் ஊற்றுக்கள் தோன்றுதல்.

**நுகர்வில் எதிர்கணிய விளைவு என்பது,**

ஏதாவதொரு நுகர்வு நடவடிக்கையின் காரணமாக அதனுடன் நேரடி தொடர்பற்ற வெளிப்பிரிவினருக்கு தோன்றும் பிரதிகூலம் அல்லது பாதக விளைவாகும்.

உதாரணம்:-
- புகைத்தலின் காரணமாக அயலில் உள்ளவர்களுக்கு ஏற்படும் பாதிப்பு.
- வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையின் காரணமாக சுற்றாடல் மாசடைதல்.

**நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவு என்பது,**

ஏதாவதொரு நுகர்வு நடவடிக்கையின் காரணமாக அதனுடன் நேரடி தொடர்பற்ற வெளிப்பிரிவினருக்கு தோன்றும் நன்மை அல்லது சாதக விளைவாகும்.

உதாரணம்:-
- நோய் தடுப்பு மருந்துகளைப் பெறுவதன் மூலம் சகலருக்கும் நன்மை யான விளைவு தோன்றுதல்.

- குறித்தவொரு உற்பத்திச் செயற்பாட்டின் காரணமாக அதன் எல்லாச் செலவுகளும் உற்பத்தியாளரால் தாங்கப்படுமாயின் அல்லது குறித்தவொரு நுகர்வு நடவடிக்கையினால் அதன் நன்மைகள் அனைத்தும் நுகர்வோனுக்குக் கிடைக்குமாயின் சந்தை வினைத்திறனாக அமையும். ஆயினும் வெளிவாரிகள் காரணமாக அவ்வாறு இடம்பெறாது.

- வெளிவாரிகள் காரணமாக தனியார் செலவு சமூகச் செலவிற்கிடையிலான வேறுபாடு தோன்றும்.
- தனியார் செலவானது உற்பத்தியாளர் அல்லது நுகர்வோருடன் நேரடியாகத் தொடர்பு படுவதனால் ஏற்றுக் கொள்வதுடன் தனியார் நலனானது நேரடியாகத் தொடர்புபடும் பிரிவினருக்கே உரிமையாகும்.
- வெளிவாரிச் செலவு என்பது ஏதாவதொரு உற்பத்தி அல்லது நுகர்வுச் செயற்பாடு காரணமாக வெளித்தரப்பினருக்குச் செலவு ஏற்படுவதுடன் இது உற்பத்திச் செயற்பாடுடன் தொடர்புபடாத பிரிவினராலேயே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வெளிவாரி நன்மை என்பது ஏதாவதொரு உற்பத்தி அல்லது நுகர்வு செயற்பாடு காரணமாக வெளித்தரப்பினருக்கு நன்மை ஏற்படுவதுடன் இதற்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை.
- குறித்தவொரு உற்பத்திச் செயற்பாடு அல்லது நுகர்வுச் செயற்பாடு காரணமாக முழுச் சமூகமும் ஏற்றுக்கொள்ளும் செலவு சமூகச் செலவு என அழைக்கப்படும்.
- தனியார் செலவுடன் வெளிவாரிச் செலவைச் சீராக்குவதன் மூலம் சமூகச் செலவு பெறப்படும்.


**சமூகச் செலவு = தனியார் செலவு + வெளிவாரிச் செலவு**

- தனியார் நலனுடன் வெளிவாரி நலனைச் சீராக்குவதன் மூலம் சமூக நலன் பெறப்படும்.

**சமூக நலன் = தனியார் நலன் + வெளிவாரி நலன்**


- பொருளியலில் சமூகச் செலவிற்கும் தனியார் செலவிற்கும் இடையே வேறுபாடு காணப்படுமாயின் அல்லது சமூக நலனுக்கும் தனியார் நலனுக்குமிடையே வேறுபாடு காணப்படுமாயின் விலைப் பொறிமுறை மூலம் சமூகத் தேவைக்கு ஏற்ப உத்தம மட்டத்தில் வளப்பகிர்வு இடம்பெறாது.
- நிறைபோட்டிச் சந்தையில் வினைத்திறனான வளப்பங்கீடானது விலையானது எல்லைச் செலவிற்குச் சமப்படும் நிலையில் (MC = P) உள்ளபோதாகும். இவ்வாறு இல்லாத சந்தர்ப்பத்தில் சமூகத்தில் உத்தம மட்டத்தில் வளப்பங்கீடு இடம்பெறாது.
- வெளிவாரிகள் நேர்கணியமாகவோ அல்லது எதிர்கணியமாகவோ அல்லது எந்த வடிவத்தைப் பெற்றாலும் அவற்றின் விளைவாகச் சமூகச் செலவு , தனியார் செலவிடையே பொருத்தப்பாடின்மை தோன்றும் அல்லது தனியார் நலன் சமூக நலனிடையே பொருத்தப்பாடின்மை தோன்றும்.

- உற்பத்தியில் எதிர்கணிய வெளிவாரி விளைவில் சந்தைத் தோல்வி ஏற்படுவதனை பின்வருமாறு வரைபின் மூலம் காட்டலாம்.





- வரைபில் MPC கோடானது எல்லைத் தனியார் செலவுக் கோடாக இருப்பதுடன் MCS கோடானது எல்லைச் சமூகச் செலவுக் கோடாகக் காணப்படும். பொருளுக்கான கேள்வி D கோட்டினால் காட்டப்படும். இதில் காட்டப்படுவது எல்லைச் சமூக நன்மைக் கோடாகும்.
- சமூகத்திற்கு உடைமையான வளங்கள் உத்தம மட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுவது எல்லைச் சமூக செலவானது எல்லைச் சமூக நலனுக்குச் சமப்படும் வகையில் உற்பத்தி இடம் பெற்றால் மட்டுமாகும்.
- உற்பத்தி எதிர்கணிய விளைவுகள் தோன்றும்போது எல்லைச் சமூக செலவானது எல்லைத் தனியார் செலவிலும் மிகையாகக் காணப்படும் போதாகும். வரைபில் எல்லைச் சமூகச் செலவுக் கோடானது (MSC) எல்லைத் தனியார் செலவுக் கோட்டை (MPC) விட மேலே காணப்படும். வரைபில் தனியார் உற்பத்தி மட்டம் ($Q_p$ சந்தைச் சமநிலை வெளியீட்டு மட்டம்) சமூகத்திறன் வாய்ந்த உற்பத்தி மட்டத்திலும் மிகையாகக் காணப்படும். (மிகை உற்பத்தி தோன்றும்.)

- உற்பத்தியில் நேர்க்கணிய வெளிவாரிகளின்போது சந்தைத் தோல்வி ஏற்படுதல்.





- உற்பத்தியில் நேர்கணிய வெளிவாரியின்போது தனியார் வெளியீட்டு மட்டமானது சமூகத் திறன் வாய்ந்த உற்பத்தி மட்டத்தை விடக் குறைவாக இருக்கும். (குறை உற்பத்தி தோன்றும்.)
- நுகர்வோன் தனது தனியார் நலனின் அடிப்படையில் கேள்வியைத் தீர்மானிக்கும் முறையானது கேள்விக் கோட்டின் (MPB) மூலம் காட்டப்படும்.
- எல்லைத் தனியார் செலவுக் கோடானது எல்லைச் சமூகச் செலவுக் கோட்டை மிகைத்ததாகக் காணப்படும். சமூகத்திறன் வாய்ந்த உற்பத்தி தீர்மானிக்கப்படுவது எல்லைச் சமூகச் செலவுக் கோடானது எல்லைச் சமூக நலன் கோட்டைச் சந்திப்பதைக் குறிக்கும் $Q_S$ புள்ளியாகும்.
- நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவின் போது சந்தைத் தோல்வி ஏற்படுதல்.



- நுகர்வில் எதிர்கணிய வெளிவாரி விளைவைக் காட்டும் இவ்வரைபில் எல்லைத் தனியார் நலமானது MPB கோட்டினாலும் எல்லைச் சமூக நலனானது MSB கோட்டினாலும் காட்டப்படும். நிரம்பல் கோட்டினால் எல்லைத் தனியார் செலவுக்கோடு காட்டப்பட்டுள்ளது.

உதாரணம்:- புகைத்தலை மேற்கொள்ளும் ஒரு நபர் தனியார் செலவையும் தனியார் நலனையும் மட்டுமே கவனத்திற் கொள்ள அவர்களின் நுகர்வு மட்டமானது $Q_P$ மூலம் காட்டப்படும். ஆயினும் சமூகத்திறன் வாய்ந்த உற்பத்தி மட்டமாக $Q_S$ காணப்படும். விலைப் பொறிமுறையின் மூலம் சமூகத்திறன் வாய்ந்த நுகர்வு மட்டம் காட்டப்படுவதில்லை. இதனால் மிகை நுகர்வு தோன்றும். இது வளப்பங்கீட்டின் வினைத்திறனின்மையைக் காட்டும்.

- நுகர்வில் நேர்கணிய வெளிவாரி விளைவின் போது சந்தைத் தோல்வி ஏற்படுதல்.




- நுகர்வில் நேர்கணிய வெளிவாரிகள் காணப்படும்போது எல்லைச் சமூக நலனானது, எல்லைத் தனியார் நலனை மிகைத்ததாகக் காணப்படும். இங்கு சந்தைச் சமநிலை வெளியீட்டு மட்டமானது சமூகத்திறன் வாய்ந்த உற்பத்தியை விடக் குறைந்தளவில் காணப்படும்.

- வெளிவாரி விளைவுகளின் காரணமாகத் தோன்றும் சந்தை தோல்வியைச் சீராக்குவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பலவாகும்.
  - சுற்றாடல் வரி விதிப்பு
  - அனுமதிப்பத்திரம் வழங்குதல்
  - நேர்கணிய வெளிவாரிகளுக்கு மானியம் வழங்குதல்.
  - அரசின் நேரடிக் கட்டுப்பாட்டுக் கொள்கையைச் செயற்படுத்தல்.
  - அரசினால் தண்டப்பணம் அறவிடல்.
  - தனியாருக்கு ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொள்ளல்.

| | |
|---|---|
| **தேர்ச்சி 8.0:** | **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.** |
| **தேர்ச்சி மட்டம் 8.3:** | **சந்தைப் பொருளாதாரத்தின் அரசின் செயற்பாட்டை விமர்சிப்பார்.** |
| **பாடவேளைகள்:** | 08 |

**கற்றற் பேறுகள்:**

- சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் செயற்பாட்டை அறிமுகப்படுத்துவார்.
- சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் செயற்பாட்டை உதாரணத்துடன் விளக்குவார்.
- சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் செயற்பாட்டை நிறைவேற்றும்போது அரசு தோல்வியடையும் முறையை விபரிப்பார்.
- அரசு தோல்வியடைவதற்கான காரணத்தை முன்வைப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சந்தைப் பொருளாதாரத்தில் அரசின் செயற்பாட்டைப் பின்வருமாறு காட்டலாம்.
    - வளங்களை வினைத்திறனாகப் பங்கீடு செய்தல்.
    - வருமானத்தையும் சொத்துக்களையும் நியாயமான முறையில் பங்கீடு செய்தல்.
    - பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்.
    - நிலைபேண்தகு அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

- சந்தைப் பொருளாதாரமொன்றில் காணப்படும் வினைத்திறனின்மையை நீக்குவதற்காக அரசாங்கத்தினால் பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
    - பொதுப் பண்டங்கள் மூலம் விலையொன்றை அறவிட முடியாமல் இருப்பதனாலும், இலாபமொன்றை பெற்றுக் கொள்ள முடியாதிருப்பதனாலும் சந்தை முறைமையானது பொதுப் பண்டங்களை வழங்காது. ஆயினும் அரசாங்கம் தலையீடு செய்து பொதுப் பண்டங்களை வழங்கும்.
    - சந்தை முறைமையினால் அரைப் பொதுப் பண்டங்கள் உத்தம மட்டத்தில் வழங்கப் படாததனால் அரசாங்கத்தினால் அரைப் பொதுப் பண்டங்கள் வழங்கப்படும்.
    - மேன்மைப் பண்டங்கள் உத்தம மட்டத்தில் வழங்கப்படாததனால் குறை நுகர்வு தோன்றும். இதனால் மேன்மைப் பண்டங்களின் நுகர்வை ஊக்குவிக்க அரசாங்கம் தலையீடு செய்யும்.
    - சந்தை முறைமையொன்றிளால் சமூகத்திற்கு தீங்கு விளைவிக்கும் மேன்மையற்ற பண்டங்கள் உத்தம மட்டத்தை விட அதிகளவில் உற்பத்தி செய்யப்படும். இவற்றை வரையறுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்யும்.

      உதாரணம்:- போதைப்பொருள்

- நுகர்வின்போது தனியார் நன்மையை விடக் குறைந்த சமூக நலனைக் கொண்ட பொருட்களும் சேவைகளும் சமூகத்திற்குத் தீங்கை ஏற்படுத்துவதனால் அவை மேன்மையற்ற பண்டங்கள் எனப்படும். இவை உத்தம உற்பத்தியை விட மிகையான மட்டத்தில் உற்பத்தி செய்யப்படுவதனால் இவற்றை வரையறுக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்படும்.

  உதாரணம்:- போதைப்பொருட்கள்

- சமூக நீதியை நிலை நாட்டுவதற்காக அரசாங்கமானது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
  - வருமானத்திலும் செல்வத்திலும் மீள் பங்கீட்டை ஏற்படுத்தல்.
  - சொத்துத் திரட்டல் தொடர்பான வரையறைகளை விதித்தல்.
  - காணிச் சீர்திருத்தம்
- பேரினப் பொருளாதார உறுதியை ஏற்படுத்துவதற்கு, பணவீக்கத்தையும் வேலையின்மை யையும் நீக்குவதற்கு அரசின் நிதிக்கொள்கை பயன்படுத்தப்படும்.
- பொருளாதார வளர்ச்சியையும் நிலைத்து நிற்கும் அபிவிருத்தியையும் உயர்த்துவதற்காக அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.
  1. உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்காக அரசாங்கம் பின்வரும் அடிப்படையில் செயற்படும்.

     உதாரணம்:- பௌதீகக் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல். பெருந்தெருக்கள், அதிவேகப்பாதை, பாலங்கள், கட்டடங்கள், விமான நிலையம், துறைமுகம், நீர்ப்பாசனத் திட்டங்களை நிர்மாணித்தல்.
  2. நிறுவன உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.

     உதாரணம்:- நீதிக்கட்டமைப்பு, நீதிமன்றம், கண்காணிப்பு நிறுவனம், சிறுவர் பாதுகாப்பு, வயோதிபர் பாதுகாப்பு
- சந்தைப் பொருளாதாரத்தில் காணப்படும் வினைத்திறனின்மையை நீக்குவதற்காக அரசாங்கமானது பின்வரும் செயற்பாடுகளை மேற்கொள்ளும்.
  1. பொதுப்பொருட்களையும் சமூக நலப் பொருட்களையும் வழங்குதல்.
  2. நிறைவில் போட்டியைத் தடை செய்தல்.
  3. சுற்றாடல் மாசடைதல் போன்ற வெளிவாரி விளைவுகள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.
  4. பொது வளங்கள் தொடர்பாக உரிமையை உறுதிபடுத்தல்.
- நவீன சந்தைப் பொருளாதாரத்தில் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்படும் செயற்பாடுகள் 5 வகைகளாகும். சந்தைப் பொறிமுறையை வினைத்திறனாகச் செயற்படுத்துவதற்குத் தேவையான சட்ட அடிப்படைகளையும் சமூகச் சுற்றாடலை ஏற்படுத்துதல், சந்தைப் பொறிமுறையினால் தோன்றும் வளப்பங்கீட்டின் வினைத்திறனின்மையை நீக்கச் செயற்படுதல், நியாயமான வளப்பங்கீட்டினை ஏற்படுத்துதல், பொருளாதார வளர்ச்சியை உயர்த்துதல், பேரினப் பொருளாதார உறுதியை உறுதிப்படுத்தல் போன்றவை அந்தச்

செயற்பாடுகளாகும். இதனடிப்படையில் பொருளாதாரத்தில் அரசாங்கம் தலையீட்டை மேற்கொள்வதனால் பல்வேறான வடிவங்களில் வினைத்திறனின்மைகளும் சமமின்மைகளும் தோன்றுவது அரச தோல்வி என்ற எண்ணக்கருவினால் விளக்கப்படும்.

- அரச தோல்விக்கான காரணங்கள் வருமாறு:

 (i) அரசின் செயற்பாட்டில் காணப்படக்கூடிய நெகிழ்வற்ற, இறுக்கத்தன்மை அரசாங்கத் தலையீட்டினால் தோன்றும் ஒரு பாதக விளைவை நீக்குவதற்குச் சூழலுக்குப் பொருத்தமான முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது, அரசாங்கக் கொள்கைகளில் தாமதத்தன்மை தோன்றுவது முக்கியப் பிரச்சனையாகும்.

 (ii) அரசியலில் சுய விருப்பம்: அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் சுய விருப்பத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படும்போது வளங்களின் வீண்விரயம் இடம்பெறும்.

 உதாரணமாக பெருந்தெரு, வைத்தியசாலை, பாடசாலைகள் என்பன அமைக்கும் போது அரசியல் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுதல்.

 (iii) அரசியல் கொள்கைகளில் தூர நோக்கு சிந்தனையயின்மை: அதிகமான பிரச்சனைகளுக்குத் தீர்வுகளை மேற்கொள்ளும்போது குறுகிய கால நோக்கில் தீர்மானம் மேற்கொள்வதனால் நீண்ட கால சமூக அபிவிருத்திக்குத் தேவையான கொள்கைகளும் திட்டங்களும் செயற்படாதிருக்கும்.

 (iv) நிறைவில் தகவல்களின் அடிப்படையில் கொள்கைகளை வகுத்தல். தகவல்களின் நிறைவின்மை காரணமாக அரசின் கொள்கைகளானது வினைத்திறனற்றதாக அமைவதற்கு ஏதுவாகும்.

 (v) ஊக்குவிப்புத் தொடர்பாகப் பாதகத் தாக்கங்கள் தோன்றுதல். வருமான செல்வப் பங்கீட்டில் நியாயத்துவத்தை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற செயற்பாடுகளானது ஊக்குவிப்புக்கள், விளைதிறன் என்பவற்றின் மீது தீங்கான விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

 (vi) அரசாங்கத்தின் தலையீட்டிலிருந்து தவிர்த்துச் செயற்படுதல். அரசாங்கத்தின் பல்வேறான சட்டதிட்டங்களிலிருந்து ஒதுங்கிச் செயற்படத் தனியாரும் நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்வதனால் மறைப் பொருளாதாரம் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

 (vii) நிர்வாகச் செலவுகள் உயர்வடைதல். பொருளாதாரத்தில் தோன்றும் அரச தலையீடானது திட்டவட்டமாகச் செலவை உயர்த்துவதாயிருக்கும். உரிய சட்டங்களைச் செயற்படுத்தும்போது எதிர்ப்பார்க்கப்படும் சமூக நன்மையானது அவ்வளவு உயர்வாக இல்லாததனால் வினைத்திறனின்மைகள் தோன்றலாம்.

- அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் மேலுள்ள நடவடிக்கைகளின் காரணமாக அரச தோல்வி ஏற்படும்.

**தேர்ச்சி 8.0:** பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 8.4:** வரித் தத்துவத்தையும் வரி வகைகளையும் விமர்சித்து இலங்கையின் அரச வருமானத்தை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 10

**கற்றற் பேறுகள்:**

- அரச நிதிக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அரச நிதிக் கொள்கையின் நோக்கங்களை விளக்குவார்.
- அரசின் நிதிக் கருவிகளைப் பெயரிடுவார்.
- அரச வருமானத்தின் பிரதான மூலங்களைப் பெயரிடுவார்.
- வரி அறவிடுவதன் நோக்கத்தை விளக்குவார்.
- வரித் தத்துவத்தை விளக்குவார்.
- பல்வேறான நியதிகளின் அடிப்படையில் வரியை வகைப்படுத்துவார்.
- வரிப்பெயர்ச்சியும் வரி வீதமும் என்ற எண்ணக்கருவை விளக்குவார்.
- வரி அளவிடுவதன் பொருளாதார விளைவுகளைத் தேடிப் பெறுவார்.
- வரியல்லா வருமான மூலங்களை எடுத்துக் காட்டுவார்.
- இலங்கையில் அண்மைக் காலத்தில் அரச வருமானத்தின் போக்கைப் பரிசீலனை செய்வார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பேரினப் பொருளாதார இலக்குகளை அடைந்து கொள்வதற்காக அரசாங்கத்தின் செலவு, வரி அறவிடுதல் கடன்களைப் பெற்றுக் கொள்ளல் போன்ற மாற்றங்களை மேற்கொள்வ தானது அரசின் நிதிக் கொள்கை என அழைக்கப்படும்.
- அரச வரி, அரச செலவு, அரச கடன் என்பன அரசின் நிதிக் கருவிகள் என அழைக்கப்படும்.
- அரச வருமானமானது பெறப்படும் பிரதான மூலங்கள் இரண்டு காணப்படுவதாகவும் அவை,
  - வரி வருமானம்
  - வரியல்லா வருமானம்
- வரி அறவிடுவதன் நோக்கத்தைப் பின்வருமாறு விளக்குவார்.
  - வருமான செல்வப் பங்கீட்டின் சமமின்மையைக் குறைத்தல்.
  - வினைத்திறனை உயர்த்துவதற்கு வளங்களை முகாமைப்படுத்தல்.
  - உயர்ந்த சமூகச் செலவை ஏற்கும் தீங்கிழைக்கும் பொருட்களின் நுகர்வைக் கட்டுப் படுத்தல்.

- மொத்தக் கேள்வியின் மீதான செல்வாக்கு
- மொத்த நிரம்பல் மீதான செல்வாக்கு

- வரி அறவிடுவதன் தத்துவத்தை ஒவ்வொன்றாக விளக்குவார்.
  - நியாயத்தன்மை (Equity)
  - சிக்கனத்தன்மை (Economy)
  - இலகுத்தன்மை (Convenience)
  - நிச்சயத்தன்மை (Certainity)
  - வினைத்திறனான தன்மை (Efficiency)
  - நெகிழ்வுத்தன்மை (Flexibility)
  - அனுகூலத்தன்மை
- வரி அறவிடுவதால் நியாயத்தன்மை என்ற தத்துவமானது பின்வரும் இரண்டு நிபந்தனை களைக் கொண்டிருக்கும். அவை:
  - நிலைக்குத்தான நியாயத்துவம்
  - கிடையான நியாயத்துவம்
- கிடையான நியாயத்துவம் என்பது சமனான பொருளாதார இயலுமையைக் கொண்ட நபர்களை ஒரே சமனானவர்களாகக் கருதி ஒரே அளவான வருமானத்தைக் கொண்டவர்கள் சமனான வரிச்சுமையை ஏற்க வேண்டும் என்பதாகும்.
- நிலைக்குத்தான நியாயத்துவம் என்பது சமனற்ற பொருளாதார நிலைமையைக் கொண்ட தனிநபர்களை சமனற்றவர்களாகக் கருதி, வருமானம் கூடும்போது அதிக வரிச் சுமையைத் தாங்கச் செய்வதாகும்.
- நியாயமான வரிமுறைமையில் பின்வரும் இரண்டு தத்துவங்கள் காணப்படுகின்றன.
  - பிரதிபலன் தொடர்பான தத்துவம்
  - செலுத்தும் தகுதி தொடர்பான தத்துவம்
- பிரதிபலன் தொடர்பான தத்துவம் என்பது அரசாங்கத்தினால் வழங்கப்படும் சேவையின் அளவுக்கு அரசாங்கத்திற்கு வரி செலுத்த வேண்டியிருத்தல் என்பதாகும்.
- செலுத்தும் தகுதி தொடர்பான தத்துவம் என்பது பல்வேறு நபர்களினதும் வரி செலுத்தும் சக்திக்கு ஏற்ப வரி அறவிடப்படுதல் வேண்டும் என்பதாகும்.

சிக்கனத்தன்மை என்பது,

வரி அறவிடுதலின்போது வரியைச் செலுத்துபவர்களுக்கும், வரியைத் திரட்டும் அரசாங்கத்திற்கும் தோன்றும் செலவுகளை இயன்ற அளவு குறைக்க வேண்டும் என்பதாகும் இது செலவு நிர்வாகம், அனுகூலங்கள் என்ற இரண்டு பிரிவுகளைக் கொண்டிருக்கும்.

நிர்வாகச் செலவு என்பது,

அரசாங்கமானது வரியை அறவிடும்போது தோன்றும் செலவாகும்.

அனுகூலச் செலவு என்பது,

வரியைச் செலுத்துபவர்கள் ஏற்கவேண்டிய செலவாகும்.

- இங்கு அரசாங்கமானது வரியைத் திரட்டுவதற்காகத் தோன்றும் செலவை விட வரி வருமானமானது உயர்வாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கும். இல்லையேல் அரசாங்கத்திற்கு வருமானம் கிடைக்காது போகும்.
- வரி முறைமையானது இயன்றளவு எளிமையாக இருத்தல் வேண்டும் என்பதே இலகுத் தன்மை என்பதன் கருத்தாகும். அரசாங்கம் அறவிடும் வரிகள் உரிய முறையில் ஒழுங்காக வரி செலுத்துபவர்களால் செலுத்தப்படுகின்றதா அல்லது அதிகமான மக்கள் வரி செலுத்துவதிலிருந்து விலகியிருக்க முயற்சி செய்கின்றார்களா என்பது இலகுத்தன்மை என்பதனால் தெளிவுபடுத்தப்படும்.
- வரி வகைகளை அரசாங்கம் நிர்ணயித்தால் அதனைத் திடீரென மாற்றியமைக்கக் கூடாது என்பதனையே நிச்சயத் தன்மை என்பது குறிக்கும். மேலும், வரி செலுத்துபவர் களும் தாம் எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய வரிச் சுமை இந்தளவு எனத் திட்டவட்ட மாகக் கூறக் கூடியதாக இருத்தல் வேண்டும். இவ்வாறே முதலீடுகளை மேற்கொள்ளும் போது எதிர்காலத்தில் செலுத்த வேண்டிய வரியானது திட்டவட்டமாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- வினைத்திறனான தன்மை என்பது, அரசாங்கமானது வரியை அறவிடும்போது பொருளாதாரத்தில் வளப் பங்கீட்டுச் செயற்பாட்டிற்கு தாக்கம் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும். மிகையாக வரியை அறவிடாது இருப்பதுடன் பொருளாதாரத்தில் நிகழக்கூடிய வீண்விரயங்கள் (distort) குறைவாக இருக்க வேண்டும் என்பதையே இத்தத்துவம் குறித்து நிற்கும்.
- நெகிழ்வுத்தன்மை என்பது, பொருளாதாரத்தில் தோன்றும் காலத்துடன் இணைந்த மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய வகையில் வரி சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதையே குறிக்கும்.
- அனுகூலத்தன்மை என்பது, வரிச்சட்டம் தொடர்பில் தகவல்களை ஒழுங்கமைத்தலில் அனுகூலத்தன்மை, செலுத்துவதன் அனுகூலத்தன்மை போன்ற நடவடிக்கைகளுக்கு வரி செலுத்துபவர் தாமாக முன்வந்து வரியைச் செலுத்துவதைக் குறிக்கும்.
- பெயர்ச்சிக்கு உட்படுத்தக்கூடிய வகையில் வரிகளை வகைப்படுத்தல்.
  - நேர் வரி
  - நேரில் வரி
- நேர் வரி செலுத்துவதற்குத் தகுதியான நபர் அல்லது நிறுவனத்தினால் வரி செலுத்த வேண்டி இருப்பதுடன், அது இன்னுமொரு பிரிவினருக்கு சுமத்த முடியாதிருப்பதுடன், வரிக்கு உட்பட்ட நபரே வரிச் சுமையை ஏற்க வேண்டி இருப்பதாகும்.

  உ+ம்:- வருமான வரி, சொத்து வரி
- நேரில் வரி என்பது, குறித்த வரியைச் செலுத்துவதற்குச் சட்டத்தினால் நியமிக்கப்பட்ட குறித்தவொரு நபர், அவ்வரிச் சுமையை வேறொரு நபருக்கு சுமத்துவதற்கு முடியுமாக இருப்பது நேரில் வரியாகக் கருதப்படும். சட்ட ரீதியாக வரியைச் செலுத்தும் நபருக்கும் உண்மையில் வரிச் சுமையை ஏற்கும் நபருக்குமிடையே தெளிவான வேறுபாடு ஒன்று காணப்படும்.

  உ+ம்:- விற்பனை வரி, உள்நாட்டு பண்ட வரி, கலால் வரி, பெறுமதி சேர் வரி,

- வரித்தளம் என்பது, வரிக்கு அடிப்படையாகவுள்ள விடயமாகும். வரித்தளத்தை அடிப்படையாகக் கொண்டு வரியை வகைப்படுத்தல்.
  - வருமான வரி
  - நுகர்வோன் வரி
  - செல்வ வரி (சொத்து வரி)
  - வியாபார உரிமை வரி
  - சர்வதேச வர்த்தகம் மீதான வரி (ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வைகள்)
- குறித்தவொரு வரியைச் செலுத்துவதற்குச் சட்ட ரீதியாக நியமிக்கப்பட்ட நபர், அவ்வரியை இன்னுமொருவர் மீது நகர்த்தப்படுமாயின் அது வரிச்சுமையின் பெயர்ச்சி எனப்படும்.
- குறித்தவொரு நபரினால் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளும் செலவில் நேரில் வரி உள்ளடக்கப்படும். சட்டரீதியாக வரியைச் செலுத்தும் நபர் அல்லது நிறுவனமானது தமது உற்பத்தி மீது விதிக்கும் வரித்தொகையை இன்னொருவர் மீது சுமத்துவார்.
- பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்யும் நபர்களே இறுதியாக அரசாங்கத்திற்கு வரியைச் செலுத்துவர்.
- வரித்தாக்கம் என்பது வரித்தொகை ஒன்று விதிக்கபட, இறுதியாக அவ்வரிச் சுமையை ஏற்றுக் கொள்பவர் யார் எனத் திட்டவட்டமாக அறிந்து கொள்வதாகும். அல்லது வரியொன்று விதிக்கப்பட்டால் அவ்வரிச் சுமையானது பொருளாதாரத்தில் எந்தத் துறை மீது தாக்கம் செலுத்தும் எனக் கண்டறிவதாகும். இந்த வகையில் வரித்தாக்கம் இரண்டு வடிவங்களைக் கொண்டிருக்கும்.
  (i) சட்டரீதியான வரித்தாக்கம்
  (ii) பொருளாதார வரித்தாக்கம். அதாவது உண்மையான வரித்தாக்கம்.
- சட்டரீதியான வரித்தாக்கம் என்பது சட்ட ரீதியாக வரி யார் மீது சுமத்தப்பட்டது என்பதாகும். பொருளாதார வரித்தாக்கம் என்பது உண்மையில் யார் வரிச்சுமையை ஏற்கின்றார் என்பதாகும்.
- வரி வீதக் கட்டமைப்பின் அடிப்படையில் வரியானது பின்வரும் 3 வகைகளாகப் பிரிக்கப் படலாம்.
  (1) விருத்தி முறை வரி
  (2) விகித சம வரி
  (3) தேய்வு முறை வரி

- வரித்தளத்தின் அளவு உயர்வடைவதற்கு ஏற்ப வரி வீதமும் படிப்படியாக உயர்வடைந்து விருத்தி முறை வரியாகும். உதாரணம்:- வருமான வரி

  இங்கு வருமான மட்டம் உயர்வடைவதற்கு ஏற்ப வரிவீதமும் உயர்வடையும்.

| **வருமான மட்டம்** | **வரி வீதம்** |
|---|---|
| 300 000 ரூபா வரை | வரி இல்லை |
| 300 000 - 600 000 | 5% |
| 600 000 - 800 000 | 10% |
| 800 000 - 10 00 000 | 15% |
| 10 00 000 - 12 00 000 | 20% |

- வரித்தளம் உயர்வடைய எல்லை வரி வீதம், சராசரி வரி வீதம் உயர்வடைவதைக் காணலாம்.
- வரி அறவீட்டிற்கு உட்படும் வருமானம் எந்த மட்டமாக இருந்தாலும் எல்லா மட்டங்களிலும் ஒரே சதவீதமான வரியை அறவிடுவது விகிதசம வரியாகும். இங்கு எல்லை வரி வீதம் சராசரி வரி வீதத்திற்கு சமனாகும்.


  உதாரணமாகப் பெறுமதி சேர் வரி (எல்லா வருமான மட்டத்திலும் 20%)
- வரித்தளம் உயர்வடைகையில் வரி வீதம் குறைந்து செல்வது தேய்வு முறை வரியாகும்.

  இங்கு வரித்தளம் உயர்வடைகையில் எல்லை வரி வீதம், சராசரி வரி வீதம் என்ற இரண்டும் வீழ்ச்சியடையும்.

  உதாரணம்:- விற்பனை வரி
- வரித்தளம் மாற்றமடையும்போது வரி வீதம் மாற்றமடையும் முறையைப் பின்வரும் தரவுகள் மூலம் காட்டலாம்.

| **வருமான மட்டம்** | **விகித சம வரி** | | **தேய்வு முறை வரி** | | **விருத்தி முறை வரி** | |
|---|---|---|---|---|---|---|
| | **வரித் தொகை** | **வருமானத்தில் வீதம்** | **வரித் தொகை** | **வருமானத்தில் வீதம்** | **வரித் தொகை** | **வருமானத்தில் வீதம்** |
| 100 000 | 20 000 | 20% | 35 000 | 35% | 20 000 | 20% |
| 200 000 | 40 000 | 20% | 60 000 | 30% | 60 000 | 25% |
| 300 000 | 60 000 | 20% | 75 000 | 25% | 120 000 | 30% |

- வரித்தளத்திற்கும் வரிப்பணத்திற்குமிடையிலான தொடர்பைப் பின்வருமாறு காட்டலாம்.




(i) விகித சம வரி (ii) விருத்தி முறை வரி (iii) தேய்வு முறை வரி

வருமானமானது கூடும்போது எல்லை, சராசரி வரி வீதங்கள் குறைவடையும். இது எதிர் வரி வீதக் கட்டமைப்பு மூலம் காட்டப்படும்.

- **வரி அறவிடுவதன் பொருளாதாரப் பாதிப்புகள்:**

அரசாங்கத்தினால் பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்குப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்குத் தேவையான வருமானத்தை உழைக்கும் ஊடகமாக வரி அறவிடுதலானது பயன்படுத்தப்பட்டாலும் பல பாதக விளைவுகள் காணப்படுகின்றன. இவை பல்வேறு பிரிவினருக்கும் பின்வரும் அடிப்படையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

- **முதலீட்டின் மீதான தாக்கம்**

அரசாங்கத்தினால் முதலீட்டாளர்களிடமிருந்து வரி அறவிடும்போது முதலீட்டாளர்களின் செலவு கூடி இலாபம் குறைவதனால் முதலீடு குறைய வாய்ப்புண்டு. ஆயினும் முதலீட்டாளர்களுக்கான வரி விடுதலை, வரிச் சலுகை போன்றவற்றால் முதலீடு உயர்வடையும். இவ்வாறே இறக்குமதிகள் மீது வரி அறவிடும்போது அல்லது அதிகரிக்கும்போது உள்நாட்டு முதலீட்டாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

- **உற்பத்தி மீதான தாக்கம்**

அரசாங்கமானது உற்பத்தியாளரிடமிருந்து வரியை அறவிடும்போது உற்பத்தியாளரின் உற்பத்திச் செலவு அதிகரித்து இலாபம் குறையும்.

- **நுகர்வின் மீதான தாக்கம்**

நாடொன்றின் வரிமுறைமையானது நாட்டின் நுகர்வு மட்டத்தில் பல்வேறு அடிப்படைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும். அரசாங்கத்தினால் நேரில் வரி அதாவது பொருட்கள் மீது வரி அறவிடப்படும்போது பொருளின் விலை கூடி நுகர்வு மட்டம் குறைய வாய்ப்புண்டு. வருமானத்தின் மீது நேர் வரி விதிக்கும்போது செலவிடக்கூடிய வருமானத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதனால் நுகர்வு குறைவடையலாம்.

- **விலை மட்டம் மீதான தாக்கம்**

  அரசாங்கத்தினால் பொருட்கள் மீது விலை விதிக்கப்பட்டால் நாட்டில் பொருட்களின் விலை உயர்வடைவதனால் விலை மட்டத்தில் அதிகரிப்பு ஏற்படும். இவ்வாறு விலை மட்டம் அதிகரிப்பதனால் நாட்டில் வாழ்க்கைச் செலவு கூடி பணவீக்கம் ஏற்படும்.

- **சர்வதேச வர்த்தகம் மீதான தாக்கம்**

  தீர்வை வரியை விதிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகத்திற்கு நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும். தீர்வை வரி வீதத்தைக் குறைக்கும்போது ஏற்றுமதி, இறக்குமதி ஊக்குவிக்கப்படுவதுடன், தீர்வை வரியை அதிகரிக்கும்போது ஏற்றுமதி, இறக்குமதி அதைரியப்படுத்தப்படும்.

- **வருமானப் பங்கீட்டிலான தாக்கம்**

  நாட்டில் செல்வந்தரிடமிருந்து வரியை அறவிட்டுக் குறைந்த வருமானம் கொண்டோருக்கு மானியம் வழங்கும்போது நாட்டில் வருமானச் சமமின்மை நீக்கப்படும். இங்கு அத்தியாவசியப் பண்டங்களுக்கு குறைந்த வரியும், ஆடம்பரப் பண்டங்களுக்கு உயர்ந்த வரியும் அறவிடப்படுவதனால் வருமானச் சமமின்மையைக் குறைக்கலாம்.

- **சேமிப்பின் மீதான தாக்கம்**

  பொருள் மீது வரி விதிக்கும்போது வாழ்க்கைச் செலவு உயர்வடைவதுடன் செலவிடக் கூடிய வருமானம் குறைவதனால் சேமிப்பு அதைரியப்படுத்தப்படும்.

- அரசாங்கம் உடைமையாகக் கொண்டுள்ள சொத்துக்களிலிருந்து வருமானங்களும் கட்டணங்களை அறவிடுவதும் வரியல்லா வருமானங்களாகும். இதனுள் உள்ளடக்கப் படுவது:

  - **வாடகை வருமானம்:** அரசாங்கக் கட்டடங்களை அரச ஊழியர்களுக்கு வாடகைக்கு விடுதல், அரசாங்கத்திற்குச் சொந்தமான உல்லாசப் பயணிகளுக்கான விடுதிகளை வாடகைக்கு விடுவதை இது குறிக்கும்.
  - **வட்டி வருமானம்:** அரச ஊழியர்களுக்கும், பல்வேறான சட்டரீதியான சபை களுக்கும் அரசாங்கத்தினால் வழங்கப்படும் கடன்களுக்கு அறவிடப்படும் வட்டி இதற்குள் அடங்கும்.
  - **இலாபப் பங்குலாப வருமானம்:** இலங்கை மத்திய வங்கியின் பங்குலாபம், புகையிரதம், தபாற்சேவை என்பவற்றால் உழைக்கும் வருமானம், அரச முயற்சியும், சட்ட அங்கீகாரம் கொண்ட சபைகள் பெற்றும் தரும் வருமானங்கள்.
    - துறைமுகம், வணிக வங்கிகள், மின்சார சபை, பெற்றோலிய கூட்டுத்தாபனம் போன்றவை. உழைக்கும் வருமானங்கள் இதற்குள் அடங்கும்.
  - **வாடகை வருமானம்:** அரசின் காடுகளை வாடகைக்கு விடுதல்.
  - **சமூகப் பாதுகாப்பு பங்களிப்புப் பணம்.**
  - **தண்டனை, பணம் அறவீடு:** நீதிமன்றத்தால் அறவிடப்படும் தண்டப்பணம், அரச உடைமையாக்கல்.
  - **கட்டணங்களும் விநியோக வருமானங்களும்**

- இதன் கீழ் விமானப் போக்குவரத்து சேவை, விமான நிலைய அபிவிருத்திக் கம்பனி மூலமாக மேற்கொள்ளப்படும் விமானப் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் கட்டணம்.
- குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தினால் அறவிடப்படும் விசாக் கட்டணம்.
- விமானக் கடவும் சீட்டுக் கட்டணம்
- வாகனப் பதிவுக் கட்டணம்
- அரசு பயன்படுத்திய பொருட்களின் விற்பனை வருமானம்
- லொத்தர் சபை வருமானம்

[இலங்கையில் அரச வருமானத்தில் அண்மைக்காலப் போக்கு வருடாந்தம் வெளியிடப்படும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையின் தகவல்களைப் பயன்படுத்தி அண்மைக்காலப் போக்குத் தொடர்பான அறிவை, ஆசிரியர் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். (2016 ஆண்டறிக்கை தகவலை உள்ளடக்குக.)]

**தேர்ச்சி 8.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.5:** **அரச செலவின் கட்டமைப்பு மற்றும் கால அடிப்படையிலான போக்குப் பற்றி விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- அரச செலவுகள் தோன்றுவதற்கான காரணங்களை விளக்குவார்.
- அரசாங்க செலவினைப் பொருளியல் அடிப்படையில் வகைப்படுத்துவார்.
- பொருளியல் வகைப்பாட்டில் உள்ள ஒவ்வொரு கூறுகளையும் விளக்குவார்.
- அரச செலவின் கட்டமைப்பையும் அதன் போக்கினையும் பரீட்சிப்பார்.
- அரச செலவின் விளைவுகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருளாதார நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அரசின் மூலம் செய்யப் படுகின்ற செலவு அரச செலவாகும்.
- அரச செலவு தோன்றுவதற்கான காரணங்கள் கீழே தரப்படுகின்றன.
    - அருமையான வளங்களைப் பங்கீடு செய்து ஒதுக்குவதை வினைத்திறனுடைய தாக்குதல்.
    - வருமான ஏற்றத்தாழ்வைக் குறைத்தல். (நியாயத்துவத்தை ஏற்படுத்தல்)
    - சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாத்தல்.
    - சமூகத்தின் நலனுக்குக் காரணமாக அமைகின்ற தனியார் துறை நிரம்பல் செய்ய முன்வராத பொதுச் சேவைகளையும் நிறுவனங்களையும் நடத்திச் செல்லல்.
    - பொருளாதார வளர்ச்சியும் அபிவிருத்தியும்
- அரச செலவினைப் பிரதானமாக மூன்று பிரிவுகளாகப் பிரிக்க முடியும்.

    (1) நடைமுறைச் செலவு

    (2) மூலதனச் செலவு

    (3) தேறிய கடன் வழங்கல்
- நடைமுறைச் செலவு என்பது மீண்டும் மீண்டும் எழுகின்ற செலவுகளாகும். குறிப்பிட்ட வருடத்தினுள் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் செய்ய வேண்டிய செலவுகளும் மாற்றல் கொடுப்பனவுகளும் இதில் அடங்கும். செலவு செய்கின்ற காலத்திற்குள்ளேயே பொருளாதாரத்துக்குப் பிரதிபலன்களைப் பெற்றுத் தரும் ஒரு செலவு ஆகும்.

    உ+ம்:- ஊழியர் சம்பளக் கொடுப்பனவுகள்
    உணவு மானியம்
    ஓய்வூதியக் கொடுப்பனவு
    போக்குவரத்துச் செலவுகள்

- மூலதனச் செலவு எனப்படுவது பொதுவாக ஒரு வருடத்துக்குக் கூடிய பயன்பாட்டைக் கொண்ட பண்டங்களைக் கொள்வனவு செய்வதற்கும் மூலதனப் பண்டங்களை உருவாக்கு வதற்கும் அவற்றைப் பழுதுபார்த்தலுக்குமாகச் செய்யப்படுகின்ற செலவாகும்.

  உ+ம்:-
  - இயந்திரப் பொறிகளைக் கொள்வனவு செய்தல்.
  - கட்டடங்களை நிர்மாணித்தல்.
  - வாகனங்களைக் கொள்வனவு செய்தல்.
  - பெருந்தெருக்களை நிர்மாணித்தல்.


- தேறிய கடன் வழங்கல் என்பது நடைமுறை மற்றும் மூலதனச் செலவுகளுக்குள் அடங்காத அரசினால் செய்யப்படும் செலவுகள் ஆகும். முற்பணக் கணக்கின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் தேறிய கடன் வழங்கல், கடன் மீளப்பெறல், அரச முயற்சி யாளருக்குக் கடன் வழங்குதல் என்பன இதில் அடங்கும்.

- அரசின் செலவினை மேற்குறித்த வகையில் விரிவாக வகைப்படுத்தப்பட்டாலும் ஒவ்வொரு செலவு வகைக்குள்ளும் அடங்கியுள்ள பல்வேறு செலவுக் கூறுகளையும் அறிந்து கொள்ளும் நோக்கில் நடைமுறைச் செலவுகளையும் மூலதனச் செலவுகளையும் பிரதான வகைகள் இரண்டின் கீழ் வேறுபடுத்திக் காட்ட முடியும்.
  (1) பொருளியல் ரீதியான வகைப்பாடு
  (2) தொழிற்பாட்டு ரீதியான வகைப்பாடு

- இங்கு அரசாங்க செலவில் பொருளியல் ரீதியான வகைப்பாடு மட்டுமே நோக்கப்படும்.

- அரச செலவின் பொருளியல் ரீதியான வகைப்பாடு கீழே காட்டப்படுகிறது.

**பொருளியல் வகைப்பாட்டின்படி அரச செலவு**




- நடைமுறைச் செலவின் கீழ் பொருட்கள் சேவைகளுக்காகச் செய்யப்படும் செலவு என்பது பொது மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கின்ற பல்வேறு அரச சேவைகளை உற்பத்தி செய்வதற்காகவும், நடாத்திச் செல்வதற்காகவும் செய்யப்படும் செலவுகளாகும். இச்செலவுகளின் பிரதிபலன்கள் ஒரு வருடத்துக்கு வரையறுக்கப்பட்டதாகும்.

  உ+ம்:- தேசிய பாதுகாப்பு, பாடசாலைக் கல்வி, வைத்தியசாலை, சுகாதார சேவைகள், பயணிகள் போக்குவரத்துச் சேவை.

- வட்டி செலுத்தல்கள் என்பது அரசாங்கம் உள்நாட்டு, வெளிநாட்டு ரீதியில் பெற்றுக் கொண்ட கடன்களுக்குச் செலுத்தப்படுகின்ற வட்டிச் செலவுகளாகும். தனி விடய மொன்றாகப் பார்க்கும்போது அரச செலவில் இடம்பெறுகின்ற பாரியளவிலான பெறுமதியைப் பெறுவது வட்டிச் செலுத்தல்களாகும். வட்டிச் செலுத்தல்கள் அதிகரிக்கும் போது அரச சேமிப்புக்கள் வீழ்ச்சியடைவதுடன் முதலீடுகள் குறைவடைந்து பொருளாதார வளர்ச்சியும் கட்டுப்படுத்தப்படும். வட்டிச் செலுத்தல்கள் மாற்றல் செலவுகளாகக் கருதப்பட்டு தேசிய கணக்குகளில் உள்ளடக்கப்படுவதில்லை.

- நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் என்பது அரசின் மூலம் பல்வேறு அரச நிறுவனங்களுக்கும் குடும்பத் துறையினருக்கும் பெற்றுக் கொடுக்கப்படும் மானியங்கள் ஆகும்.
- இங்கு அரச நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் மானியமாகக் குறிப்பிடப்படுவது நட்டத்தில் இயங்கும் அரச முயற்சிகளை நடத்திச் செல்வதற்காக அரசினால் வழங்கப் படும் நிதிகள் ஆகும்.

  உ+ம்:- இலங்கைத் துறைமுக அதிகாரசபை, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, இலங்கை மின்சார சபை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் போன்ற அரச முயற்சிகளுக்கு வழங்கப்படும் மானியங்களாகும்.
- குடும்பத் துறையினருக்கு வழங்கப்படுகின்ற மானியங்களுக்காகக் கீழே குறிப்பிடப்படுவன வற்றை உதாரணமாகக் கூறலாம்.
  - சமுர்த்தி உதவு தொகை
  - ஓய்வூதியம் (அரசின் மானியத்தில் பெருமளவாகும்)
  - உணவு முத்திரை
  - உணவு மானியம்
  - பாடசாலைப் புத்தகங்கள், சீருடை, பருவகாலப் பற்றுச்சீட்டு, பகலுணவு
  - பாதுகாப்புத் துறையின் போர்வீரர்களுக்காக வழங்கப்படும் மானியம்
  - உர மானியம்
- எவ்விதத்திலேனும் நடைமுறை மாற்றல்களின் அதிகரிப்பானது பொருளாதாரத்தில் வேறு முன்னுரிமையளிக்க வேண்டிய துறைகளுக்கு வளங்களைப் பயன்படுத்துவதற்குரிய ஆற்றலைக் கட்டுப்படுத்துகிறது. அரச சேமிப்புக்களைக் குறைக்கிறது. முதலீடுகளைக் கட்டுப்படுத்தும். வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை அதிகரிக்கச் செய்யும்.
- முதலீட்டுச் (மூலதன) செலவில் உள்ளடங்குகின்ற மெய்ச்சொத்துக்களின் கையேற்புச் செலவு என்பது மத்திய அரசினால் நேரடியாக மூலதன ஆக்கத்துக்கு முதலீடு செய்கின்ற பணத்தொகையாகும்.

  உ+ம்:- அதிவேகப் பாதையை நிர்மாணிப்பதற்காக மத்திய அரசினால் பணம் ஒதுக்கப் படல்.
- பல்வேறு அரச நிறுவனங்களுக்கு, கூட்டுத் தாபனங்களுக்கு, உள்ளூராட்சி நிறுவனங் களுக்கு மூலதன ஆக்கத்துக்காகப் பெற்றுக் கொடுக்கப்படுகின்ற மீண்டும் மீளப் பெற்றுக் கொள்ளாத பணம் மூலதன மாற்றல்கள் என அழைக்கப்படும்.

  உ+ம்:- பாடசாலைக் கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக மத்திய அரசினால் மாகாண சபைகளுக்குப் பணம் பெற்றுக் கொடுத்தல்.
- குறிப்பிட்ட வருடத்துக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மூலதனச் செலவுகளை முழுமையாகச் செலவிடுவதற்குரிய ஆற்றல் இல்லையென எதிர்பார்க்கப்படும்போது மூலதனச் செலவு மீதிகள் செலவு மதிப்பீடுகளுக்குள் உள்ளடக்கப்படுவதுடன் அவை குறைச் செலவுகள் என அழைக்கப்படும்.

- குறைச் செலவுகளின் மூலம் மூலதனச் செலவுகள் குறைத்துக் காட்டப்படுவதோடு அரச வருமானத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் செலவுகளை ஈடுசெய்வதற்கு மிகவும் கடினமான நிலைமையின்போது வரவு செலவுத்திட்டக் குறைநிலையைக் குறைத்துக் காட்டும் உபாயமாகக் குறைச் செலவு மீதிகள் செலவு மதிப்பீடுகளுக்குள் உள்ளடக்கப் படுகின்றன.
- பொருளியல் வகைப்பாட்டின்படி இலங்கையின் செலவுக் கட்டமைப்புக் கீழே காட்டப் படுகிறது.

**பொருளாதார வகைப்பாட்டின்படி செலவு மற்றும் தேறிய கடன் வழங்கல்**

| தலைப்பு | 2014 (ரூபா.மில்) | 2015 (ரூபா.மில்) | 2016 தற்காலிகம் (ரூபா.மில்) |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவுகள் | 1 322 898 | 1 701 658 | 1 757 782 |
| பொருட்கள் சேவைகள் மீதான செலவு | 568 829 | 772 564 | 746 250 |
| வட்டிச் செலுத்தல்கள் | 436 395 | 509 674 | 610 895 |
| நடைமாற்றல்களும் மானியங்களும் | 317 674 | 419 420 | 400 637 |
| மூலதனச் செலவு | 459 855 | 588 175 | 577 036 |
| மெய்ச் சொத்துக்களின் கையேற்பு | 252 303 | 313 260 | 328 202 |
| மூலதன மாற்றல்கள் | 207 551 | 274 916 | 248 834 |
| மீள்கொடுப்பனவு கழித்த கடன்வழங்கல் | 13 112 | 561 | -934 |
| மொத்தச் செலவுகளும் தேறிய கடன்வழங்கலும் | 1795865 | 2290394 | 2333884 |

- அரச செலவின் போக்குகளைக் கீழ்த் தரப்படும் வகையில் காட்ட முடியும்.
  - குறுங்கால அடிப்படையில் அரச செலவுகளில் கடுமையான நெகிழ்வற்ற தன்மை யினைக் காண முடியும்.
  - அரச செலவின் சுமார் 60% அளவு வட்டிச் செலுத்தல்கள், சம்பளங்களும் மாற்றல் செலவுகள் என்பவற்றைக் கொண்டிருக்கின்றமை.
  - மாற்றல் செலவுகளில் 2/3 பகுதி ஓய்வூதியக் கொடுப்பனவை உள்ளடக்கியிருத்தல்.
  - இலங்கையின் ஊழியப்படையில் 13% அரச ஊழியராக இருப்பதனால் சம்பளம் வழங்குவதற்கான செலவு உயர்வாக இருத்தல்.
    (மத்திய வங்கி அறிக்கையின் அண்மைக் கால தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)
- அரசாங்கச் செலவின் விளைவுகளைப் பின்வருமாறு காட்டலாம்.
  - நடைமுறைச் செலவுகள் அதிகரிப்பதன் காரணமாக அரச சேமிப்புக்கள் வீழ்ச்சி யடைதல்.
  - அரச முதலீடுகள் கட்டுப்படுத்தப்படல்.
  - வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிப்பதனால் அரசின் கடன் பெறுகை அதிகரித்தல்.
  - அரச செலவினை ஈடுசெய்வதற்குக் கடன் பெறுவதன் மூலம் தனியார் துறைக்கு வழங்கப்படும் கடனளவு கட்டுப்படுத்தப்படலும் சந்தைக் கடன் வட்டி விகிதம் அதிகரிப்பதனால் தனியார் துறைக்கான முதலீடுகள் வீழ்ச்சியடைதலும்.
  - சென்மதி நிலுவைப் பிரச்சினைகள் ஏற்படுதல்.

**தேர்ச்சி 8.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.6:** **அரச வரவு செலவுத் திட்டத்தின் வடிவம் மற்றும் கொள்கைகளைப் பகுப்பாய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- அரச வரவு செலவுத் திட்டத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பற்றாக்குறை, மிகுநிலை, சமநிலை வரவு செலவுத் திட்டங்களை முன்வைப்பார்.
- அரச வரவு செலவுத் திட்ட அட்டவணையொன்றின் மாதிரி அமைப்பினை முன்வைப்பார்.
- நடைமுறைக் கணக்கு மிகையொன்றின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- முதனிலைக் கணக்கு மீதியை விளக்குவார்.
- இலங்கை அரசின் தேறிய நிதிப் பற்றாக்குறை மற்றும் மொத்த மீதி என்பவற்றுக் கிடையிலான வேறுபாட்டை விளக்குவார்.
- விரிவாக்கற் தாக்கமுடைய அரச வரவு செலவுத் திட்டக் கொள்கையினை விளக்குவார்.
- சுருக்கத் தாக்கமுடைய அரச வரவு செலவுத் திட்டக் கொள்கையினை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- எதிர்வரும் நிதியாண்டினுள் குறிப்பிட்டதொரு அரசாங்கம் அரச நிதிக் கொள்கையினைச் செயற்படுத்துவதற்காகப் பயன்படுத்துகின்ற பிரதான கருவி அரச வரவு செலவுத் திட்டம் என அழைக்கப்படும்.
- இது அரசாங்கத்தின் எதிர்கால நிதி திட்டமிடலாக இருப்பதுடன் அரசாங்கத்தின் எதிர்கால நோக்கையும் செயற்பாட்டையும் வெளிக்காட்டும் முக்கியமான ஆவணமாகக் குறிப் பிடலாம்.
- அரச வரவு செலவு திட்டம் தொடர்பாக ஒதுக்கீட்டு மசோதா என்ற சட்டமூலம் காணப்படும்.
- ஒதுக்கீட்டு மசோதா என்பது எதிர்வரும் வருடத்திற்கு மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள செலவுகள், திணைக்களங்கள், அமைச்சுகள் என்ற வகையில் ஒதுக்கீடு செய்து பெறுவதற்கு எதிர்பார்க்கும் பிரிவினர், முறை என்பவற்றைக் குறிப்பிட்டு வருமானம், செலவு இடையே இடைவெளி காணப்படுமாயின் அதனை நிதியீட்டம் செய்யும் முறையை உள்ளடக்கிய ஒரு அறிக்கையாகும்.
- முன்மொழிவுப் பிரேரனை அங்கீகரிக்கப்பட்ட பின்னர், எந்தவொரு அமைச்சுக்கும் புதிதான நிதி தேவைப்படுமிடத்து, அது தொடர்பாக பாராளமன்ற அனுமதியைப் பெறுவதற்கு உரிய அமைச்சினால் முன்வைக்கப்படும் மதிப்பீடு குறைநிலை ஒதுக்கீடாகக் கருதப்படும்.

- எதிர்பாராத நிகழ்வுகளின் காரணமாக (யுத்த நிலைமை, தேர்தல் போன்ற) குறித்த காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு தவறும் சந்தர்ப்பத்தில் அதற்கான அனுமதியைப் பெறும் வரை, எதிர்வரும் நிதியாண்டிற்கு அந்தந்த அமைச்சுகளால் ஏற்றுக் கொள்ள வேண்டிய செலவுகளை, அரசின் ஒன்றிணைந்த நிதியிலிருந்து ஒதுக்குவதற்காக தற்காலிகமாக முன்வைக்கப்படும் செலவு அறிக்கையானது கணக்கு வாக்கெடுப்பு எனப்படும்.
- கணக்கு வாக்கெடுப்பானது செலவுக்கான முன்மொழிவுகளாக மட்டுமே இருப்பதனால் இதில் மிகையோ அல்லது குறையோ காணப்படாது.
- இவ்வாறே கணக்கு வாக்கெடுப்பானது மூன்று அல்லது நான்கு மாதங்கள் என்ற குறுகிய காலத்திற்கு முன்வைக்கப்படுவதனால், புதிய கொள்கைகள், திட்டங்கள் எதுவும் உள்ளடக்கப்படுவதில்லை.
- இடைக்கால பாதீடு என்பது கணக்கு வாக்கெடுப்பிலிருந்து வேறுபட்டதாகும்.
- இடைக்கால பாதீடு என்பது செலவு முன்மொழிவுகள் மட்டுமன்றி வருமான முன்மொழிவு களையும் உள்ளடக்கிய முழுமையான வரவு செலவு திட்டமாகும்.
- இடைக்கால பாதீடு என்பது, ஒரு அரசாங்கமானது ஆட்சியிலிருக்கையில் முன்வைக்கும் வரவு செலவு திட்டமானது அங்கீகரிக்கப்பட்ட நிலையில் காணப்படும்போது, அதன் பின்னர் ஆட்சியை ஏற்கும் அரசாங்கமானது, தமக்குத் தேவையான சீராக்கங்களை உள்ளடக்கி மீண்டும் முன்வைக்கும் வரவு செலவு திட்டமாகும்.
- அரச வரவு செலவு திட்டத்திற்கும் தனிநபர் வரவு செலவு திட்டத்திற்குமிடையே வேறுபாடு காணப்படும்.
- தனிநபர் வரவு செலவு திட்டத்தில் முதலாவது வருமான வழிகள் குறிப்பிடப்பட்டு அதற்கமையச் செலவுகள் தீர்மானிக்கப்படும்.
- அரச வரவு செலவு திட்டத்தில் செலவினங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பின்னர் அச்செலவினங்களை ஈடுசெய்வதற்குத் தேவையான வருமான மூலங்கள் தீர்மானிக்கப் படும்.
- அரச வரவு செலவு திட்டத்தில் அரச வருமானம், அரச செலவு என்பன ஒப்பீடு செய்யப்பட்டு பாதீட்டு மீது பெறப்படுவதுடன், பாதீட்டு மீதியின் தன்மைக்கு ஏற்ப பாதீடு தொடர்பாக பின்வரும் மூன்று எண்ணக்கருக்களை அவதானிக்கலாம்.

    (1) குறைநிலை பாதீடு

    (2) மிகைநிலை பாதீடு

    (3) சமநிலை பாதீடு

- அரச செலவினை விட அரச வருமானம் குறையுமாயின் பற்றாக்குறை வரவு செலவுத் திட்டமாகும்.
- அரச செலவினை மிஞ்சி அரச வருமானம் உயர்ந்த பெறுமதியைப் பெறுமாயின் மிகைநிலை வரவு செலவுத் திட்டமாகும்.
- அரசாங்கம் எதிர்பார்க்கும் செலவினங்களுக்குச் சமனாக எதிர்பார்க்கப்படும் வருமானம் அமையுமாயின் சமநிலை வரவு செலவுத் திட்டம் எனவும் அழைக்கப்படும்.

- கற்பித்த தரவுகளை உள்ளடக்கியதாக அரச வரவு செலவு திட்டத்தின் மாதிரிப் படிவம் வருமாறு:

**அரச வரவு செலவுத் திட்டம்**

| விடயம் | மில்லியன் (ரூபா) |
|---|---|
| மொத்த வருமானமும் நன்கொடையும் | 170 000 |
| மொத்த வருமானம் | 165 000 |
| வரி வருமானம் | 150 000 |
| வரியல்லா வருமானம் | 15 000 |
| நன்கொடை | 5 000 |
| செலவுகளையும் மீள்கொடுப்பனவுகளையும் கழித்த பின்னர் கடன் வழங்கல் | 200 000 |
| மீண்டெழும் (வட்டி 21 000) கொடுப்பனவு | 175 000 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கலும் (அரச முதலீடு 20 000) | 25 000 |
| நடைமுறைக் கணக்கின் மிகை (+) / குறை (-) | -10 000 |
| முதன்மைக் கணக்கின் மிகை (+) / குறை (-) | -9 000 |
| மொத்த பாதீட்டு மிகை (+) / குறை (-) | -30 000 |

- அரச வரவு செலவுத் திட்டத்தின் மாதிரி அமைப்பினைப் பின்வருமாறு காட்ட முடியும்.
  (i) நடைமுறைக் கணக்கு மீதி
  (ii) முதனிலைக் கணக்கு மீதி
  (iii) மொத்தக் கணக்கு மீதி
  (iv) தேறிய நிதிப் பற்றாக்குறை என்ற வகையில் நான்கு பிரிவுகளைக் கொண்டதாகும்.

  அத்துடன் நடைமுறைக் கணக்கு மீதி என்பது அரசின் மொத்த வருமானத்திலிருந்து (நன்கொடை தவிர) நடைமுறைச் செலவினை நீக்க வருவதாகும்.

  மேலுள்ள மாதிரியின் அடிப்படையில்,

  மொத்த வருமானம் = 165 000

  நடைமுறை செலவு = 175 000

  நடைமுறை கணக்கு மீதி = 165 000 - 175 000

  = -10 000

- முழு மொத்த மீதி என்பது அரசின் மொத்த வருமானத்திலிருந்து (நன்கொடை உள்ளடங்கலாக) நடைமுறை, மூலதனச் செலவுகளை உள்ளடக்கிய அரசின் மொத்த செலவு நீக்கிய பின்னருள்ள மீதியாகும்.

  மொத்த வருமானம் = 170 000
  மொத்தச் செலவு
  (செலவினங்களும் மீள்கொடுப்பனவு = 200 000
  கழித்த கடன் வழங்கலும்)
  முழு மொத்த மீதி = 170 000 - 200 000
  = - 30 000

- முதன்மை கணக்கு மீதி என்பது அரசின் மொத்த வருமானத்திலிருந்து (நன்கொடை உள்ளடக்கி) அரச கடனுக்காக செலுத்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவுகள் உள்ளடக்கப் படாத மீண்டெழும் செலவு, மூலதனச் செலவு என்ற விடயங்களை உள்ளடக்கிய செலவுகள் நீக்கிய பின்னருள்ள மீதியாகும்.
- முழு மொத்த மீதியிலிருந்து வட்டிக் கொடுப்பனவை நீக்குவதன் மூலமும் முதன்மை வருமானக் கணக்கு மீதியைப் பெறலாம்.
  முதன்மைக் கணக்கு மீதி = முழு மொத்த மீதி - வட்டிக் கொடுப்பனவு
  முதன்மைக் கணக்கு மீதி = -30 000 - (-21 000) = - 9 000
- இதனால் முழு மொத்த மீதிக்கும் முதன்மை கணக்கு மீதிக்கும் இடைப்பட்ட வித்தியாச மானது அரச கடனுக்கு செலுத்தப்பட்ட வட்டிக் கொடுப்பனவிற்கு சமனாகும்.

மேலுள்ள மாதிரிக்கு ஏற்ப,

முழு மொத்த மீதி = - 30 000

முதன்மை கணக்கு மீதி = -9 000

வட்டிக் கொடுப்பனவு = - 30 000 - (-9 000)

= - 21 000

- தேறிய பணக் குறை என்பது அரசாங்கத்தின் மொத்த வருமானத்திலிருந்து (நன்கொடை உள்ளடக்கி) கடன் தவணைப் பணக் கொடுப்பனவு நீக்கிய பின்னருள்ள அரசின் மொத்த செலவுக்குமிடையில் உள்ள வேறுபாடாகும். (அதாவது கடன் தவணைப் பணக் கொடுப்பனவு உள்ளடக்கப்படாத நிலையில் கணிப்பீடு செய்யப்பட்ட பாதீட்டு பற்றாக்குறையாகும்.

**உதாரணம்:-**

| | |
|---|---|
| மொத்த வருமானம் (நன்கொடை சேர்த்து) | = 5 000 மில்லியன் ரூபா |
| அரசின் மொத்தச் செலவு | = 6 100 மில்லியன் ரூபா |
| முழு மொத்த மீதி (5 000 - 6 100) | = -1 100 மில்லியன் ரூபா |
| கடன் தவணைப் பணக்கொடுப்பனவு | = -500 மில்லியன் ரூபா |
| தேறிய பணக்குறை | = -1 100 - (-500) மில்லியன் ரூபா |
| | = -600 மில்லியன் ரூபா |

- இதன்படி அரசின் தேறிய பணக்குறைக்கும் முழு மொத்த மீதிக்குமிடையிலான வேறுபாடு கடன் தவணைப் பணக் கொடுப்பனவு ஆகும்.

(அரச செலவினங்களை பொருளாதார ரீதியாக வகைப்படுத்தும்போது அரசின் கடன் தவணைப் பணக் கொடுப்பனவானது மூலதனச் செலவில் உள்ளடக்கப்படுவதில்லை. காரணம் இச்செலவானது செலவில் உள்ளடக்கப்படுவதில்லை. காரணம் இச் செலவானது குறித்த வருடத்திற்கென மேற்கொள்ள வேண்டிய செலவிற்காக ஏற்பட்டதொன்றல்ல. ஆனாலும் அரச செலவு கணிப்பீட்டின்படி உள்நாட்டு, வெளிநாட்டு கடன் தவணைப் பணக் கொடுப்பனவானது மூலதனச் செலவில் உள்ளடக்கப்படும். இதனால் தான் தேறிய பணக்குறை கணிப்பீட்டில், முழு மொத்த மீதியிலிருந்து கடன் தவணைப் பணக் கொடுப்பனவு நீக்கப்படும்.

- அரச வரவு செலவுத் திட்டக் கொள்கையினுள் காணப்படக்கூடிய விசேடமான அம்சங்கள் இரண்டாகும்.
  (i) விரிவாக்கற் தாக்கமுடைய வரவு செலவுத் திட்டக் கொள்கை
  (ii) சுருக்கற் தாக்கமுடைய வரவு செலவுத் திட்டக் கொள்கை
- பாதீட்டுக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசின் கடன் மூலம் நாட்டில் பண நிரம்பல் கூடி விலை மட்டம் கூடுவதன் மூலம் பணவீக்க நிலைமை தோன்றுமாயின் அது விரிவாக்கற் தாக்கமுடைய பாதீட்டுக் கொள்கையாகக் கருதப்படும்.

  **உதாரணம்:-**

  - அரசு மத்திய வங்கியிடம் கடன் பெற்று வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்தல்.
  - அரசு வர்த்தக வங்கிகளிடம் கடன் பெற்று வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்தல்.
- அரசாங்கமானது மத்திய வங்கி, வணிக வங்கிகளிடம் கடன் பெற்று பாதீட்டுக் குறையை ஈடுசெய்யும்போது நாட்டில் பண நிரம்பல் அதிகரிக்கும்.
- இதனால் மொத்த வருமானத்தை விட மொத்தச் செலவு அதிகரித்து பணவீக்க நிலை தோன்றும்.
- பாதீட்டுக் குறையை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் பெறும் கடனானது பண நிரம்பலில் அதிகரிப்பை ஏற்படுத்தாவிட்டால், அது சுருக்கத் தாக்கமுடைய பாதீட்டுக் கொள்கையாகக் கருதப்படும்.
  - தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து கடன் பெறுதல்.
  - ஊழியர் சேமலாப நிதியத்திடமிருந்து பெறுதல்.
  - பொதுமக்களிடமிருந்து கடன்பெறுதல்.
- இத்தகைய கடன்பாடுகள் மூலம் நாட்டின் பண நிரம்பலில் அதிகரிப்பு தோன்றாது. இந்நிலையில் நிறுவனம் அல்லது தனிநபர் உடைமையாகக் கொண்டுள்ள பணமானது அரசிற்கு கடன் என்ற அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது.
- இதனால் பணவீக்க நிலைமை தோன்றாது.

**தேர்ச்சி 8.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.7:** **அரச வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்தலால் அரச கடனின் கட்டமைப்பும் தொடர்பாக விமர்சனம் செய்வார்.**

**பாடவேளைகள்:** 08


**கற்றற் பேறுகள்:**

- வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் மூலங்களை வேறுவேறாக முன்வைப்பார்.
- வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நிதியீட்டம் செய்கின்ற மூலங்களின் விளைவுகளை விபரிப்பார்.
- அரச கடனின் கட்டமைப்பை முன்வைப்பார்.
- இலங்கையில் அரச கடனின் போக்கினை மத்திய வங்கி மூலமான புள்ளி விபரங்கள் மூலம் முன்வைப்பார்.
- உள்நாட்டு கடன் மூலங்களிலிருந்து கடன் பெறுகையில் தோன்றும் பிரச்சினைகளை விளக்குவார்.
- அரச கடன் அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- எதிர்வரும் வருடத்தில் அரசாங்கத்தின் எதிர்பார்த்த வருமானத்தை விட அவ்வருடத்தில் மேற்கொள்ளவுள்ள செலவுகள் உயர்வாக இருக்கும் சந்தர்ப்பங்கள் தோன்றலாம். இத்தகைய நிலைமைகளில் பாதீட்டு பற்றாக்குறையை நிதியீட்டம் செய்யும் பிரதான மூலமாக அரசின் கடன்பாடு அமைகின்றது.
- அண்மைக் காலங்களில் இலங்கை அரசின் பாதீட்டு பற்றாக்குறையை நிதியீட்டம் செய்யும் முறையானது பின்வரும் பாய்ச்சல் வரைபு மூலம் தெளிவுபடுத்தப்படும்.

**அரசு கடன் பெறும் மூலங்கள்**



- பாதீட்டுக் குறையை நிதியீட்டம் செய்வதற்கு கடன் பெறும் மூலங்கள் இரண்டாகும்.
    - உள்நாட்டு மூலம்
    - வெளிநாட்டு மூலம்
- உள்நாட்டு மூலங்கள் மீண்டும் இரண்டு பிரிவுகளாகும்.
    - சந்தை மூலம்
    - சந்தையல்லா மூலம்
    - அரசாங்கமானது நிதிச் சந்தைகள் மூலம் திறைசேரி உண்டியல், முறி, ரூபா பிணைப் பத்திரங்கள் போன்ற நிதிக் கருவிகளைப் பயன்படுத்தி கடனைப் பெற்றுக் கொள்ளுமாயின் அது சந்தைக் கடன்பாடு எனப்படும்.
- உள்நாட்டு சந்தைக் கடன்பாடானது மீண்டும் இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.
    - வங்கித்துறை மூலமான கடன்
    - வங்கியல்லா மூலமான கடன்
- மத்திய வங்கி உள்ளடங்கலாக ஏனைய வணிக வங்கிகளிடமிருந்தும் பெற்றுக் கொள்ளும் கடன் வங்கிக் கடன்களாகும். வங்கித்துறையிடமிருந்து பெறும் கடனானது பணவீக்க விளைவை ஏற்படுத்தும் கடன் என்றும் அழைக்கப்படும். இவற்றிடமிருந்து பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்யும் போது பொருளாதாரத்தில் நிதி விரிவாக்கம் தோன்றும்.
- தேசிய சேமிப்பு வங்கி, அபிவிருத்தி வங்கி, காப்புறுதி நிறுவனம், கடனாக்கத்தை மேற்கொள்ளாத நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுவதானது வங்கியல்லா துறை மூலமான கடன் எனப்படும்.
- வங்கியல்லா துறை மூலம் கடன் பெறுவதனால் பணவாக்கம் இடம் பெறாததனால் பண நிரம்பலில் தாக்கம் ஏற்படாது.
- சந்தையல்லா மூலங்கள் என்பது அரச நிறுவனங்களிடமுள்ள வைப்புகளையும் மிகை நிதியையும் தற்காலிகமாக பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்ய பயன்படுத்துவ தாகும். இவ்வாறு தற்காலிகமாகப் பெறப்படும் நிதி பலவாகும்.
    - நிர்வாகக் கடன்
    - திறைசேரி வைப்பு (மத்திய வங்கி முற்பணம்)
    - பல்வேறான வைப்புகள்
- பாதீட்டுப் பற்றாக்குறைக்கு பெறப்படும் வெளிநாட்டு நிதி மூலங்கள் இரண்டாகும்.
    - வெளிநாட்டுக் கடன்
    - வெளிநாட்டு நன்கொடை
- பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதில் வெளிநாட்டு நன்கொடையை விட கடன் முக்கியத்துவம் பெறும்.

- பாதீட்டு பற்றாக்குறையை ஈடுசெய்வதற்காக வெளிநாட்டு அரசு, சர்வதேச நிதி நிறுவனங்கள், சர்வதேச சந்தைகளிடமிருந்து பெறப்படும் கடன் வெளிநாட்டு கடன் மூலங்களாகும். இத்தகைய கடன்களாகக் காணப்படும் நிபந்தனைகளின் வடிவத்திற்கு ஏற்ப சலுகைக் கடன், சலுகையல்லாத கடன் என வகைப்படுத்தப்படும்.
- சலுகை கடன்களில் நிபந்தனையின்றி அல்லது குறைந்த வட்டி வீதத்தின் கீழ் அல்லது கடனை திருப்பிச் செலுத்துவதில் கால அவகாசத்தை நீடிக்கச் செய்து வழங்கும் கடன்களாகும்.
- சலுகையல்லாத கடன்களானது வணிகக் கடன் என்றும் அழைக்கப்படும். உயர்ந்த வட்டி வீதம், பல்வேறான நிபந்தனைகள் என்பவற்றின் கீழ் பெறப்படும் கடன்களாக இவை அமையும்.
- உள்நாட்டுக் கடன், வெளிநாட்டுக் கடன் என்பவற்றின் மூலம் மேற்கொள்ளப்படும் கடனானது இலங்கை பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கமானது, அரச கடனின் பொருளாதார விளைவாகக் கருதப்படும். நிதியீட்டம் செய்யும் மூலங்களின் தன்மைக்கு ஏற்ப இவ்விளைவுகள் தீர்மானிக்கப்படும்.
- பாதீட்டுப் பற்றாக்குறை தொடர்ந்து உயர்வடைவதும் அரசின் கடன் அதிகரித்து செல்வதும் பொருளாதாரத்தில் பின்வரும் இரண்டு பாதக விளைவுகளை ஏற்படுத்தும்.
  - சந்தை வட்டி வீதம் கூடும்.
  - தனியார் துறையின் முதலீட்டிற்கு உள்நாட்டு வளங்களில் பற்றாக்குறை தோன்றுதல்.
- பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்வதற்கு அரசாங்கமானது நிதிச் சந்தையிலிருந்து கடன் பெறுவதும், தனியார் துறையினரும் வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதில் போட்டியிடுவதுமான நிலைமையின் காரணமாக வட்டி வீதம் உயர்வடையும். இதனால் மத்திய வங்கி, வணிக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதானது பாதக விளைவையே ஏற்படுத்தும்.
- வரையறுக்கப்பட்ட நிதி வளத்திற்கு தனியார் அரச துறையினரிடையே போட்டி ஏற்படுவதனால் தனியார் முதலீடு பாதிக்கப்படும்.
- இத்தகைய பாதக விளைவுக்கு மத்திய வங்கி, வணிக வங்கியின் விரிவாக்க விளைவே காரணமாகும்.
- சந்தையல்லா துறை மூலமான கடன்களின் மூலம் பாதீட்டுப் பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்யும்போது இத்தகைய பாதக விளைவுகள் தோன்றாது.

  உதாரணமாக அரசாங்கத்திற்கு உடைமையான மிகை ஒதுக்குப் பணத்தை வருட இறுதியில் பாதீட்டுப் பற்றாக்குறை நிதியீட்டத்திற்கு பயன்படுத்துவதானது நிர்வாக கடனாகும். இதன் மூலம் நிதி விரிவாக்கம் இடம்பெறாததுடன் பணவீக்க தாக்கமும் தோன்றாது.
- வெளிநாட்டு கடன் நன்கொடை மூலமாகவும் பொருளாதாரத்தில் நிதி விரிவாக்கம் ஏற்படலாம். பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியீட்டம் செய்யும் மூலமாக வெளிநாட்டு மூலங்களை பயன்படுத்தும்போது வெளிநாட்டு சொத்துக்களின் அளவில் உயர்வு ஏற்பட்டு பண நிரம்பலில் விரிவுத்தாக்கம் ஏற்படுவதுடன், வெளிநாட்டு கடன்களையும் நன்கொடைகளையும் உள்நாட்டு பணமாக மாற்றுவதனாலும் பொருளாதாரத்தில் விரிவுத்தாக்கம் தோன்றலாம்.

- அரச கடனின் உள்ளடக்கம் தொடர்பாக அண்மைக்காலத் தரவுகளைப் பின்வரும் அட்டவணை தெளிவுபடுத்தும்.

| **கடன் கருவிகளின் அடிப்படையில்** | **ஆண்டு** | |
|---|---|---|
| | **2014** | **2015** |
| திறைசேரி முறி | 28 444 054 | 3 305 248 |
| திறைசேரி உண்டியல் | 694 767 | 658 240 |
| ரூபா கடன் | 55 518 | 24 088 |
| மத்திய வங்கி முற்பணம் | 143 898 | 151 132 |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 391 083 | 68 458 |
| ஏனைய | 148 463 | 1 520 331 |
| மொத்தக் கடன் | 4 277 783 | 4 959 196 |
| **நிறுவனங்களின் அடிப்படையில்** | | |
| வங்கித் துறை | 1 669 882 | 1 924 036 |
| மத்திய வங்கி | 267 777 | 156 050 |
| வணிக வங்கிகள் | 1 402 205 | 1 667 986 |
| வங்கியல்லாத் துறை | 2 607 901 | 3 035 160 |
| ஊழியர் சேமலாபமும் ஓய்வூதியமும் | 1 474 560 | 1 655 336 |
| சேமிப்பு நிறுவனங்கள் | 379 877 | 428 236 |
| நிர்வாகக் கடன் | 221 584 | 252 615 |
| தனியார் வியாபாரத் துறை | 500 773 | 656 367 |
| ஏனைய | 570 | 570 |
| மொத்தக் கடன் | 4 277 783 | 4 959 196 |

**மூலம்:- மத்திய வங்கி அறிக்கை 2016)**

- மேலுள்ள தரவுகளின்படி அரச கடன் உள்ளடக்கத்தை பரிசீலனை செய்யும்போது அரசின் கடன் கருவிகளுள் திறைசேரி முறிகளே அதிக முக்கியத்துவம் பெற்றுள்ளன.
- நிறுவன ரீதியாக நோக்குமிடத்து வங்கித் துறையை விட வங்கியல்லாத் துறையானது கடனைப் பெற்றுத் தருவதில் உயர்ந்த பங்களிப்பைச் செலுத்தும்.
- வங்கியல்லாத் துறையிலும் ஊழியர் சேமலாப நிதியும் ஓய்வூதிய நிதியமும் அரசிற்கு கடன் வழங்குவதில் உயர்வான பங்களிப்பை செலுத்தியுள்ளது. 2016 ஆம் ஆண்டு ஆகும்போது இத்துறையிலிருந்தான கடன் உயர்வடைந்துள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு கடனானது 2015 இல் 44.3% ஆகவும் வெளிநாட்டு கடனானது 31.7% என்ற மட்டங்களில் காணப்பட்டன. 2015 இல் வெளிநாட்டுக் கடனின் அளவானது 2000 இல் காணப்பட்ட அளவை விட குறைந்துள்ளது. (மத்திய வங்கி அறிக்கையில் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)
- சலுகை அடிப்படையிலான வெளிநாட்டுக் கடனானது உயர்ந்த பெறுமதியைக் காட்டுவதுடன், வணிகக் கடன்களும் உயர்ந்த பெறுமதியைக் காட்டுகின்றது. இதனை பின்வரும் தரவுகள் தெளிவுபடுத்துகின்றது.

| விடயம் | 2015 |
|---|---|
| கடன் வகையின்படி | 1 729 895 |
| சலுகையல்லாத கடன் | 507 047 |
| வணிகக் கடன் | 1 307 089 |
| மொத்த வெளிநாட்டுக் கடன் | 3 544 031 |

(மத்திய வங்கி அறிக்கையில் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)

- இலங்கை பெற்ற கடனின் மொத்த அளவில் 2016 ஆகும்போது உயர்வான வளர்ச்சியைக் காட்டியதுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2000 இல் காணப்பட்ட நிலைமையை விட குறைவாக உள்ளது. பின்வரும் தகவல்கள் இவற்றைத் தெளிவாக விளக்கும்.

| ஆண்டு | மொத்த அரச கடன் (மில்) | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக மொத்த பாதீடு | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக அரசின் கடன் |
|---|---|---|---|
| 2000 | 1 218 700 | -9.5 | 96.9 |
| 2005 | 222 241 | -7.0 | 90.6 |
| 2008 | 3 588 962 | -7.0 | 81.4 |
| 2009 | 461 422 | -9.9 | 86.2 |
| 2010 | 4 590  245 | -7.0 | 71.6 |
| 2013 | 4 590 245 | -5.4 | 70.8 |
| 2014 | 7 390 899 | -5.7 | 70.7 |
| 2015 | 8 503 227 | -7.4 | 76.0 |

மூலம்: மத்திய வங்கி ஆண்டறிக்கை (மத்திய வங்கி அறிக்கையில் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு முன்வைக்க.)

- இலங்கையில் முழு மொத்த பாதீட்டுப் பற்றாக்குறைக்கும் மொத்த அரச கடனுக்கு மிடையில் தொடர்பு காணப்படும். பாதீட்டு பற்றாக்குறை உயர்வாக இருக்கும்போது மொத்த அரச கடன் அளவு உயர்வாக இருப்பதுடன், பாதீட்டுப் பற்றாக்குறை குறைவாக இருக்கையில் கடன் அளவும் குறைவாகவுள்ளது.
- மொத்த அரச கடனானது உயர்ந்த பெறுமதியைக் காட்டியபோதும், மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்த சதவீதத்தையே காட்டுகின்றது. இதற்கான காரணம் பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது 2000 ஆம் ஆண்டை விட 2016 ஆம் ஆண்டு ஆகும்போது உயர்ந்த வளர்ச்சியைக் காட்டுகின்றது.
- இது 2012 இல் 96.8% ஆக இருந்ததுடன் 2015 இல் 90.6% வரை குறைந்துள்ளது.
- உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவதனாலும் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன.
- உள்நாட்டு மூலங்களிலிருந்து கடன் பெறுவது உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்ப துடன், உள்நாட்டு கடனின் அளவு உயர்வாக இருப்பதனால் செலுத்த வேண்டிய வட்டியின் அளவும் உயர்வாக உள்ளது. உள்நாட்டுக் கடனுக்குச் செலுத்தப்படும் வட்டியானது மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்படும்.

| விடயம் | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| உள்நாட்டு கடன் வட்டிக் கொடுப்பனவு | 28.1% | 29.4% | 24.8% | 23.2% |

(மத்திய வங்கி அறிக்கையில் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)

- உள்நாட்டுக் கடனுக்குச் செலுத்தப்படும் வட்டியானது நடைமுறைச் செலவு உயர்வடைய ஏதுவாகியுள்ளது. இது நடைமுறைக் கணக்கில் குறைவை ஏற்படுத்தி அரச சேமிப்பை குறைவடையச் செய்யும்.
- உள்நாட்டு கடன் மூலங்களில் வங்கித்துறையிடமிருந்து பெறப்படும் கடன்களால் பண நிரம்பல் விரிவடைந்து, பொருட்கள் சேவைகளின் விலை மட்டங்கள் உயர்வடைவதனால் பொருளாதாரத்தில் பணவீக்கத் தன்மை தோன்றும்.
- உள்நாட்டுக் கடன் உயர்வடைவதும் வங்கி மூலங்களிலிருந்து அரசு கடன் பெறுவதனாலும், தனியார் துறையானது வணிக வங்கிகளின் கடன் மீது கேள்வியை ஏற்படுத்துவதனாலும் வட்டி வீதத்தில் உயர்வு தோன்றி, அதனால் பொருளாதாரத்தில் பாதக விளைவுகள் தோன்றும்.
- அரசு கடன் பெறுவதன் பொருளாதார விளைவுகள் பல கீழே தரப்படும்.
    - அதிகளவு கடன் பெறுவதன் காரணமாக வட்டிக் கொடுப்பனவு உயர்வடைவதனால் அரச சேமிப்பு குறைந்து முதலீடும் குறையும்.
    - அரசின் கடன் உயர்வடைவதனால் கடன் தவணைப் பணம், வட்டிக் கொடுப்பனவு உயர்வடைவதனால் அரசின் செலவு உயர்வடையும்.
    - அரசின் நிதி முகாமைத்துவம் பாதகமாக அமைதல்.
    - தனியார் துறைக்கு வளங்களின் பாய்ச்சல் இடம்பெறாமையும் கடன் வட்டி வீதம் அதிகரிப்பின் காரணமாக பொருளாதாரத்தில் வெளித்தள்ளுகை விளைவு தோன்றும்.
    - வெளிநாட்டு கடன் மூலம், அரசின் கடன் தேவை ஈடுசெய்யப்படுகையில் சர்வதேச கடன் பிரச்சனைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும்.
    - பணவீக்கத் தாக்கமுள்ள மூலங்களிலிருந்து கடன் பெறுவதன் காரணமாக பொருளாதாரத்தில் பொருட்கள், சேவைகளின் விலை மட்டங்கள் உயர்வடைவதற்கு ஏதுவாகும்.
    - வெளிநாட்டுக் கடன் தவணைப் பணமும் வட்டியும் உயர்வடைவதனால் சென்மதி நிலுவைப் பிரச்சினை தோன்றும்.
    - நிகழ்கால சமுதாயமானது, எதிர்கால சமுதாயத்தின் மீது கடன் சுமையை ஏற்படுத்தல்.

**தேர்ச்சி 8.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசு தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 8.8:** **நிரம்பல் பக்க ஊக்குவிப்புக் கொள்கையையும் செயற்பாட்டை யும் இலங்கையை அடிப்படையாகக் கொண்டு விமர்சனம் செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- நிரம்பலாளர்களின் பொருளாதாரக் கொள்கையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நிரம்பலாளர்களின் பொருளாதாரக் கொள்கைகளின் கருவிகளைப் பெயரிடுவார்.
- இலங்கையில் நிரம்பலாளர்கள், பொருளாதாரக் கொள்கைகளைப் பயன்படுத்தும் முறையை உதாரணத்துடன் விபரிப்பார்.
- நிரம்பலாளர்களின் கொள்கைகளின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- நிரம்பலாளர் கொள்கை என்பது நுண்பாக பொருளாதார, அரச நிதிக் கொள்கையாக இருப்பதுடன், அவற்றின் மூலம் சந்தைப் பொருளாதாரத்தின் வினைத்திறனை அதிகரித்து பொருளாதார வளர்ச்சியை உயர்த்துவதே எதிர்பார்க்கப்படும்.
- நிரம்பல் ஊக்குவிப்புக் கொள்கையை செயற்படுத்துவதனால் முதலீடு அதிகரிப்பதுடன், உற்பத்திச் செலவு குறைவதைப் போல உற்பத்திக் காரணிகளின் விளைதிறனும் உயர்வடையும். பிரதான பேரினப் பொருளாதார மாறிகளை எதிர்பார்த்த மட்டத்தை அடைவதற்கு நிரம்பல் ஊக்குவிப்பு கொள்கைகள் மூலம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும்.
- நிரம்பல் பக்க ஊக்குவிப்புக் கொள்கைக் கருவிகள்
    - வரிச் சீராக்கம்
    - தனியார் மயமாக்கல்
    - கண்காணிப்பு
    - ஊழியச் சந்தையை சீர்செய்தல்
    - மூலதனச் சந்தையை சீர்செய்தல்
- வரிச் சீராக்கம் என்பது உற்பத்தியை உயர்த்தும் அமைப்பில் வரிமுறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்.
- வரி அறவீடானது சந்தை செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்தும்.
- வரி விதிப்பின் காரணமாக உற்பத்தி நுகர்வு, முதலீடு, சேமிப்பு என்பவற்றின் உத்தம உற்பத்தி இழக்கப்படும்.

- ஊழியர் சந்தையில் நிலவும் பல்வேறான தடைகளை நீக்கும் முறையில் உழைப்பிற்கான கேள்வி, உழைப்பிற்கான நிரம்பல் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்துவதானது ஊழியச் சந்தைச் சீரமைப்பு எனப்படும். இங்கு
    - நெகிழ்வற்ற, இறுக்கமாகத் தொழில் சட்டங்களை நீக்குதல்.
    - தொழிலாளர்களை வேலையில் அமர்த்தும்போது அந்தந்த தொழிலில் தேர்ச்சியடைந்த வர்களை நியமித்தல்.
    - அந்தந்தத் தொழிலுக்குப் பொருத்தமான பயிற்சியை ஊழியர்களுக்குப் பெற்றுக் கொடுத்தல்.
- குறைவான தகைமை கொண்ட தொழிலாளர்களை தொழிலில் சேர்ப்பதைத் தவிர்த்தல் போன்ற சில வரையறைகளுடன் பாதக விளைவுகளைக் குறைக்கும் வகையில் பயன் படுத்த வேண்டும்.
- ஊழியர் சந்தை தொடர்பாக தொழில் அமைச்சினால் பல்வேறான கூலியாக 2016 இலிருந்து 10 000/= ஆக அமைத்தல், வெளிநாடுகளுக்கு செல்லும் தொழிலாளர்களின் தொழில் நிபுணத்துவத்தை வளர்ச்சியடையச் செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்படுத்துதல், மத்திய கிழக்கு நாடுகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் ஊழியச் சந்தையை விஸ்தரித்தல், ஊழியர் பயிற்சி போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
- தனியார்மயமாக்கலின் காரணமாக நன்மையான விளைவுகளை அடையலாம்.
    - உற்பத்திச் செயற்பாடுகள் வினைதிறனுடையதாக மாறுதல்.
    - அரசின் தனியுரிமை நீங்கிப் போட்டிச் சந்தை தோற்றம் பெறும்.
    - உற்பத்திகளின் தரம் உயர்வடைதல்.
    - மூலதனப் பற்றாக்குறைக்கு ஒரு நிதியீட்டமாக அமைதல்.
    - வணிகத்திற்குத் தோன்றும் அரச தலையீட்டை நீக்குதல்.
- இலங்கையில் சென்ற பல தசாப்தங்களாக அரசவுடைமையின் கீழ் காணப்பட்ட அரச நிறுவனங்களையும் கூட்டுத் தாபனங்களையும் தனியார் மயமாக்கல் மூலம் மேலுள்ள நன்மைகள் எதிர்பார்க்கப்பட்டன. இதன் மூலம் வெற்றியடைந்த நிறுவனங்களும், விளைத்திறனற்ற நிறுவனங்களும் காணப்பட்டன.
- பொருளாதாரமொன்றின் செயற்பாடுகளில் குறைவடைவதில் தாக்கம் செலுத்தும் சட்டங்களையும், சமூக ரீதியாகத் தோன்றியுள்ள பிரமாணங்களையும் தடைகளையும் நீக்குவதானது கண்காணிப்பு எனப்படும். இதனால் தோன்றும் நன்மையான விளைவுகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.
    - வணிகத்தை ஆரம்பிப்பதற்குக் காணப்படும் இறுக்கமான சட்ட திட்டங்களைத் தளர்த்துதல்.
    - சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையாகும் வகையில் தோன்றும் அரசாங்கத்தின் கடினமான அவதானிப்பைக் குறைத்தல்.

- மூலதனச் சந்தை மறுசீரமைப்பு என்பது உற்பத்தியை உயர்த்துவதற்காகத் தடையாக அமையும் மூலதனக் குறையை ஈடுசெய்யும் வகையில் செயற்படுவதாகும்.

  உதாரணமாக,

  - மூலதனத்தின் விளைதிறனை உயர்த்துதல்.
  - நேரடி வெளிநாட்டு முதலீட்டை உயர்த்துதல்.
  - சலுகை அடிப்படையில் வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றுக் கொள்ளல்.
  - சேமிப்பை ஊக்குவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- சென்ற பல வருடங்களாக அரச பிணை சந்தையில் முதலாம் தர சந்தை வேகமாக வளர்ச்சியடைந்தாலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் சிறியளவிலான சாதனைகளே காணப்பட்டன.
- இத்தகைய மறுசீரமைப்புக் காரணமாக முதலீடு அதிகரித்து உற்பத்தி அதிகரிப்பதனால் உற்பத்தியில் சாதகமான தன்மையை அவதானிக்கலாம். இவ்வாறே தீமையான விளைவு களும் தோற்றம் பெறலாம்.

  உதாரணமாக,

  - வெளிநாட்டு முதலீடுகளால் வெளிநாடுகளுக்கு இலாபம், பங்குலாபம் வெளி யேறுதல்.
  - வெளிநாட்டு கடன் பெறுவதனால் கடன் தவணை, வட்டிப் பணம் வெளிநாடுகளை நோக்கிச் செல்லல்.
  - அரசின் நடைமுறைச் செலவு குறைந்தால் மொத்தப் பொருளாதார நலனுக்குப் பாதகம் தோன்றும்.

- நிரம்பல் ஊக்குவிப்பு கொள்கைகளாக மேலே கூறப்பட்ட மறுசீரமைப்பு கொள்கைகளை பயன்படுத்துகையில் தீமையான விளைவுகளை இயன்றளவில் குறைக்கும் முறையில் பயன்படுத்த வேண்டும்.

**தேர்ச்சி 9.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.1:** **சர்வதேச வர்க்கத்திற்கு அடிப்படையாக உள்ள காரணிகளை விமர்சிப்பார்.**

**பாடவேளைகள்:** 10

**கற்றற் பேறுகள்:**

- சர்வதேச வர்த்தகத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையாகவுள்ள முழு நன்மைக் கோட்பாட்டை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அந்தந்த நாட்டிற்குக் கிடைக்கும் முழு நன்மையைத் தரவுகள் ரீதியாக உதாரணத்துடன் விளக்குவார்.
- முழு நன்மை தோன்றுவதற்கான காரணிகளை விளக்குவார்.
- சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையாகவுள்ள ஒப்பீட்டு நன்மையை வரைவிலக்கணப் படுத்துவார்.
- ஒப்பீட்டு நன்மையில் பின்பற்றப்படும் எடுகோள்களைக் குறிப்பிடுவார்.
- தரவுகள் ரீதியான உதாரணத்துடன் ஒப்பீட்டு நன்மை பெறப்படும் முறையை விளக்குவார்.
- உள்நாட்டுப் பரிமாற்று வீதத்தை விளக்குவார்.
- சர்வதேச வர்த்தகத்தில் நுழைவதற்காக அன்னியோன்யமான முறையில் நன்மை யளிக்கத்தக்க வகையில் வெளிநாட்டுப் பரிமாற்று வீதத்தைக் கணிப்பீடு செய்வார்.
- ஒப்பீட்டு நன்மை தோன்றுவதற்கான காரணிகளைக் குறிப்பிடுவார்.
- போட்டித் தன்மையின் நன்மையானது சர்வதேச வர்த்தகத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்குவார்.
- சர்வதேச வர்த்தகத்தில் தோன்றும் இயற்கை அனுகூலம், செயற்கை அனுகூலம் என்பவற்றை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டல்கள்:**

- யப்பான் இலங்கையிலிருந்து ஆடையைக் கொள்வனவு செய்வதற்கும், இலங்கை யப்பானிடமிருந்து மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்கான காரணத்தையும் மாணவர்களிடம் வினவுக.
- பின்வரும் விடயங்கள் வெளிப்படும் வகையில் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்க.
  - யப்பான், மோட்டார் வாகன உற்பத்தியில் இலங்கையை விடக் கூடிய வினைத்திறனை யும் ஆடை உற்பத்தியில் குறைந்த வினைத்திறனையும் கொண்டுள்ளது என்பது
  - இலங்கை, ஆடை உற்பத்தியில் யப்பானை விடக் கூடிய வினைத்திறனையும் மோட்டார் வாகன உற்பத்தியில் குறைந்த வினைத்திறனையும் கொண்டுள்ளது என்பது

- இதனால் இலங்கை ஆடை உற்பத்தியை அதிகளவில் மேற்கொண்டு யப்பானுக்கு வழங்கி, யப்பானிடமிருந்து மோட்டார் வாகனத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- யப்பான் மோட்டார் வாகனத்தை அதிகளவில் மேற்கொண்டு இலங்கைக்கு வழங்கி, இலங்கையிடமிருந்து ஆடையைப் பெற்றுக் கொள்ளல்.
- இந்த அடிப்படையில் நாடுகளுக்கிடையே சர்வதேச வர்த்தகம் இடம்பெறுகின்றது என்பதை விளக்கலாம்.

- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்துக் கற்றலுக்கான அறிவுறுத்தல்களை வழங்கிச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

**கற்றலுக்கான உத்தேச அறிவுறுத்தல்கள்:**

- கீழ்த் தரப்படும் நான்கு நாடுகளின் உற்பத்தியுடன் தொடர்புடைய தகவல்களை உள்ளடக்கிய இரு அட்டவணைகளிலும் உமது குழுவிற்குக் கிடைத்துள்ள அட்டவணை மீது கவனம் செலுத்தவும்.

**அட்டவணை 1**

| உற்பத்தி | இலங்கை | அமெரிக்கா |
|---|---|---|
| தைக்கப்பட்ட ஆடை<br>அலகு / மனித மணித்தியாலத்துக்கு | 12 | 02 |
| கோதுமை மா<br>kg / மனித மணித்தியாலத்துக்கு | 08 | 10 |

**அட்டவணை 2**

| உற்பத்தி | இலங்கை | யப்பான் |
|---|---|---|
| மோட்டார் வாகனம்<br>அலகு / மனித மணித்தியாலத்துக்கு | 06 | 01 |
| காலணி<br>அலகு / மனித மணித்தியாலத்துக்கு | 04 | 02 |

(இரு நாடுகளிலும் சமமான உழைப்புச் செலவொன்று காணப்படுவதாக எடுகோள் கொள்ளப்படுகின்றது.)

- உமக்குக் கிடைத்துள்ள அட்டவணையில் உள்ள இரு நாடுகளிலும், இரு வகையான பண்டங்களிலும் உற்பத்தியுடன் தொடர்புடைய தகவல்களை அவதானமாக வாசித்து விளங்கிக் கொள்க.
- இத்தகவல்களின் அடிப்படையில் இரு நாடுகளுடன் தொடர்புடையதாக உயர்ந்த வினைத்திறனிலும் குறைந்த வினைத்திறனிலும் உற்பத்தி செய்யக்கூடிய பண்ட வகையை இனங்காண்க.
- மேலுள்ள இரு வகையான பண்டங்களிலும் வினைத்திறனை அடிப்படையாகக் கொண்டு இன்னொரு நாட்டுடன் சர்வதேச வர்த்தகத்திலீடுபட எதிர்பார்க்கப்படுமாயின் எப்பண்டத்தை அதிகளவில் உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் எப்பண்டத்தை இறக்குமதி செய்யும் என விளக்குக.

- இரு நாடுகளிலும் ஒவ்வொரு பண்ட உற்பத்தி தொடர்பாகவும் ஏற்படுகின்ற அமையச் செலவுகளைக் கணிப்பிடுக.
- உம்மால் கணிப்பீடு செய்யப்பட்ட அமையச் செலவின் அடிப்படையில் இரு நாடுகளுக்கும் எப்பண்டத்தை அதிகமாக உற்பத்தி செய்வது நன்மை பயக்கும் என்றும், எப்பண்டத்தை இறக்குமதி செய்வது நன்மை பயக்கும் என்பதையும் விளக்குக.
- இவ்வாறு இரு நாடுகளுக்கு இடையில் ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் இடம்பெறுமாயின் நாடுகள் பெற்றுக் கொள்ளும் நன்மைகளைப் பட்டியற்படுத்துக.
- உமது வெளிப்பாடுகளை முழு வகுப்பிற்கும் ஆக்கபூர்வமாக அமைய வேண்டும் என்பது பற்றிக் கலந்துரைக்கவும்.
- உங்களின் இனங்கானல்களை முழு வகுப்புக்கும் ஆக்கபூர்வமாக முன்வைக்கவும்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உலகில் குறித்த ஒரு நாடு ஏனைய நாட்டுடன் அல்லது பல நாடுகளுடன் பொருட்கள் சேவைகளைப் பரிமாற்றம் செய்வது சர்வதேச வர்த்தகம் எனப்படும்.
- ஏற்றுமதி வியாபாரம், இறக்குமதி வியாபாரம் என்ற வகையில் சர்வதேச வர்த்தகம் இரண்டு பிரிவுகளைக் கொண்டிருக்கும்.
- நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் நன்மையை அடைகின்றன. அத்தகைய நன்மைகளுள் சில வருமாறு:
  - மிகை உற்பத்தியை வழங்குவதற்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள முடிதல்.
  - உள்நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடிதல்.
  - வளங்களை வினைத்திறன், விளைதிறன் கொண்ட உற்பத்திகள் மீது ஈடுபடுத்த முடிதல்.
  - தரமான பண்டங்களைக் குறைந்த விலையில் நுகர்வு செய்ய முடிதல்.
  - முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ள முடிதல்.
  - வெளிநாட்டு உதவி, முதலீடு, கடன் என்பவற்றை விரைவாகப் பெற்றுக் கொள்ள முடிதல்.
  - வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கை முன்னேற்றமடைவதனால் போக்குவரத்து, வங்கி, காப்புறுதி போன்ற சேவைகளும் முன்னேற்றமடைதல். இதனால் நிறை தொழில் மட்டமும் உறுதியடைதல்.
  - பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்தல்.
  - சர்வதேச வர்த்தக பொருளாதார பங்குபற்றலை வளர்ச்சியடையச் செய்ய முடிதல்.
- வர்த்தகத்தின் அடிப்படை, இவ்வடிப்படைக்கு ஏதுவான காரணிகள், வர்த்தகத்தினால் தோன்றும் நன்மை, இந்நன்மையை உருவாக்கும் முறை, அவை நாடுகளுக்கிடையே பகிரப்படும் முறை, வர்த்தகத்தின் போக்கு என்று தீர்மானிக்கும் காரணியை விளக்குவதற்கு வர்த்தகக் கோட்பாடுகள் பல தோன்றுகின்றன.

- இந்த வகையில் தோன்றிய சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையாகவுள்ள பிரதான கோட்பாடுகள் இரண்டும் வருமாறு:
  (1) முழு நன்மைக் கோட்பாடு
  (2) ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு
- வர்த்தகத்தின் அடிப்படையும், வர்த்தகத்தினால் தோன்றும் நன்மையை விளக்குவதற்காக 1776 இல் அடம் ஸ்மித் (Adam Smith) என்பவரால் முழு நன்மைக் கோட்பாட்டை முன்வைத்தார்.
- குறித்தவொரு நாடு ஒன்றிற்கு, குறித்த பண்டத்தை மற்றைய நாட்டை விட குறைந்த செலவில் (அதிக வினைத்திறனுடன்) உற்பத்தி செய்ய முடியுமாயின், அந்த நாட்டுக்கு அந்தப் பண்டத்தை உற்பத்தி செய்வதற்காக முழு நன்மை இருப்பதாகவும், அந்நாட்டிற்கு குறித்த பண்டத்தை குறைந்த செலவில் உற்பத்தி செய்ய முடியாதவிடத்து (அதிக செலவு / குறைந்த வினைத்திறன்) அந்நாட்டிற்கு அவ்வுற்பத்தியை மேற்கொள்வதற்கு முழு நன்மையற்ற தன்மை இருப்பதாகவும், முழு நன்மை கோட்பாட்டின் மூலம் விளக்கப்படும்.
- நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும்போது முழுநன்மை கொண்ட பண்ட உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து, அதில் மிகையான உற்பத்தியை முழு நன்மையற்ற பண்டத்துடன் பரிமாற்றம் செய்வதன் மூலம், இப்பரிமாற்றத்திலீடுபடும் நாடுகளுக்கு அன்னியோன்யமான முறையில் முழு நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது விளக்கப்படும்.
- முழு நன்மைக் கோட்பாட்டை அறிந்து கொள்வதற்குப் பயன்படுத்தும் அணுகுமுறை இரண்டாகும்.
  (1) உள்ளீட்டு அணுகுமுறை
  (2) வெளியீட்டு அணுகுமுறை
- உள்ளீட்டு அணுகுமுறை என்பது குறித்த ஒரு நாடு மற்றைய நாட்டை விடக் குறைந்த அளவிலான வளங்களைப் பயன்படுத்தி பண்டங்களை உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலமும் அதிகளவிலான வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்ய வேண்டிய பொருட்களை இறக்குமதி செய்வதன் மூலமும் இரு நாடுகளும் நன்மை அடைய முடியும் என்பதாகும்.

  உதாரணமாக,

**ஒரு அலகு வெளியீட்டிற்குத் தேவையான ஊழிய அலகுகளின் அளவு**

| | **இலங்கை** | **இந்தியா** |
|---|---|---|
| அரிசி | (5) | 8 |
| துணி | 4 | (2) |

- இங்கு ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊழிய அலகுகளின் எண்ணிக்கை இந்தியாவை விட இலங்கைக்குக் குறைவாகும். இந்தியாவிற்கு அரிசி 1 கிலோவை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊழியர்கள் 8 ஆக இருக்க இலங்கைக்குத் தேவைப்படுவது 5 ஊழியர்களாகும். இதனால் இலங்கைக்கு அரிசி உற்பத்தியில் முழு நன்மை காணப்படும்.

- ஒரு மீற்றர் துணியை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை இலங்கையை விட இந்தியாவுக்குக் குறைவாகும். இலங்கைக்கு ஒரு மீற்றர் துணி உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊழியர் எண்ணிக்கை 4 ஆக இருக்க இந்தியாவுக்கு 2 ஊழியர்கள் மட்டுமே தேவைப்படும். இதனால் இந்தியாவுக்குத் துணி உற்பத்தி முழு நன்மை கொண்டதாக அமையும்.
- இலங்கை, இந்தியா என்ற இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும்போது, இலங்கை அரிசி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து அதன் மிகையான உற்பத்தியை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்தும், இந்தியா துணி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து அதன் மிகையான உற்பத்தியை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமும் இரு நாடுகளும் நன்மையடைய முடியும்.
- வெளியீட்டு அணுகுமுறை என்பது குறித்த ஒரு நாடு இன்னுமொரு நாட்டுடன் ஒப்பிடும் போது, ஒரு அலகு உள்ளீட்டின் மூலம் பெறக்கூடிய வெளியீட்டு அலகு அதிகமாக இருப்பின், அப்பண்டத்தை ஏற்றுமதி செய்வதன் மூலமும், உள்ளீட்டு அலகொன்றின் மூலம் பெறக்கூடிய வெளியீட்டின் அளவு குறைவாக இருப்பின் அப்பண்டத்தை இறக்குமதி செய்வதன் மூலமும் இரு நாடுகளும் நன்மை அடைய முடியும் என்பதாகும்.

  உதாரணமாக,

  மேலுள்ள உள்ளீட்டு அணுகுமுறையைக் கவனத்திற் கொண்டு அதனுடன் தொடர்புடைய உதாரணத்தை நோக்குமிடத்து, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் ஒரு அலகு ஊழியத்தைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய அளவுகள் கீழே அட்டவணையில் தரப்படும்.

**ஒரு அலகு ஊழியத்தைக் கொண்டு**
**உற்பத்தி செய்யக்கூடிய வெளியீடுகளின் அளவு**

| பண்டம் | இலங்கை | இந்தியா |
|---|---|---|
| அரிசி (கிலோகிராம்) | $\left(\frac{1}{5}\right)$ | $\frac{1}{8}$ |
| துணி (மீற்றர்) | $\frac{1}{4}$ | $\left(\frac{1}{2}\right)$ |

- இலங்கை ஊழிய அலகொன்றின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவானது இந்தியாவை விட அதிகமாகும். இந்தியாவினால் ஒரு அலகு ஊழியத்தின் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய அரிசியின் அளவு $\frac{1}{8}$ கிலோகிராமாக இருக்க இலங்கையினால் $\frac{1}{5}$ கிலோகிராம் அரிசியை உற்பத்தி செய்ய முடியும். இதனால் இலங்கைக்கு அரிசி உற்பத்தி தொடர்பில் முழு நன்மை காணப்படும்.

- துணி தொடர்பாகத் தேர்ச்சிகளில் ஒரு அலகு ஊழியத்தைப் பயன்படுத்தி துணி உற்பத்தி செய்யும் இயலுமை இலங்கையை விட இந்தியாவுக்கு உயர்வாகும். இலங்கை ஒரு அலகு ஊழியத்தைக் கொண்டு துணியில் $\frac{1}{4}$ மீற்றரை உற்பத்தி செய்வதுடன், இந்தியா ஒரு அலகு ஊழியத்தைக் கொண்டு துணியில் $\frac{1}{2}$ மீற்றரை உற்பத்தி செய்யும். இதனால் துணி தொடர்பாக முழு நன்மை இந்தியாவுக்குக் காணப்படும்.

- வெளியீட்டு அணுகுமுறையுடன் தொடர்புடைய தகவல்கள் மூலம் இந்தியா, இலங்கை என்ற இரு நாடுகளும் வர்த்தகத்தில் தொடர்புபடும்போது, இலங்கை, இந்தியாவுக்கு அரிசியை ஏற்றுமதி செய்வதும், இந்தியா இலங்கைக்குத் துணியை ஏற்றுமதி செய்வதுமான நடவடிக்கையிலீடுபடுவதன் மூலம் இரண்டு நாடுகளும் நன்மை அடையலாம் என்பதை வெளிப்படுத்தும்.
- முழு நன்மை தோன்றுவதற்குப் பல காரணிகள் ஏதுவாக உள்ளன.
  - காலநிலையின் விசேட தன்மை
  - வள உடைமை
  - காரணிகளின் அருமைத்தன்மை
  - நன்மதிப்பு
  - வரலாற்று ரீதியான காரணிகள்
- குறித்தவொரு நாட்டிற்குக் குறித்த பண்டம் தொடர்பாக முழு நன்மை கிடைக்காதபோது, அதாவது ஒரு நாட்டிற்கு மட்டும் இரண்டு பண்ட உற்பத்திகளையும் மேற்கொள்வதற்கு முழு நன்மை கிடைக்கும்போது, அந்நியோன்யமான முறையில் இரண்டு நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும் விதத்தில் உற்பத்தி செய்ய முடியாமலிருப்பதானது முழு நன்மைக் கோட்பாட்டின் பிரதான குறைபாடு ஆகும்.

  உதாரணமாக, A, B என்ற இரண்டு நாடுகளும் ஒரு அலகு ஊழியத்தைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய கணினி, வானொலி என்பவை தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்படும்.

**ஊழிய அலகொன்றின் மூலம் உற்பத்தி செய்யப்படும் அளவு**

| **பண்டம்** | **நாடு A** | **நாடு B** |
|---|---|---|
| வானொலி | (12) | 2 |
| கணினி | (6) | 4 |

- வானொலி, கணனி என்ற இரு பண்டங்களினதும் முழு நன்மையானது அட்டவணையின் அடிப்படையில் (A) நாட்டிற்கே உரிமையாகும். (B) நாட்டிற்கு எந்தவொரு பண்ட உற்பத்தியிலும் முழு நன்மை காணப்படாது. இதனால் (B) நாட்டிற்கு வர்த்தகத்தில் ஈடுபடு முடியாது.
- முழு நன்மைக் கோட்பாட்டில் காணப்படும் இந்தக் குறையை நிவர்த்தி செய்வதற்கு ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.
- ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடானது டேவிட் றிகாடோ என்ற பொருளியலாளரால் முன்வைக்கப்பட்டது.

- ஒப்பீட்டு நன்மையின் மூலம், எந்தவொரு பண்ட உற்பத்தியிலும் முழு நன்மை கிடைக்காத போதும் சர்வதேச வர்த்தகத்திலீடுபட்டு நன்மையை அடைய முடியும் என்பது வெளிப் படுத்தப்படும்.
- குறித்த ஒரு நாட்டிற்கு குறித்த ஒரு பொருளை மற்றைய நாட்டின் அமையச் செலவுடன் ஒப்பிடும்போது குறைந்த அமையச் செலவில் அப்பண்டத்தை உற்பத்தி செய்ய முடியுமாக இருந்தால் அந்த நாட்டிற்கு அவ்வுற்பத்தியில் ஒப்பீட்டு நன்மை உண்டு என்றும், குறித்த நாட்டிற்குக் குறித்தவொரு பொருளை உற்பத்தி செய்கையில் குறித்த நாட்டிற்கு ஒப்பீட்டு ரீதியில் அதிகளவான அமையச் செலவினை ஏற்க வேண்டியிருப்பின் அப்பண்ட உற்பத்தியில் ஒப்பீட்டு ரீதியில் நன்மையற்ற தன்மை நிலவும் என்பது ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டின் மூலம் வெளிப்படுத்தப்படும்.
- நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடும்போது ஒப்பீட்டு நன்மை கொண்ட பண்டம் சிறப்புத் தேர்ச்சியாக்கப்பட்டது. அதன் மிகை உற்பத்தியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலமும் வர்த்தகத்தில் தொடர்புபடும் நாடுகளுக்கு நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதை ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடு தெளிவுபடுத்தும்.
- ஒப்பீட்டு நன்மைக் கோட்பாட்டு அடிப்படையாகக் கொண்டுள்ள எடுகோள்கள் வருமாறு:

**(1) உற்பத்திக் காரணிகளின் பூரண அசைவுத் தன்மை:**

ஒரு தொழிலில் பயன்படுத்தும் உற்பத்திக் காரணிகள் இன்னுமொரு தொழிலிலும் பயன்படுத்த முடிவதை இது குறிக்கும்.

**(2) நிலையான அளவுத் திட்ட விளைவு:**

குறித்தவொரு தொழிலில் பயன்படுத்தும் உள்ளீட்டின் அளவை மாற்றியமைத்தால், அதற்குச் சமனான விகிதத்தில் உற்பத்தி அளவும் மாற்றமடையும்.

உ+ம்:- உள்ளீட்டை இரு மடங்காக அதிகரித்தால் வெளியீடும் இருமடங்காகும்.

**(3) உற்பத்தி அல்லது நுகர்வில் வெளிவாரி விளைவுகள் தோன்றாமை:**

**(4) போக்குவரத்துச் செலவு கவனத்தில் கொள்ளப்படாமை.**

- ஒப்பீட்டு நன்மையை இனங்காண்பதற்குப் பயன்படுத்தும் அணுகுமுறைகள் இரண்டாகும்.
  - வெளியீட்டு அணுகுமுறை
  - உள்ளீட்டு அனுகுமுறை
- உற்பத்தி அணுமுறையில் குறித்த ஒரு அலகு உள்ளீட்டின் மூலம் உற்பத்தி செய்யக் கூடிய வெளியீட்டை அடிப்படையாகக் கொண்டு இரண்டு பண்டங்களினதும், அதனுடன் தொடர்புடைய நாடுகளினதும் அமையச் செலவைக் கணிப்பீடு செய்து அந்த அமையச் செலவிற்கு ஏற்ப வர்த்தகத்தில் இரு நாடுகளும் தொடர்புபடும் முறை காட்டப்படும்.

உ+ம்:- சுவிட்சலார்ந்து, ஜெர்மனி என்ற இரண்டு நாடுகள் கடிகாரம், தொலைக்காட்சி என்பவற்றின் ஒரு அலகு உழைப்பின் வெளியீட்டு மட்டம் வருமாறு:

**ஒரு அலகு ஊழியத்தினால் உருவான வெளியீட்டின் அளவு**

| பண்டம் | சுவிட்சர்லாந்து | ஜெர்மனி |
|---|---|---|
| கடிகாரம் | 4 | 20 |
| தொலைக்காட்சி | 6 | 10 |

அட்டவணையில் காட்டப்பட்ட தகவல்களுக்கு ஏற்ப இரு நாடுகளினதும் இரு பண்டங்கள் தொடர்பான அமையச் செலவு வருமாறு:

ஒரு அலகு கடிகார உற்பத்திக்கான அமையச் செலவு

சுவிட்சர்லாந்து - $\frac{6}{4} = 1.5$ அலகு தொலைக்காட்சி

ஜெர்மனி - $\frac{10}{20} = 0.5$ அலகு தொலைக்காட்சி

ஒரு அலகு தொலைக்காட்சியை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு

சுவிட்சர்லாந்து - $\frac{4}{6} = 0.67$ அலகு கடிகாரம்

ஜெர்மனி - $\frac{20}{10} = 2$ அலகு கடிகாரம்

- மேலுள்ள தகவல்களின் அடிப்படையில் கடிகாரம் உற்பத்தி செய்வதன் ஒப்பீட்டு நன்மை ஜெர்மனிக்குக் கிடைக்கும். காரணம் ஒரு அலகு கடிகாரத்தை உற்பத்தி செய்யச் சுவிட்சர்லாந்தை விட ஜெர்மனிக்கே குறைந்த அமையச் செலவு காணப்படும்.
- அதாவது ஒரு அலகு கடிகாரத்தை உற்பத்தி செய்யச் சுவிட்சர்லாந்துத் தொலைக்காட்சி 1.5 அலகை இழக்க ஜெர்மனி 0.5ஐ மட்டுமே இழக்கும்.
- தொலைக்காட்சி உற்பத்தி தொடர்பில் ஒப்பீட்டு நன்மையானது சுவிட்சர்லாந்திற்கே கிடைக்கும்.
- ஒரு அலகு தொலைக்காட்சியை உற்பத்தி செய்யும்போது சுவிட்சர்லாந்திய அமையச் செலவு 0.67 கடிகாரம் ஆகும். ஆனாலும் ஜெர்மன் ஒரு அலகை உற்பத்தி செய்கையில் 2 கடிகாரங்கள் அமையச் செலவாக அமைகின்றன. இதன்படி தொலைக்காட்சி தொடர்பில் குறைந்த அமையச் செலவு சுவிட்சர்லாந்திற்கே காணப்படும்.
- இரண்டு நாடுகளினதும் இரு பொருட்கள் தொடர்பில் கணிப்பீடு செய்யப்பட்ட அமையச் செலவின் தகவல்களுக்கு ஏற்ப சுவிட்சர்லாந்து குறைந்த அமையச் செலவினைக் கொண்ட தொலைக்காட்சி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியினை அடைந்து அதில் உள்ள மிகை உற்பத்தியை ஜெர்மனிக்கு ஏற்றுமதி செய்து, ஜெர்மனி குறைந்த அமையச் செலவைக் கொண்ட கடிகார உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து அதில் உள்ள மிகை உற்பத்தியை சுவிட்சர்லாந்திற்கு ஏற்றுமதி செய்வதன் மூலமும் இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டு நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியும்.
- ஒவ்வொரு நாடும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்ட பண்ட உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து மிகை உற்பத்தியை நாடுகளுக்கிடையே குறித்த ஒரு விகிதத்தின் கீழ் பரிமாற்றம் செய்யும்.
- குறித்த ஒரு விகிதத்தின் கீழ் பரிமாற்றை மேற்கொள்ளுமாயின், அப்பரிமாற்றின் மூலம் இரண்டு நாடுகளும் நன்மையை அடைவதாக இருந்தால் மட்டுமேயாகும்.

- இரு நாடுகளுக்கும் அந்நியோன்யமான முறையில் நன்மை அளிக்கும் பரிமாற்று விகிதத்தைக் கணிப்பீடு செய்கையில் அதனுடன் தொடர்புடைய பரிமாற்று விகிதம் இரண்டு வடிவங்களைக் கொண்டிருக்கும்.
  (1) உள்நாட்டுப் பரிமாற்று விகிதம்
  (2) வெளிநாட்டுப் பரிமாற்று விகிதம்
- சர்வதேச வர்த்தகத்திற்கு முன் அந்தந்த நாடுகளுக்கிடையே பொருள் பரிமாற்ற விகிதம் உள்நாட்டுப் பரிமாற்று விகிதமாகும்.
- ஒப்பீட்டு நன்மையைக் காட்டுவதற்காக சுவிட்சர்லாந்து, ஜெர்மனி தொடர்புடைய (உதாரணத்திற்கு ஏற்ப) உள்நாட்டுப் பரிமாற்று விகிதத்தைப் பின்வருமாறு கணிப்பீடு செய்யலாம்.

**ஊழிய அலகொன்றினால் உருவாக்கப்பட்ட வெளியீட்டின் அளவு**

| **பண்டம்** | **சுவிட்சர்லாந்து** | **ஜெர்மனி** |
|---|---|---|
| கடிகாரம் | 4 | 20 |
| தொலைக்காட்சி | 6 | 10 |

சுவிட்சர்லாந்தில் உள்நாட்டு பரிமாற்று விகிதம்:

| | | | | |
|---|---|---|---|---|
| கடிகாரம் | 4 : | தொலைக்காட்சி | 6 |
| கடிகாரம் | 1 : | தொலைக்காட்சி | 1.5 |
| தொலைக்காட்சி | 6 : | கடிகாரம் | 4 |
| தொலைக்காட்சி | 1 : | கடிகாரம் | 0.67 |

ஜெர்மனியின் உள்நாட்டு பரிமாற்று விகிதம்:

| | | | |
|---|---|---|---|
| கடிகாரம் | 20 : | தொலைக்காட்சி | 10 |
| கடிகாரம் | 1 : | தொலைக்காட்சி | 0.5 |
| தொலைக்காட்சி | 10 : | கடிகாரம் | 20 |
| தொலைக்காட்சி | 1 : | கடிகாரம் | 2 |

- இரண்டு நாடுகளும் இரண்டு பண்டங்களினதும் அமையச் செலவைக் கவனத்தில் கொண்டு ஜெர்மனிக்குக் கடிகாரம் தொடர்பிலும், சுவிட்சர்லாந்துக்குத் தொலைக்காட்சி தொடர்பிலும் ஒப்பீட்டு நன்மை நிலவுவதாக முன்னர் குறிப்பிடப்பட்டது.
- ஒப்பீட்டு நலனில் பண்ட பரிமாற்றத்தை மேற்கொண்டு இரு நாடுகளும் வர்த்தகத்தில் தொடர்புபட வேண்டியது கணிப்பீடு செய்யப்பட்ட உள்நாட்டுப் பரிமாற்று விகிதத்தை விட நன்மையளிக்கும் விதத்தில் வெளிநாட்டு பரிமாற்று விகிதத்தை தீர்மானிப்பதன் மூலமாகும்.

- வெளிநாட்டுப் பரிமாற்று விகிதம் என்பது வர்த்தகத்தில் தொடர்புபடுவதனால் இரு நாடுகளுக் கிடையே உள்ள பண்டப் பரிமாற்று விகிதமாகும்.


  மேலுள்ள உதாரணத்திற்கு ஏற்ப இரண்டு நாடுகளுக்கும் அந்நியோன்யமான முறையில் நன்மையளிக்கும் பரிமாற்று விகிதம் பின்வருமாறு:


| |
|---|
| ஜெர்மனிக்கு 1 அலகு கடிகாரத்திற்குத் தொலைக்காட்சி 0.5 ஐ விடக் கூடுதலாகவும் 1.5 ஐ விடக் குறைவாகவுமிருத்தல் வேண்டும். |
| சுவிட்சர்லாந்து தொலைக்காட்சி 1 இற்கு கடிகாரம் 0.67 ஐ விடக் கூடுதலாகவும் 2 ஐ விடக் குறைவாகவுமிருத்தல் வேண்டும். |

- இவ்விடைவெளிக்குரிய வெளிநாட்டுப் பரிமாற்று விகிதம் பல அளவுகளில் காணப்படலாம். எந்த வகையான விகிதங்களின் கீழ் பர்மாற்றங்களை மேற்கொண்டு வியாபாரத்துடன் தொடர்புபட்டு இரண்டு நாடுகளும் நன்மையைப் பெறலாம். அதாவது உயர்ந்த நுகர்வு மட்டத்தை நெருங்கலாம்.


- சுவிட்சர்லாந்து, ஜெர்மனி என்ற இரண்டு நாடுகளும் மேலுள்ள இடைவெளிக்குள், 1 கடிகாரம் : 1 தொலைக்காட்சி என்ற வெளிநாட்டுப் பரிமாற்று விகிதத்தின் கீழ் வியாபாரத்தை மேற்கொள்வதாகக் கருதுவோம். இந்நிலையில் இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் முன்னர் இருந்த நிலைமையை விட உயர்ந்த நுகர்வு மட்டத்தை நோக்கிச் செல்லும்.


  உதாரணம்:- சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முன்னர் சுவிட்சர்லாந்து, ஜெர்மனி என்ற இரு நாடுகளினதும் சாத்திய வளையி வருமாறு:



மேலே கணிப்பீடு செய்யப்பட்ட இரண்டு நாடுகளுக்கும் நன்மையளிக்கக்கூடிய பரிமாற்று விகிதமாகிய 1 கடிகாரத்திற்கு 1 தொலைக்காட்சி என்ற விகிதத்தின் கீழ் ஒப்பீட்டு நன்மை கொண்ட பண்டத்தைப் பரிமாற்றம் செய்வதன் மூலம் இரு நாடுகளும் புதிய நுகர்வுக் கோட்டை நோக்கிச் செல்வதைப் பின்வரும் வரிப்படம் காட்டும்.









- அந்நியோன்யமாக நன்மையளிக்கும் வெளிநாட்டுப் பரிமாற்று விகிதத்தின் கீழ் வர்த்தகத்திற்குத் தொடர்புபடும் பரிமாற்றத் தன்மையை (உயர்ந்த நுகர்வு மட்டத்தை அடைதல்) அடைவதைப் போல் வர்த்தகத்தில் நுழைவதனால் சிறப்புத் தேர்ச்சியின் நன்மையையும் அடையலாம்.
- சிறப்புத் தேர்ச்சியின் நன்மை என்பது மொத்த வளங்களின் அளவை அதிகரிக்காமல் உலக உற்பத்தியை அதிகரிக்க முடிவதாகும்.

உதாரணம்:- சுவிட்சர்லாந்து, ஜெர்மனி என்ற இரு நாடுகளும் மொத்த வளங்கள் என்ற வகையில ஊழிய அலகுகள் 100 படி வைத்திருப்பதாகக் கருதுவோம். ஊழியர் 100 அலகுகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளும் உற்பத்தி பின்வரும் அட்டவணையினால் காட்டப்படும்.

ஊழியர் 100 அலகுகளைப் பயன்படுத்தி உருவாக்கிய உற்பத்திகளின் பெறுமதி

| **பண்டம்** | **சுவிட்சர்லாந்து** | **ஜெர்மனி** |
|---|---|---|
| கடிகாரம் | 400 | 2000 |
| தொலைக்காட்சி | 600 | 1000 |





இவ்விரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட முன்னர் மேலுள்ள உற்பத்தி சாத்திய வளையியில்,


| | | | |
|---|---|---|---|
| சுவிட்சர்லாந்து | - | கடிகாரம் | 200 |
| | - | தொலைக்காட்சி | 300 |

காட்டப்படும் A புள்ளியிலும்,

| | | | |
|---|---|---|---|
| ஜெர்மனி | - | கடிகாரம் | 1500 |
| | - | தொலைக்காட்சி | 250 |

காட்டப்படும் B புள்ளியிலும் செயற்படுமாயின் இந்நிலைமையைப் பின்வரும் வரைபுகளில் காட்டலாம்.




இவ்வாறு உற்பத்திச் சாத்திய வளையியில் காட்டப்பட்டவாறு வர்த்தகத்திலீடுபட முன்னர் கடிகாரம், தொலைக்காட்சி என்பவற்றின் உலக உற்பத்தி மட்டம் வருமாறு:

| பண்டம் | சுவிட்சர்லாந்து | ஜெர்மனி | உலக உற்பத்தி |
|---|---|---|---|
| கடிகாரம் | 200 | 1500 | 1700 |
| தொலைக்காட்சி | 300 | 250 | 550 |

- வர்த்தகத்தில் ஈடுபட்டுச் சுவிட்சர்லாந்துத் தொலைக்காட்சியிலும் ஜெர்மனி கடிகாரத்திலும் சிறப்புத் தேர்ச்சி அடைவதனால் சுவிட்சர்லாந்து தமது 100 அலகு ஊழிய வளத்தைத் தொலைக்காட்சி உற்பத்தியிலும், ஜெர்மனி தனது 100 அலகு ஊழிய வளத்தைக் கடிகார உற்பத்தியிலும் பயன்படுத்தும். இதனால் உலக உற்பத்தி பின்வருமாறு மாற்ற மடையும்.

| **பண்டம்** | **சுவிட்சர்லாந்து** | **ஜெர்மனி** | **உலக உற்பத்தி** |
|---|---|---|---|
| கடிகாரம் | 0 | 2000 | 2000 |
| தொலைக்காட்சி | 600 | 0 | 600 |

- வர்த்தகத்திற்கு முன் கடிகாரத்தின் உலக உற்பத்தி 1700

  வர்த்தகத்திற்கு பின் கடிகாரத்தின் உலக உற்பத்தி 2000

  அதாவது சர்வதேச வர்த்தகத்திலீடுபடுவதனால் கடிகாரத்தின் உலக உற்பத்தி 300 அலகுகளால் உயர்ந்துள்ளது.
- இவ்வாறே வர்த்தகத்திற்கு முன் தொலைக்காட்சியின் உலக உற்பத்தி 550 ஆகும். வர்த்தகத்தின் பின் தொலைக்காட்சியின் உலக உற்பத்தி 600 ஆகும். அதாவது வர்த்தகத்தின் பின் உலக உற்பத்தி 50 அலகுகளால் உயர்ந்துள்ளது.
- வர்த்தகத்திற்கு முன்னும் பின்னும் சுவிட்சர்லாந்து ஜெர்மனியிடம் 100 அலகு ஊழியமே இருந்தது.
- இதன்படி ஊழிய வளத்தின் அளவு உயர்வடையாமல் வர்த்தகத்தில் ஈடுபட்டதன் மூலம் உலக உற்பத்தியை அதிகரிக்க முடிந்ததைத் தெளிவுபடுத்தும். அது சிறப்புத் தேர்ச்சியின் நன்மையாகும்.
- பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளின் அளவு தரப்படுமாயின் அமையச் செலவை அடிப்படையாகக் கொண்டு ஒப்பீட்டு நன்மையைக் கணிப்பீடு செய்யலாம்.

**ஒரு அலகு வெளியீட்டை மேற்கொள்ளத் தேவையான ஊழியர்களின் எண்ணிக்கை**

| **பண்டம்** | **நாடு A** | **நாடு B** |
|---|---|---|
| கணனி | 4 | 6 |
| சைக்கிள் | 10 | 12 |

- உள்ளீடுகளின் அளவு தரப்படுமிடத்து ஒப்பீட்டு நன்மையைக் காண்பதற்காக அத் தகவல்களை உள்ளீடு அலகொன்றினால் உருவாக்கக்கூடிய வெளியீட்டின் அளவாக மாற்றப்படுதல் வேண்டும். (வெளியீட்டு அணுகுமுறையில் காட்டப்படுவதைப் போல்)

- இதன் அடிப்படையில் மேலுள்ள அட்டவணையின் தகவல்களை பின்வருமாறு மாற்றலாம்.

**ஊழிய அலகொன்றினால் உற்பத்தி செய்யக்கூடிய வெளியீட்டின் அளவு**

| பண்டம் | நாடு A | நாடு B |
|---|---|---|
| கணினி | $\frac{1}{4}$ | $\frac{1}{6}$ |
| சைக்கிள் | $\frac{1}{10}$ | $\frac{1}{12}$ |

இத்தகவல்களின் அடிப்படையில் இரு நாடுகளினதும் அந்தந்தப் பண்ட வகைகளின் அமையச் செலவுகள் வருமாறு:

ஒரு அலகு கணினியை உற்பத்தி செய்வதன் அமையச் செலவு

நாடு A - $\frac{\frac{1}{10}}{\frac{1}{4}} = 0.4$ அலகு சைக்கிள்

நாடு B - $\frac{\frac{1}{12}}{\frac{1}{6}} = 0.5$ அலகு சைக்கிள்

சைக்கிள் ஒரு அலகை உற்பத்தி செய்வதற்கான அமையச் செலவு

நாடு A - $\frac{\frac{1}{4}}{\frac{1}{10}} = 2.5$ அலகு கணினி

நாடு B - $\frac{\frac{1}{6}}{\frac{1}{12}} = 2$ அலகு கணினி

- இங்கு A நாட்டிற்குக் கணினி உற்பத்தி செய்வதன் மூலமும் B நாட்டிற்குச் சைக்கிள் உற்பத்தி செய்வதன் மூலம் ஒப்பீட்டு நன்மை கிடைக்கும்.
- இதனால் A நாடு கணினி உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியடைந்து உற்பத்தி செய்து மிகையுற்பத்தியை B நாட்டிற்கு ஏற்றுமதி செய்யும், B நாடு சைக்கிள் உற்பத்தியில் சிறப்புத் தேர்ச்சியடைந்து உற்பத்தி செய்து மிகையுற்பத்தியை A நாட்டிற்கு ஏற்றுமதி செய்தும் இரு நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தின் நன்மையை அடையலாம்.

- சர்வதேச வர்த்தகத்திற்கு அடிப்படையாக அமைய ஒப்பீட்டு நன்மை தோன்றுவதன் பிரதான மூலாதாரங்கள் (ஒப்பீட்டு நன்மை தோன்றுவதற்கான காரணங்கள்) பல கீழ் வருமாறு:

**(1) வளங்களின் திரட்சியில் மாற்றம்:**

நாடுகள் உடைமையாகக் கொண்டுள்ள வளத் திரட்சியில் மாற்றத்தின் காரணமாக பண்ட உற்பத்தியில் அமையச் செலவில் மாற்றம் தோன்றும்.

உதாரணமாக, கனிய வளங்களின் கிடைப்பனவு நாட்டுக்கு நாடு வேறுபட்டது. தென்ஆபிரிக்காவில் தங்கம் அதிகமாகக் கிடைக்கும். இதனால் சவுதி அரேபியா கனிய எண்ணெய்யை உற்பத்தி செய்வதற்குக் குறைந்த அமையச் செலவைக் கொண்டிருப்பதனால் கனி எண்ணெயில் சிறப்புத் தேர்ச்சி அடைந்து ஏற்றுமதி செய்யும். இவ்வாறே தென் ஆபிரிக்காவில் தங்கத்தின் அமையச் செலவு குறைவாக இருப்பதனால் தங்கத்தில் சிறப்புத் தேர்ச்சியடைந்து ஏற்றுமதியை மேற்கொள்ளும்.

**(2) பண்புரீதியான தன்மை:**

வளங்களின் அளவில் மட்டுமன்றி வளங்களின் பண்பிலும் நாட்டுக்கு நாடு வேறுபாடு தோன்றும்.

உதாரணமாக, ஊழியர்களை அதிகளவில் கொண்ட நாடாக இருப்பினும், ஊழியப் படை பயிற்சியற்றதாக இருப்பின் அவர்களின் விளைத்திறன் மிகக் கீழ் மட்டத்தில் காணப்படும். இதற்கு மாற்றமாகக் குறைந்தளவு ஊழியப்படையைக் கொண்ட நாடொன்றில் ஊழியப்படை பயிற்சி பெற்றிருப்பின் அவர்கள் உயர்ந்த விளைத் திறனைக் கொண்டிருப்பர். இங்கு ஊழியத்தின் விளைத்திறன் குறையும்போது அமையச் செலவு அதிகரிப்பதனால் ஒப்பீட்டு நன்மை குறையும். ஆயினும் ஊழியத்தின் விளைத்திறன் கூடும்போது அமையச் செலவு குறைவதனால் ஒப்பீட்டு நன்மை தோன்றும்.

**(3) சுவையில் மாற்றம்:**

எல்லா நாடுகளும் ஒரே சமனான காரணித் திரட்சி, ஒரே சமனான வினைத்திறன் என்பவற்றைக் கொண்டிருந்தாலும், நாடுகளுக்கிடையே பண்டங்கள் தொடர்பாகச் சுவையில் தோன்றும் மாற்றத்தினாலும் அமையச் செலவில் வேறுபாடு தோன்றும். எனவே இவ்வாறு சுவையில் மாற்றம் ஏற்படுவதானது பண்டங்களின் ஒப்பீட்டு விலையில் மாற்றம் தோன்றலாம். சுவை கூடிய பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்குவிப்பதன் மூலமாகக் குறைந்த அமையச் செலவின் கீழ் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்வதன் மூலம் ஒப்பீட்டுத் தன்மையை அடையலாம்.

**(4) அளவுத்திட்டச் சிக்கனம்:**

உற்பத்தி இயலளவை அதிகரிக்கும்போது ஒரு அலகிற்கான செலவு குறையுமாயின் அளவுத் திட்டச் சிக்கனம் தோன்றும். அளவுத் திட்டச் சிக்கனம் தோன்றும்போது ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அமையச் செலவைக் கொண்ட பண்டத்தை உற்பத்தி செய்து ஒப்பீட்டுச் செலவில் நன்மையை அடையலாம்.

**(5) பண்ட வேறுபாடு:**

ஒரே தொழிலின் கீழ் பண்டங்களுக்கிடையில் நிலவும் பல்வேறான வேறுபாடுகள் காரணமாகவும், அந்தந்த நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தின் மூலம் அடையக் கூடிய ஒப்பீட்டு நன்மை வெளிப்படுத்தப்படும். நிகழ்காலத்தில் அபிவிருத்தி அடைந்த பெரும்பாலான நாடுகளின் சர்வதேச வர்த்தகமானது பண்ட வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுவதைக் காணலாம். உதாரணமாக, மோட்டார் வாகனத் தொழிலை எடுத்தால் ஜெர்மனி, பெரிய பிரித்தானியாவிற்கு மோட்டார் வாகனத்தை ஏற்றுமதி செய்து பிரித்தானியாவிலிருந்து மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்யும். இதற்குக் காரணம் ஒரே தொழிலாக இருந்தாலும் பண்டங் களுக்கிடையே காணப்படும் வேறுபாடுகள் காரணமாக அமையச் செலவில் வேறுபாடுகள் நாடுகளுக்கிடையே ஏற்படுவதாகும்.

**(6) தொழில்நுட்ப வேறுபாடு:**

தொழில்நுட்பத்தில் தோன்றும் மாற்றத்தின் காரணமாகவும் நாடுகளுக்கிடையே ஒப்பீட்டு நன்மை வேறுபடும். ஏதாவதொரு நாடு, ஏதாவதொரு பண்ட உற்பத்தியில் முன்னர் பயன்படுத்திய தொழில் நுட்பத்தை விட நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தினால் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த அமையச் செலவில் அப்பண்டத்தைச் சிறப்புத் தேர்ச்சியுடன் உற்பத்தி செய்து ஒப்பீட்டு நன்மையைப் பெறலாம்.

**(7) அரச கொள்கை:**

அரச கொள்கை மூலமும் ஒப்பீட்டு நன்மையை உருவாக்கலாம். குறித்த தொழிலை புனரமைப்பதற்கு அரசாங்கத்தினால் வரி, ஊக்குவிப்பு, ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மானியம் வழங்குதல், பாதுகாப்புவாதக் கொள்கை, வட்டிக் கடன் தொடர்பான சலுகை என்பவற்றைச் செயற்படுத்தும்போது குறைந்த அமையச் செலவில் பண்டத்தை உற்பத்தி செய்து வர்த்தகத்தின் மூலம் ஒப்பீட்டு நன்மையை அடையலாம்.

**(8) பணவீக்கம்:**

குறித்தவொரு நாட்டில் நீண்டகாலமாகப் பணவீக்கம் நிலவும்போது பண்டமொன்றை உற்பத்தி செய்வதற்கான எல்லைச் செலவு அதிகரிக்கும். இதனால் ஒப்பீட்டு நன்மை குறையும். ஏற்றுமதி குறையும்.

**(9) அமைவிடம்:**

குறித்த தொழிலின் அமைவிடமும் நாடுகளுக்கிடையே ஒப்பீட்டு நலனைத் தீர்மானிக்கும். தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்கள் போன்றவற்றை இலகுவாகப் பெறக்கூடியதாக இருப்பின், குறைவான அமையச் செலவில் பண்டத்தை உற்பத்தி செய்து ஒப்பீட்டு நன்மையை அடையலாம்.

- போட்டித் தன்மையின் நன்மை என்பது குறித்தவொரு பண்டத்தை நுகர்வோனுக்கு வழங்கும்போது ஏனைய போட்டியாளரை விட அதிக பெறுமதிகளை நுகர்வோனுக்குக் கிடைக்கச் செய்வதாகும்.

- இப்பெறுமதியானது ஏனைய போட்டியாளர்களின் விலையை விடக் குறைந்த விலையாக அல்லது உயர்ந்த விலையாகவும் இருக்கலாம். அல்லது ஏனைய போட்டியாளர்களின் பண்டத்தின் தரத்தை விடக் கூடிய தரத்தில் இருக்கலாம்.
- தொழிலில் இருக்கும் ஏனைய போட்டியாளர்கள் உழைக்கும் சராசரி இலாப அளவை விடக் கூடிய இலாபத்தைத் தொடர்ந்து உழைப்பதற்கு முடியுமாயின் அந்நிறுவனத்திற்குப் போட்டியின் நன்மையை அடைய முடியும் என்பதை எடுத்துக் காட்டும்.
- போட்டியின் நன்மையினைத் தொடர்ந்து கொண்டு செல்வது நிறுவனத்தின் உத்திகளில் ஒன்றாகும்.
- போட்டியின் நன்மைக்கு ஏதுவாகின்ற மூலங்கள் பல கீழே குறிப்பிடப்படும்.
  - ஆராய்ச்சி, அபிவிருத்தித் துறைகளில் பெரியளவிலான இயலுமை காணப்படும். இதனால் புதியனவற்றை அறிமுகப்படுத்தும் போது முன்னிலையில் நிற்கும் வாய்ப்புத் தோன்றும்.
  - நுண்ணறிவுச் சொத்துக்களின் உடைமை. (ஆக்கவுரிமை, வியாபாரக் குறி)
  - பங்கீட்டு நடவடிக்கை தொடர்பில் விசேட உரிமை காணப்படுதல்.
  - மூலதன, உபகரணங்களின் உரிமை.

    உ+ம்:- கனிய எண்ணெய், ஆராய்ச்சி, சுரங்கத் தொழில்
  - சிறந்த உற்பத்தியாளரை உருவாக்குதல் அல்லது நுகர்வோனின் தேவைக்காக, விரைவான பதிலை வழங்கக்கூடிய இயலுமை.
  - குறைந்த செலவில் உற்பத்தி செய்தல் அல்லது மிகப் பெரிய உற்பத்தி இயலளவைக் கொண்டிருத்தல்.
  - சக்திவாய்ந்த விநியோக உபாய முறைகள் காணப்படுதல்.
  - தொழிற்படு மூலதனத்தை விநியோகிப்பதில் இலகுத்தன்மை.
  - மிகத் திறமையான முகாமைத்துவ முறை காணப்படுதல்.
  - பிரவேசத் தடை காணப்படுதல் அல்லது தனியுரிமை நிலை காணப்படுதல்
- சர்வதேச வர்த்தகத்தின் நன்மையை இயற்கை நன்மை என்றும் செயற்கை நன்மை என்றும் வகைப்படுத்தலாம்.
- இயற்கை நன்மை என்பது உற்பத்தியையும் நுகர்வையும் அடிப்படையாக வைத்து நாடொன்று இயற்கையாகவே உரிமையாக்கிக் கொண்ட நன்மைகளாகும். இதற்குக் காரணங்கள் பலவாகும்.

  (1) வளத் திரட்சி

  (2) நாடுகளுக்கிடையே சுவையில் வேறுபாடு

  (3) உற்பத்தியில் அளவுத்திட்டச் சிக்கனங்கள் அதிகளவில் காணப்படுதல்.
- செயற்கை நன்மை என்பது தொழில்நுட்ப முன்னேற்றம், பொருள் வேறுபாடு, அரச கொள்கை, வர்த்தக உடன்படிக்கை போன்ற நாடுகள் தாமாகவே உருவாக்கிக் கொண்ட நிலைமைகளால் உருவாகிய நன்மைகளாகும்.

**தேர்ச்சி 9.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.2:** **பாதுகாப்பு வாதத்தின் செயற்பாடுகளும் அதன் மூலமாக சுதந்திர வர்த்தகத்திற்குத் தோன்றும் தாக்கத்தையும் ஆய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 06

**கற்றற் பேறுகள்:**

- பாதுகாப்பு வாதத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பாதுகாப்புச் செயற்பாட்டை வெவ்வேறாகக் குறிப்பிடுவார்.
- தீர்வை வரி மூலமான பாதுகாப்பை விளக்குவார்.
- பெயரளவு பாதுகாப்பு வீதத்தையும் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதத்தையும் விளக்குவார்.
- தீர்வை வரியல்லாத பாதுகாப்பு வாதச் செயற்பாட்டைக் குறிப்பிடுவார்.
- பாதுகாப்பு வாதத்திற்குச் சார்பாகவும் எதிராகவும் கருத்துக்கள் முன்வைப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உள்நாட்டுச் சந்தைக்குள் வெளிநாட்டுப் பொருட்கள் தடையின்றி நுழைவதையும், உள்நாட்டுப் பொருட்கள் வெளிநாட்டுச் சந்தைக்குள் தடையின்றி நுழைவதையும் வரையறுக்கும் எந்தவொரு செயற்பாடும் பாதுகாப்பு வாதம் என அழைக்கப்படும்.
- சுதந்திர வர்த்தகத்திற்குத் தடையாக அமையும் பாதுகாப்புச் செயற்பாட்டைப் பின்வருமாறு இரண்டு பிரிவுகளாக நோக்கலாம்.
  (1) தீர்வை வரிப் பாதுகாப்புச் செயற்பாடு
  (2) தீர்வை வரி அல்லா பாதுகாப்புச் செயற்பாடு
- தீர்வை வரிப் பாதுகாப்பு என்பது ஏற்றுமதி, இறக்குமதி மீது வரி விதிப்பதாகும்.
- பெறுமதியை அடிப்படையாகக் கொண்ட பெறுமதிசேர் வரி அல்லது அளவை அடிப்படை யாகக் கொண்ட விசேட அல்லது அலகு வரி என்ற வகையில் தீர்வை வரி விதிக்கப்படும்.
- ஏற்றுமதி மீது விதிக்கப்படும் வரியின் காரணமாக அப்பண்டம் மீது வெளிநாடுகள் கூடிய விலையைச் செலுத்த வேண்டி ஏற்படுவதனால் ஏற்றுமதி தைரியத்தை இழக்கும்.
- இறக்குமதி வரி விதிப்பதன் பிரதான நோக்கமாக இருப்பது உள்நாட்டு உற்பத்தி யாளர்களை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாப்பதாகும்.
- இறக்குமதிப் பண்டம் மீது வரி விதிப்பதனால் உள்நாட்டுப் பொருள் மீது நுகர்வோன் கவனம் செலுத்துவதன் காரணமாக உள்நாட்டு உற்பத்திகள் விரிவாக்கம் அடையும்.
- இதனால் உள்நாட்டுப் பொருட்களின் விலை உயர்வடைவதற்கு வாய்ப்புத் தோன்றும்.

- இவ்வாறு இறக்குமதித் தீர்வையை உயர்த்துவதன் விளைவாக உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு, இறக்குமதி செய்யப்படும் பொருளின் விலை உயர்வின் வீதத்தின் மூலம் பெறப்படும் பாதுகாப்பானது பெயரளவு பாதுகாப்பு வீதம் (Noninal Rate of Protection) என்றழைக்கப்படும்.
- பெயரளவு பாதுகாப்பு வீதம், உள்நாட்டு உற்பத்தியாளரின் விலையானது, இறக்குமதி பொருளின் உள்நாட்டுச் சந்தை விலையின் சதவீதமாகக் குறிப்பிடப்படும்.
- பெயரளவு பாதுகாப்பு வாதத்தின் மூலம் உள்நாட்டுப் பொருள் மீது கிடைக்கும் உண்மையான பாதுகாப்பின் அளவானது சரியாகக் காட்டப்படாது.
- பெயரளவு தீர்வை வரி வீதமானது இறக்குமதி செய்யப்படும் இறுதிப்பொருளின் பெறுமதியின் அடிப்படையிலேயே விதிக்கப்படும். ஆயினும் உள்நாட்டு உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளைப் பயன்படுத்தும் இத்தகைய நிலைமையின்போது பெயரளவு தீர்வை வரி வீதத்திற்கு ஏற்பக் கணிப்பீடு செய்யப்படும். பெயரளவு பாதுகாப்பு வீதமானது உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் உண்மையான பாதுகாப்பின் அளவைச் சரியாகக் காட்டாது.
- இதனால் இறக்குமதி வரியொன்றை விதிப்பதன் மூலமாக உள்நாட்டு உற்பத்தியாளருக்குக் கிடைக்கும் உண்மையான பாதுகாப்பின் அளவைக் கணிப்பீடு செய்வதற்கு மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் பயன்படுத்தப்படும்.
- மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதமானது, மெய் பயனுறுதி வாய்ந்த தீர்வை வரி வீதத்திற்கு ஏற்பக் கணிப்பீடு செய்யப்படும்.
- மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதத்தைக் கணிப்பீடு செய்வதற்குப் பின்வரும் வாய்ப்பாடு பயன்படுத்தப்படும்.

$$ERP = \frac{(V_1 - V_0)}{V_0} \times 100$$

ERP = மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம்

$V_1$ = தீர்வை வரி விதித்த பின்னருள்ள உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி

$V_0$ = தடையற்ற சந்தை நிலைமையின் கீழ் உள்நாட்டு உற்பத்தியின் கூட்டிய பெறுமதி.

உதாரணமாகக் குறித்தவொரு நாட்டில் காலணி உற்பத்தி நிறுவனமொன்று ஒரு சோடிக் காலணியை 5 000 ரூபா விலையில் விநியோகிக்கின்றது எனக் கருதுக. அக்காலணிகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான உள்ளீடுகளை (தோல், நூல் போன்றவை) இறக்குமதி செய்வதற்காக 3 000 ரூபா செலவாகியது எனக் கருதுக. இந்நிலையில் உள்நாட்டு உற்பத்தி நிறுவனத்தின் கூட்டிய பெறுமதி 2 000 ரூபாவாகும் (5 000 - 3 000). இத்தோடு உள்நாட்டு நிறுவனம் உற்பத்தி செய்யும் காலணிகளுக்குச் சமனான காலணிகளை இறக்குமதி செய்வதுடன் அதுவும் உள்நாட்டுச் சந்தையில் 5 000 ரூபாப்படி விநியோகிக்கப்படுவதாகக் கருதுவோம். இதன்படி உள்நாட்டுக் காலணி உற்பத்தி நிறுவனத்தின் கூட்டிய பெறுமதியானது ஏதாவதொரு காரணத்தினால் 2 000 ரூபாவை விடக் கூடினால், உள்நாட்டில் உற்பத்தியாகும் காலணிச் சோடியின் பெறுமதி யானது 5 000 ரூபாவை விட உயர்வதனால், இறக்குமதி செய்யப்படும் காலணிகளுடன்

போட்டியிட முடியாத நிலை தோன்றும். இதனால் உள்நாட்டு உற்பத்தியைப் பாதுகாப்பதற்காக இறக்குமதியாகும் காலணி மீது 10% இறக்குமதி தீர்வை வரியை விதிப்பதாகக் கருதுக. இந்நிலையில் இறக்குமதி செய்யும் ஒரு சோடி காலணியின் விலையானது பின்வருமாறு மாற்றமடையும்.

தீர்வை வரிக்கு முன்னருள்ள காலணிச் சோடியொன்றின் விலை = 5 000/=

தீர்வை வரிக்குச் செலவாகும் பணம் = ரூபா $5\ 000 \times \frac{10}{100}$

= ரூபா 500

தீர்வை வரிக்குப் பின்னருள்ள இறக்குமதிக் காலணியின் விலை = 5 000 + 500

= ரூபா 5 500

இவ்வாறு இறக்குமதிக் காலணிகள் மீது தீர்வை வரியொன்றை விதிப்பதனால் உள்நாட்டு உற்பத்தி நிறுவனத்தின் கூட்டிய பெறுமதியை 2 500 ரூபா வரை உயர்த்துவதற்கு வாய்ப்பு தோன்றும்.

தீர்வை வரியின் பின்னர் இறக்குமதிக் காலணிச்

சோடியொன்றின் விலை = ரூபா 5 500

தீர்வை வரியின் பின்னர் உள்நாட்டு உற்பத்தி = ரூபா 5 500 - 3 000

நிறுவனத்தின் கூட்டிய பெறுமதி = ரூபா 2 500

இதன்படி மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதமானது பின்வரும் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும்.

$$ERP = \frac{(V_1 - V_0)}{V_0} \times 100$$

$$= \frac{2\ 500 - 2\ 000}{2\ 000} \times 100$$

$$= 25\%$$

- உதாரணத்தின்படி பெயரளவு தீர்வை வரியின் காரணமாக உள்நாட்டு உற்பத்திக்கு 25% பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பை ஏற்பாடு செய்வது தெளிவாகின்றது.
- ஆயினும் மேலுள்ள தீர்வை வரியானது, இறுதிப் பொருளின் பெறுமதி மீதே விதிக்கப் பட்டுள்ளது. உள்நாட்டு நிறுவனம் காலணி உற்பத்திக்குத் தேவையான உள்ளீடுகளை இறக்குமதி செய்யும்போது, அதற்குத் தீர்வை வரி விதிக்கப்பட்டிருப்பின் அது இதற்குள் சேர்க்கப்பட்டிருக்காது. இந்நிலையில் மேலே கணிப்பீடு செய்யப்பட்ட மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் மூலம் உள்நாட்டு உற்பத்திக்குக் கிடைக்கும் உண்மையான பாதுகாப்பின் அளவை எடுத்துக்காட்டாது.

- இறக்குமதி உள்ளீடு மீது தீர்வை வரி விதிக்கப்படும்போது மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் மாற்றமடைவதனால் அதனைப் பின்வருமாறு காட்டலாம்.

  உ+ம்:- மேலே கூறப்பட்ட உதாரணம் (1) இன்படி இறக்குமதி செய்யப்படும் ஒரு சோடி காலணிக்கு 10% தீர்வை வரி விதிக்கப்படும். இங்கு உள்நாட்டு உற்பத்தி நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளுக்காக 5% தீர்வை வரி விதிக்கப் படுவதாகக் கருதுவோம். இந்நிலையில் இறக்குமதி உள்ளீடுகளின் பெறுமதியும் உள்நாட்டுக் கூட்டிய பெறுமதி என்பவற்றில் மாற்றம் ஏற்படும். இதன்படி மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதமும் மாற்றமடையும்.

  தீர்வை வரிக்கு முன்னரான இறக்குமதி உள்ளீடுகளின் பெறுமதி = ரூபா 3 000

  உள்ளீடுகளுக்காகச் செலுத்தும் தீர்வை வரியின் அளவு $= 3\ 000 \times \frac{5}{100}$

  = ரூபா 150

  தீர்வை வரியின் பின்னரான உள்ளீடுகளின் பெறுமதி = ரூபா 3 000 + 150

  = ரூபா 3 150

  தீர்வை வரியின் பின்னர் உள்நாட்டில் கூட்டிய பெறுமதி = ரூபா 5 500 - 3 150

  = ரூபா 2 350

  ∴ மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதம் $= \frac{(2\ 350 - 2\ 000) \times 100}{2\ 000}$

  $= \underline{\underline{17.5\%}}$

  இவ்வுதாரணத்தின் மூலம் பெயரளவு பாதுகாப்பு வீதம், மெய் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு வீதம் இடையிலான வேறுபாடுகளைத் தெளிவாக அறியலாம்.

- ஏனைய காரணிகள் மாறாத நிலையில் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் மெய்ப் பயனுறுதி வாய்ந்த பாதுகாப்பு உயர்வான பெறுமதியைப் பெறும்.

  (1) இறுதி உற்பத்தி மீது விதிக்கப்படும் பெயரளவுத் தீர்வை வரி வீதம் உயர்ந்த பெறுமதியைப் பெற்றுக் கொள்ளல்.

  (2) இறக்குமதி உள்ளீடுகள் மீது விதிக்கப்படும் தீர்வை வரி வீதம் குறைந்த பெறுமதி யைக் கொண்டிருத்தல்.

  (3) பொருளின் பெறுமதியினுள் இறக்குமதி உள்ளீடுகளின் வீதம் உயர்ந்த பெறுமதி யைப் பெறுதல்.

- தீர்வை வரி அல்லாத பாதுகாப்பு வாதச் செயற்பாடு என்பது ஏற்றுமதி இறக்குமதிகளை வரையறுப்பதற்காக அல்லது முழுமையாகத் தடை செய்வதற்குப் பயன்படுத்தும் தீர்வை வரியல்லாத அமைப்பில் வரையறுப்பதாகும். இத்தகைய வரையறைகள் சில பின்வருமாறு:

  - பங்கீட்டு முறை அதாவது கோட்டா முறையை அமுல்படுத்துதல்.
  - உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு மானியம் அல்லது ஊக்குவிப்புகளைப் பெற்றுக் கொடுத்தல்.
  - குவித்தல்.

- தன்னிச்சையாக ஏற்றுமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல்.
- வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாடு.
- ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தல்.
- வியாபாரத் தடைகளை விதித்தல்.
- தீர்வாகத் தொழில்நுட்ப நியமங்களை அமுலாக்குதல்.

- பாதுகாப்பு வாதத்திற்குச் சார்பாகப் பின்வரும் காரணங்களை முன்வைக்கலாம்.
  - தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையதாக உற்பத்தி, பொருளாதாரம், அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளும் போதும், செயற்படுத்தும்போதும் பாதுகாப்பு வாதக் கொள்கையைப் பின்பற்றுவது முக்கியமாகும்.
  - உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்கும் அதில் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களின் தொழில்களைப் பாதுகாப்பதற்கும் பாதுகாப்புவாதக் கொள்கை அவசியமாகும்.
  - உள்நாட்டுக் குழந்தைப் பருவக் கைத்தொழில்களைத் தேர்ச்சிவாய்ந்த வெளிநாட்டுப் போட்டியாளரிடமிருந்து பாதுகாப்பதற்காகப் பாதுகாப்புக் கொள்கை உதவியாக இருக்கும்.
  - வரையறுக்கப்பட்ட சில பொருட்களை மட்டும் சிறப்புத் தேர்ச்சியடையச் செய்து, வெளிநாட்டு வர்த்தகத்திலீடுபட்டுள்ள நாடுகள் எதிர்நோக்கும் தளம்பல்களைத் தடை செய்தல். (பொருளாதார உறுதியை ஏற்படுத்தல்). பொருளாதாரத்தை பல்லினத்தன்மை உடையதாக மாற்றுவதற்கும் பாதுகாப்புவாதக் கொள்கையைப் பின்பற்றுவது அவசியமாகும்.
- குறித்தவொரு நாடு குவித்தல் பிரச்சினையை எதிர்நோக்கும்போது குவித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள வெளிநாடுகளுக்கு எதிராகச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பு வாதம் உதவியாக இருக்கும்.
- சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்க்க உதவியாகும்.
- உள்நாட்டு வளங்களின் பாவனையை உயர்த்துவதற்கு இது முக்கியமாகும்.
- சமூகத்திற்குத் தீங்கான பண்டங்களின் இறக்குமதிகளைத் தடைசெய்வதற்கும் பாதுகாப்பு வாதம் உதவியாக இருக்கும்.
- பாதுகாப்புவாதக் கொள்கைக்கு எதிராகப் பின்வரும் காரணங்களை முன்வைக்கலாம்.
  - பாதுகாப்புவாதக் கொள்கையைப் பின்பற்றுவதன் காரணமாக உள்நாட்டு வெளிநாட்டுச் சந்தைகள் சுருக்கமடையலாம்.
  - வெளிநாட்டு வர்த்தகம் சுருக்கமடைவதனால் தேசிய வருமானம் குறைவடையலாம்.
  - உள்நாட்டு உற்பத்திகளின் செலவைக் குறைப்பதற்கு ஊக்குவிப்புகள் இல்லாமையினால் வினைத்திறனற்ற தொழில்கள் உருவாகலாம்.
  - தரமான பண்டங்களின் உற்பத்தி குறைவடையலாம்.
  - முன்னேற்றமடைந்த தொழில்நுட்ப அசைவிற்குத் தடைகள் ஏற்படலாம்.

**தேர்ச்சி 9.0:** பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 9.3:** வெளிநாட்டு வர்த்தக மாற்று விகிதத்தின் வகைகளைக் காட்டி அவற்றின் மாற்றங்களுக்கான காரணங்களையும் விளைவுகளையும் பகுப்பாய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- வர்த்தகமாற்று விகிதத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வர்த்தகமாற்று விகிதத்தின் பல்வேறு வகைகளையும் பெயரிடுவார்.
- பண்ட வர்த்தக மாற்று விகிதத்தைச் சமன்பாடு மூலம் கூறுவார்.
- தரப்பட்ட தரவுகளைக் கொண்டு வர்த்தக மாற்று விகிதத்தைக் கணிப்பிடுவார்.
- பண்ட வர்த்தகமாற்று விகிதத்தின் மாற்றங்களுக்கான காரணங்களை விளக்குவார்.
- பண்ட வர்த்தகமாற்று விகித மாற்றத்தின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.
- வருமான வர்த்தக விகிதத்தினைச் சமன்பாடு மூலம் கூறுவார்.
- தரப்பட்ட தரவுகளைக் கொண்டு வருமான வர்த்தகமாற்று விகிதத்தைக் கணிப்பிடுவார்.
- வருமான வர்த்தகமாற்று விகிதத்தின் பொருளாதார விளைவுகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- ஏற்றுமதி செய்யப்படும் பண்ட அலகொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய இறக்குமதிப் பண்ட அலகுகளின் தொகையை வர்த்தகமாற்று விகிதம் என வரைவிலக்கணப்படுத்தலாம்.
- வர்த்தகமாற்று விகிதத்தின் வகைகள் இரண்டாகும்.
  - (1) பண்ட வர்த்தகமாற்று விகிதம்
  - (2) வருமான வர்த்தகமாற்று விகிதம்
- ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை இறக்குமதி விலைச் சுட்டெண்ணினால் பிரித்துக் கணிக்கப்படுகின்ற வர்த்தகமாற்று விகிதம் பண்ட வர்த்தக மாற்று விகிதமாகும்.
- ஏற்றுமதி அலகொன்றுக்காகப் பெற்றுக் கொள்ளக்கூடிய இறக்குமதி அலகுத் தொகையே பண்ட வர்த்தகமாற்று விகிதத்தினால் காட்டப்படும்.
- பண்ட வர்த்தகமாற்று விகிதத்தை கீழே தரப்படும் சமன்பாட்டு அடிப்படையில் காட்டலாம்.

$$\text{பண்ட வர்த்தகமாற்று விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$

உ+ம்:- (1) 2013 ஆம் ஆண்டின் ஏற்றுமதி விலைச் சுட்டெண் = 103.5
2013 ஆம் ஆண்டின் இறக்குமதி விலைச் சுட்டெண் = 108.4

$$\text{பண்ட வர்த்தகமாற்று விகிதம்} = \frac{103.5}{108.4} \times 100$$

$$= 95.47\%$$

- பண்ட வர்த்தகமாற்று விகித மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகளைக் கீழ்த் தரப்படும் வகையில் வேறுபடுத்திக் காட்டலாம்.

| பண்ட வர்த்தகமாற்று விகிதம் குறைவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் | பண்ட வர்த்தகமாற்று விகிதம் அதிகரிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் |
|---|---|
| • ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சி யடைந்து இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரித்தல். | • ஏற்றுமதி விலைச் சுட்டெண் அதிகரித்தலும் இறக்குமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சி யடைதலும். |
| • இறக்குமதி விலைச் சுட்டெண்ணை விட வேகமாக ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைதல். | • ஏற்றுமதி விலைச் சுட்டெண்ணை விட வேகமாக இறக்குமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைதல். |
| • ஏற்றுமதி விலைச் சுட்டெண் நிலை யாக இருக்கும்போது இறக்குமதி விலைச் சுட்டெண் அதிகரித்தல். | • ஏற்றுமதி விலைச் சுட்டெண் நிலையாக இருக்கையில் இறக்குமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைதல். |
| • இறக்குமதி விலைச் சுட்டெண் நிலையாக இருக்கையில் ஏற்றுமதி விலைச் சுட்டெண் வீழ்ச்சியடைதல். | • இறக்குமதி விலைச் சுட்டெண் நிலையாக இருக்கையில் ஏற்றுமதி விலைச் சுட்டெண் அதிகரித்தல். |

- பண்ட வர்த்தக மாற்று விகித மாற்றங்களின் பொருளாதார விளைவுகளைக் கீழ்த் தரப்படும் வகையில் காட்டலாம்.
  - **பண்ட வர்த்தக மாற்று விகிதம் அதிகரிப்பதன் பொருளாதார விளைவுகள்:**
    - ஏற்றுமதிகளின் இறக்குமதிச் சக்தி அதிகரித்தல்.
    - வர்த்தக மீதி சாதகமாக அமைதல்.
    - சென்மதி நிலுவையின் முழு மொத்த மீதி சாதகமாக அமைதல்.
    - ஒதுக்குகளும் சொத்துக்களும் உயர்வடைதல்.
  - **பண்ட வர்த்தக மாற்று விகிதம் வீழ்ச்சியடைவதன் பொருளாதார விளைவுகள்:**
    - ஏற்றுமதிகளின் இறக்குமதிச் சக்தி குறைவடைதல்.
    - வர்த்தக மீதி பாதகமாக அமைதல்.
    - சென்மதி நிலுவையின் முழு மொத்தமான மீதி அதிகரித்தல்.
    - ஒதுக்குகளும் சொத்துக்களும் குறைவடைதல்.
  - வருமான வர்த்தக மாற்று விகிதம் என்பது ஏற்றுமதி வருமானத்தின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற ஒரு சுட்டெண் ஆகும்.
  - வருமான வர்த்தக மாற்று விகிதத்தை அளவிடுவதற்காகக் கீழே தரப்படும் சமன்பாடு பயன்படுத்தப்படுகிறது.

$$\text{வருமான வர்த்தக மாற்று விகிதம்} = \frac{\text{ஏற்றுமதி விலைச் சுட்டெண்} \times \text{ஏற்றுமதித் தொகைச் சுட்டெண்}}{\text{இறக்குமதி விலைச் சுட்டெண்}} \times 100$$

உ+ம்:- (2)

2013 ஆம் ஆண்டின் ஏற்றுமதி விலைச் சுட்டெண் = 103.5

2013 ஆம் ஆண்டின் இறக்குமதி விலைச் சுட்டெண் = 108.4

2013 ஆம் ஆண்டின் ஏற்றுமதி தொகைச் சுட்டெண் = 116.4

2013 ஆம் ஆண்டின் வருமான வர்த்தக மாற்று விகிதம் $= \frac{103.5 \times 116.4}{108.4} \times 100$

$= 11,113.8$

- பண்ட வர்த்தக மாற்று விகிதத்தை ஏற்றுமதித் தொகைச் சுட்டெண்ணால் பெருக்கியும் வருமான வர்த்தக மாற்று விகிதத்தைப் பெறலாம்.
- வருமான வர்த்தக மாற்று விகிதத்தின் பொருளாதார விளைவுகளைப் பின்வருமாறு காட்டலாம்.

| **வருமான வர்த்தக மாற்று விகிதம் உயர்வடைவதன் பொருளாதார விளைவுகள்** | **வருமான வர்த்தக மாற்று விகிதம் வீழ்ச்சியடைவதன் பொருளாதார விளைவுகள்** |
|---|---|
| • ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்.<br>• இறக்குமதிச் சக்தி அதிகரிக்கும்.<br>• வர்த்தக மீதி அதிகரிக்கும்.<br>• சென்மதி நிலுவையின் மொத்த மீதி சாதக நிலையை அடையும்.<br>• பணவீக்க தாக்கம் ஏற்படும். | • இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.<br>• இறக்குமதிச் சக்தி குறைவடையும்.<br>• வர்த்தக மீதி வீழ்ச்சியடையும்.<br>• சென்மதி நிலுவையின் மொத்த மீதி பாதகமான நிலையை அடைதல். |

**தேர்ச்சி 9.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.4:** **உலக மயமாதல், பிராந்திய மயமாதல் மற்றும் இரு பக்க வர்த்தக ஒப்பந்தம் பற்றி விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- உலக வர்த்தக அமையத்தின் நோக்கங்களை விளக்குவார்.
- உலக வர்த்தக அமையத்தின் தொழிற்பாடுகளை விபரிப்பார்.
- உலக மயமாதலை வரைவிலக்கணப்படுத்துவார்.
- உலக மயமாதலுக்குச் சார்பாகவும் எதிராகவும் முன்வைக்கப்பட்டுள்ள வாதங்களை முன்வைப்பார்.
- பொருளாதார ஒருங்கிணைப்பை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையின் அண்மைக்கால வர்த்தக ஒப்பந்தங்களை விளக்குவார்.
- வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தங்களின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- இருபக்க வர்த்தக ஒப்பந்தங்களுக்கு உதாரணங்களைக் காட்டுவார்.
- பல்பக்க வர்த்தக ஒப்பந்தங்களுக்கு உதாரணங்களை முன்வைப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- உலக வர்த்தக அமையம் (WTO) என்பது பல்பக்க வர்த்தகத்தின் வளர்ச்சிக்கும் வர்த்தகத்தைத் தடையின்றியும் முறையாகவும் செய்வதற்கு வர்த்தகம் மற்றும் தீர்வை வரிகள் தொடர்பாக ஒப்பந்தமொன்றை மிகவும் வலுவுள்ளதாக்கி 1995 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட சர்வதேச அமைப்பொன்றாகும்.
- உலக வர்த்தக அமையத்தின் பிரதான நோக்கங்கள் சில பின்வருமாறு:
  - பல்பக்க வர்த்தகத்தை ஊக்குவித்தல்.
  - வர்த்தகத்தை முறையாகச் செயற்படுத்தல்.
  - வர்த்தகத் தடைகளை இழிவு மட்டத்துக்குக் கொண்டு வருதலும் வர்த்தக மட்டங்களை திருத்தியமைப்பதன் மூலம் சர்வதேச வர்த்தக முறைமைக்குள் மறுசீரமைப்பை ஏற்படுத்தல்.
- உலக வர்த்தக அமையத்தின் பிரதான தொழிற்பாடுகள் 6 ஆகும்.
  (1) உலக வர்த்தக அமையத்தின் கீழ் அங்கத்துவ நாடுகளினால் கைச்சாத்திடப் பட்டுள்ள சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள் சரியான முறையில் செயற்படுத்தப் படுகின்றதா என்பதனை மேற்பார்வை செய்தல்.
  (2) சுதந்திரமான வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கு அவசியமான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கான தளங்களை வழங்குதல்.

(3) சந்தை தொடர்பான பிணக்குகளைத் தீர்த்தல்.

(4) அங்கத்துவ நாடுகளின் தேசியக் கொள்கைகளை மீளாய்வு செய்தல்.

(5) தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்சி வேலைத் திட்டங்கள் என்பவற்றைச் செயற் படுத்துவதன் மூலமாக அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வர்த்தகக் கொள்கைகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவி செய்தல்.

(6) ஏனைய சர்வதேச பொருளாதார அமைப்புக்களுடன் ஒத்துழைப்புடன் நடந்து கொள்ளல்.

- உலக மயமாதல் என்பது உலகிலுள்ள நாடுகள் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் ரீதியாக பல்வேறு அளவுகளின் அடிப்படையில் ஒன்றுக்கொன்று ஒன்றிணைந்து செல்கின்ற ஒரு போக்காகும்.
- பொருளியலில் கவனத்திற் கொள்ளப்படுவது பொருளியல் ரீதியான உலக மயமாக்கல் பற்றியேயாகும்.
- பொருளியல் ரீதியான உலகமயமாக்கல் என்பது உலக நாடுகள் வர்த்தகம், மூலதனம், தொழில்நுட்பம், கொள்கைகள் போன்ற பல்வேறு அணுகுமுறைகளின் மூலமாக ஒன்றுடன் ஒன்று ஒருங்கிணையும் செயற்பாடாகும்.
- தற்காலத்தில் பொருளியல் ரீதியான உலக மயமாதலானது தொழில்நுட்பம் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் செயற்படுத்தப்படுகிறது.
- உலக மயமாதல் காரணமாக உலக பொருளாதாரத்தில் அன்னியோன்னியமாகத் தங்கியிருத்தல், நிதிப் பாய்ச்சல்களின் விருத்தி, உற்பத்திச் செயற்பாட்டைச் சர்வதேசமய மற்றும் சர்வதேச உழைப்புப் பெயர்வு என்பன வேகப்படுத்தப்படும்.
- உலக மயமாதலுக்குச் சார்பாகப் பின்வரும் வாதங்களை முன்வைக்கலாம்.
    - உற்பத்திச் செயற்பாடு பரவலாக்கப்படுவதனால் உற்பத்தி மற்றும் நுகர்வுச் செயற்பாடுகள் வெளிநோக்கி நகர்தல்.
    - புதிய கருத்துக்களும் அனுபவங்களும் கிட்டுதல்.
    - உலக உற்பத்தியளவு அதிகரித்தல்.
    - பொருளாதார வளர்ச்சியின் உபாயமாகக் கையாளக்கூடியதாக இருத்தல்.
    - வெளிநாட்டு முதலீடுகள் அதிகரித்தல்.
    - மூலப்பொருட்களைக் குறைந்த விலையில் இறக்குமதி செய்ய முடியுமாதல்.
    - வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் அதிகரித்தல்.
    - கல்வியும் அறிவும் வளர்ச்சி அடைதல்.
    - புதிய வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் ஏற்படல்.
    - வெளிநாட்டுப் பண அனுப்புதல்கள் சில நாடுகளின் பிரதான வருமான மூலமாக அமைதல்.
    - உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நாடுகள் அத்தன்மையிலிருந்து விடுபட்டுச் சர்வதேச பொருளாதார முறைமைகளுடன் இணைதல்.
    - புதிய தொழில்நுட்ப விரிவாக்கம் ஏற்படல்.
    - போட்டித்தன்மை காரணமாக தரம்வாய்ந்த உற்பத்திகள் கிடைத்தல்.
    - இணையம் மூலமாகத் தகவல்களைப் பெறக்கூடியதாக இருத்தல்.

- உலக மயமாதலுக்குப் பாதகமாகப் பின்வரும் வாதங்களை முன்வைக்கலாம்.
  - உலக மயமாதலின் நன்மைகள் உலக மக்கள் அனைவருக்கும் நியாயமாகப் பங்கீடு செய்யப்படாமை.
  - அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்குக் கூடுதலான நலன்கள் கிட்டுதல்.
  - சர்வதேச ரீதியில் வருமான ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தல்.
  - சர்வதேச பொருளாதார நெருக்கடிகள் ஏனைய நாடுகளுக்கு இலகுவாகப் பரவுதல்.
  - சமூகப் பிரச்சினைகள் விருத்தியடைதல்.
  - மனித வாழ்க்கை பற்றிய பாதுகாப்பற்ற தன்மையொன்று ஏற்படல்.
  - சூழற் பிரச்சினைகள் ஏற்படல்.
  - கலாசாரச் சீரழிவுகள் ஏற்படல்.
  - நிதிச் சந்தையில் நிலையற்ற தன்மைகள் ஏற்படுவதனால் பொருளாதாரப் பிரச்சினைகள் தோன்றுதல்.
  - உள்நாட்டுக் கைத்தொழில் வீழ்ச்சி அடைதலும் வேலையின்மை ஏற்படலும்.
  - பயங்கரவாதம் பரவுதல்.
  - சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படல்.
- ஒரே நாட்டைச் சேர்ந்த குழுக்களுக்கிடையே அல்லது பல்வேறு நாடுகளின் குழுக்களுக் கிடையே தீர்வை வரிகள் மற்றும் தீர்வையல்லாத வேறு காரணிகள் இன்றி பொருட்கள், சேவைகள், உற்பத்திக் காரணி பரிமாற்றங்கள் என்பவற்றைச் செய்கின்ற செயற்பாடு பொருளாதார ஒருங்கிணைப்பு எனக் கூறப்படுகிறது.
- பொருளாதார ஒருங்கிணைப்புக்களின் பல்வேறு வடிவங்கள் கீழே காட்டப்படுகின்றன.
  (1) முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தம் (Preferential Trade Agreement - PTA)
  (2) சுதந்திர வர்த்தக வலயம் (Free Trade Area - FTA)
  (3) தீர்வை வரிச் சங்கம் (Custom Union - CU)
  (4) பொதுச் சந்தை (Common Market - CM)
  (5) பொருளாதார மற்றும் நிதிச் சங்கம் (Economic & Monitory Union - EU)
  (6) பூரண பொருளாதார ஒருங்கிணைப்பு (Fully economic Intergration - FEI)
- அங்கத்துவ நாடுகள் அங்கத்துவம் பெறாத நாடுகளுடன் வியாபாரத்தில் ஈடுபடும்போது அந்நாடுகளது விருப்பின்படி வியாபாரத் தடைகளைக் கையாளுவதற்கு அங்கத்துவ நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் தடைகள் இன்றி நடைபெறுவதற்கும் நாடுகள் சில ஒன்றிணைந்து அமைத்துக் கொண்ட அமைப்பு சுதந்திர வர்த்தக வலயமாகும்.
- இங்கு ஒப்பந்தம் செய்து கொண்ட நாடுகளினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தீர்வை வரிக் கூட்டுக்களுக்குரிய தீர்வை வரிகள் முழுமையாக நீக்கப்படும்.
- சுதந்திர வர்த்தக வலயங்களுக்குக் கீழே தரப்படுவன உதாரணங்களாகும்.
  - ஆபிரிக்க சுதந்திர வர்த்தக வலயம்
    (African Free Trade Zone - AFTZ)
  - ஆசிய பசுபிக் சுதந்திர வர்த்தக வலயம்
    (Asian Free Trade Area - AFTA)

- மத்திய ஐரோப்பிய சுதந்திர வர்த்தக வலயம்
  (Central European Free Trade Agreement - EFTA)
- வட அமெரிக்க சுதந்திர வர்த்தக வலயம்
  (North American Free Trade Agreement - (NAFTA)

- அங்கத்துவ நாடுகளுக்கிடையே வர்த்தக தடைகளின்றித் தொடர்ந்து வர்த்தகத்தை மேற்கொள்வதற்கும், அங்கத்துவ நாடுகள், அங்கத்துவமல்லா நாடுகளிடையே ஒரே சமனான வர்த்தகக் கொள்கைகளைப் பின்பற்றுவதற்கும் பல நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கும் அமைப்புத் தீர்வை வரிச் சங்கம் என அழைக்கப்படும்.
- இங்கு ஒப்பந்தம் செய்யப்பட்ட பொருட் சேர்க்கையுடன் தொடர்புடைய ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்குச் சமனான தீர்வை வரியமைப்புச் செயற்படுவதுடன், ஒப்பந்தம் செய்யப்பட்ட பொருட் சேர்க்கைக்குச் சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளுக்கு தீர்வை வரிவிலக்கு முற்றாக வழங்கப்படும்.
- தீர்வை வரிச் சங்கத்திற்கு உதாரணங்கள் சில கீழ்வருமாறு:
  - மத்திய அமெரிக்க பொது வர்த்தக சந்தை
    (Central American Common Market - ACM)
  - கரீபியன் சமூகம் (Carribean Community - CARI Com)
  - வட அமெரிக்க சமூகம் (North American Community - NAC)
  - தென் ஆபிரிக்க தீர்வை வரிச் சங்கம் (South African Customs Union - SACU)
- அங்கத்துவ நாடுகளுக்கிடையே பொருள், சேவை வர்த்தகங்கள் தடையின்றிச் செயற் படுத்துவதற்கும், அங்கத்துவ நாடுகள், அங்கத்துவமல்லா நாடுகளுடன் வர்த்தகத்தை மேற்கொள்கையில் பொதுவான கொள்கையொன்றைப் பின்பற்றுவதற்கும், அங்கத்துவ நாடுகளுக்கிடையே உற்பத்திக் காரணிகள் சுதந்திரமாக அசைவதற்கும் நாடுகள் ஒன்றிணைவதானது பொதுச் சந்தை என அழைக்கப்படும்.
- இதன் கீழ், உழைப்பு, மூலதனம் போன்ற உற்பத்திக் காரணிகளும் பொருட்களும் சேவைகளும் ஒப்பந்தம் செய்யப்பட்ட நாடுகளுக்கிடையில் தடையின்றி அசையச் செய்வதற்கு வாய்ப்பு ஏற்படும்.
- பொது வர்த்தக பங்குடைமைக்கு உதாரணங்கள் சில கீழ்வருமாறு:
  - கரீபியன் சமூக பொதுச் சந்தை (CARI Com)
    (The Caribbean Community Common Market)
  - மத்திய அமெரிக்க பொதுச் சந்தை (CACM)
    (Central American Common Market)
  - மத்திய ஆபிரிக்க பொருளாதார நிதிச் சமூகம் (CEMAC)
    (Central African Economic & Monetory Community)

- அங்கத்துவ நாடுகளுக்கிடையே தடைகளின்றி வர்த்தகத்தை மேற்கொள்ளவும், அங்கத்துவ, அங்கத்துவமல்லா நாடுகளுக்கிடையே பொருள், சேவை வியாபாரமானது பொதுக் கொள்கையின் கீழ் செயற்படுத்துவதற்கும் அங்கத்துவ நாடுகளுக்கிடையே உழைப்பு, மூலதனம் என்பவற்றைச் சுதந்திரமாக அசையச் செய்வதற்கும், அங்கத்துவ நாடுகளுக்கிடையே ஒன்றுடன் ஒன்று சமனான நாணயக் கொள்கையையும் அரச நாணயக் கொள்கையையும் செயற்படுத்துவதற்குப் பல நாடுகள் ஒன்றிணைந்து உருவாக்கிய அமைப்பு, பொருளாதார நிதிச் சங்கம் என்றழைக்கப்படும்.

- பொருளாதார நிதிச் சங்கங்களுக்கு உதாரணங்கள் சில வருமாறு:

    - மத்திய ஆபிரிக்க பொருளாதார நிதிச் சங்கம் (CEMAC) (Central African Economic & Monetary Communtity)

    - மேல் ஆபிரிக்க பொருளாதார நிதிச் சங்கம் (ECOWAS) (Economic Community West African States)

    - ஐரோப்பிய நிதி, பொருளாதாரச் சங்கம் (EMU) (European Econonmic & Monetary Union)

- அங்கத்துவ, அங்கத்துவமல்லா நாடுகளுக்கிடையில் பொருட்கள் சேவைகளும் உற்பத்திக் காரணிகளும் பரிமாற்றம் செய்யும்போது தடைகளின்றிச் செயற்படுத்துவதற்காகவும், அங்கத்துவ நாடுகளுக்கிடையில் ஒருமித்த நாணயக் கொள்கை, அரச நாணயக் கொள்கை, சட்டவாக்க அதிகாரம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறையும் அரசியல் கொள்கைகளையும் செயல்படுத்துவதற்காகவும் உலகில் நாடுகள் ஒன்றிணைவதானது முழுமையான ஒன்றிணைவு என அழைக்கப்படும்.

- பொருளாதார ஒன்றிணைப்பிற்காக கைச்சாத்திடும் ஒப்பந்தமானது பின்வருமாறு இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

    (1) இருபக்க வர்த்தக உடன்படிக்கை

    (2) பல்பக்க வர்த்தக உடன்படிக்கை

- வர்த்தகம் மற்றும் நாணய நடவடிக்கைகள் தொடர்பாக இரண்டு நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்படும் வர்த்தக உடன்படிக்கையானது இரு தரப்பு வர்த்தக உடன்படிக்கை எனப்படும்.

- நடைமுறையில் இலங்கை மேற்கொண்டுள்ள வர்த்தக உடன்படிக்கை பின்வருமாறு:

    - இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISFTA)

    - பாகிஸ்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PSFTA)

- வர்த்தக நிதி நடவடிக்கைகள் தொடர்பாக நாடுகள் பலவற்றுடன் மேற்கொள்ளப்படும் வர்த்தக ஒப்பந்தம் பல்பக்க வர்த்தக ஒப்பந்தமாகும்.

- இலங்கை மேற்கொண்டுள்ள பல்பக்க ஒப்பந்தங்கள் சில வருமாறு:
    - தென் ஆசிய சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (SAFTA)

    (வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு முன்வைக்குக.)

- வெளிநாட்டு வர்த்தக ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் பின்வருமாறு:
    - நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு வலுவடைதல்.
    - சந்தை விரிவாக்கமடைதல்.
    - போக்குவரத்துச் செலவு குறைதல்.
    - உள்நாட்டுச் சந்தையில் பொருட்களின் விலை குறைவடைதல்.
    - வெளிநாட்டு முதலீடு வளர்ச்சியடைதல்.
    - புதிய கைத்தொழில் பொருட்களைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடிதல்.
    - தொழில்வாய்ப்பு உயர்வடைதல்.
    - மூலப்பொருட்களின் விலை குறைதல்.
    - ஏற்றுமதியைப் பன்முகப்படுத்துவதற்கான சந்தர்ப்பத்தை விரிவாக்குதல்.

**தேர்ச்சி 9.0:** **பேரினப் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக அரசாங்கம் தலையிடும் முறையை விமர்சனம் செய்வார்.**

**தேர்ச்சி மட்டம் 9.5:** **இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகத்தின் தன்மையையும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையையும் விமர்சனம் செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- இலங்கையின் ஏற்றுமதி வியாபாரத்தை விளக்குவார்.
- இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பை விளக்குவார்.
- இலங்கையின் இறக்குமதி வியாபாரத்தை விளக்குவார்.
- இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பை விளக்குவார்.
- இலங்கையின் மத்திய வங்கி ஆண்டறிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுமதிக் கட்டமைப்பை விளக்குவார்.
- இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கையை அடிப்படையாகக் கொண்டு இறக்குமதிக் கட்டமைப்பை விளக்குவார்.
- இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை (அண்மைக்காலத் தரவு) அடிப்படையில் விளக்குவார்.
- ஏற்றுமதி வர்த்தகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை விளக்குவார்.
- ஏற்றுமதி வர்த்தகத்தில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை முன்வைப்பார்.

**பாடத்தை திட்டமிடுவதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையில் அதிகளவில் வெளிநாட்டுச் செலாவணியை உழைத்துத் தரும் பண்டம் அதிகளவில் வெளிநாட்டு செலாவணிக்குச் செலவை ஏற்படுத்தும் பண்டம் எது என மாணவர்களிடம் விசாரணை செய்தல்.
- அவ்வாண்டுடன் தொடர்பாக மத்திய வங்கி ஆண்டறிக்கையின் துணையுடன் பொருட்களையும் சேவைகளையும் வெவ்வேறாகக் குறிப்பிடுதல்.
- இலங்கையிலிருந்து அதிகளவு பொருட்கள் சேவைகள் ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் இறக்குமதி செய்யப்படுவதாகவும் விளக்குதல்.
- மாணவர்களைப் பொருத்தமான முறையில் குழுக்களாகப் பிரித்து வழிகாட்டி, செயற்பாட்டில் ஈடுபடுத்துதல்.

**கற்பித்தலுக்கான வழிகாட்டல்கள்:**

- பின்வரும் தலைப்புகளில் உமது குழுவிற்கான தலைப்பைத் தெரிவு செய்க.
    - ஏற்றுமதி வியாபாரம்
    - இறக்குமதி வியாபாரம்
- உமது குழுவிற்குக் கிடைத்த தலைப்பை இனம் காண்பதற்குக் குழுக்களைக் கலந்துரை யாடலில் ஈடுபடுத்துக.

- தலைப்பிற்குப் பொருத்தமான உள்ளடக்கங்களை வரிசைப்படுத்துக.
- அந்த உள்ளடக்கத்திற்குப் பொருத்தமான ஒப்பீட்டு ரீதியான பங்களிப்பைச் சதவீதமாகக் குறிப்பிடுக.
- குறிப்பிட்ட காலப்பகுதியில் உள்ளடக்கத்தின் கட்டமைப்பிலும் பங்களிப்பிலும் தோன்றிய மாற்றத்தை அட்டவணைப்படுத்துக.
- இம்மாற்றங்களுக்குச் செல்வாக்குச் செலுத்திய காரணங்களை முன்வைப்பார்.
- உமது குழுவின் வெளிப்பாட்டை ஆக்கபூர்வமாக அட்டவணைகள், வரைபடங்கள், சதவீதங்கள் என்பவற்றை உதவியாகக் கொண்டு முன்வைப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- குறித்தவொரு நாடு உலகின் ஏனைய நாடுகளுக்குப் பொருட்களையும் சேவைகளையும் விநியோகித்தல் ஏற்றுமதி வியாபாரமாகும்.

  உ+ம்:- இலங்கையானது அமெரிக்காவிற்குப் பண்டங்களை விநியோகித்தல்.
- இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பு:
  - விவசாய ஏற்றுமதி
  - கைத்தொழில் ஏற்றுமதி
  - கனிப்பொருள் ஏற்றுமதி

  (2015 மத்திய வங்கி ஆண்டறிக்கைப்படி)
- இலங்கையின் ஏற்றுமதிக் கட்டமைப்பின் போக்கினைப் பின்வருமாறு சதவீதமாகக் காட்டலாம்.

| | **2015** | **2016** |
|---|---|---|
| விவசாய ஏற்றுமதி | 23.5% | 22.6% |
| கைத்தொழில் ஏற்றுமதி | 76% | 77% |
| கனிப்பொருள் ஏற்றுமதி | 0.3% | 0.3% |
| வகைப்படுத்தப்படாத ஏற்றுமதி | 0.2% | 0.1% |

(மத்திய வங்கி அறிக்கையின் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)

- ஏற்றுமதி செய்யப்படும் விவசாயப் பொருட்களுக்கு உதாரணமாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

  தேயிலை, இறப்பர், தெங்கு, ஏனைய விவசாய ஏற்றுமதிகள்
- ஏற்றுமதி செய்யப்படும் கைத்தொழில் பொருட்களுக்கு உதாரணங்களாக:
  - உணவு, குடிபானம் மற்றும் புகையிலை
  - துணியும் ஆடையும்
  - கனிப்பொருள் உற்பத்தி
  - இறப்பர் உற்பத்தி
  - பீங்கான் உற்பத்தி
  - தோல், பயணப்பொதி, காலணி
  - இயந்திரமும் உபகரணமும்
  - நீலமாணிக்கமும் (டயமன்) தங்க ஆபரணங்களும்
  - ஏனைய கைத்தொழில் ஏற்றுமதி

- ஏற்றுமதி செய்யப்படும் கனிப்பொருட்களுக்கு உதாரணங்கள்:
  - மாணிக்கம்
  - ஏனைய முதலீட்டுப் பண்ட ஏற்றுமதி
- 1977 இன் பின்னர் ஏற்றுமதிக் கட்டமைப்பில் தோன்றிய வித்தியாசமான போக்கினைப் பின்வருமாறு அட்டவணை மூலம் காட்டலாம்.

| **ஏற்றுமதிக் கட்டமைப்பு** | **1997** | **2016** |
|---|---|---|
| விவசாயப் பண்டம் | 79% | 22% |
| கைத்தொழில் பண்டம் | 14% | 77% |
| ஏனைய பண்டம் | 07% | 01% |

(மத்திய வங்கி அறிக்கையின் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)

- 1977 இலிருந்து 2016 வரை கைத்தொழில் பண்ட ஏற்றுமதியின் உள்ளடக்கத்தை விரிவாக நோக்கினால்,

| **கைத்தொழில் பண்டம்** | **1977** | **2015** | **2016** |
|---|---|---|---|
| துணியும் ஆடையும் | 02% | 46% | 47% |
| கனிப்பொருள் உற்பத்தி | 09% | 04% | 03% |
| ஏனைய கைத்தொழில் பொருள் | 03% | 06% | 08% |
| உணவும் புகையிலையும் | - | 03% | 03% |
| நீலமாணிக்கமும் தங்கநகைகளும் | - | 03% | 03% |
| இறப்பர் உற்பத்தி | - | 07% | 07% |

- குறித்தவொரு நாடு உலகில் ஏனைய நாடுகளிலிருந்து பொருட்களையும் சேவைகளையும் கொள்வனவு செய்தல் என்பது இறக்குமதி வியாபாரமாகும்.

  உ+ம்:-
  - இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பு பின்வருமாறு:
    - நுகர்வுப் பண்டம்
    - இடைநிலைப் பண்டம்
    - முதலீட்டுப் பண்டம்
    - வகைப்படுத்தப்படாத பொருட்கள்

    (2015 மத்திய வங்கி ஆண்டறிக்கையின்படி)

  - இறக்குமதி செய்யப்படும் நுகர்வுப் பொருட்களுக்கு உதாரணங்களாக;
    - அரிசி, சீனி, கோதுமை, பால்மா
    - தனியார் மோட்டார் வாகனம்
    - மின் உபகரணங்கள்

- இறக்குமதி செய்யப்படும் இடைநிலைப் பொருட்கள்:
  - கனிய எண்ணெய்
  - பசளை
  - இரசாயனப் பொருட்கள்
  - துணி
- இறக்குமதி செய்யப்படும் முதலீட்டுப் பொருட்களுக்கு

  உ+ம்:-
  - இயந்திர உபகரணங்கள்
  - போக்குவரத்துச் சாதனங்கள்
  - கட்டடப் பொருட்கள்

- இலங்கையின் இறக்குமதிக் கட்டமைப்பானது 1977 - 2016 வரை மாற்றமடைந்துள்ளதைப் பின்வருமாறு காட்டலாம்.

| **இறக்குமதி கட்டமைப்பு** | **1977** | **2015** | **2016** |
|---|---|---|---|
| நுகர்வுப்பொருள் | 42% | 25% | 22% |
| இடைநிலைப்பொருள் | 45% | 51% | 51% |
| முதலீட்டுப் பொருள் | 12% | 24% | 27% |
| ஏனைய | 01% | - | - |

| **இடைநிலைப் பொருள்** | **1977** | **2015** | **2016** |
|---|---|---|---|
| மசகு எண்ணெய் | 23% | 14.3% | 12.8% |
| துணி | 03% | 12.0% | 14.0% |
| பசளை | - | 0.9% | 03% |
| கடதாசி | 01% | 4.6% | 4.4% |
| இரசாயன உற்பத்தி | 01% | 1.9% | 1.3% |
| கோதுமை, சோளம் | - | 1.5% | 0.7% |
| ஏனைய இடைநிலைப் பொருள்கள் | - | 15.7% | 15.1% |

(மேலுள்ள தகவல்கள் 2015 மத்திய வங்கி ஆண்டறிக்கையின்படி முன்வைக்கப்பட்டதுடன் அண்மைய வருடங்களில் மத்திய வங்கி ஆண்டறிக்கையைப் பரிசீலனை செய்து மேலுள்ள வகையில் தேவையான தகவல்களை மாணவர்களுக்கு வழங்குக.)

- இலங்கையின் வர்த்தகக் கொள்கையை நோக்கும்போது பின்வரும் விடயங்களை 2015 மத்திய வங்கி ஆண்டறிக்கையின்படி குறிப்பிடலாம்.
    - உலகப் பொருளாதாரத்திற்கும் இலங்கைப் பொருளாதாரத்திற்குமிடையிலான தொடர்பை அதிகரிப்பதற்காக வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது 2015, 2016 ஆண்டுகளில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.
    - வெளிநாட்டு வர்த்தகக் கொள்கைச் சட்டகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக அரசாங்க மானது விரிவான அடிப்படையில் அதிகளவான மாற்றங்களை முன்வைத்துள்ளது.
        - வர்த்தகத்தைத் தீர்மானிக்கின்ற சட்டப் பிரமாணங்களில் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சித்தல்.
        - சந்தை ஒப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலமாக வெளிநாட்டுச் சந்தை மீது வலுவான பிரவேசத்தை ஏற்படுத்துதல்.
        - தந்திரோபாய முறையில் வர்த்தக ஊக்குவிப்புகள் (உபாய ரீதியான)
        - வர்த்தகத் தீர்வை வரிக் கொள்கையை மேலும் வினைத்திறனுடையதாக்குதல்.
        - அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையைச் செயற்படுத்தும்போது ஏற்றுமதி ஊக்கு விப்பதற்கு முக்கியத்துவம் வழங்குதல்.
        - இறக்குமதிகளை வினைத்திறனுடையதாக மாற்றுவதற்குக் கொள்கை ரீதியான செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
        - முதலீட்டை ஊக்குவிப்பதற்கு இருதரப்பு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல்.
        - உலக வர்த்தக சங்கத்தினால் செயற்படுத்தப்படுகின்ற பல்பக்கச் செயற்பாடுகளில் இலங்கையானது இடைவிடாது பங்குகொள்ளல்.

- ஏற்றுமதி வியாபாரம் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:
    - ஏற்றுமதிப் பயிர்களின் விலைகள் தொடர்ந்து தளம்பல் அடைதல்.
    - ஏற்றுமதி அளவுகள் குறைவாக இருத்தல்.
    - உலக சந்தையில் காணப்படும் நிச்சயமற்ற தன்மை
    - உலக பொருளாதார மந்தம்
    - இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சந்தைகளின் வளர்ச்சி மந்தமாக இருத்தல்.

- மேலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாகப் பின்வரும் காரணங்களை முன்வைக்கலாம்.
    - உலகப் பொருளாதாரத்திற்கும் இலங்கைப் பொருளாதாரத்திற்குமிடையிலான தொடர்பை வலுப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
    - வெளிநாட்டுச் சந்தைகளில் மேற்கொள்ளப்படும் விநியோக ஊக்குவிப்பு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னேற்றுதல்.
    - வர்த்தக உடன்படிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்ள வலுப்படுத்துதல்.
    - நவீன ஏற்றுமதி சந்தைகளைப் பாதுகாப்பதற்குத் தற்போதுள்ள சந்தைகளை விஸ்தரிக்கப்படுதலும் பல்லினத்தன்மை கொண்ட பொருட்களை அறிமுகப்படுத்தலும்.
    - ஏற்றுமதிக்காக உருவாக்கும் தொழிற்சாலைகளை ஊக்குவிப்பதற்கு அவசியமான நிறுவனங்களைத் தோற்றுவித்தல்.
    - ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு ஆலோசனை சபைகளை உருவாக்குதல்.

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.1:** **சென்மதி நிலுவை அட்டவணையின் உள்ளடக்கத்தை ஆய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 06

**கற்றற் பேறுகள்:**

- சென்மதி நிலுவை அட்டவணையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- சென்மதி நிலுவை அட்டவணையின் உள்ளடக்கத்தை உதாரணம் மூலம் விளக்குவார்.
- கற்பித்த தரவுகளின் அடிப்படையில் சென்மதி நிலுவை அட்டவணையைத் தயாரிப்பார்.
- மத்திய வங்கி ஆண்டறிக்கையின் அடிப்படையில் சென்மதி நிலுவை அட்டவணையின் மாதிரிப் படிவத்தை முன்வைப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கை அரசாங்கமானது 2013 இலிருந்து சென்மதி நிலுவை அட்டவணையை புதிய முறையின் கீழ் தயாரிக்கின்றது.
- வருடமொன்றில் குறித்தவொரு நாடு உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் மேற் கொள்ளும் பொருளாதார கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏனைய நாடுகளிடமிருந்து கிடைக்கும் வெளிநாட்டுப் பணமும், வெளிநாடுகளுக்குச் செலுத்தும் வெளிநாட்டுப் பணமும், அவற்றிடையே வேறுபாடுகளை ஆய்வு செய்யும் முறையைக் காட்டும் அட்டவணையாகும்.
- இதன் மூலம் குறித்த நாட்டின் வதிவுள்ளோர், வசதியற்றோர் இடையே இடம்பெறும் எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் முறையாக இரட்டை பதிவுக் கணக்கீடு எண்ணக்கரு வின் அடிப்படையில் பதிவு செய்யப்படும்.
- சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ளடக்கப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும்போது பின்பற்றப்படும் அடிப்படை நியமமாக எல்லாக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஒரே சமமான பெறுமதியில் இரு இடங்களில் பதிவு செய்யப்படும் என்பதாகும்.
- இந்தக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும்போது வரவுப் பதிவு, செலவுப் பதிவு என்ற இரண்டு நிரல்கள் காணப்பட, செலவுப் பெறுமதியானது (+) இனாலும் வரவுப் பதிவானது (-) இனாலும் பதியப்படும்.
- இவ்வாறு சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ளடங்கும் கொடுக்கல் வாங்கல்களை வரவு நிரல், செலவு நிரல் என்பவற்றில் பதிவு செய்ததன் பின்னர் இறுதி மீதி பூச்சியப் பெறுமதியைக் கொண்டிருக்கும். ''சென்மதி நிலுவை அட்டவணை எப்போதும் சமப்படும்'' என்பதன் கருத்து இதுவாகும்.
- சென்மதி நிலுவை அட்டவணையில் வரவு, செலவு என்ற பெறுமதிகளை வெவ்வேறாகப் பதியும்போது இரண்டு எண்ணக்கருக்களைப் பின்பற்ற வேண்டியிருக்கும்.

- பொருள் / சேவை / சொத்து என்பன குறித்த நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்குச் செல்லும் போது அக்கொடுக்கல் வாங்கலின் பெறுமதியானது செலவாக (+) பதியப்படும்.

  உதாரணம்:- இலங்கையிலிருந்து ஆடை ஏற்றுமதி செய்தால் அதன் பெறுமதி நடைமுறைக்கணக்கில் செலவாகப் பதியப்படும்.

- பொருள் / சேவை / சொத்து என்பன குறித்த நாட்டிற்கு வேறு நாடுகளிலிருந்து பெறப்படுமாயின் அதன் பெறுமதியானது நடைமுறைக் கணக்கில் வரவாகப் பதியப்படும்.
- புதிய முறையின் கீழ் சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ளடக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் 5 வகைகளாகும்.
  - பொருட்களையும் சேவைகளையும் ஏற்றுமதி, இறக்குமதி செய்வதுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.
  - வருமானப் பெறுவனவு கொடுப்பனவுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.
  - சொத்து, செல்வம், நன்கொடை என்பவற்றுடன் தொடர்புடைய ஒரு பக்கக் கொடுக்கல் வாங்கல்கள்.
  - உற்பத்தி செய்யப்படாத நிதியல்லாத சொத்துக்களின் உடைமையாக்கல், விற்பனை செய்வதுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.
  - நிதிச் சொத்துக்களை உடைமையாக்கவ், விற்பனை செய்தல் என்பவற்றுடன் தொடர் புடைய கொடுக்கல் வாங்கல்கள்.
- இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் தன்மைக்கு ஏற்ப சென்மதி நிலுவை அட்டவணைக்கு ஏற்ப பிரதான கொடுக்கல் வாங்கல்கள் 3 ஆகும்.
  - நடைமுறைக்கணக்கு
  - மூலதனக்கணக்கு
  - நிதிக்கணக்கு
- நடைமுறைக் கணக்கு மீண்டும் 3 வகைப்படும்.

  (1) பொருள் சேவைக் கணக்கு
  - பொருள் கணக்கு
  - சேவைக் கணக்கு

  (2) முதன்மை வருமானக் கணக்கு

  (3) இரண்டாம் நிலை வருமானக் கணக்கு

- இலங்கையின் சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்களுக்கு உதாரணங்கள் வருமாறு:

  (1) இலங்கையில் உள்ள ஆடைத் தொழிற்சாலையொன்று 500 மில்லியன் பெறுமதியான ஆடையை ஏற்றுமதி செய்தல்.

  (2) யப்பானில் உள்ள மோட்டார் வாகன உற்பத்தி நிறுவனமொன்று 1000 மில்லியன் பெறுமதியான மோட்டார் வாகனங்களை இலங்கைக்கு ஏற்றுமதி செய்தல்.

- இந்த உதாரணங்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் பண்டக் கணக்கில் உள்ளடக்கப்படும். ஒரு நாடு உலகில் உள்ள ஏனைய நாடுகளுடன் மேற்கொள்ளும் பொருள் ஏற்றுமதி, இறக்குமதியுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் பதியப் படுவது பண்டக் கணக்கு அல்லது வியாபாரக் கணக்கு எனப்படும்.
- இந்த வியாபாரக் கணக்கில் நாணயமல்லா தங்கமானது தனியார் துறையின் சேமிப்பாகப் பதியப்படும்.
- வியாபாரக் கணக்கின் மீதியானது கட்புலனாகும் பண்டக் கணக்கு மீதியென்றும் அழைக்கப் படும்.

  வியாபாரக் கணக்கு மீதி = பொருள் ஏற்றுமதி - பொருள் இறக்குமதி

  உதாரணம் (1):- -500 = ஆடை ஏற்றுமதி 500 - மோட்டார் இறக்குமதி 1 000
- வியாபாரக் கணக்கு மீதி மிகையாகவோ (+) குறையாகவோ (-) இருக்கலாம்.
- இந்த உதாரணத்தின்படி வியாபாரக் கணக்கு மீதி (-) ஆகும்.
- சர்வதேச வர்த்தகத்தின்போது ஒரு நாடு ஏனைய உலக நாடுகளுடன், காரணியல்லாத சேவைகளுக்கு மேற்கொள்ளப்படும் செலவும் பெறப்படும் வருமானமும் பதியப்படும் கணக்கு சேவைக் கணக்கு ஆகும்.
- சேவைக் கணக்கில் பின்வருபவை உள்ளடக்கப்படும்.
  - உல்லாசப் பயணம்
  - கடல் போக்குவரத்து
  - வான் போக்குவரத்து
  - நிதிச் சேவை
  - தொலைத்தொடர்பு சேவை
  - காப்புறுதி சேவை

| சேவைக்கணக்கின் மீதி = சேவை ஏற்றுமதி வருமானம் - சேவை இறக்குமதிச் செலவு |
|---|

- சேவைக் கணக்கில் சாதக (+) அல்லது பாதக (-) மீதி காணப்படலாம்.
- பொருள் கணக்கின் மீதி, சேவைக் கணக்கின் மீதியைச் சீராக்குவதன் மூலம் பொருள் சேவைக் கணக்கின் மீதி பெறப்படும்.

| பொருள் சேவை க/கின் மீதி = பொருள் சேவை க/கின் மீதி + சேவைக் க/கின் மீதி |
|---|

- இலங்கையின் வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய உதாரணங்கள் பின்வருமாறு:
  - இலங்கை வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொண்ட கடனிற்காக 500 மில்லியன் ரூபா வழங்குதல்.
  - இலங்கை நிறுவனமொன்று மாலைதீவில் ஆடைத் தொழிற்சாலையில் முதலீடு செய்வதன் மூலம் 300 மில்லியன் ரூபாவைப் பங்கிலாபமாகப் பெறுதல்.

- இந்த உதாரணத்துடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் முதன்மை வருமானக் கணக்கில் உள்ளடக்கப்படும்.

முதன்மை வருமானக் கணக்கு மீதி = வெளிநாட்டுக் காரணி வருமானப் பெறுவனவு - வெளிநாட்டுக் காரணி வருமானக் கொடுப்பனவு

உதாரணம் (2):- (-200) = வெளிநாட்டுக் காரணி வருமானப் பெறுவனவு 300 - வெளிநாட்டுக் காரணி வருமானக் கொடுப்பனவு 500

- முதன்மை வருமானக் கணக்கில் உள்ளடக்கப்படுவது உற்பத்தி செயற்பாட்டின் மூலம் தோன்றும் வட்டி, சம்பளம், நிதிச் சொத்துக்களை முதலீடு செய்வதனால் கிடைக்கும் பங்கிலாபம் போன்றவை ஆகும்.

- இலங்கையில் உள்ள வதிவுள்ளோருக்கும் வதிவற்றோருக்குமிடையில் இடம்பெறும் கொடுக்கல் வாங்கல்கள் சில வருமாறு:
    - மத்திய கிழக்கு நாடொன்றில் தொழில் புரியும் இலங்கையர் ஒருவர் தனது உறவினருக்கும் 1500 மில்லியன் ரூபாவை மாற்றல் என்ற வகையில் வணிக வங்கிக்கு அனுப்புதல்.
    - இலங்கையில் உள்ள சீன குடிமகன் தனது உறவினருக்கு 500 மில்லியன் ரூபாவை மாற்றல் என்ற வகையில் சீன வங்கிக்கு அனுப்புதல்.
    - இந்த வகையில் நாடொன்றில் வதிவுள்ளோர், வதிவற்றோர் இடையே இடம்பெறும் அரச, தனியார் நடைமுறை மாற்றல்கள் அனைத்தும் இரண்டாம் நிலை வருமானக் கணக்கில் உள்ளடக்கப்படும்.

உதாரணம் (3):- இரண்டாம் நிலை வருமானம்

கணக்கின் மீதி = வெளிநாட்டிலிருந்தான மாற்றல் பெறுவனவு - வெளிநாட்டிற்கு மாற்றல் கொடுப்பனவு

1000 = 1500 - 500

- இதற்கு மேலதிகமாக ஆயுள் காப்புறுதி தவிர்ந்த ஏனைய காப்புறுதி ஒப்பந்தங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற தவணைக் கொடுப்பனவுகளும், இத்தகைய ஒப்பந்தங்களுக்கு பெறப்படும் உரிமை பெறுவனவுகளும் மாற்றலாகக் கருதப்பட்டு, இரண்டாம் நிலை வருமானக் கணக்கில் பதியப்படும்.

- சென்மதி நிலுவை அட்டவணையில் நடைமுறைக் கணக்கில் உள்ளடக்கப்படும்,
    - பொருள் சேவைக் கணக்கு மீதி
    - முதன்மை வருமானக் கணக்கு மீதி
    - இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி

என்பவற்றைச் சீராக்கிய பின்னர் நடைமுறைக் கணக்கு மீதி வருமாறு:

| | செலவு | வரவு | மீதி |
|---|---|---|---|
| பொருள் சேவைக் கணக்கு | 500 | 1000 | -500 |
| முதன்மை வருமானக் கணக்கு மீதி | 300 | 500 | -200 |
| இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி | 1000 | 500 | 500 |
| நடைமுறைக் கணக்கு மீதி | | | -200 |

- சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ளடக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள் வடிவங்களின் அடிப்படையில் பின்வரும் ஐந்து வகைகள் ஆகும்.

    (1) பொருள், சேவை, ஏற்றுமதி, இறக்குமதியுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.

    (2) வருமான பெறுவனவு கொடுப்பனவுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.

    (3) சொத்துக்கள், செல்வம், நன்கொடை என்பவற்றுடன் தொடர்புடைய ஒருபக்க கொடுக்கல் வாங்கல்கள்.

    (4) உற்பத்தி செய்யப்படாத நிதிசாரா சொத்துக்களை உடைமையாக்குதல், விற்பனை செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.

    (5) நிதிச் சொத்துக்களை உடைமையாக்குதல், விற்பனை செய்தல் என்பவற்றுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள்.

- நிதிச் சொத்துக்கள் நிதிக் கணக்கில் உள்ளடக்கப்படுவதுடன், உற்பத்தி செய்யப்படாத நிதியல்லாத சொத்துக்கள் மூலதனக் கணக்கில் உள்ளடக்கப்படும்.
- உற்பத்தி செய்யப்படாத நிதியல்லாத சொத்துக்களானது வதிவுள்ளோர், வதிவற்றோர் இடையிலான கொடுக்கல் வாங்கல்களாகும். இவை மூலதனக் கணக்கில் வரவிலும் செலவிலும் பதியப்படும்.
- உற்பத்தி செய்யப்படாத நிதியல்லாச் சொத்துக்கள் சில வருமாறு:
- அனுமதிப்பத்திரம்
    - வரி உடன்படிக்கை
    - உற்பத்தியின் தரப்பெயர்
    - நன்மதிப்பை விற்பனை / கொள்வனவு செய்தல்
    - தூதுவராலயத்திற்கு காணி விற்பனை
    - சர்வதேச நிறுவனங்கள் / வெளிநாட்டு அரசாங்கம் வழங்கும் நன்கொடை
    - ஆக்கவுரிமை அனுமதிப்பத்திரம்
    - இறைகள்

- சென்மதி நிலுவை அட்டவணையில் இறுதியாக உள்ளடக்கப்படும் உப கணக்கு நிதிக் கணக்கு ஆகும்.

- வதிவுள்ளோர், வதிவற்றோர் இடையே நடைபெறும் நிதிச் சொத்துக்கள், பொறுப்புக்களுடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கணக்கில் பதியப்படும்.

- செயற்பாட்டு ரீதியான வடிவத்தின் அடிப்படையில் நிதிக் கணக்குடன் தொடர்புடைய கொடுக்கல் வாங்கல்கள் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்படும்.

  - நேர் முதலீடு
  - பட்டியலிட்ட முதலீடு
  - நிதியியல் பெறுதிகள்
  - ஏனைய முதலீடுகள்
  - வெளிநாட்டு ஒதுக்கல் சொத்து

- குறித்த ஒரு நாட்டின் நடைமுறைக் கணக்கு, மூலதனக் கணக்கு என்பவற்றின் கூட்டுத் தொகையானது, அந்நாடானது உலகில் உள்ள ஏனைய நாடுகளுக்குத் தேசிய கடன் கொடுனரா? (சென்மதி நிலுவை மிகை) அல்லது தேறிய கடன்படுனரா? (சென்மதி நிலுவை குறை) என்பதை எடுத்துக் காட்டும்.

- நடைமுறை, மூலதனக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகையானது நிதிக் கணக்கின் மீதிக்குச் சமப்படுவதுடன் ஏதாவது தரவுகள் ரீதியான பிரச்சினைகளின் காரணமாக இவற்றிடையே சமமின்மை தோன்றுமாயின் ''பிழைகளும் தவிர்ப்புகளும்'' என்ற பெயரில் அவ்வேறுபாடுகளை குறிப்பிடுதல் வேண்டும்.

- நிதிக் கணக்கின் மூலம் நாட்டில் தேறிய கடன் கொடுனர் அல்லது தேறிய கடன்படுனர் என்பதையும் நிதியீட்டம் நடைபெறும் முறையும் காட்டப்படும்.

- சென்மதி நிலுவை அட்டவணையில் ஒவ்வொரு கணக்கில் உள்ளடக்கப்படும் விடயங் களைப் பின்வருமாறு கற்பித்த தரவுகள் மூலம் முன்வைக்கலாம்.

- சென்மதி நிலுவை அட்டவணையின் அண்மைக்காலத் தரவுகளை மாணவர்களுக்கு முன்வைக்குக.

| விடயம் | செலவு | வரவு |
|---|---|---|
| **வியாபாரக் கணக்கு** | | |
| ஏற்றுமதி | 1 000 | |
| இறக்குமதி | | 1 300 |
| நாணயமல்லா தங்கம் பெறுவனவு | 150 | |
| நாணயமல்லா தங்கம் கொடுப்பனவு | | 200 |
| **சேவைக் கணக்கு** | | |
| பெறுவனவு | 800 | |
| கொடுப்பனவு | | 600 |
| பொருள் சேவை கணக்கின் மீதி | | (-150) |
| **முதல்நிலை வருமானக் கணக்கு** | | |
| பெறுவனவு | 800 | |
| கொடுப்பனவு | | 1 000 |
| முதல்நிலை வருமானக் கணக்கு மீதி | | (-200) |
| **இரண்டாம் நிலை வருமானக் கணக்கு** | | |
| தொழிலாளர் மாற்றல் பெறுவனவு | 1 800 | |
| தொழிலாளர் மாற்றல் கொடுப்பனவு | | 800 |
| அரச மாற்றல் பெறுவனவு | 400 | |
| இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி | 1 400 | |
| நடைமுறைக் கணக்கு மீதி | 1 050 | |

| விடயம் | செலவு | வரவு |
|---|---|---|
| **மூலதனக் கணக்கு** | | |
| மூலதனக் கணக்கு - கிடைப்பனவு | 600 | |
| மூலதனக் கணக்கு - கொடுப்பனவு | | 300 |
| மூலதனக் கணக்கு மீதி | 300 | |
| நடைமுறை மூலதனக் கணக்கு மீதி | 1 350 | |
| **நிதிக் கணக்கு** | | |
| நேர் முதலீடு - சொத்து | 150 | |
| நேர் முதலீடு - பொறுப்பு | | 100 |
| பல்வேறான முதலீடு - சொத்து | 200 | |
| பல்வேறான முதலீடு - பொறுப்பு | | 150 |
| ஏனைய முதலீடு - சொத்து | 150 | |
| ஏனைய முதலீடு - பொறுப்பு | | 50 |
| ஒதுக்கச் சொத்து (தேறியது) | 250 | |
| நிதிக் கணக்கு மீதி | 450 | |

(சென்மதி நிலுவையின் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு முன்வைக்குக.)

**தேர்ச்சி 10.0:** இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 10.2:** வெளிநாட்டு நிதியானது இலங்கை பொருளாதாரத்தில் தாக்கம் செலுத்தும் விதத்தை ஆய்வு செய்வார்.

**பாடவேளைகள்:** 06

**கற்றற் பேறுகள்:**

- இலங்கை மத்திய வங்கி அறிக்கையின் அடிப்படையில் சென்மதி நிலுவை அட்டவணை யின் போக்கினை விளக்குவார்.
- நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறையின் வடிவத்தை விளக்குவார்.
- சென்மதி நிலுவைச் சமனிலையின்மையைச் சரிப்படுத்துவதற்கான குறுங்காலத் தீர்வுகளை முன்மொழிவார்.
- சென்மதி நிலுவை அட்டவணையொன்றில் பற்றாக்குறையொன்று தொடர்ச்சியாகக் காணப்படுமாயின் அதற்குரிய நீண்டகாலத் தீர்வுகளை முன்மொழிவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சென்மதி நிலுவை அட்டவணையின் 2013 தொடக்கம் 2016 வரையான கணக்குகளின் போக்கினைக் கீழே தரப்பட்டுள்ள புள்ளி விபர அட்டவணை காட்டுகிறது. (அட்டவணை 01)

| ஆண்டு | பொருட்கள் மற்றும் சேவைகள் கணக்கு மீதி | முதனிலை வருமானக் கணக்கு மீதி | இரண்டாம் நிலை வருமானக் மீதி | நடைமுறைக் கணக்கு மீதி | மூலதனக் கணக்கு மீதி | நிதியியல் கணக்கு மீதி | மொத்தக் கணக்கு மீதி |
|---|---|---|---|---|---|---|---|
| 2012 | -8155 | -1219 | 5392 | -3982 | 130 | 4263.4 | 151.2 |
| 2013 | -6429 | -1817 | 5639 | -2607 | 71 | 30637 | 958.4 |
| 2014 | -6407 | -1808 | 6227 | -1988 | 58.3 | -1536.1 | 1369 |
| 2015 | -6105 | -2097 | 6193 | -2008.5 | 46.3 | -2312.3 | -149 |
| 2016 | -6211 | -2184 | 6453 | -1942 | 26 | -2199 | -500 |

**மத்திய வங்கி அறிக்கை**

- நடைமுறைக் கணக்கு மீதி நீண்டகாலமாகப் பற்றாக்குறையாகவுள்ளது.
- பண்டக் கணக்கு மீதி (வர்த்தக மீதி) நீண்டகாலப் பற்றாக்குறையைக் காட்டுகிறது. சேவைக் கணக்கு மிகையாகவுள்ளது.
- பொருட்கள், சேவைகள் கணக்கு மீதி கடந்த சில வருடங்களுள் தளம்பலைக் காட்டுகிறது.

- பொருட்கள், சேவைகள் கணக்கு மீதியில் காணப்படும் பற்றாக்குறை தொடர்பான புள்ளிவிபரப் பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ள புள்ளிவிபர அட்டவணையினால் முன்வைக்கப்படுகிறது.

| ஆண்டு | பண்டக் கணக்கு மீதி | சேவைக் கணக்கு மீதி | பண்டம் மற்றும் சேவைகள் கணக்கு மீதி |
|---|---|---|---|
| 2012 | -9417 | 1262 | -8155 |
| 2013 | -7609 | 1180 | -6429 |
| 2014 | -8287 | 1880 | -6407 |
| 2015 | -8430 | 2325 | -6105 |
| 2016 | -9090 | 2879 | -7211 |

- அட்டவணை 01 இன் மூலம் முதனிலை வருமானக் கணக்கில் காணப்படும் பற்றாக் குறையின் அதிகரிப்புக் காட்டப்படுகின்ற அதேவேளை அப்பற்றாக்குறை நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையையும் பாதித்துள்ளது.
- இரண்டாம் நிலைக் கணக்கின் தேறிய மீதி மிகையொன்றைக் காட்டுகின்ற அதேவேளை அது படிப்படியான அதிகரிப்பையும் காட்டுகின்றது. இவ்வதிகரிப்பினால் நடைமுறைக் கணக்கின் பற்றாக்குறை குறைவடைந்துள்ளது.
- 2010 ஆம் ஆண்டிலிருந்து நிதியியல் கணக்கு நேர்ப் பெறுமதியில் அமைந்து 2014 ஆம் ஆண்டிலிருந்து பற்றாக்குறையினைக் காட்டுகிறது.
- சென்மதி நிலுவை அட்டவணையில் நடைமுறைக் கணக்கு மீதி நீண்டகாலமாகப் பற்றாக்குறையொன்றைக் காட்டுகிறது. அது 1977 ஆம் ஆண்டில் மட்டும் நேர்ப் பெறுமதியைக் கொண்டிருந்த அதேவேளை பொருளாதாரம் திறந்து விடப்பட்டது முதல் நீண்டகாலப் பற்றாக்குறையினைக் காட்டுகிறது.
- நடைமுறைக் கணக்கு மீதியானது வர்த்தக மீதி, சேவைக்கணக்கு மீதி, முதனிலை வருமானக் கணக்கு மீதி மற்றும் இரண்டாம் நிலை வருமானக் கணக்கு மீதி என்பவற்றை ஒன்றாகச் சீராக்கம் செய்வதன் மூலமே பெறப்படுகிறது. நடைமுறைக் கணக்கு மீதியின் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு வர்த்தக மீதி, முதனிலைக் கணக்கு மீதி என்பன எதிர்க் கனியப் பெறுமதியைப் பெறுவது காரணமாகியுள்ளது.
- சென்மதி நிலுவையொன்றின் சமனிலையின்மை எனக் கூறப்படுவது மொத்தக் கணக்கு மீதி பற்றாக்குறையாகவோ, மிகையாகவோ காணப்படுவதாகும். 2010, 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் இது மிகையாக காணப்பட்டதுடன் 2015, 2016 ஆம் ஆண்டுகளில் பற்றாக்குறையாகவுள்ளது.
- குறிப்பிட்டவொரு நாட்டின் சென்மதி நிலுவை அட்டவணையில் நடைமுறைக் கணக்கு மற்றும் மூலதனக் கணக்கு மீதிகளின் மொத்தம் அந்நாடானது ஏனைய உலக நாடு களுடன் தேறிய கடன் உரிமையாளனா அல்லது தேறிய கடன்படுனரா என்பதனைக் காட்டும்.

- சென்மதி நிலுவையின் மொத்த மீதி மிகையாக இருப்பதனை விடப் பற்றாக்குறையாக அமையும்போது பொருளியல் அடிப்படையில் மிகவும் தாக்கமான விளைவுகளை ஏற்படுத்தும். எனவே சென்மதி நிலுவையின் குறுங்காலப் பற்றாக்குறையினை ஈடுசெய்வ தற்குக் கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.
- குறுங்காலப் பற்றாக்குறையை ஈடுசெய்வது எவ்வாறு என்பது குறுங்கால நிதிப்படுத்தல் என அழைக்கப்படும்.
- குறுங்கால நிதிப்படுத்தலுக்காகப் பின்பற்றப்படும் நடவடிக்கைகள் சில காணப்படுகின்றன.
  - வெளிநாட்டு ஒதுக்குகளைப் பயன்படுத்தல்.
  - சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொள்ளல்.
  - ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து குறுங்கால நிதிகளைப் பெற்றுக் கொள்ளல்.
- சென்மதி நிலுவை அட்டவணையில் நீண்டகாலப் பற்றாக்குறை மொத்த மீதியினால் காட்டப்படும்.
- நீண்டகாலப் பற்றாக்குறையொன்று காணப்படும்போது அதற்காக முன்வைக்கக்கூடிய தீர்வுகள் கீழே காட்டப்படுகின்றது.
  - ஏற்றுமதி பன்முகப்படுத்தல்.
  - வெளிநாட்டிலிருந்தான நேர்முதலீடுகளை ஊக்குவித்தல்.
  - மரபுரீதியான ஏற்றுமதிகளை ஊக்குவித்தல்.
  - ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயங்களை உருவாக்கல்.
  - வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளல்.
  - நாணயமாற்று விகிதத்தைத் தேய்வடைவதற்கு இடமளித்தல் அல்லது மதிப்பிறக்கம் செய்தல்.
  - உள்நாட்டுப் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையை அதிகரிக்கச் செய்தல்.
  - இறக்குமதிப் பிரதியீட்டுக் கைத்தொழில்களை விருத்தி செய்தல்.
  - அத்தியாவசியமான இறக்குமதிகள் தவிர ஏனைய இறக்குமதிகளை அதைரியப்படுத்தல்.

(மத்திய வங்கி அறிக்கையின் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.3:** **வெளிநாட்டு வள இடைவெளி, வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி என்பன வேறுபடும் விதத்தினைப் பகுப்பாய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- வெளிநாட்டு வள இடைவெளியை வரைவிலக்கணப்படுத்துவார்.
- கருதுகோள் ரீதியான புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு வள இடைவெளிகளைக் கணிப்பிடுவார்.
- அண்மைக் காலத்தில் வெளிநாட்டு வள இடைவெளியினை நிதிப்படுத்திய விதத்தினை மத்திய வங்கி அறிக்கையின் அடிப்படையில் விளக்குவார்.
- வெளிநாட்டுச் சொத்துக்களை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வெளிநாட்டுச் சொத்துக்களின் கட்டமைப்பைக் காட்டுவார்.
- வெளிநாட்டுச் சொத்துக்களைப் பேணிச் செல்வது ஒரு நாட்டுக்கு முக்கியம் பெறும் விதத்தினை விளக்குவார்.
- வெளிநாட்டுச் சொத்துக்களின் சார்பு ரீதியான அளவினை அளவிடல் மற்றும் அதன் அண்மைக்கால அளவினை மத்திய வங்கி அறிக்கையின் அடிப்படையில் விளக்குவார்.
- வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிச் சக்தி எந்தளவு காலத்துக்குப் போதுமானது என்பதைக் கூறுவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- குறித்த காலப் பகுதியினுள் பொருளாதாரத்தினுள் வருகின்ற சகல வெளிநாட்டுப் பெறுகைகளுக்கும் பொருளாதாரத்தில் இருந்து வெளிச் செல்கின்ற சகல வெளிநாட்டுக் கொடுப்பனவுகளுக்கும் இடையிலான வித்தியாசம் வெளிநாட்டு வள இடைவெளி என அழைக்கப்படும்.
- வெளிநாட்டு வள இடைவெளி = வெளிநாட்டுப் பெறுகை - வெளிநாட்டுச் செலுத்தல்கள்
- வெளிநாட்டுப் பெறுகை என அழைக்கப்படுவது ஏற்றுமதிகள், சேவைப் பெறுகைகள், முதனிலை வருமானப் பெறுகைகள் மற்றும் இரண்டாம் நிலை வருமானப் பெறுகைகள் என்பனவாகும். வெளிநாட்டுச் செலுத்தல்கள் என்பதனுள் இறக்குமதிகளுக்கான கொடுப்பனவு, சேவைக் கொடுப்பனவு, காரணி வருமானச் செலுத்தல்கள், கடன் மீளச் செலுத்தல், தனியார் மூலதனமாற்றல், கொடுப்பனவுகள், முதலீடுகள் வெளியே செல்லல் மற்றும் வர்த்தக வங்கிகளின் கொடுப்பனவுகள் ஆகியன உள்ளடங்கும்.

  உ+ம்:- கருதுகோள் ரீதியான பொருளாதாரமொன்றின் வெளிநாட்டுப் பெறுகைகள் மற்றும் வெளிநாட்டுச் செலுத்தல்கள் கீழே தரப்படுகின்றன.

| வெளிநாட்டுப் பெறுகைகள் (ரூபா. மில்) | | வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் (ரூபா. மில்) | |
|---|---|---|---|
| ஏற்றுமதிச் சம்பாத்தியம் | 500 | இறக்குமதிச் செலவு | 110 |
| சேவைப் பெறுகைகள் | 50 | சேவைக் கொடுப்பனவு | 50 |
| முதனிலை வருமானப் பெறுகைகள் | 80 | முதனிலை வருமானச் செலுத்தல்கள் | 150 |
| இரண்டாம் நிலை வருமானப் பெறுகைகள் | 100 | தனியார் மூலதனமாற்றல் செலுத்தல் | 70 |
| | | கடன் மீளச் செலுத்தல்கள் | 260 |
| | | முதலீடுகளின் வெளியேற்றம் | 40 |
| | | வர்த்தக வங்கிகளின் செலுத்தல்கள் | 60 |
| மொத்த வெளிநாட்டுப் பெறுகைகள் | 730 | மொத்த வெளிநாட்டுச் செலுத்தல்கள் | 740 |

- இலங்கையின் வெளிநாட்டு வள இடைவெளி மறைப் பெறுமதியில் காணப்படுகிறது. இதற்குரிய காரணங்கள் பலவாகும்.
  - ஏற்றுமதிகளுடன் ஒப்பிடும்போது இறக்குமதிகள் கூடிய பெறுமதியைக் கொண்டிருத்தல்.
  - முதனிலை வருமானப் பெறுகைகளை விட முதனிலை வருமானச் செலுத்தல்கள் அதிகமாக இருத்தல்.
  - கடன் மீளச் செலுத்தல்கள் அதிகமாக இருத்தல்.
  - வணிக வங்கிகளின் மூலம் வெளிநாடுகளுக்குச் செய்யப்படும் செலுத்தல்களின் தொகை அதிகமாக இருத்தல்.
- வெளிநாட்டு வள இடைவெளிப் பற்றாக்குறை (மறைப் பெறுமதி) காணப்படுவது பொருளாதாரத்துக்கு அவ்வளவு சாதகமான நிலைமையன்று. வெளிநாட்டு வள இடைவெளிப் பற்றாக்குறையாகக் காணப்படுமாயின் பொருளாதாரத்தில் கீழே தரப்படும் பாதக விளைவுகள் தோன்றும்.
  - வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு குறைவடைதல்.
  - வெளிநாட்டுக் கடன்களைப் பெறவேண்டி ஏற்படல்.
  - பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி குறைதல்.
  - பண நிரம்பல் குறைவடைதல்.
  - வெளிநாட்டுக் கடன் சேவைப்படுத்தல் கொடுப்பனவுகள் அதிகரித்தல்.
  - சர்வதேச கடன் பிரச்சினைக்குப் பாத்திரமாதல்.
- வெளிநாட்டு வள இடைவெளியின் சார்பளவான பெறுமதி அளவிட்டுக் காட்டப்படுவது,
  - மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சார்பளவாக
  - மொத்த வெளிநாட்டுச் சம்பாத்தியத்திற்கு சார்பளவாக
- அண்மை ஆண்டுகளில் வெளிநாட்டு வள இடைவெளி நிதியீட்டல் செய்யப்பட்ட விதம்
  - குறுங்காலக் கடன்கள்
  - நிரம்பலாளரிடம் பெறப்பட்ட கடன்கள்
  - வங்கிக் கடன்
  - சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெறப்பட்ட கடன்கள்

இலங்கை குறைந்த வருமானம் பெறுகின்ற நாடாகக் காணப்பட்ட காலத்தில் வெளிநாட்டுக் கொடைகள், வெளிநாட்டு உதவி, வெளிநாட்டு நேரடி முதலீடு போன்ற கடன் அல்லாத மூலங்களினால் வெளிநாட்டு வள இடைவெளியில் பெருமளவு நிதியீட்டம் செய்யப்பட்ட போதிலும் இலங்கை கீழ் மத்திய வருமானம் பெறும் நாடாக வகைப்படுத்தப்பட்டதனால் இலங்கைக்குக் கிடைக்கும் வெளிநாட்டுக் கொடைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

- எனவே,
  - குறுங்கால கடன்
  - வர்த்தக வங்கிகளிடமிருந்தான கடன்
  - நிரம்பலாளர் கடன்
  - சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தான கடன்கள்

  போன்ற வழிகளில் பெறப்படும் கடன் பெற்று வெளிநாட்டு வள இடைவெளியை நிதியீட்டம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.
- இதனால் வட்டிச் செலவுகள் அதிகரித்தல், குறுகிய காலத்தினுள் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டி ஏற்படல் ஆகிய காரணங்களினால் வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு விரைவாகக் குறைவடைதல் போன்ற பாதகமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன.
- வெளிநாட்டுச் சொத்துக்கள் எனப்படுவது குறிப்பிட்ட ஒரு நாட்டுக்காக வேறு நாடுகளின் மத்திய வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டுப் பணமும் பிணைகளுமாகும்.
- வெளிநாட்டுச் சொத்துக்கள் இலங்கை மத்திய வங்கியிலும் வைப்புக்களை ஏற்றுக் கொள்கின்ற நிறுவனங்களிலும் இலங்கை அரசாங்கத்துக்குரியதாகக் காணப்படுகிறது.
- இதில் அரசாங்கம், மத்திய வங்கி மற்றும் வணிக வங்கிகளுக்குரிய சொத்துக்கள் பருமட்டான மொத்த சொத்துக்களாகும்.
- அதில் அரசாங்கம், மத்திய வங்கி என்பவற்றுக்குரிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மொத்த அலுவல்கள் சொத்துக்களாகும்.

- வெளிநாட்டுச் சொத்துக்களின் உள்ளடக்கம் கீழே காட்டப்படுகிறது.
  - மத்திய வங்கியிடமுள்ள வெளிநாட்டு வங்கி வைப்புக்கள்
  - மத்திய வங்கி கொள்வனவு செய்துள்ள வெளிநாட்டு உண்டியல்கள்
  - இலங்கை அரசிடமுள்ள விசேட எடுப்பனவு உரிமைகள்
  - வணிக வங்கிகளிடமுள்ள வெளிநாட்டுச் சட்ட முறைப் பணம்
  - வணிகங்களின் கொள்வனவு செய்துள்ள வெளிநாட்டு உண்டியல்கள்
- வெளிநாட்டுச் சொத்துக்களின் கட்டமைப்புப் பற்றிக் கலந்துரையாடும்போது வெளிநாட்டுச் சொத்துக்களின் உரிமை அமைந்த விதம் முக்கியமானது. 2015 இல் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் உரிமையானது கீழ்க் காட்டப்படும் வகையிலாகும்.

| **நிறுவனம்** | **மொத்த வெளிச் சொத்துக்களில் உரிமையாகியுள்ள சதவீதம்** |
|---|---|
| இலங்கை மத்திய வங்கி | 73 |
| வைப்புக்களை ஏற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் | 22 |
| இலங்கை அரசு | 05 |
| | 100 |

(மத்திய வங்கி அறிக்கையின் அண்மைக் காலத் தரவுகளை மாணவர்களுக்கு விளக்குக.)

- நாடொன்றுக்கு வெளிநாட்டுச் சொத்துக்களைப் பேணிச் செல்வது பல்வேறு வகைகளில் முக்கியமானது.
  - பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதியை பேணிச் செல்வதற்கு
  - பண நிரம்பலைத் தீர்மானிப்பதற்கு
  - இறக்குமதிக் கொள்வனவுச் சக்தியைப் பாதுகாப்பதற்கு
  - சென்மதி நிலுவைப் பற்றாக்குறையை ஈடுசெய்வதற்கு
  - நாணய அதிகாரியினால் வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையில் செல்வாக்குச் செலுத்தும் ஆற்றலைத் தீர்மானிப்பதற்கு
  - வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வென்று கொள்ள முடியுமாதல்.
- ஒரு நாட்டுக்குரிய வெளிநாட்டுச் சொத்துக்களின் சார்பளவான பெறுமதி அளவிடப்படுவது வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிச் சக்தி எந்தளவு காலத்துக்கு போதுமானதாகும் என அளவிடுவதன் மூலமாகும். அது பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி} = \frac{\text{வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு}}{\text{மாதாந்த இறக்குமதிச் செலவு}}$$

உதாரணமாக;

நாட்டுக்குரிய வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு = ரூபா. பில். 60 000

மாதாந்த இறக்குமதிச் செலவு = ரூபா. பில். 12 000

வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதி கொள்வனவுத் சக்தி $= \frac{60\ 000}{12\ 000}$

= 5 மாதங்கள்

இதனால் கருதப்படுவது 5 மாதங்களுக்குப் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்காக வெளிநாட்டுச் சொத்துக்கள் போதுமானதாகவுள்ளது என்பதாகும்.

- இலங்கையின் அண்மைக் காலங்களில் வெளிநாட்டு சொத்துக்களின் இறக்குமதி கொள்வனவு சக்தி பின்வருமாறு:

| **ஆண்டு** | **வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி (மாதங்களில்)** |
|---|---|
| 2011 | 4.3 |
| 2012 | 4.7 |
| 2013 | 4.8 |
| 2014 | 5.1 |
| 2015 | 4.9 |

- வெளிநாட்டுச் சொத்துக்களின் இறக்குமதிக் கொள்வனவுச் சக்தி மிகவும் சிறிய அதிகரிப் பொன்றைக் காட்டுகின்றது. இதற்குக் காரணம் பொருட்கள் சேவைகளின் இறக்குமதி அதிகரிப்பு வீதத்திலும் பார்க்கக் கூடிய சதவீதத்தில் வெளிநாட்டுச் சொத்துக்களின் அளவு உயர்வடைந்தமையாகும்.

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.4:** **வெளிநாட்டு முதலீடு ஒரு நாட்டுப் பொருளாதாரத்துக்கு தாக்கம் செலுத்தும் விதத்தை விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 04

**கற்றற் பேறுகள்:**

- வெளிநாட்டு முதலீடுகளை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வெளிநாட்டு முதலீடுகளை வகைப்படுத்துவார்.
- நேரடி முதலீடுகளை இனங்கண்டு அண்மைக்காலப் போக்குகளைக் காட்டுவார்.
- நேரடி முதலீடுகளின் சாதக மற்றும் பாதக விளைவுகளை விளக்குவார்.
- பட்டியலிடப்பட்ட முதலீடுகளை இனங்கண்டு அதன் அண்மைக்காலப் போக்குகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- ஒரு நாட்டின் நிறுவனமொன்று அல்லது தனிநபர் வேறொரு நாட்டின் நிதிச் சொத்துக் களைக் கொள்வனவு செய்தல் அல்லது தனது வியாபார முயற்சியினை ஆரம்பிப்பதற் காகக் காணப்படும் வியாபார முயற்சிகளின் பங்குகளில் பெருமளவைக் கொள்வனவு செய்தல் வெளிநாட்டு முதலீடாகும்.
- வெளிநாட்டு முதலீட்டை பின்வரும் இரு பிரிவுகளாக நோக்கலாம்.
  - நேரடி முதலீடு
  - பட்டியலிடப்பட்ட முதலீடு
- வெளிநாட்டு நேரடி முதலீடு என்பது குறிப்பிட்ட பிரதிபலனொன்றை எதிர்பார்த்து வெளிநாடொன்றின் பயன்தரு மெய்ச் சொத்துக்களைக் கையேற்பதாகும்.

  உ+ம்:- கைத்தொழிற்சாலை, சுரங்கம், நிலபுலன்கள் போன்ற
- சொத்துக்களை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கையேற்றல்.
- குறிப்பிட்ட வருடமொன்றில் வெளிநாட்டு நேரடி முதலீடுகளை மதிப்பீடு செய்யும்போது நாட்டினுள் வருகின்ற மூலதனப் பாய்ச்சல்கள் மற்றும் நாட்டில் இருந்து வெளிச் செல்லும் மூலதனம் ஆகிய இரண்டும் கவனத்திற் கொள்ளப்படும்.
- வெளிநாட்டு நேரடி முதலீடு தொடர்பான அண்மைக்காலப் போக்குகள் கீழே காட்டப்பட் டுள்ளன.
  - அண்மைக் காலத்தில் வட்டி வீதத்தில் அதிகரிக்கும் தன்மை காணப்பட்டமையால் இலங்கை உட்பட எழுச்சி கண்டு வரும் பொருளாதாரங்களுக்குப் பாரிய தாக்கமொன்று ஏற்பட்டமை.
  - முதலீட்டாளர்கள் எழுச்சி கண்டு வரும் பொருளாதாரத்தில் முதலீடு செய்வதற்கு ஊக்கமின்றியிருத்தல்.

- **நேரடி முதலீடுகளின் சாதக - பாதக விளைவுகள்:**
    - வெளிநாட்டு முதலீடுகளின் மூலம் வலுப்படுத்தப்படுகின்ற சர்வதேச காரணி அசைவினைக் காரணமாகக் கொண்டு வளப் பங்கீட்டின் வினைத்திறன் அதிகரித்தல்.
    - மேலதிக மூலதனப் பாய்ச்சல்கள் நாட்டினுள் வருதல் மூலம் வளப் பயன்பாட்டை (சேமிப்பு - முதலீடு) ஈடுசெய்யக்கூடியதாக இருத்தல்.
    - வெளிநாட்டு நாணய மாற்று இடைவெளியை ஈடுசெய்வதற்கு முடியுமாதல் (வெளிநாட்டு பெறுகைகள் - வெளிநாட்டுச் செலுத்தல்கள்)
    - சென்மதி நிலுவைப் பற்றாக்குறைக்குப் பதிலாக அமைதல்.
    - கடன் சுமை அதிகரிக்காதிருத்தல்.
    - நவீன தொழில் நுட்பம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல்.
    - பங்கிலாபம் மற்றும் வட்டி என்ற வகையில் பெருமளவான பணம் வெளிநாடுகளுக்குச் செல்லுதல்.
    - உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பாதகமான தாக்கம் ஏற்படல்.
    - மூலதனச் செறிவு உற்பத்தி நுட்ப முறைப் பயன்பாட்டின் காரணமாக வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் இழக்கப்படல்.
    - இயற்கை வளங்கள் மிகை நுகர்வுக்குட்படல்.
    - உள்நாட்டுக் கைத்தொழில்கள் செயலிழத்தல்.
    - நாட்டுக்குக் கிடைக்கின்ற வரி வருமானம் சரியான முறையில் கிடைக்காமல் போதல்.
    - உள்நாட்டு முதலீட்டாளர்களுக்குக் கிடைக்கக்கூடிய நிதி வெளிநாட்டு முயற்சிகளை நோக்கி வெளியேறல்.
    - உள்நாட்டு வியாபார முயற்சிகளில் உள்ள திறமையான ஊழியர்கள் வெளிநாட்டு முயற்சிகளை நோக்கிச் செல்லல்.

    (மத்திய வங்கி அறிக்கை அடிப்படையில் இலங்கையின் வெளிநாட்டு முதலீடுகளின் தற்காலத் தகவல்கள் மற்றும் போக்கு பற்றி மாணவருக்கு விளக்கவும்.)

- **பட்டியலிடப்பட்ட முதலீடு:**

சர்வதேச பட்டியலிடப்பட்ட முதலீடு என்பதனால் கருதப்படுவது நிதி ரீதியான பிரதி பலன்களை எதிர்பார்த்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வேறு நாடுகளில் வியாபாரக் கம்பனிகளில் பங்குகள், ஆவணங்கள், கடன்முறிகள், வணிகப் பத்திரங்கள் போன்ற பணச் சந்தைக் கருவிகளைக் கொள்வனவு செய்வதாகும். பட்டியலிடப்பட்ட முதலீடுகளின் போது முதலீட்டாளர்கள் வர்த்தகர்களின் முகாமைத்துவ உரிமைக்கோ நிர்வாகத்துக்கோ உரிமை பெறமாட்டார்கள்.

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.5:** **வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படும் விதத்தைக் கண்டாய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 04

**கற்றற் பேறுகள்:**

- வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வெளிநாட்டு நாணயமாற்று விகிதத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வெளிநாட்டு நாணயமாற்று விகித முறைமை தீர்மானிக்கப்படும் விதத்தினை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வெளிநாட்டு நாணயம் பரிமாற்றப்படுகின்ற நிறுவன ரீதியான கட்டமைப்புக்களின் தொடர்புகள் வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தை என அழைக்கப்படும். இல்லாவிடின் வெளிநாட்டு நாணயக் கேள்வியாளரும் நிரம்பலாளரும் அவ் வெளிநாட்டு நாணயமாற்று விகிதங்கள் மற்றும் பரிமாற்றப்படுகின்ற வெளிநாட்டு நாணய அளவுகள் என்பவற்றைத் தீர்மானிப்பதற்காகத் தொடர்புபடுகின்ற நிறுவன ரீதியான கட்டமைப்புக்கள் வெளிநாட்டு நாணயச் சந்தை என அழைக்கப்படும்.
- சர்வதேச வர்த்தகம், நிதி என்பவற்றின் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்துவதற்கு நாணயத்தை வழங்குவதற்காகவே வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தை ஒழுங்கமைக்கப் பட்டுள்ளது. இச்சந்தைகள் உலகிலேயே விசாலமான சந்தைகள் என அழைக்கப்பட முடியும்.
- பங்குச் சந்தையொன்றை விட வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தை உலகம் முழுவதும் பரந்துள்ள வர்த்தகர்களின் வலைப் பின்னலாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.
- வெளிநாட்டு நாணய வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் குறித்த வெளிநாட்டுப் பணத்தின் கொள்வனவு விலை, விற்பனை விலை என்பன தொடர்பான தகவல்களை ஏனைய வர்த்தகர்களிடமிருந்து விசாரித்தறிந்து மிகவும் சாதகமான நிலைமையைத் தீர்மானித்துக் கொள்வர். வெளிநாட்டு நாணயச் சந்தைகளில் பெருமளவு கொடுக்கல் வாங்கல்கள் நடைபெறுவது தொலைபேசி மூலமாகும் அதேவேளை பின்னர் அவை மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலம் உறுதிப்படுத்தப்படும்.
- வெளிநாட்டு நாணய சந்தையின் செயற்படு பங்குதாரர்களாக பலர் காணப்படுகின்றனர்.
    - வணிக வங்கிகள்
    - வெளி நாணய தரகர்கள்
    - வணிக நிறுவனங்கள்
    - மத்திய வங்கி
    - பொது மக்கள்
    - அரசாங்கம்

- வணிக வங்கிகள் வெளிநாட்டுச் சந்தையில் மிகவும் முன்னுரிமையான தொழிற்பாடுகளை நிறைவேற்றுகின்றனர். இங்கு வெளிநாட்டு நாணயக் கொள்வனவு விலையையும் விற்பனை விலையையும் வெளிப்படுத்தல் முக்கியமானது. விற்பனை விலைக்கும் கொள்வனவு விலைக்கும் இடையிலான வித்தியாசம் நிறுவனத்தின் இலாபத்தை வெளிப்படுத்தும். வெளிநாட்டு நாணயச் சந்தையில் பெருமளவு பரிமாற்றப்படுவது உலகில் பிரசித்தி பெற்ற நாணய வகைகளாகிய ஐக்கிய அமெரிக்க டொலர், ஸ்டேலிங், பவுண், யூரோ, ஜப்பானிய யென் ஆகியனவாகும்.
- பிரதான வெளிநாட்டு நாணயச் சந்தை மத்திய நிலையங்களின் விலைகளுக்கிடையே ஏதாவது வேறுபாடொன்று ஏற்படுமாயின் வெளிநாட்டு நாணய வியாபாரிகள் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலாபம் உழைப்பர். அதாவது விலை குறைந்த நாணயச் சந்தையில் வெளிநாட்டு நாணயத்தைக் கொள்வனவு செய்து விலை கூடிய சந்தையில் வெளிநாட்டு நாணயத்தை விற்பனை செய்வர்.
- உள்நாட்டுச் சட்டமுறைப்பண அலகொன்று வெளிநாட்டுச் சட்டமுறைப் பண அலகாகவும் வெளிநாட்டுச் சட்டமுறைப் பண அலகொன்று உள்நாட்டுச் சட்ட முறைப் பண அலகொன்றாகவும் பரிமாற்றப்படும் விகிதம் வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் என அழைக்கப்படும். இவ்வாறு குறிப்பிட்ட பண அலகொன்றின் விலையை வேறு பண அலகொன்றினால் கூறப்படும்போது அது பெயரளவு நாணய மாற்று விகிதம் என அழைக்கப்படும்.
- வெளிநாட்டு நாணய மாற்று விகிதத்தைக் கூறுகின்ற இரண்டு முறைகள் உள்ளன.
  - நேரடிக் கூறல் முறை
  - மறைமுகக் கூறல் முறை
- நேரடிக் கூறல் முறை அல்லது விலை நிர்ணய முறைக்கு நாணய மாற்று விகிதத்தைக் கூறுவது வெளிநாட்டுச் சட்டமுறைப் பண அலகொன்றின் விலையினை உள்நாட்டுச் சட்டமுறைப் பணத்தினால் காட்டுவதாகும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்க டொலரொன்றைக் கொள்வனவு செய்ய இலங்கை ரூபா எந்தளவு தொகை தேவைப்படும் எனக் காட்டுதல்.

  USA \$ 1 = 152 இலங்கை ரூபா


- மறைமுக கூறல் அல்லது தொகை நிர்ணய முறைக்கு நாணயமாற்று விகிதத்தை கூறுவது என்பது உள்நாட்டுப் பண அலகின் விலையினை வெளிநாட்டு சட்டமுறைப் பண அலகு மூலம் காட்டுவதாகும். மறைமுகக் கூறல் முறையில் வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் நேரடிக் கூறல் முறையின் நாணயமாற்று விகிதத்தின் தலைகீழ் வடிவமாகும்.

$$\text{இலங்கை ரூபா (LKRS) } 1 = \text{ ஐக்கிய அமெரிக்க டொலர் } \$ = \frac{1}{152} = 0.00657$$

- வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படும் விதத்தினை மேலுள்ள இரு விதங்களிலும் விளக்க முடியும்.
  - நேரடிக் கூறல் முறையில் வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படும் விதம்.
  - மறைமுகக் கூறல் முறையில் வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படும் விதம்.

- நேரடிக் கூறல் முறையில் வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படுவது வெளிநாட்டுச் சட்ட முறைப் பண அலகொன்றுக்குக் காணப்படும் கேள்வி, நிரம்பல் அடிப்படையிலாகும். உதாரணமாக ஐக்கிய அமெரிக்க டொலரின் ரூபா விலை தீர்மானிக் கப்படுவது வெளிநாட்டு நாணயச் சந்தையில் டொலருக்காகக் காணப்படும் கேள்வி நிரம்பல் அடிப்படையிலாகும்.
- டொலருக்கான கேள்வி ஏற்படுவது வெளிநாடுகளிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்வதற்கு, வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்வதற்கு, கடனை மீளச் செலுத்துவதற்கு, வெளிநாடுகளுக்கு மாற்றங்களைச் செலுத்துவதற்குப் போன்ற சென்மதி நிலுவை அட்டவணையின் செலுத்த வேண்டிய கொடுக்கல் வாங்கல்களை நிதிப்படுத்துவதற்காகும். டொலரின் ரூபா விலைக்கும் டொலரின் கேள்வித் தொகைக்கும் இடையே எதிரான தொடர்பு காணப்படுகிறது.
- காணப்படும் நாணய மாற்று விகிதத்தின் கீழ் இறக்குமதி அதிகரித்தல், சுற்றுலாக்கள் அதிகரித்தல், கடன் வட்டிச் செலுத்தல்கள் உயர்வடைதல், வெளிநாடுகளுக்கு கொடுக்கும் மாற்றல் கொடுப்பனவுகள் அதிகரித்தல் ஆகிய காரணிகளின் அடிப்படையில் டொலரின் கேள்விக் கோடு வலப்புறம் நகரும். இறக்குமதி குறைவடைதல், வெளிநாட்டுச் சுற்றுலாக்கள் குறைவடைதல், வெளிநாட்டு மாற்றல் கொடுப்பனவுகள் குறைவடைதல் போன்ற காரணிகளின் அடிப்படையில் டொலரின் கேள்விக்கோடு இடப்புறம் நகரும்.
- டொலருக்கான நிரம்பல் ஏற்படுவது பொருள் ஏற்றுமதிச் சேவைப் பெறுகைகள், முதனிலை வருமானப் பெறுகைகள், இரண்டாம் நிலை வருமான பெறுகைகள் ஆகிய சென்மதி நிலுவை அட்டவணையில் உள்ள பெறுகைக் கொடுக்கல் வாங்கல் மூலமாகும். டொலரின் ரூபா விலைக்கும் டொலரின் நிரம்பலுக்குமிடையில் காணப்படுவது நேரான தொடர்பாகும்.
- காணப்படும் நாணயமாற்று விகிதத்தின் கீழ் ஏற்றுமதி அதிகரிக்கும்போது, சுற்றுலா வருமானம், கடன் பெறுகைகள் அதிகரிக்கும்போது டொலரின் நிரம்பல் அதிகரிக்கும். நிரம்பல் கோடு வலப்புறம் நகரும். ஏற்றுமதி குறைகின்றபோது, சேவைப் பெறுகைகள் குறைகின்றபோது டொலரின் நிரம்பல் குறைவடைந்து நிரம்பல் கோடு இடப்புறமாக நகரும்.
- டொலருக்காகக் காணப்படும் கேள்வியும் நிரம்பலும் சமப்படும்போது டொலரின் விலை தீர்மானிக்கப்படும்.

வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் $= \frac{RS}{\$}$



- டொலரொன்று ரூபா 100 வீதம் நாளொன்றுக்கு 100 000$ கள் பரிமாற்றப்படுகின்றன.

- மறைமுகக் கூறல் முறையின் அடிப்படையில் நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படுவது உள்நாட்டுச் சட்ட முறைப் பண அலகொன்றுக்கு இந்நாட்டினுள் காணப்படும் கேள்வி நிரம்பல்களின் அடிப்படையிலாகும். உதாரணமாக இலங்கை ரூபாவினால் கொள்வனவு செய்யக்கூடிய ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அளவு தீர்மானிக்கப்படுவது இலங்கை ரூபாவுக்காகக் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பலின் அடிப்படையிலாகும்.

- இலங்கையின் உள்ளக வெளிநாட்டு நாணயச் சந்தையில் ரூபாவுக்குக் கேள்வியை ஏற்படுத்துவோர் வெளிநாட்டவர்களாவர். அவ்வாறு ரூபாவுக்குக் கேள்வியை ஏற்படுத்துவது இலங்கையில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு, இலங்கையினுள் சுற்றுலா செல்வதற்கு, பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு போன்ற சென்மதி நிலுவைப் பெறுகைக் கொடுக்கல் வாங்கல்களுக்காகும். ரூபாவின் டொலர் விலைக்கும் இலங்கை ரூபாவின் கேள்விக்கும் இடையே காணப்படுவது எதிரான தொடர்பாகும்.


- காணப்படும் நாணய மாற்று விகிதத்தின் கீழ் இலங்கையின் பக்கமாக ஏற்றுமதி அதிகரிக்கும்போது சேவைப் பெறுகைகள் அதிகரிக்கும்போது ரூபாவின் கேள்விக் கோடு வலப்புறம் நகரும். இறக்குமதி குறையும்போது சேவைப் பெறுகைகள் குறையும் போது முதனிலை வருமானப் பெறுகைகள் குறையும்போது முதனிலை வருமானப் பெறுகைகள் குறையும்போது ரூபாவுக்கான கேள்வி குறைந்து கேள்விக் கோடு இடப் புறம் நகரும்.

- இலங்கையின் உள்ளக வெளிநாட்டு நாணய மாற்றுச் சந்தையில் ரூபாவை நிரம்பல் செய்வது உள்நாட்டவர்களாவர். வெளிநாடுகளில் இருந்து பொருட்கள் சேவைகளை இறக்குமதி செய்வதற்காகவே இவ்வாறு ரூபாவை நிரம்பல் செய்கின்றனர். ரூபாவை நிரம்பல் செய்து டொலரைக் கொள்வனவு செய்து வெளிநாடுகளிலிருந்து பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்கின்றனர். ரூபாவின் டொலர் விலைக்கும் ரூபாவின் நிரம்பலுக்குமிடையே நேராக தொடர்பொன்று காணப்படும்.

- நிலவும் நாணய மாற்று விகிதத்தின் கீழ் இறக்குமதி அதிகரிக்கும்போது, சேவைக் கொடுப்பனவுகள் அதிகரிக்கும்போது ரூபாவின் நிரம்பல் கோடு வலப்புறம் நகரும். இறக்குமதி மற்றும் சேவைச் செலுத்தல்கள் குறையும்போது ரூபாவின் நிரம்பல் கோடு இடப்புறம் நகரும்.

- வெளிநாட்டு நாணயச் சந்தையில் ரூபாவுக்காகக் காணப்படும் கேள்வி மற்றும் நிரம்பலின் அடிப்படையில் ரூபாவின் விலை தீர்மானிக்கப்படும்.

$$\text{வெளிநாட்டு நாணய மாற்று விகிதம்} = \frac{\$}{RS}$$




- ஒரு ரூபா 0.006 $ வீதம் நாளொன்றுக்கு 100 000 இலங்கை ரூபா பரிமாற்றம் செய்யப்படுகிறது.

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.6:** **வெளிநாட்டு நாணயமாற்று விகித முறையினை நுணுக்கமாக விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- நிலையான நாணயமாற்று விகிதத்தை விளக்கி அம்முறையின் சாதக, பாதகங்களைக் காட்டுவார்.
- நெகிழ்வுள்ள நாணயமாற்று விகித முறையை விளக்கி அம்முறையின் சாதக பாதகங்களைக் காட்டுவார்.
- மிதக்கும் நெகிழ்வுள்ள நாணயமாற்று விகித முறையை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**


- பிரதானமாக நாணயமாற்று விகித முறைகள் இரண்டு பற்றிக் கலந்துரையாடப்படும்.
  - நிலையான நாணயமாற்று விகித முறைமை
  - நெகிழ்வுள்ள நாணயமாற்று விகித முறைமை
- நாணய அதிகாரியினால் தீர்மானிக்கப்பட்ட நாணயமாற்று விகிதம் மீண்டும் நாணய அதிகாரியின் மூலமாக மாற்றும்வரை ஒரே மட்டத்தில் காணப்படுமாயின் அது நிலையான நாணயமாற்று விகித முறை என அழைக்கப்படும்.
- நிலையான நாணயமாற்று விகித முறைக்கு அடிப்படையாக அமைந்தது தங்க அளவீட்டு முறையும் தங்கப் பரிமாற்ற முறையுமாகும். அதாவது தங்க ஒதுக்குகள் சட்ட முறைப் பணத்தை வெளியிடுவதற்கான அடிப்படையாகும். ஐக்கிய அமெரிக்க குடியரசு ஒரு அவுன்சு தங்கத்தை பெடரல் ஒதுக்கு வங்கியில் வைப்புச் செய்கின்றபோது 35 டொலர்களை வெளியீடு செய்தது. இங்கிலாந்து மத்திய வங்கி ஓர் அவுன்ஸ் தங்கத்தை வைப்புச் செய்தபோது 12.50 ஸ்டேலிங் பவுணை வெளியீடு செய்தது. அதன்படி டொலருக்கும் ஸ்டேலிங் பவுணுக்குமான மாற்று விகிதம் 1£ = $2.80 ஆயிற்று. அது ஓரவுன்ஸ் தங்கத்துக்காக வெளியிடப்படும் டொலரின் அளவு அல்லது ஸ்டேலிங் பவுண் அளவு மாற்றமடையும் வரை நிலையாகக் காணப்பட்டது.
- நிலையான நாணயமாற்று விகித முறைமை ஒரு நாட்டுக்குப் பாதகமாக அமைவது கீழ்த் தரப்படும் வகையிலாகும்.
  - நாணயமாற்று விகிதம் நிலையானதாக இருப்பதனால் இறக்குமதிகளுக்கு ஏற்படும் ஆபத்துக்கள் குறைவாகும்.
  - நாணயமாற்று விகிதம் நிலையானதாக இருப்பதனால் வெளிநாட்டு முதலீட்டாளர் களுக்கு, வெளிநாட்டுக் கடன் நிரம்பலாளர்களுக்கு ஏற்படக்கூடிய நிச்சயமற்ற தன்மை குறைவாகும்.

- நிலையான நாணயமாற்று விகிதம் காணப்படும்போது மொத்தப் பொருளாதார செயற்பாட்டையும் முகாமைத்துவம் செய்யும் ஆற்றல் அதிகமாகும்.
- நிலையான நாணயமாற்று விகிதம் காணப்படும்போது உத்தேச நோக்கில் வெளிநாட்டுச் சட்ட முறைப் பணத்துக்குக் கேள்வி ஏற்படுத்த முனையமாட்டார்கள். எனவே வெளிநாட்டு நாணயம் பற்றிக் குறையொன்று ஏற்படமாட்டாது.
- நாணய மாற்று வீத மாற்றங்களினால் ஏற்றுமதியாளருக்கு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியாதாகையால் ஏற்றுமதிகளின் போட்டித் தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கு ஏற்றுமதியாளர்கள் தூண்டப்படுவர்.

- நிலையான நாணயமாற்று விகித முறைமை ஒரு நாட்டுக்குப் பாதகமாக அமைவது கீழ்த் தரப்படும் வகையிலாகும்.
  - வெளிவாரி சமநிலை (சென்மதி நிலுவை சமநிலை)யைப் பேணுவதற்கு உள்வாரி சமநிலையை (மொத்தக் கேள்வியையும் மொத்த நிரம்பலையும் சமநிலையில் பேணிச் செல்லல்) தியாகம் செய்ய வேண்டி இருத்தல். சென்மதி நிலுவைப் பற்றாக்குறை யொன்று ஏற்படுமாயின், அதனைச் சமப்படுத்துவதற்கு உள்நாட்டுப் பொருளாதாரத்தில் பொருளாதாரச் சுருக்கியொன்றை அமைக்க வேண்டி ஏற்படும்.
  - நிலையான நாணயமாற்று விகிதத்தில் மிகைக் கணிப்பீடு அல்லது குறைக் கணிப்பீடு காணப்படுமாயின் அது நிரந்தரமாகவே சென்மதி நிலுவைப் பற்றாக்குறை அல்லது மிகுநிலை ஏற்படுவதற்குக் காரணமாகும்.
  - நிலையான நாணயமாற்று விகிதத்தை நடைமுறைப்படுத்திச் செல்லும்போது மிகைக் கணிப்பீட்டினால் ஏற்படும் வெளிநாட்டு நாணயப் பற்றாக்குறையினை நிதிப்படுத்துவதற்கு நாணய அதிகாரி பெரியளவான வெளிநாட்டு நாணய ஒதுக்குகளைப் பேண வேண்டி ஏற்படும். அது பெருமளவான நிதியினைச் செயற்படாத நிலையில் வைத்திருக்கின்ற ஒரு நிலைமையாகும்.
  - வெளிநாட்டு நாணய ஒதுக்கு முடிவடைகின்றபோது பற்றாக்குறையினை ஈடுசெய்து கொள்வதற்கான மாற்று வழிகளாக இறக்குமதிக் கட்டுப்பாடு போன்ற பாதுகாப்புக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டி ஏற்படுவதனால் திறந்த பொருளாதாரத்தினால் கிடைக்கக்கூடிய நலன்கள் குறைவடையும்.
- வெளிநாட்டு நாணயக் கேள்வி மற்றும் நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் நிரந்தரமாகவே மாற்றமடைகின்ற நாணயமாற்று விகிதம் நெகிழும் நாணயமாற்று விகிதம் மிதக்கும் நாணய மாற்று விகிதம் என அழைக்கப்படும்.
- 1970 இன் பின்னர் உலகில் பல நாடுகளில் உலகில் பல நாடுகளில் நெகிழும் நாணய மாற்று வீத முறை பின்பற்றப்பட்டது. வெளிநாட்டு நாணயமொன்றிற்கு காணப்படும் கேள்வி உயர்வடையும்போது வெளிநாட்டு நாணய மாற்று வீதம் உயர்வடைவதுடன் வெளிநாட்டு நாணயமாற்றிற்கு காணப்படும் கேள்வி குறைவடையும். வெளிநாட்டு நாணயமாற்று வீதம் உயர்வடைவதனால் உள்நாட்டு பணத்தின் வெளிநாட்டு பெறுமதி குறைவடையும். இது பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சி எனப்படும்.


- நெகிழும் நாணயமாற்று விகித அசைவுகளுக்குத் தாக்கம் செலுத்துவது ஒரு நாட்டினுள் வருகின்றதும் வெளிச் செல்வதுமான பாய்ச்சல்களாகும். அதாவது சென்மதி நிலுவை அட்டவணையில் பெறுகை மற்றும் செலுத்தல் பகுதியின் கொடுக்கல் வாங்கல்கள் நாணயமாற்று விகித வேறுபாடுகளுக்குக் காரணமாகின்றன.
- சென்மதி நிலுவை அட்டவணையில் ஏற்றுமதி விரைவாக வளர்ச்சி அடையும்போது நெகிழும் நாணயமாற்று விகிதம் கீழ்நோக்கிச் செல்லும் பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி உயர்வடையும்.
- இது பின்வரும் வரைபில் காட்டப்படும்.

வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் $\frac{R_S}{\$}$




- சென்மதி நிலுவை அட்டவணையில் இறக்குமதி விரைவாக அதிகரிக்கும்போது நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதம் மேல்நோக்கிச் செல்லும் பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி கீழ்நோக்கிச் செல்லும்.

வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் $\frac{R_S}{\$}$



- நெகிழும் நாணயமாற்று விகிதத்தின் மூலம் சென்மதி நிலுவை தன்னியல்பாகவே சமநிலையடையும் பொறிமுறையொன்று உருவாகும். சென்மதி நிலுவை அட்டவணையில் பற்றாக்குறை காணப்படும்போது வெளிநாட்டு நாணயத்துக்கான கேள்வி அதிகரித்தல், நிரம்பல் குறைவடைதல் மூலம் நாணயமாற்று விகிதம் மேல்நோக்கிச் செல்லத் தொடங்கும். அப்போது பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி குறைவடைந்து ஏற்றுமதி அதிகரிக்கும். இறக்குமதி குறைவடையும் சென்மதி நிலுவை அட்டவணையில் மிகு நிலை காணப்படும்போது வெளிநாட்டு நாணய நிரம்பல் அதிகரிக்கும். கேள்வி குறைவடையும். அப்போது நாணயமாற்று விகிதம் கீழ்நோக்கிச் செல்லத் தொடங்கும். பணத்தின் வெளிநாட்டுப் பெறுமதி அதிகரிக்கும். அப்போது இறக்குமதி அதிகரிக்கும். சென்மதி நிலுவை சமநிலை அடையும்.
- நெகிழும் நாணயமாற்று விகிதத்தின் நன்மைகள் கீழே தரப்படுகின்றன.
  - நெகிழும் நாணயமாற்று விகிதமானது வெளிநாட்டுச் செலாவணி கேள்வியும் நிரம்பலும் சமப்படுகின்ற சமநிலை நாணயமாற்று விகிதம் என்பதால் நாணயமாற்று விகிதத்தின் மிகைக் கணிப்பீட்டுக்கோ குறைக் கணிப்பீட்டுக்கோ இடமில்லை.
  - யதார்த்தமான நாணயமாற்று விகிதமொன்று காணப்படுவதனால் உலக ரீதியாகப் பொருளாதார வளங்கள் மாற்றுப் பயன்பாடுகளிடையே மிகவும் வினைத்திறனுள்ள வகையில் பங்கீடு செய்யப்படும்.
- நெகிழும் நாணயமாற்று வீத முறைமையின் கீழ் வெளியக சமநிலையானது தன்னிச்சை யாகவே உருவாகுவதனால் கொள்கை வகுப்பாளர்களுக்கு உள்ளக சமநிலையை ஏற்படுத்துவதற்கு தமது முழு அளவிலான முயற்சியை மேற்கொள்ளலாம்.
- நாணயக் கொள்கையானது வெளியக காரணிகளின் தாக்கத்திலிருந்து முழுமையாக சுதந்திரமடைந்திருப்பதனால் உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கு நிதிக் கொள்கைகளைச் சுதந்திரமாகப் பயன்படுத்தலாம்.
- வெளிநாட்டு நாணயமாற்று வீதத்தை தீர்மானிக்கும்போது வெளிநாட்டு நாணயமாற்றுச் சந்தையில் கேள்வியும் நிரம்பலும் சமநிலை அடையும்போது வெளிநாட்டு நாணயமாற்றில் மிகையோ அல்லது குறையோ ஏற்படாது. இதனால் பெருமளவில் வெளிநாட்டு ஒதுக்கு களை பேண வேண்டிய அவசியம் ஏற்படாது.
- ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டிற்கு பாதுகாப்பான செயற்பாடுகளை மேற்கொள்ள அவசியம் ஏற்படாததனால், தாராள வர்த்தகத்தின் மூலம் சமூக நலனை உச்ச மட்டத்தில் அனுபவிப்பதற்கு வாய்ப்பு தோன்றும்.
  - நெகிழ்வுள்ள நாணயமாற்று விகித முறையின் தீமைகள் கீழே காட்டப்படுகின்றன.
    - நாணயமாற்று வீதம் அடிக்கடி கூடிக் குறைவதனால் சர்வதேச வர்த்தகத்தின் விருத்திக்கு நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதம் ஒரு தடையாகும்.
    - நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் கடன் நிரம்பலாளருக்கும் மிகவும் நிச்சயமற்ற நிலைமையொன்றை ஏற்படுத்தும்.
    - நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதமொன்று காணப்படுகையில் வெளிநாட்டு நாணயச் சந்தை தொடர்பான உத்தேச நோக்கச் செயற்பாடுகள் அதிகரிக்கும். அப்போது நாணய மாற்று விகித தளம்பல்கள் மேலும் மேலும் தீவிரமடையும்.

- அடிக்கடி மாற்றமடையக்கூடிய நாணயமாற்ற விகிதம் என்பதனால் மொத்தப் பொருளாதாரத்தினதும் விழுமியங்களைப் பேணுவது கஷ்டமானதாக இருக்கும்.
- வெளிநாட்டு நாணயத் தளம்பல்களினால் ஏற்றுமதியாளர்களுக்கு நன்மை கிடைக்கக் கூடும் என்பதனால் ஏற்றுமதிப் போட்டித் தன்மையை விருத்தி செய்து கொள்வதற்கு காட்டும் ஆர்வம் குறைவடையும்.

- மிதக்கும் நாணயமாற்று விகிதம் என்பது நிலையான நாணயமாற்று விகிதத்தினதும் நெகிழும் நாணயமாற்று விகிதத்தினதும் கலப்பு நிலையாகும். நிலையான நாணய மாற்று விகிதத்தினதும் நெகிழும் நாணயமாற்று விகிதத்தினதும் நன்மைகளைப் பெற்றுக் கொள்வதற்காக மிதக்கும் நாணயமாற்று விகிதம் தயாரிக்கப்பட்டுள்ளது.
- நிலையான நாணயமாற்று விகிதமொன்றைப் பின்பற்றுகின்ற ஒரு நிலைமையில் அதனைக் குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் மாற்றமடைவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அவ் வெல்லையை மீறி மாற்றமடையுமாயின் நாணய அதிகாரி வெளிநாட்டு நாணய சந்தையினுள் பிரவேசித்து வெளிநாட்டு நாணயம் / உள்நாட்டுப் பணத்தைப் பற்றல் அல்லது கொள்வனவு செய்தல் மூலம் வெளிநாட்டு நாணய விகிதத்தின் பாரியளவான தளம்பல்களைக் கட்டுப்படுத்தும். அது மிதக்கும் நாணயமாற்று விகிதம் அல்லது முகாமை செய்யப்பட்ட மிதக்கும் நாணயமாற்று விகிதம் என அழைக்கப்படும்.
- இவ்வாறு நாணய அதிகாரி வெளிநாட்டு நாணயச் சந்தையில் தலையிடும் தன்மை குறுங்கால அடிப்படையாக இருப்பினும் அதன் நோக்கம் நாணயமாற்று விகிதத்தில் சமகால நிலைப்பாடொன்றை ஏற்படுத்துவதேயாகும்.
- குறிப்பிட்ட ஒரு நாட்டில் சட்டமுறைப் பண அலகு ஒன்றுக்கான வெளிநாட்டு நாணய மாற்று விகிதம் பல்வேறு வெளிநாட்டு சட்டமுறைப் பணத்துக்குச் சார்பாகப் பல்வேறு அளவுகளிலும் பல்வேறு திசைகளிலும் மாற்றமடையும்போது அம்மாற்றங்களில் நடுப் பெறுமதியை அளவிடுவதற்காகப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதம் கணிப்பிடப் படுகிறது.
- பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதத்தின் வடிவங்கள் இரண்டாகும்.
  - பெயரளவுப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதம்
  - மெய்ப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதம்
- பெயரளவுப் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதம் என்பது, இலங்கையுடன் சர்வதேச வர்த்தகத்திலீடுபடும் பிரதான 24 நாடுகளின் பெயரளவு நாணயமாற்றின் அடிப்படையில், அந்நாடுகளுக்கு இடையில் இடம்பெறும் வெளிநாட்டு வர்த்தகத்திற்கு ஏற்ப இறையிட்டு கணிப்பீடு செய்யப்படும் சராசரி நாணயமாற்று விகிதம் ஆகும்.
- மெய் பயனுறுதி வாய்ந்த நாணயமாற்று விகிதம் என்பது இலங்கையினதும் வெளிநாட்டு வர்த்தகத்திலீடுபடும் நாடுகளினதும் பணவீக்க வீதங்களுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை சராசரி பெயரளவு நாணயமாற்று வீதத்துடன் சீராக்கம் செய்து தயாரிக்கப் படும் நாணயமாற்று வீதமாகும்.

- பெயரளவு நாணயமாற்று வீதத்திற்கும் மெய் நாணயமாற்று வீதத்திற்குமிடையிலான தொடர்பை பின்வரும் உதாரணத்தின் மூலம் தெளிவுபடுத்தலாம்.

| வர்த்தக பங்காலம் | பெயரளவு நாணய மாற்று விகிதம் (R) | வெளிநாட்டு வர்த்தகத்தின் அடிப்படையில் நிறையிடல் (W) | R ×W | இலங்கையின் பணவீக்க வீதம் | வெளிநாட்டு பணவீக்க வீதம் | மாற்றம் |
|---|---|---|---|---|---|---|
| (1) ஐக்கிய அமெரிக்கா | 1$= 150/= | 30 | 4500 | 8 | 10 | -2 |
| (2) ஐக்கிய இராச்சியம் | 1$= 200/= | 20 | 4000 | 8 | 12 | -4 |
| (3) இந்தியா | 1 Rs = 225 | 50 | 112.50 | 8 | 5 | +3 |
| (4) சீனா | 1U = 2/= | 10 | 20 | 8 | 10 | -2 |
| (5) ஜப்பான் | 1F = 2/= | 5 | 10 | 8 | 5 | +3 |
| | | $\sum W = 100$ | 8642.50 $\sum RW$ | | | -8+6=-2 |

பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணய மாற்று வீதம் $= \frac{E_{RW}}{E_W}$

$$= \frac{8642.50}{100}$$

$$= \underline{\underline{86.42}}$$

பெயரளவு நாணயமாற்று வீதம் 86.42 என்பதன் கருத்து, மேலே காட்டிய இலங்கை யுடன் வெளிநாட்டு வர்த்தகத்திலீடுபடும் எந்தவொரு நாட்டினதும் சராசரி நாணயமாற்று வீதம் 86.42 என்பதாகும்.

மேலுள்ள பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்திற்கு ஒவ்வொரு நாட்டிலும் காணப்படும் பணவீக்க வீதத்தினதும் இலங்கையின் பணவீக்க வீதத்தினதும் மாற்றத்தின் சராசரியை சீராக்கம் செய்தால் மெய் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம் கிடைக்கும்.

மெய் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று = பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று + இரு நாடுகளினதும் நாணயமாற்று வீத மாற்றத்தின் சராசரி

$$= 86.42 + (-2)$$

$$= \underline{\underline{84.42}}$$

- இலங்கையின் பணவீக்க வீதத்தை விட வெளிநாட்டு வர்த்தகத்திலீடுபடும் நாட்டின் பணவீக்க வீதம் உயர்வாக இருப்பின் பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்தை விட மெய்பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம் குறைந்த பெறுமதியைக் கொள்ளும்.

- இலங்கையின் பணவீக்க வீதத்தை விட வெளிநாட்டு வர்த்தகத்திலீடுபடும் நாட்டின் பணவீக்க வீதம் குறைவாக இருப்பின் பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்தை விட மெய்யைக் கொண்டிருக்கும்.
- பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்தின் தன்மையாக பல்வேறான நாடுகளின் பெயரளவு நாணயமாற்று வீதமானது தளம்பல் அடையும் நிலை காணப்படும். இந்நிலையில் இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதியை திட்டவட்டமாக கூற முடியாத நிலை காணப்படும். இதற்கு ஒரு தீர்வாக வெளிநாடுகளின் பெயரளவு நாணய மாற்று வீதத்தின் இடைப்பெறுமதியாக பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்திற்கு ஏற்ப உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டு பெறுமதியை திட்டவட்டமாகக் கூற முடிகின்றது.
- மெய் நாணய மாற்று வீதத்தின் தன்மையாக, குறித்த நாட்டின் ஏற்றுமதியின் போட்டித் தன்மையை அளவீடு செய்வதற்கு ஒரு சுட்டியாக பயன்படுத்த முடிகின்றது. மெய் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதமானது பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்திற்கு வர்த்தக பங்காளி நாடுகளின் பணவீக்க வீதத்திற்கும், குறித்த நாட்டின் பணவீக்க வீதத்திற்குமிடையிலான வேறுபாட்டினை சீராக்குவதன் மூலம் கணிப்பீடு செய்யப்படும்.
- பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்தை விட மெய் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம் குறைந்த பெறுமதியைப் கொண்டிருப்பதானது, குறித்த நாட்டின் பணவீக்க வீதமானது வர்த்தகப் பங்காளி நாட்டின் பணவீக்க வீதத்தை விட குறைவாக இருப்பதாகும். இதனால் நாட்டின் ஏற்றுமதியின் போட்டித்தன்மை உயர்ந்த மட்டத்தில் இருப்பது தெளிவுபடுத்தப்படும்.
- பெயரளவு பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதத்தை விட மெய் பயனுறுதிவாய்ந்த பாதுகாப்பு வீதமானது உயர்ந்த பெறுமதியைப் பெறுவதன் மூலம் கருதப்படுவது, வர்த்தகப் பங்காளி நாட்டின் பணவீக்க வீதத்தை விட, குறித்த நாட்டின் பணவீக்க வீதம் உயர்வாக உள்ளது என்பதாகும். இதன் மூலம் குறித்த நாட்டிற்கான ஏற்றுமதியின் போட்டித்தன்மை குறைந்த மட்டத்தில் உள்ளது என்பது தெளிவுபடுத்தப்படும்.
- பெயரளவு பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதத்தை மெய் பயனுறுதிவாய்ந்த நாணய மாற்று வீதத்துடன் ஒப்பீடு செய்வதன் மூலம் உள்நாட்டு பெயரளவு நாணயமாற்று வீதமானது மிகை மதிப்பீடா அல்லது குறை மதிப்பீடா அல்லது சம மதிப்பீடா செய்யப் பட்டுள்ளது என்பதை அளவீடு செய்யலாம்.
- பெயரளவு நாணயமாற்று வீதம் என்பது இரு நாடுகளுக்கிடையில் நிலவும் விலை மட்ட வேறுபாட்டை சீராக்கிய பெயரளவு நாணயமாற்று வீதமாகும். இது கணிப்பீடு செய்யும் முறை வருமாறு:

$$RER = NER\ (Pd / Pf)$$

RER - மெய் நாணயமாற்று வீதம்

NER - பெயரளவு நாணயமாற்று வீதம் (ரூபாவினால் கொள்வனவு செய்யக்கூடிய வெளிநாட்டு சட்டப் பண அலகுகளில் அளவு)

Pd - உள்நாட்டு விலை மட்டம்

Pf - வெளிநாட்டு விலை மட்டம்

**உதாரணம்:-** ஐக்கிய அமெரிக்க டொலர் 1 = 150/= (இலங்கை)

இலங்கையின் விலைமட்டம் = 110/=

அமெரிக்காவின் விலைமட்டம் = 220/=

மெய் நாணயமாற்று வீதம் $= \frac{1}{150} \times \frac{110}{220}$

$= \underline{\underline{0.0033}}$

- மெய் பயனுறுதிவாய்ந்த நாணயமாற்று வீதம் மாற்றமடையக்கூடிய முறைகள் இரண்டாகும்.

  (1) மெய் நாணயமாற்று வீதம் வீழ்ச்சியடைதல்.

  (2) மெய் நாணயமாற்று வீதம் உயர்வடைதல்.

- மெய் நாணயமாற்ற வீதம் வீழ்ச்சியடைவது என்பது வருட ஆரம்பத்தின் மெய் நாணய மாற்று வீதத்துடன் ஒப்பிடுகையில் வருட இறுதியின் மெய் நாணயமாற்று வீதம் குறைந்த பெறுமதியைக் கொள்வதாகும்.

  உதாரணமாக,

  வருட ஆரம்பத்தில் மெய்நாணய மாற்று வீதம் இலங்கை ஒரு ரூபா = $ 0.03 இருந்து வருட இறுதியில் மெய் நாணயமாற்று வீதம் இலங்கை ஒரு ரூபா =$ 0.01 வரை குறைந்துள்ளது.

- மெய் நாணயமாற்று வீழ்ச்சியடையும் சந்தர்ப்பங்கள் வருமாறு:
  - உள்நாட்டு, வெளிநாட்டு விலை மட்டங்கள் நிலையாக இருக்கும்போது பெயரளவு நாணயமாற்று வீழ்ச்சியடைதல்.
  - பெயரளவு நாணயமாற்று வீதமும் வெளிநாட்டு விலை மட்டமும் நிலையாக இருக்கையில் உள்நாட்டு விலைமட்டம் வீழ்ச்சியடைதல்.
  - பெயரளவு நாணயமாற்று வீதமும் உள்நாட்டு விலைமட்டமும் நிலையாக இருக்க வெளிநாட்டு விலை மட்டம் உயர்வடைதல்.
- மெய் நாணயமாற்று வீதம் வீழ்ச்சியடைவதனால் பின்வரும் விளைவுகள் தோன்றும்.
  - ஏற்றுமதிக்கான போட்டித்தன்மை கூடி ஏற்றுமதி தைரியப்படுத்தப்படும்.
  - இறக்குமதி அதைரியப்படுத்தப்படும்.
  - வர்த்தக நிலுவையில் சாதகமான போக்கு தோன்றும்.
- சமநிலை நாணயமாற்று வீதம் தொடர்பாக கலந்துரையாடும்போது கொள்வனவு சக்தி சமமதிப்பு நாணமாற்று வீதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எண்ணக்கருவாகும்.

- வர்த்தகத்தில் ஈடுபடும் ஒரேவகையான பண்டக்கூடையின் பெறுமதியானது இரு நாடுகளினதும் உள்நாட்டு நாணய அலகுகளில் கணிப்பீடு செய்தால், அவ்விரு பெறுமதி களுக்கிடையிலான விகிதமானது கொள்வனவு சக்தி சமமதிப்பு வீதமாகும்.

**உதாரணம்:-**

ஒரேவகையான பண்டக்கூடையின் விலை = 1000 ரூபா

அப்பண்டக்கூடையின் வெளிநாட்டு விலை = $20

இதன்படி கொள்வனவு சக்தி சம மதிப்பு = $ 20 = 1000 ரூபா

$$\$\ 1 = \frac{1000}{20} \text{ ரூபா}$$

$$= 50 \text{ ரூபா}$$

- இதிலிருந்து ஐக்கிய அமெரிக்காவில் டொலரின் கொள்வனவு சக்தி இலங்கையின் 50 ரூபாவிற்கு சமனாகும்.
- பெயரளவு நாணயமாற்று வீதம், கொள்வனவு சக்தி சம மதிப்பு இடையே வேறுபாடு காணப்பட்டாலும் கூட நீண்ட காலத்தில் சமநிலை நாணயமாற்று வீதமானது கொள்வனவு சக்தி சமமதிப்பை நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.
- இரு நாடுகளுக்கிடையில் பெயரளவு நாணயமாற்று வீதமும் கொள்வனவு சக்தி சம மதிப்பும் சமப்படுமாயின், இரு நாடுகளினதும் பண்டங்களின் விலைக்கு சமப்படும் என்பதை குறிக்கும். இதனால் ஒரு நாட்டை மீறியதாக இன்னுமொரு நாட்டிற்கு போட்டியின் நன்மையைப் பெறமுடியாதுள்ளது.

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.7:** **நாணயமாற்று விகிதம் மாற்றமடைதல் மற்றும் அதன் விளைவுகளை விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 06

**கற்றற் பேறுகள்:**

- நாணயமாற்று விகிதம் மாற்றமடையும் விதத்தை விளக்குவார்.
- நாணயமாற்று விகித மதிப்பிறக்கம், தேய்வு என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- மதிப்பிறக்கத்தின் விளைவுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- நாணய மதிப்பிறக்கம், பெறுமதி உயர்வடைதல் என்பவற்றை வரைவிலக்கணப் படுத்துவார்.
- மதிப்பேற்றத்தின் விளைவுகளை உதாரணங்களுடன் விளக்குவார்.
- நாணய மதிப்பிறக்கத்தினால் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் நிறைவேறுவதற்கு இருக்க வேண்டிய நிபந்தனைகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வெளிநாட்டு நாணயத்துக்குக் காணப்படும் கேள்வி, நிரம்பல் அடிப்படையில் நாணய மாற்று விகிதம் மாற்றமடையக்கூடும். அது நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதத்தினுள் நடைபெறுகிறது.

  உதாரணம்:- வணிக வங்கிகளில் நாளாந்தப் பல்வேறு நாணயமாற்று விகிதங்களின் பெறுமதி காட்சிப்படுத்தப்படுகிறது. அத்தகைய காட்சிப் பலகை ஒன்றில் காட்டப்படும் நாணயமாற்று விகித மாற்றங்களுக்கேற்ப பொருளாதாரத்தில் வெளிநாட்டு நாணயங்களின் கொள்வனவு, விற்பனவு நடைபெறுகிறது.

- வெளிநாட்டு நாணயமாற்று விகிதம் மாற்றமடைவதில் தாக்கம் செலுத்தும் பல காரணிகள் உள்ளன.
  - சர்வதேச வர்த்தகம்
  - மூலதன அசைவு
  - விலைத்தளம்பல்
  - உத்தேச நோக்கம்
  - பொருளாதார சக்தி
  - அரசாங்கத்தின் கொள்கை
  - பங்குச் சந்தை நடவடிக்கைகள்
  - அரசியல் நிலைமை
- நாணயமாற்று விகிதம் மதிப்பிறக்கமும் மதிப்பேற்றமும் நிலையான மாற்று விகிதத்தின் கீழ் நடைபெறும்.

- நாணயமாற்று விகிதம் தேய்வடைதல் மற்றும் மதிப்பு உயர்வடைதல் என்பன நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதத்தின் கீழ் நடைபெறும்.

- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வர்த்தகத்துக்குக் காணப்படும் கேள்வி, நிரம்பல் சக்திகளின் அடிப்படையில் நாணயமாற்று விகிதம் மாற்றமடையும்.

  உதாரணம்:-

  (1) இலங்கையின் ஏற்றுமதியாளர் ஒருவருக்கு ஐக்கிய இராச்சியத்தின் இறக்குமதியாளர் கொடுப்பனவு செய்ய வேண்டியது ஸ்டேலிங் பவுணிலாகும்.

  (1) ஆம் உதாரணத்தின்படி வெளிநாட்டு நாணய நிரம்பல் உயர்வடையும்போது ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி அதிகரிக்கும்.

  (2) இலங்கையில் இறக்குமதியாளர் ஒருவர் யப்பானிலிருந்து மோட்டார் வாகனம் இறக்குமதி செய்யும்போது யப்பானின் ஏற்றுமதிக் கம்பனிக்கு யென் மூலம் கொடுப்பனவு செய்ய வேண்டும்.

  (2) ஆம் உதாரணத்தின்படி வெளிநாட்டு நாணயத்தின் கேள்வி அதிகரிப்பின் காரணமாக இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி தேய்வடைதலுக் குட்படும்.

- வெளிநாட்டு முதலீடு அதிகரித்தல் ஒரு நாட்டுக்கு மூலதன அசைவொன்றாகையால் வெளிநாட்டு நாணய நிரம்பல் அதிகரிக்கும். வெளிநாட்டு நாணய நிரம்பல் அதிகரிக்கும் போது ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி வலுப்படுத்தப்படும்.

- பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் பொது விலைமட்டம் தளம்பல் அடைவதற்குச் சார்பாக சர்வதேச ரீதியில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்ற நாடுகளின் பொருட்கள் சேவைகளின் விலைமட்டம் மாற்றமடைவது நாணயமாற்று விகித மாற்றத்தில் தாக்கம் செலுத்தும்.

  உதாரணம்:- இலங்கையின் பொருட்கள் சேவைகளின் பொது விலைமட்டம் உயர்வடை வதற்குச் சார்பாக இந்தியாவில் விலைமட்டம் குறைவாயின் இந்திய ரூபாய்களுக்குச் சார்பாக இலங்கை ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி தேய்வடையும்.

- வெளிநாட்டு நாணயத்தைச் சேகரித்தல், விற்பனை செய்தல் என்பவற்றின் அடிப்படையில் நாணயமாற்று விகிதம் மாற்றமடையும். உத்தேச நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் நாணயத்தைச் சேகரிப்பதிலும் விற்பனை செய்வதிலும் ஈடுபடுவர். எதிர்காலத்தில் இலாபம் உழைப்பதற்காக நாணயத்தைச் சேகரிப்பர். அது வெளிநாட்டு நாணயமாற்று வீதம் மாற்றமடைவதில் தாக்கம் செலுத்தும்.

- அரச கொள்கைகளில் நாணயமாற்றுக் கொள்கையை தளர்த்துவதனால், நாட்டினுள் உட்பாய்ச்சப்படும் நாணயமாற்று நிரம்பலில் உயர்வு, தாழ்வு ஏற்படலாம். இது நாணய மாற்று வீத வேறுபாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

- பங்குச் சந்தை உயர்வடைதல் நாணய நிரம்பல் உயர்வடைவதிலும் வீழ்ச்சி அடைவதிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதுவும் நாணயமாற்று விகித மாற்றத்தில் தாக்கம் செலுத்தும்.

- அரசியல் உறுதியும் உறுதியின்மையும் நாணயமாற்று விகித மாற்றத்தில் தாக்கம் செலுத்தும்.

  உதாரணம்:- இலங்கையில் சுமார் 30 வருட காலமாக காணப்பட்ட அரசியல் உறுதி யின்மை நாணயமாற்று விகித தேய்வுக்கு ஒரு காரணமாகும்.

- நிலையான நாணயமாற்று விகிதத்தின் கீழ் நாணய அதிகாரிகள் உத்தியோகபூர்வ ஒதுக்குகளை மாற்றியமைத்தல் நாணயமாற்று விகித மதிப்பிறக்கம் மற்றும் மதிப் பேற்றத்தை ஏற்படுத்தும். சென்மதி நிலுவைப் பற்றாக்குறை தொடர்ச்சியாகக் காணப்படு மாயின் உத்தியோகபூர்வ நாணயமாற்று விகிதத்தை விட அதிகமாக அதனை வீழ்ச்சி யுறச் செய்தல் நாணயமாற்று விகித மதிப்பிறக்கம் என அழைக்கப்படும்.

- நெகிழ்வுள்ள நாணயமாற்று விகிதத்தின் கீழ் நாணயமாற்று விகிதம் தேய்வடைதலுக்கு வழிசெய்ய முடியும். நாணய விகிதத் தேய்வு எனப்படுவது உள்நாட்டுச் சட்ட முறைப் பண அலகின் பெறுமதி வெளிநாட்டுப் பண அடிப்படையில் வீழ்ச்சி அடைவதாகும்.

  உதாரணம்:- நேர் முறையின் அடிப்படையில் அமெரிக்க டொலரின் விலை ரூபா 100 ஆக இருந்து பின்னர் அது 114 ரூபா வரை அதிகரிப்பின் அதன் மூலம் கருதப்படுவது வெளிநாட்டு நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி அல்லது தேய்வடைதலுக்குட்பட்டிருக்கின்றதென்பதாகும்.

- நாணயமாற்று விகித மதிப்பிறக்கம் அல்லது தேய்வு இரண்டு சந்தர்ப்பங்களின் அடிப்படை யில் நடைபெற்றாலும் அதன் விளைவானது ஒன்றுக்கொன்று சமனாகும்.

- நாணயமாற்று விகித மதிப்பிறக்கத்தின் பொருளாதார விளைவுகள் கீழே காட்டப்படுகின்றன.
  - இறக்குமதிகளின் உள்நாட்டு விலைகள் உயர்வடைதல்.
  - முன்னரை விட இறக்குமதிச் செலவுகள் அதிகரித்தல்.
  - உள்நாட்டுக் கேள்வி இறக்குமதிகளின் மீது தங்கி இருக்குமாயின் உள்நாட்டுப் பணவீக்கம் உயர்வடைய முடியும்.
  - வெளிநாட்டுக் கடன் தவணைக் கொடுப்பனவுகள், வட்டி என்பன உயர்வடைதல்.
  - சுற்றுலா உழைப்புக்கள் அதிகரிக்கும் அதேவேளை சென்மதி நிலுவை அட்டவணையில் சேவைக் கணக்கின் மீதி சாதகமாக அமையும்.
  - இலங்கையில் மத்திய கிழக்கு உட்பட வெளிநாடுகளில் வேலை செய்வோரது பண அனுப்பல்கள் அதிகரிப்பதன் காரணமாக மாற்றல் கணக்குச் சாதகமாக அமையும்.
  - இறக்குமதி விலைகள் அதிகரிப்பதனால் இறக்குமதிகள் குறைவடைந்து இறக்குமதிக் கான கேள்வி உள்நாட்டுப் பண்டங்களை நோக்கித் திரும்பும்.
  - ஏற்றுமதிப் பண்டங்களுக்காக கேள்வி அதிகரித்து ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் அதிகரிக்கக் கூடும்.

    உதாரணம்:- நேர்முறையின் அடிப்படையில் டொலர் ஒன்றின் பெறுமதி ரூபா 100 ஆகும். இலங்கையில் ஆடை ஏற்றுமதியில் அலகொன்றுக்கான பெறுமதி ரூபா 100 ஆகும். நாணயமாற்று விகிதத் தேய்வின் பின்னர் டொலரின் பெறுமதி 150 ரூபா ஆகுமெனின் ஆடை ஏற்றுமதி ஓரலகிற்காகச் செலுத்த வேண்டியிருப்பது 0.66 டொலராகும். இதனால் ஏற்றுமதிக் கேள்வி அதிகரிக்கும்.

- நாணயமாற்று விகித மதிப்பபேற்றம் என்பது உள்நாட்டுப் பண அலகொன்றின் விலை வெளிநாட்டுப் பண அடிப்படையில் உயர்வடைவதாகும்.

  உதாரணம்:- நேர்முறையின் அடிப்படையில் டொலரொன்று ரூபா 114க்கு பரிமாற்றம் செய்யப்படுகையில் டொலரின் விலை 100 ரூபா வரை மாற்றமடையு மாயின் அதனால் கூறப்படுவது நாணயமாற்று விகிதப் பெறுமதி அதிகரிப்பாகும். இதனால் வெளிப்படுத்தப்படுவது டொலருக்குச் சார்பாக ரூபாவின் பெறுமதி உயர்வடைந்துள்ளமையால் ரூபாவைக் கொள் வனவு செய்வதற்கு அதிகளவான டொலர்களைச் செலுத்த வேண்டி யுள்ளது என்பதாகும்.

- நெகிழ்வுள்ள மாற்று விகிதத்தின் கீழ் கூட நாணயமாற்று விகிதம் உயர்வடையலாம். நாணய மதிப்பேற்றம் அல்லது அதிகரிப்புக் காரணமாக ஏற்படும் விளைவுகள் ஒன்றுக் கொன்று சமனாகும்.
- நாணய மதிப்பேற்றத்தின் விளைவுகளைப் பின்வருமாறு காட்டலாம்.
  - இறக்குமதிகளின் உள்நாட்டு விலைகள் குறைவடைதல்.
  - பணவீக்க விகிதம் வீழ்ச்சி அடையும். (இறக்குமதியில் தங்கியிருக்குமாயின்)
  - வெளிநாட்டு கடன்களின் உள்நாட்டு பணத்தின் பெறுமதி வீழ்ச்சியடைதல்.
  - வெளிநாட்டுக் கடனை திருப்பிச் செலுத்துவதற்கான செலவு குறைவடைதல்.
  - இறக்குமதிகளின் உள்நாட்டு விலை வீழ்ச்சி அடைந்தமை காரணமாக இறக்குமதிக் கேள்வி விரிவடைந்து இறக்குமதிச் செலவு அதிகரிக்கும்.
  - அதனால் வர்த்தக மீதியில் ஏற்படும் பாதகநிலை.
  - ஏற்றுமதியாளருக்குக் கிடைக்கின்ற அந்நிய செலாவணி வருமானங்களது உள்நாட்டுப் பண அடிப்படையிலான பெறுமதி குறைவடைவதனால் ஏற்றுமதிகள் குறைவடைதல்.
  - வெளிநாட்டு வேலைவாய்ப்பில் உள்ளவர்களது சம்பாத்தியங்களுக்கான உள்நாட்டு பண ரீதியான பெறுமதி குறைவடைகின்றமையினால் வேலைவாய்ப்பில் உள்ளோ ருக்குத் தீமை பயக்கும்.
- நாணயமாற்று விகித மதிப்பிறக்கத்தினால் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் பலவாகும்.
  - சென்மதி நிலுவை அட்டவணையின் நீண்டகாலப் பற்றாக்குறை குறைவடைதல்.
  - இறக்குமதிக்கான கேள்வி குறைவடைதல்.
  - ஏற்றுமதி நிரம்பல் குறைவடைதல்.
  - வேலைவாய்ப்பில் உள்ளோரின் பண அனுப்பல்கள் அதிகரிக்கும்.
  - வெளிநாட்டு நேரடி முதலீடுகள் அதிகரித்தல்.
- இந்த எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக நிறைவேற்றப்பட வேண்டிய நிபந்தனைகள் சில:

  (i) ஏற்றுமதிக்கான வெளிநாட்டவரது கேள்வி நெகிழ்வுள்ளதாக இருத்தல்.

  (ii) இறக்குமதிக்காகக் காணப்படும் உள்நாட்டு விலைகள் நெகிழ்வுள்ளதாக இருத்தல்.

(iii) ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான கேள்வியைத் தனித்தனியாகப் பார்க்கும்போது விலைக்கேள்வி நெகிழ்ச்சி ஒன்றை விடக் கூடிய பெறுமதியைப் பெறல்.
(மார்ஷல் - லேனர் நிபந்தனை)

(iv) ஏற்றுமதி தொடர்பான உள்நாட்டு நிரம்பல் குறைவடைதல்.

(v) உள்நாட்டு விலை மட்டம் நிலையாக இருத்தல்.

- நாணயமாற்று மதிப்பிறக்கமும் தேய்வும் செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கத்தை அடைவதற்கு உள்நாட்டு விலைமட்டம் நிலையாக இருப்பது அத்தியாவசியமானதாகும். நாணயமாற்று விகிதம் மதிப்பிறக்கம் அடைவதனால் வெளிநாட்டவர்களுக்கு இலங்கையின் ஏற்றுமதிப் பண்டங்களைக் கொள்வனவு செய்வது நன்மை பயக்கக்கூடும். இலங்கையில் பொருட்கள் சேவைகளின் விலைகள் அதிகரிக்குமாயின் வெளிநாட்டு நாணயமாற்று விகித மதிப்பிறக்கத்தினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் கிடைக்காத நிலைமைகள் ஏற்படலாம்.

**தேர்ச்சி 10.0:** **இலங்கையின் சென்மதி நிலுவைச் சமமின்மையை இனங்கண்டு அதற்கான தீர்வுகளையும் செயற்பாடுகளையும் முன்வைப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 10.8:** **பல்பக்க நிதி நிறுவனங்களின் தொழிற்பாடுகளை ஆராய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- பல்பக்க நிதி நிறுவனங்களைப் பெயரிடுவார்.
- சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்களைக் காட்டுவார்.
- சர்வதேச நாணய நிதியத்தின் தொழிற்பாடுகளை விபரிப்பார்.
- உலக வங்கியின் நோக்கங்களைக் காட்டுவார்.
- உலக வங்கியின் தொழிற்பாடுகளை விபரிப்பார்.
- உலக வங்கியின் சமகால மாற்றங்களை ஆராய்வார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சர்வதேச நிதி ஒத்துழைப்பினை வலுப்படுத்தி உலக வர்த்தகத்தினை விருத்தி செய்தல், நாணயமாற்று விகிதத்தில் முறையான நிலையொன்றை ஏற்படுத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு உலக நாடுகள் ஒன்றிணைந்து தாபித்துக் கொண்ட நிதி நிறுவனங்கள் பல்பக்க நிதி நிறுவனங்கள் என அழைக்கப்படுகின்றன.
- அவ்வாறு நிறுவப்பட்டுள்ள பிரதான பல்பக்க நிதிநிறுவனங்கள் இரண்டாகும்.
  (i) சர்வதேச நாணய நிதியம்
  (ii) உலக வங்கி
- சர்வதேச நிதி ரீதியான ஒத்துழைப்பு, நாணயமாற்று விகித உறுதி மற்றும் தன்மையினை ஊக்குவிப்பதற்காகவும் பொருளாதார வளர்ச்சி, வேலைமட்டம் என்பவற்றை விருத்தி செய்வதற்குச் சென்மதி நிலுவை, செம்மையாக்கல்களை இலகுபடுத்துவதற்காகவும் அங்கத்துவ நாடுகளுக்குத் தற்காலிக நிதி உதவிகளை வழங்குவதற்காகவும் 1945 செப்டம்பர் 27 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியம் ஆரம்பிக்கப்பட்டது.
- சர்வதேச நாணய நிதியத்தின் ஆரம்ப கால அங்கத்தவர் தொகை 29 ஆக இருப்பதுடன் தற்போதைய அங்கத்தவர் தொகை 186 ஆகும்.
- சர்வதேச நாணய நிதியத்தின் நோக்கங்கள் ஆறு ஆகும்.
  (1) சர்வதேச நிதிப் பிரச்சினைகளின் போது ஆலோசனை, ஒத்துழைப்பு என்பவற்றை வழங்குகின்ற நிரந்தர நிறுவனமொன்றை நிறுவுவதன் மூலம் நிதி அடிப்படையிலான ஒத்துழைப்பை வளர்த்தல்.
  (2) சகல அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி வளங்களை விருத்தி செய்வதற்கும் உயர் வேலைவாய்ப்பு மற்றும் மெய்த் தேசிய வருமானம் என்பவற்றைப் பேணுவதற்குச் சர்வதேச வர்த்தகத்தின் சமநிலை வளர்ச்சிக்கும் அவசியமான வசதிகளை வழங்குதல்.

(3) அபிவிருத்தி நாடுகளிடையே நாணயமாற்று விகிதத்தை முறையாக நடைமுறைப் படுத்தச் செய்வதுடன் நாணயமாற்று விகித நிலையான தன்மையை ஏற்படுத்தல்.

(4) அபிவிருத்தி அடைந்த நாடுகளின் நடைமுறைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகப் பலபக்கக் கொடுப்பனவு முறையொன்றை உருவாக்குதல் மற்றும் சர்வதேச வர்த்தகத்துக்குத் தடையை ஏற்படுத்துகின்ற வெளிநாட்டு நாணய எல்லைகளை நீக்குதல்.

(5) சென்மதி நிலுவையினைச் செம்மையாக்குவதற்கு அவசியமான நிதியினை அங்கத்துவ நாடுகளுக்குத் தற்காலிகமாக பெற்றுக் கொடுத்தல்.

(6) அங்கத்துவ நாடுகளின் சென்மதி நிலுவைச் சமநிலையின்மை மற்றும் சமநிலை யின்மை காணப்படும் காலம் என்பவற்றைக் குறைத்தல்.

- சர்வதேச நாணய நிதியத்தின் தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.

(1) தேசிய பொருளாதாரம் மற்றும் உலகப் பொருளாதாரங்கள் ஆபத்தான நிலைமைக் குள்ளாகும் சந்தர்ப்பங்களில் சரியான வழிக்கு திருப்புவதற்கு அவசியமான ஆலோசனைகளை வழங்கல்.

(2) வங்கி மற்றும் நிதி நடவடிக்கைகளில் பண்புரீதியான தன்மையை ஏற்படுத்துவதற்கு அவசியமான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்தலும் ஆலோசனை வழங்குதலும்.

(3) திடீர் நிதி நெருக்கடிகளின்போது அங்கத்துவ நாடுகளுக்குத் தற்காலிக கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், நீண்டகாலப் பொருளாதாரப் பிரச்சினைகளின் போது நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பொருளாதார புனரமைப்புக் களைச் செய்து தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அவசியமான நடவடிக்கை களைச் செய்தல்.

(4) அங்கத்துவ நாடுகளுக்குத் தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தலும், அரச மற்றும் மத்திய வங்கி அலுவலர்களுக்கும் பயிற்சிகளை வழங்குதலும்.

(5) அங்கத்துவ நாடுகளிடையே அரச நிதி, வெளிநாட்டு நிதி, தேசியக் கணக்குகள் போன்ற துறைகள் தொடர்பாக தரங்களை தயாரித்தல் மற்றும் அதனடிப்படையில் தகவல்களை வெளிப்படுத்தல் மூலம் அன்னியோன்னிய புரிந்துணர்வு, கல்வி போன்றவற்றை அங்கத்துவ நாடுகளிடையே பகிரச் செய்தல்.

- அமெரிக்க ஐக்கிய குடியரசு, பெரிய பிரித்தானியா உள்ளிட்ட 42 நாடுகளின் பங்குபற்ற லுடன் 1944 ஜுலை மாதத்தில் அமெரிக்க ஐக்கிய குடியரசின் பிரெட்டன்வுட்ஸ் நகரில் நடைபெற்ற பிரெட்டன்வுட்ஸ் மாநாட்டின் விளைவாக இரண்டாம் உலக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட ஐரோப்பிய நாடுகளை மீளப் புனரமைத்தலினைச் செய்யும் நோக்கில் 1947 மார்ச் 01 ஆம் திகதி உலக வங்கி உருவாக்கப்பட்டது.
- 1946 ஆம் ஆண்டில் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்த உலக வங்கியின் ஆரம்ப கால அங்கத்தவர் தொகை 38 ஆகும். தற்போது உலகின் வறிய, செல்வந்த நாடுகள் 186 இதில் அங்கத்துவம் பெற்றுள்ளன.
- உலக வங்கி இரண்டு பிரதான நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது.

(1) மறுசீரமைப்புக்கும் அபிவிருத்திக்குமான சர்வதேச வங்கி

(2) சர்வதேச அபிவிருத்திச் சங்கம்

- உலக வங்கியின் நோக்கங்கள் கீழே தரப்படுகின்றன.
  - அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக அன்னியோன்னிய வசதிகளை வழங்குவதன் மூலம் அந்நாடுகளின் பொருளாதார அபிவிருத்தியைத் துரிதப்படுத்தல்.
  - அங்கத்துவ நாடுகளுக்கு இலகுவான நிபந்தனைகளின் கீழ் வெளிநாட்டு மூலதனம் கிடைக்காதபோது வெளிநாட்டு தனியார் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு அவசியமான வசதிகளையும் சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்தல்.
  - தனியார் முதலீடுகளுக்கு மேலதிகமாக வங்கியின் நிதி மற்றும் வேறு வழிகளில் பெறக்கூடிய நிதிகளைப் பயன்படுத்தி அங்கத்துவ நாடுகளது விளைதிறன் வாய்ந்த உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நீண்டகாலக் கடன்களை வழங்குதல்.
  - அங்கத்துவ நாடுகளுக்குக் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.
  - அங்கத்துவ நாடுகளின் உற்பத்தி வளங்களை விருத்தி செய்வதன் மூலமும் சர்வதேச முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலமும் சர்வதேச வர்த்தகத்தில் சமநிலை வளர்ச்சி யினை ஏற்படுத்தல்.
  - உலகின் வறுமையைக் குறைத்தல்.
- உலக வங்கியின் தொழிற்பாடுகள் கீழே தரப்படுகின்றன.
  - அங்கத்துவ நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்கல்.
  - அங்கத்துவ நாடுகளுக்குச் சலுகை நிபந்தனைகளின் கீழ் கடன் பெற்றுக் கொடுத்தல்.
  - வெளிநாட்டு மூலதனத்தை வரவழைத்துக் கொள்வதற்காக அங்கத்துவ நாடுகளுக்கு அவசியமான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
  - அங்கத்துவ நாடுகளின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்துவதற்காக அவசியமான செயற் திட்டங்களைத் திட்டமிடல், மேற்பார்வை செய்வதற்கு உலக வங்கியின் நிபுணர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
  - நிலைபேறுடைய அபிவிருத்தியினை ஏற்படுத்துவதற்காக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் பொருளாதார விளைதிறனை அதிகரிப்பதற்கும் சூழலைப் பாதுகாப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறைகளிடையே ஒத்துழைப்பைக் கட்டி யெழுப்புதற்கும் நடவடிக்கை எடுத்தல்.
  - அங்கத்துவ நாடுகளுக்கு உலகமயமாதல் செயற்பாட்டுக்குள் பிரவேசிப்பதற்கு அவசியமான ஒத்துழைப்பை வழங்குதல்.
  - உலக சந்தையில் முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் பாதகமான நிலைமைகளை சீராக்கிக் கொள்வதற்காக அங்கத்துவ நாடுகளுக்கு அவசியமான உதவிகளை வழங்கல்.
  - உலக மக்களுடன் நல்ல தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்காக ஒத்துழைப்பை வழங்குதல்.
  - புதிய பொருளாதாரக் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக அங்கத்துவ நாடு களுக்கு அவசியமான ஒத்துழைப்பு வழங்குதல்.

**தேர்ச்சி 11.0:** **அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.1:** **பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவத்தை மதிப்பீடு செய்து பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படையாகும் காரணிகளைப் பகுப்பாய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 08


**கற்றற் பேறுகள்:**

- பொருளாதார வளர்ச்சியினை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பொருளாதார வளர்ச்சியை அளவிடுதல் நடைபெறும் விதத்தை விளக்குவார்.
- பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பெயரிடுவார்.
- பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்தவத்தை விளக்குவார்.
- பொருளாதார வளர்ச்சியில் செலவொன்று காணப்படுகின்றதென்பதை உதாரணங்கள் மூலம் விளக்குவார்.
- இலங்கையின் அண்மைக்காலப் பொருளாதார வளர்ச்சிப் போக்கினை விளக்குவார்.
- வளர்ச்சிச் செயற்பாட்டில் வெற்றிகண்ட நாடுகளின் பொதுவான பண்புகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**


- பொருளாதார வளர்ச்சி என்பதனால் கருதப்படுவது மெய்ரீதியான மொத்தத் தேசிய உற்பத்தியின் தொடர்ச்சியான அதிகரிப்பாகும்.
- கோட்பாட்டுப் பிரவேசமொன்றின்படி வரைவிலக்கணப்படுத்தும்போது பொருளாதார வளர்ச்சி என்பது பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் உற்பத்தி இயலளவு அல்லது உத்தம உற்பத்தி விரிவடைதலாகும்.
- பொருளாதார வளர்ச்சியின்போது பொருளாதாரத்தில் மெய் உற்பத்தி நீண்டகால அடிப்படையில் விரிவடைதலொன்று ஏற்படும்.
- பொருளாதார வளர்ச்சியைக் காட்டக்கூடிய இரு முறைகள் உள்ளன.

(1) உற்பத்தி சாத்திய வளையியின் அடிப்படையில்



மேலுள்ள வரிப்படத்தில் உற்பத்தி சாத்திய வளையி $PPF_1$ இலிருந்து $PPF_2$ வரை வெளிநோக்கிய நகர்வின் மூலம் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாடு காட்டப்பட்டுள்ளது.

(2) மொத்தக் கேள்வி மற்றும் மொத்த நிரம்பல் மாதிரியின் அடிப்படையில்,




- மேலுள்ள வரிப்படத்தின்படி பொருளாதாரத்தில் நீண்டகால மொத்தக் கேள்விக்கோடு $AS_1$ இலிருந்து $AS_2$ வரை வலப்புறம் நகர்வதன் மூலம் பொருளாதாரத்தின் உத்தம உற்பத்தி மட்டத்தின் அதிகரிப்பினைக் காட்ட முடியும். உத்தம உற்பத்தி மட்டத்தின் அதிகரிப்பு மூலம் காட்டப்படுவது பொருளாதார வளர்ச்சியாகும்.
- பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்காக இரண்டு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

(1) தொடர்ந்து பல வருடங்களில் மெய்யான மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அல்லது தேறிய உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு.

(2) தொடர்ந்து பல வருடங்களில் தலா நபர் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அல்லது மெய்யான தேறிய உள்நாட்டு உற்பத்தியில் ஏற்படும் அதிகரிப்பு.

பொருளாதார வளர்ச்சி அளவிடப்படுவது பொருளாதார வளர்ச்சி விகிதத்தினாலாகும்.

$$\text{பொருளாதார வளர்ச்சி விகிதம்} = \frac{\text{குறிப்பிட்ட வருட மெய்த் உள்நாட்டு உற்பத்தி — முன்னைய வருட மெய்த் உள்நாட்டு உற்பத்தி}}{\text{முன்னைய வருட மெய்யான மொத்தத் உள்நாட்டு உற்பத்தி}} \times 100$$

உ+ம்:- குறிப்பிட்ட வருட மெய்த் உள்நாட்டு உற்பத்தி ரூபா மில்லியன் 210 எனவும் முன்னைய வருட மெய்த் உள்நாட்டு உற்பத்தி ரூபா மில்லியன் 200 எனவும் கருதுக. அப்போது,

$$\text{பொருளாதார வளர்ச்சி விகிதம்} = \frac{210-200}{200} \times 100$$

$$= \underline{\underline{5\%}}$$

- பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளைக் கீழ்க் காட்டப்படும் அடிப்படை யில் காட்டலாம்.
  - வளத் திரட்சி
  - பௌதீக மூலதனம்
    - மனித மூலதனம்
    - இயற்கை மூலதனம்
    - சமூக மூலதனம்
  - விளைதிறன்
    - தொழில்நுட்பம்
    - மனித மூலதனம்
    - ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான முதலீடு
  - பொருளாதார உறுதி
    - அரசியல் உறுதி
    - நல்லாட்சி
    - ஊக்குவிப்பு
- பொருளாதார வளர்ச்சியின் முக்கியத்துவம் கீழ்க் காட்டப்படும் வகையிலாகும்.
  - உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.
  - வேலை வாய்ப்புக்கள் அதிகரித்தல்.
  - வெற்றிகரமான அரச நிதி முகாமைத்துவத்தைப் பேணக்கூடியதாக இருத்தல்.
  - முதலீடுகள் வலுவடைதல்.
  - விசுவாசம் அதிகரிப்பதனால் முயற்சியாளர்களது இலாபம் அதிகரித்தல்.
- பொருளாதார வளர்ச்சியின் செலவுகள் கீழ்த் தரப்படும் வகையில் காட்டப்படலாம்.
  - சூழல் பிரச்சினைகள் ஏற்படுதல்
    - சூழல் மாசடைதல்
    - சூழல் தேய்வு
    - மீளுருவாக்கம் செய்யப்படமுடியாத வளங்கள் அழிவடைதல்
  - உற்பத்தியிலும் நுகர்விலும் எதிரான வெளிவாரி விளைவுகள் ஏற்படல்.
  - பொருளாதாரத்தில் பண வீக்க விளைவுகள் ஏற்படல்.
  - வருமான ஏற்றத்தாழ்வுகள் தோன்றுதல்.
  - பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வுகள் தோன்றுதல்
  - பொது மக்களின் நலன்களுக்குரிய மேம்படுத்தும் துறைகளினுள் உரிய முதலீடுகள் ஏற்படாவிடின் வாழ்க்கைத் தரத்தில் பாதிப்புக்கள் ஏற்படல்.
  - நிகழ்கால நுகர்வு குறைவடைதல்
- இலங்கையின் அண்மைக்கால வளர்ச்சிப் போக்குகளை உரிய ஆண்டறிக்கைகளின் அடிப்படையில் மாணவருக்கு விளக்கமளிக்குக. (இற்றைப்படுத்தப்பட வேண்டும்.)

- வளர்ச்சிச் செயற்பாட்டில் வெற்றி கண்ட நாடுகளின் பொதுப் பண்புகள் கீழே தரப்படுகின்றன.
  - உலகப் பொருளாதாரத்தில் பூரணமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல்.
    - பேரினப் பொருளாதார உறுதியைப் பேணிச் செல்லல்.
    - உயர் சேமிப்பு, முதலீட்டு மட்டங்களைப் பேணிச் செல்லல்.
    - வளப் பங்கீடு சந்தைச் சக்திகளின் மூலம் நடைபெறல்.
    - நம்பிக்கைக்கும் வினைத்திறனுக்குமான அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற அரசு காணப்படல்.

**தேர்ச்சி 11.0:** **அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.2:** **அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல்வேறு எண்ணக் கருக்களை விளக்குவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- பொருளாதார அபிவிருத்தியை வரைவிலக்கணப்படுத்துவார்.
- பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின்போது பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களை விளக்குவார்.
- அபிவிருத்தி எண்ணக்கருக்களை வரைவிலக்கணப்படுத்துவார்.
- அபிவிருத்தியின் தோற்றப்பாடுகளை விளக்குவார்.
- பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கிடையிலான வேறுபாடுகளை ஒப்பிடுவார்.
- மானிட அபிவிருத்தியை வரைவிலக்கணப்படுத்துவார்.
- நிலைபேறுடைய அபிவிருத்தியின் தோற்றப்பாடுகளை விளக்குவார்.
- அபிவிருத்தியுடன் தொடர்புடைய புதிய போக்குகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- பொருளாதார அபிவிருத்தியானது மாற்றமடைந்து செல்லும் ஒரு செயற்பாடாகும். அதேவேளை பொருளாதார வளர்ச்சியுடன் பிணைந்த பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்கள் அதில் உள்ளடங்கும்.
- பொருளாதார வளர்ச்சி, தொகை ரீதியான தோற்றப்பாடு மாத்திரமாகும் என்பதோடு பொருளாதார வளர்ச்சியின்போது தொகை ரீதியான தோற்றப்பாட்டுக்கு மேலாக தர ரீதியான தோற்றப்பாடுகளும் உள்ளடங்கும்.
- பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டின்போது பொருளாதார வளர்ச்சியுடன் பொருளாதாரக் கட்டமைப்பில் கீழ்த் தரப்படும் பண்பு ரீதியான மாற்றங்கள் நடைபெற வேண்டும்.
    - கைத்தொழிலாக்கம் விரைவுபடுத்தப்படல்
    - உற்பத்தி வளங்களின் விளைதிறன் அதிகரித்தல்.
    - உற்பத்தி நுட்பமுறை மற்றும் தொழில் நுட்பம் முன்னேற்றமடைதல்
    - நவீனமயமாதல்
    - உற்பத்தித் துறைகளில் கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படல்.
    - வறுமை, வேலையின்மை குறைவடைதலும் வருமான ஏற்றத்தாழ்வு இல்லாமல் போதலும்

- அபிவிருத்தியானது ஒரு பன்முகச் செயற்பாடாகும். மனித வாழ்வில் பொருளாதார, அரசியல், சமூக, கலாசாரம் ஆகிய வகையிலான சகல தோற்றப்பாடுகளிலும் தொகை ரீதியானதும் தர ரீதியானதுமான பாரிய முன்னேற்றமொன்று அபிவிருத்தி என்பதனால் கருதப்படுகிறது.
- மனிதனின் வாழ்க்கைத் தரம் பாதகமான நிலையிலிருந்து சாதகமான நிலையை நோக்கிச் செல்லல் அபிவிருத்தியாகும்.
- வாழ்க்கைத் தரம் பாதக நிலையில் இருப்பதைப் பாதிக்கும் பிரதான காரணிகள் ஐந்து காணப்படுகின்றன.
  (1) பௌதீக ரீதியான பொருட்கள் பற்றாக்குறையாக இருத்தல்.
  (2) உடல் ரீதியான பலவீனம் (நோய்வாய்ப்படல்)
  (3) சமூக ரீதியான தொடர்புகள் பாதகமாதல்
  (4) பாதுகாப்பற்ற தன்மை
  (5) அதிகாரம் இல்லாமல் போதல்
- அபிவிருத்தியானது பொருளாதார, சமூக, அரசியல், கலாசாரம் என்ற வகையில் கூட்டான பல தோற்றப்பாடுகளுடன் பிணைந்துள்ளது.
- பொருளாதார வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் இடையே கீழே குறிப்பிடப்படும் வேறுபாடுகளை நாம் இனங்காணலாம்.
  - பொருளாதார வளர்ச்சியின் மூலம் பொருளாதாரத்துக்குரிய உற்பத்தி ஆற்றல் விரிவடைதல் காட்டப்படுவதுடன் அபிவிருத்தியின் மூலம் பொருளாதாரத்தில் வாழும் மக்களது வாழ்க்கைத் தரத்தில் சாதகமான வளர்ச்சியொன்று காட்டப்படுகிறது.
  - பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகளின் அளவில் அல்லது வருமானத்தில் ஏற்பட்டுள்ள தொகை ரீதியான அதிகரிப்பு, பொருளாதார வளர்ச்சியினால் காட்டப்படுவ துடன் அப்பொருளாதார வளர்ச்சியுடன் மனித வாழ்வில் ஏற்படும் தர ரீதியான வளர்ச்சியே அபிவிருத்தியினால் காட்டப்படுகிறது.
  - பொருளாதார வளர்ச்சியினால் காட்டப்படுவது ஒரு நாட்டின் தொகை ரீதியான தோற்றப்பாடு மாத்திரமேமாகும். அபிவிருத்தியின் மூலம் தொகை ரீதியானதும தர ரீதியானதுமான இரு தோற்றப்பாடுகளும் வெளிப்படுத்தப்படுகிறது.
  - ஒரு நாட்டின் தலா நபர் வருமானம், மெய் மொத்த தேசிய உற்பத்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை அளவிட முடியும்.
- மானிட அபிவிருத்தி என்பது மனிதர்களுக்குத் தமது மானிட ஆற்றல்களை முழுமையாக விரிவுபடுத்திக் கொள்வதற்குப் போலவே அவ்வாற்றல்களைப் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அரசியல் துறைகளினுள் உச்ச அளவில் பயன்படுத்துவதற்கான ஆற்றலைப் பெற்றுக் கொடுப்பதும் எதிர்கால பரம்பரைக்கு அவ்வுரிமையை உறுதிப் படுத்துவதுமாகும்.
- மானிட அபிவிருத்தி என்பது பல்வேறு தோற்றப்பாடுகள் கொண்ட சிறந்த ஒரு எண்ணக் கருவாகும். அதேவேளை அது செயற்பாடொன்று என்ற வகையில் ஒவ்வொரு தனிநபரினதும் மரபுகள் மற்றும் உரிமைகளை வேறுபடுத்திக் காட்டும். பூகோள ரீதியாக தொடர்புபடுகின்ற அரசியல், பொருளாதார மற்றும் கலாசார கட்டமைப்பினுள் செயற்படுவ தொன்றாகும். அதன் மூலம் பொதுமக்களால் அனுபவிக்கப்படுகின்ற சுதந்திரம் நிர்ணயிக்கப்படுகின்றது.

- அத்தோற்றப்பாடுகளுக்குரிய துறைகள் கீழே காட்டப்படுகின்றன.
  - வருமானம்
  - கல்வி
  - சுகாதார நிலைமை
  - வலுவூட்டல்
  - அரசியல் சுயாதீனம்
  - சிறந்த சமூகத் தொடர்பு
  - சமத்துவம்
    - வேலைச் சூழல்
    - ஓய்வை அனுபவிக்கும் வசதி
    - அரசியல் ரீதியில் பாதுகாப்பு
    - பொருளாதார சுதந்திரம்
    - சுற்றாடலின் தரம்
- எதிர்காலப் பரம்பரையினர் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றலைப் பாதிக்காத வகையில் நிகழ்காலப் பரம்பரை தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் விதத்திலான அபிவிருத்தியே நிலைபேறான அபிவிருத்தியாகும்.
- நிலைபேறான அபிவிருத்திக்குப் பொருளாதார, சமூக மற்றும் சூழல் ஆகிய மூன்று துறைகளிலும் ஒரு சமநிலையான வளர்ச்சியொன்று ஏற்பட வேண்டும்.
- நிலைபேறான அபிவிருத்தியின் தோற்றப்பாடுகள் கீழே காட்டப்படுகின்றன.
  - பொருளியல் ரீதியான தோற்றப்பாடு
  - சூழல் ரீதியான தோற்றப்பாடு
  - சமூக ரீதியான தோற்றப்பாடு
- பொருளியல் ரீதியான தோற்றப்பாடு
  - சுற்றாடல்
  - வினைத்திறன்
  - உறுதிப்பாடு
- சூழல் ரீதியான தோற்றப்பாடு
  - மக்களுக்குச் சாதகமான சுகநலச் சூழல்
  - மீளுருவாக்கம் செய்யக்கூடிய வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல்.
  - மீளுருவாக்கம் செய்ய முடியாத வளங்களைப் பாதுகாத்தல்.
- சமூக ரீதியான தோற்றப்பாடு
  - நியாயத்துவம்
  - பங்குபற்றல்
  - வலுவூட்டல்
  - சமூக மாற்றங்கள்
  - சமூக சகவாழ்வு
  - கலாசார ரீதியான அடையாளம்

**தேர்ச்சி 11.0:** அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 11.3:** அபிவிருத்தியை அளவிடும் சுட்டெண்களை வரிசைப்படுத்தி இணைந்த சுட்டெண்கள் தொடர்பாக விசாரிப்பார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- அபிவிருத்தியை அளவிடும் பொருளியல் சுட்டெண்களை வரிசைப்படுத்துவார்.
- அபிவிருத்தியை அளவிடுகின்ற பொருளியல் சுட்டெண்களின் முக்கியத்துவத்தையும் குறைபாடுகளையும் கண்டாய்வு செய்வார்.
- தலா நபர் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு உலக வங்கிப் பொருளா தாரத்தை வகைப்படுத்தும் விதத்தை முன்வைப்பார்.
- அபிவிருத்தியை அளவிடுவதற்கான இணைந்த சுட்டெண்களைப் பெயரிடுவார்.
- மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணை இனங்காட்டுவார்.
- மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணைத் தயாரிப்பதற்குப் பயன்படுத்தும் கூறுகளைப் பெயரிடுவார்.
- மானிட அபிவிருத்திச் சுட்டெண் அடிப்படையில் நாடுகள் வகைப்படுத்தப்படும் விதத்தினைக் காட்டுவார்.
- மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் பலங்களையும் பலவீனங்களையும் காட்டுவார்.
- மானிட அபவிருத்தியில் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டாய்வு செய்வார்.
- மகிழ்ச்சிச் சுட்டெண்ணை இனங்காண்பார்.
- அதன் கூறுகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் சுட்டெண்கள் பிரதான இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகிறது.
  - (1) துறை ரீதியான சுட்டெண்
  - (2) இணைந்த சுட்டெண்
- அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் துறை ரீதியான சுட்டெண்கள் கீழே தரப்படுகின்றன.
  - தலா நபர் வருமானம்
  - துறை ரீதியான அளவீடுகள்
- துறை ரீதியான அளவீடுகள் என்பது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளினதும் அபிவிருத்தி மட்டத்தை அளவிடுகின்ற சுட்டெண் ஆகும்.

- அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் துறை ரீதியான சுட்டெண்கள் கீழே காட்டப்படுகின்றன.
    - மொத்த உள்நாட்டு மற்றும் மொத்த தேசிய வருமானத்தின் வளர்ச்சி
    - மொத்த உள்நாட்டு உற்பத்தியின் துறை ரீதியான வளர்ச்சி (விவசாயம், கைத்தொழில், சேவை)
    - மொத்த உள்நாட்டு உற்பத்தியின் கட்டமைப்பு
    - சேமிப்பு (உள்நாட்டு, தேசிய)
    - முதலீடு (தனியார், அரசு)
    - பணவீக்கம்
- இந்த துறை ரீதியான சுட்டிகள் மூலம் பொருளாதாரத்தில் பல்வேறான துறைகளில் அபிவிருத்தி மட்டங்கள் அளவிடப்படும். இதனால் இவை துறை ரீதியான அளவீடுகளாகும்.
- தலா நபர் வருமானமென்பது உள்நாட்டு அல்லது தேசிய வருமானத்தின் பெறுமதியைச் சனத்தொகைக்குச் சார்பாகக் கணிப்பிடும்போது தனிநபர் ஒருவருக்குக் கணிப்பிடப்படும் வருமானமாகும். அது மெய்ரீதியாகவும் பணரீதியாகவும் அளவிடப்பட முடியும்.
- தலா வருமானம் பின்வருமாறு கணிப்பிடப்படும்.

$$\text{தலா நபர் வருமானம்} = \frac{\text{மொத்த உள்நாட்டு / தேசிய வருமானம்}}{\text{நடுவாண்டு சனத்தொகை}}$$

- அபிவிருத்தியை அளவிடும் பொருளாதார சுட்டெண்களின் முக்கியத்துவத்தைக் கீழ்வருமாறு காட்டலாம்.
    - அபிவிருத்தியை அளவிடுவதற்காகத் தலா நபர் வருமானத்தைப் பயன்படுத்தும்போது மிகவும் பொருத்தமான தலா நபர் மெய் மொத்தத் தேசிய உற்பத்தியாகும். இதன் மூலம் உண்மையாகவே பொருட்கள் சேவைகளின் அளவில் ஏற்படும் மாற்றத்தை இனங்காண முடியும்.
    - அதேபோல குறித்த வருடத்தினுள் நடைபெறும் மொத்த உற்பத்தியில் பொது மக்களுக்கு நிகழ்கால மற்றும் எதிர்கால நுகர்வுக்காகக் கிடைக்கும் அளவினை அறிந்து கொள்ள முடியுமாகும்.
    - மொத்தமாக ஒரு நாட்டின் பொதுமக்களுக்குக் கிடைக்கும் பிரதிபலன்கள் இச்சுட்டெண் ணினால் அளவிடப்படுகிறது. அதாவது நுகர்வுக்கும் முதலீட்டுக்குமாக ஒரு நாட்டு மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உண்மையான பொருட்கள் சேவைகளின் தொகை எந்தளவானதென்பதனை இதன் மூலம் கணிப்பிட முடியும்.
    - நாடுகளிடையே முன்னேற்றத்தை ஒப்பிடும் சுட்டெண் என்ற வகையிலும் இது முக்கியம் பெறுகிறது.
- அபிவிருத்தியை அளவிடுகின்ற பொருளாதார சுட்டெண்களில் கீழே தரப்படும் குறைபாடு களையும் இனங்காண முடியும்.
    - மேலுள்ள பொருளாதார சுட்டெண்கள் யாவும் கணிப்பிடப்படுவது தேசிய வருமானக் கணக்குகளின் புள்ளிவிபரங்களை அடிப்படையாகக் கொண்டேயாகும். எவ்வாறாயினும் தேசிய வருமானக் கணக்குகளின் புள்ளி விபரங்களில் காணப்படும். குறைபாடுகளையும் அவற்றைத் தயாரிக்கும்போது எழுகின்ற பிரச்சினைகளையும் கருத்திற் கொள்ளும் போது அபிவிருத்தியின் பொருளாதார தோற்றப்பாடுகள் இச்சுட்டெண் மூலம் சரியாக அளவிடப்படுகின்றதா என்பது ஒரு பிரச்சினையாகும்.

- தேசிய வருமானத் தரவுகளைப் பயன்படுத்தும்போது எழுகின்ற குறைபாடுகள் கீழே காட்டப்படுகின்றன.
    (1) இரட்டைக் கணிப்பீட்டுப் பிரச்சினை ஏற்படுதல்.
    (2) பண்டங்களின் தரத்தில் ஏற்படும் மாற்றங்கள் காட்டப்படாமை.
    (3) சந்தைக் கொடுக்கல் வாங்கல்களுக்குள் அடங்காத பயன்தரு பொருளாதார நடவடிக்கைகளின் கூட்டப்பட்ட பெறுமதிகள் அறிக்கைப்படுத்தப்படாமை.
    (4) சமூகநலனுக்குப் பாதகமான பண்டங்களின் உற்பத்தித் தரவுகள் உள்ளடக்கப் படுகின்றமை.
    (5) உற்பத்தியினால் ஏற்படும் இயற்கை வளங்களின் தேய்வு மற்றும் சூழலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் கருத்திற் கொள்ளப்படாமை.
    (6) வருமானம் பங்கீடு செய்யப்படும் விதம் காட்டப்படாமை.
    (7) வெளிநாட்டுக் கடன்படு நிலைமை மற்றும் வெளிநாட்டு வளங்கள் குறைவடைதல் தேசிய கணக்குகளின் மூலம் காட்டப்படாமை.
    (8) பௌதீக நலன்புரி நடவடிக்கைகளுக்குரிய பொருட்கள் சேவைகளின் உற்பத்திகள் மட்டும் தேசிய கணக்குகளில் உள்ளடக்கப்படல்.
    (9) பொருளாதாரத்தின் கட்டமைப்பு மாற்றங்கள் பற்றிக் காட்டப்படாமை.
    (10) நாடுகளுக்கிடையேயான அபிவிருத்தி மட்டத்தை ஒப்பிடும்போது தலா நபர் வருமானம், பெயரளவு நாணய மாற்று வீதம் என்பவற்றைப் பயன்படுத்தி அமெரிக்க டொலர் அலகுகளினால் வெளிப்படுத்தல்.
- தலா நபர் வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு உலக வங்கி உலக நாடுகளை கீழே தரப்பட்டுள்ள வகையில் வகைப்படுத்துகிறது.
    (1) குறைந்த வருமான நாடுகள் ($ 1 005 உள்)
    (2) கீழ் மத்திய வருமான நாடுகள் ($ 1 006 - $ 3 955)
    (3) மேல் மத்திய வருமான நாடுகள் ($ 3 956 - $ 12 235)
    (4) உயர் வருமான நாடுகள் ($ 12 236 மேல்)
- அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் இணைந்த சுட்டெண்கள் கீழே காட்டப்படுகின்றன.
    (1) மானிட அபிவிருத்திச் சுட்டெண்
    (2) மகிழ்ச்சிச் சுட்டெண்
- உலகின் பல்வேறு நாடுகளினதும் சமூக பொருளாதார அபிவிருத்தியைப் பரீட்சித்துப் பார்ப்பதற்காக மிகவும் நிறைவான, பகுப்பாய்வு ரீதியான அளவீடு என்ற வகையில் 1990 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) மூலம் மானிட அபிவிருத்திச் சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டது.
- இச்சுட்டெண் மூலம் நாடொன்றின் சமூக பொருளாதார அடைவுகளின் விரிவான தோற்றப் பாடொன்று உள்ளடக்கப்படுவதுடன் வருடாந்தம் இற்றைப்படுத்தப்பட்டுப் பேணப்படுகிறது.
- மானிட அபிவிருத்தியை அளவிடுவதற்காகப் பெருமளவான நியதிகளைப் பயன்படுத்த முடியுமாயினும் அபிவிருத்தியின் பிரதான 3 நோக்கங்களாகிய சுகாதாரம், அறிவு, வாழ்க்கைத் தரத்துக்குரிய 3 கூறுகளைப் பயன்படுத்தி இச்சுட்டெண் தயாரிக்கப்பட்டுள்ளது.

- மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான கூறுகள் மூன்றும் கீழே தரப்படுகின்றன.
    (1) பிறப்பின்போது எதிர்பார்க்கப்படும் ஆயுட்காலம் (சுகாதாரம்)
    (2) (i) பாடசாலைக் கல்வியைப் பெற்ற ஆண்டுகளின் எண்ணிக்கையின் இடைப் பெறுமதி (அறிவு)
        (ii) பாடசாலைக் கல்வியில் ஈடுபடுத்தப்பட்ட பிள்ளையொன்று கல்வியில் ஈடுபட்டிருப்பர் என எதிர்பார்க்கின்ற ஆண்டுகளின் எண்ணிக்கை (அறிவு)
    (3) கொள்வனவுச் சக்தி சமநிலை தலா மொத்த தேறிய வருமானம் (வாழ்க்கைத் தரம்)

$$\left[\text{கொள்வனவுச் சக்திச் சமநிலைத் தலா மொத்தத் தேசிய வருமானம்} = \frac{\text{நாட்டில் உற்பத்தியாகும் பண்டங்களின் தொகை} \times \text{அவ்வப் பண்டங்களின் டொலர் அடிப்படையிலான விலை}}{\text{சனத்தொகையின் அளவு}}\right]$$

- மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு உலகின் நாடுகள் மானிட அபிவிருத்தி மட்டங்கள் 4 இன் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன.
    (1) மிகவுயர்ந்த மானிட அபிவிருத்தியைக் கொண்ட நாடுகள்
    (2) உயர் மானிட அபிவிருத்தியைக் கொண்ட நாடுகள்
    (3) மத்திய மானிட அபிவிருத்தியைக் கொண்ட நாடுகள்
    (4) குறைந்த மானிட அபிவிருத்தியைக் கொண்ட நாடுகள்

    (குறிப்பிட்ட ஆண்டுகளின் மானிட அபிவிருத்திச் சுட்டெண்களின் அடிப்படையில் நாடுகளின் வகைப்பாட்டினை மாணவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும்.)

- இவ்வகைப்பாடு செய்யப்பட்டிருப்பது மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் முழுச் சுட்டெண் பெறுமதிகளின் அடிப்படையில் அல்லது எல்லா நாடுகளையும் ஒன்றிணைத்து அவற்றின் சார்பு ரீதியான நிலைமைகளைக் கவனத்திற் கொண்டே ஆகும்.
- அபிவிருத்தி அளவீடொன்று என்ற வகையில் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் கீழத் தரப்படும் பலங்களைக் காணலாம்.
    - பூகோள ரீதியில் செய்யப்படும் ஒப்பீடுகளின்போது அபிவிருத்தியை அளவிடுகின்ற அதிக தகவல்களைக் கொண்ட நியதியொன்றாக மானிட அபிவிருத்திச் சுட்டெண் முக்கியம் பெறுகிறது.
    - அபிவிருத்திக்குரித்தான உருப்படிகள் எவை? அபிவிருத்திச் செயற்பாட்டின்போது வெற்றி கண்டுள்ள நாடுகள் எவை? ஆகியவை தொடர்பாக அறிவையும் விளக்கத்தை யும் விரிவடையச் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள மிகவும் பயனுள்ள அளவீடொன் றாக மானிட அபிவிருத்திச் சுட்டெண் முக்கியம் பெறுகிறது.
    - அபிவிருத்தி என்பது மனிதனுக்குத் தெரிவு செய்வதற்குரிய சுதந்திரத்தை விரிவுபடுத்து கின்ற செயற்பாடொன்றாகையினால் அது தீர்மானிக்கப்படுவது தனியாக வருமான மட்டத்தினால் மட்டுமன்றி ஆயுள் எதிர்பார்க்கை, எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகக் காரணிகள் மூலமாகும். மானிட அபிவிருத்திச் சுட்டெண் இவற்றைக் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

- அபிவிருத்தியை அளவிடும்போது பயன்படுத்தப்படும் தலா வருமானம் போன்ற குறுகிய அளவீடுகளினால் ஏற்படும் வரையறைகள் மானிட அபிவிருத்திச் சுட்டெண் மூலம் நீக்கப்படுகின்றன.
- இச்சுட்டெண்ணைப் பயன்படுத்தி உலக நாடுகளை அபிவிருத்தி மட்டத்தின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும்.

- அபிவிருத்தி அளவீடொன்றென்ற வகையில் மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணில் கீழே தரப்படும் பலவீனங்களைக் காணலாம்.
  - மானிட அபிவிருத்திச் சுட்டெண் மொத்த அளவீடொன்றாக இருப்பதனால் நாடுகளில் உள்ளகமாகக் காணப்படக்கூடிய அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகளை (வருமானப் பரம்பல், பிரதேச அபிவிருத்தி போன்ற) அறிந்து கொள்ள முடிவதில்லை.
  - மானிட அபிவிருத்திக்குரிய சகல துறைகளும் இதன் கீழ் கருத்திற் கொள்ளப்படுவ தில்லை.

    உ+ம்:- பங்குபற்றல், அரசியல் சுதந்திரம், மனிதப் பாதுகாப்பு
  - தர ரீதியான வேறுபாடுகள் இச்சுட்டெண்ணில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

    உ+ம்:- பாடசாலைக் கல்வியின் தரரீதியான தன்மை.

    சுகாதார வசதிகளின் தரரீதியான வேறுபாடுகள்.
  - கல்வி அளவீடுகளின்போது ஆரம்பக் கல்விக்கு முதலில் நுழைக்கப்பட்ட மாணவர் தொகை மாத்திரமே கவனத்திற் கொள்ளப்படுகின்றது. எனினும் இடைநடுவில் பாடசாலையை விட்டுச் செல்லும் தொகை கவனத்திற் கொள்ளப்படுவதில்லை.
  - அபிவிருத்தியின் மீது தாக்கம் செலுத்தும் சூழற் தோற்றப்பாடுகள் இச்சுட்டெண்ணினுள் உள்ளடக்கப்படவில்லை.
  - சுட்டெண்ணுக்குரிய பிரதான தோற்றப்பாட்டுக்காக சமமான நிறையிடப்பட்டுள்ளது.

  (மானிட அபிவிருத்தியில் இலங்கை பெற்றுக் கொண்டுள்ள முன்னேற்றத்தைக் கடந்த சில வருடங்களின் மானிட அபிவிருத்திச் சுட்டெண் தரவுகளைப் பயன்படுத்தி மாணவர் களுக்கு விளக்கமளியுங்கள்.)

- 2016 ஆம் ஆண்டாகும் போது மானிட அபிவிருத்திச் சுட்டெண்ணின் பெறுமதி 0.766 ஐப் பெற்று உலக நாடுகளிடையே 73 ஆம் இடத்தை இலங்கை பெற்றுக் கொண்டுள்ளது. தென்னாசிய வலய நாடுகளிடையே முதலாம் இடத்தில் காணப்படுகிறது.
- உலக நாடுகளின் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் மற்றும் சூழல் ஆகிய சகல துறைகளினதும் அபிவிருத்தியினை அளவிடுவதற்காக 2008 ஆம் ஆண்டில் மகிழ்ச்சிச் சுட்டெண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- மகிழ்ச்சிச் சுட்டெண்ணில் உள்ளடக்கப்பட்டுள்ள கூறுகள் கீழே காட்டப்படுகின்றன.
    - நல்லாட்சி
    - சூழல்
    - கலாசாரம்
    - மனமகிழ்ச்சி
    - நேர முகாமைத்துவம்
    - கல்வி
    - சுகாதாரம்
    - வாழ்க்கைத் தரம்
    - சமூகத் தொடர்புகள்

**தேர்ச்சி 11.0:** **அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.4:** **வருமானச் சமமின்மையை கணிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறைகளைப் பரிசீலனை செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- வருமானப் பங்கீட்டு சமமின்மையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- முழு வருமானப் பரம்பல், சார்பு வருமானப் பரம்பலை வரைவிலக்கணப்படுத்தி விளக்குவார்.
- வருமானச் சமமின்மையைக் கணிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தும் பல்வேறான அளவீடுகளை விளக்குவார்.
- லோரன்ஸ் வளையியை அமைப்பார்.
- கினிக் குணகத்தைக் கணிப்பீடு செய்வார்.
- ஐயணை பரவல் விகிதத்தை (Quintile dispersion ratio) விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வருமானப் பங்கீட்டுச் சமமின்மை என்பது குறித்தவொரு நாட்டில் வருமானம் பங்கீடு செய்யப்பட்ட முறையில் தோன்றிய சமமின்மையாகும்.
- ஒரு நாட்டில் வருமானப் பங்கீட்டை இரண்டு முறைகளில் அணுகலாம்.
  (1) தொழிற்பாட்டு ரீதியான வருமானப் பரம்பல்
  (2) தனிநபர் வருமானப் பரம்பல்
- தொழிற்பாட்டு ரீதியான வருமானப் பரம்பல் என்பது நாடொன்றில் வருமானத்தை உருவாக்கும் மூலங்களின் அடிப்படையில் வருமானம் பங்கீடு செய்யும் முறையை நோக்குவதாகும்.
- இங்கு நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்ற பல்வேறான உற்பத்தி வள மூலங்களின் மூலம் தோன்றும் வாடகை, சம்பளம், வட்டி, இலாபம் என்ற பிரதான வருமானப் பிரிவுகளின் சார்ப்பளவு முக்கியத்துவம் கலந்துரையாடப்படும்.
- தனிநபர் வருமானப் பரம்பல் என்பது வருமானம் உழைக்கும் முறையானது எந்த வடிவமாக இருப்பினும் அந்த அணுகுமுறையின் கீழ், தனிநபர் ஒருவர் குறிப்பிட்ட காலத்தில் உழைத்துக் கொண்ட மொத்த வருமானத்தின் அடிப்படையில் ஒழுங்கு முறைப்படுத்துவதாகும்.
- இங்கு தனிநபர் உழைக்கும் மொத்த வருமானத்திற்கு ஏற்ப, பல்வேறான வருமான வகுப்புகளுக்கு அவர்கள் உள்ளடக்கப்படுவார்கள். இதன் மூலம் பல்வேறான வருமான வகுப்புகளில் உள்ளடக்கப்படும் தனிநபர்களின் எண்ணிக்கையை, மொத்த வருமானத்தில் அந்தந்த வருமான வகுப்புகளில் உள்ளவர்களின் சதவீதத்தைக் கணிப்பிடலாம்.

- பொருளாதாரத்தில் எல்லா வருமான உழைப்பாளர்களின் வருமானம் தொடர்பான தகவல்கள் பெறப்படுவது கடினமாக இருப்பதனால், எல்லோரும் உள்ளடக்கப்படக்கூடிய முறையில் தெரிவு செய்யப்பட்ட நியதிகளின் அடிப்படையில் ஆய்வுகளை மேற்கொள்ள குடிசன மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களமும், மத்திய வங்கியும் இணைந்து அடிக்கடி தனிநபர் வருமானங்கள் தொடர்பாகத் தகவல்களைத் திரட்டும்.
- தனிநபர் வருமானப் பரம்பலைப் பின்வரும் இரண்டு முறைகளில் நோக்கலாம்.

  (1) முழு வருமானப் பரம்பல்


  (2) சார்பு வருமானப் பரம்பல்
- முழு வருமானப் பரம்பல் என்பது பொருளாதாரத்தில் காணப்படும் பல்வேறான தனிநபர் களின் முழு வருமான மட்டங்களை ஒன்றோடொன்று ஒப்பீடு செய்வதைக் குறிக்கும்.
- பல்வேறான வருமானப் பிரிவின் கீழ் தனிநபர்களை ஒழுங்குபடுத்தி, அந்தந்த வருமான வகுப்பில் உள்ள தனிநபர்களின் எண்ணிக்கையை, தனிநபர்களின் எண்ணிக்கையின் சதவீதமாக இதனைக் கணிப்பிடலாம்.
- பொருளாதாரத்தில் வறியவர்களை இனங்காண்பதற்காக முழு வருமானப் பரம்பல் தொடர்பான தகவல்கள் உதவும்.
  - சார்பு வருமானப் பரம்பல் என்பது வருமான மட்டத்திற்கு ஏற்ப ஒழுங்குபடுத்தப்பட்ட தனிநபர் வருமானத்தை மொத்த வருமானத்தின் சதவீதமாகக் காட்டுவதாகும்.
  - ஒவ்வொரு தனிநபர் / வீட்டுத்துறையின் மொத்த வருமானத்தை ஏறுவரிசை / இறங்கு வரிசையில் ஒழுங்குபடுத்தி வருமானப் பகிர்வு கணிப்பீடு செய்யப்படும்.
  - இவ்வாறு கணிப்பீடு செய்யப்பட்ட குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்குச் சொந்தமான வருமானத்தை, மொத்த வருமானத்தின் சதவீதமாகவும், உயர்ந்த வருமானம் பெற்றும் கொள்ளும் பிரிவினருக்கு உடைமையான வருமானத்தை மொத்த வருமானத்தின் சதவீதமாகவும் கணிப்பீடு செய்து ஒப்பிடுவதாகும்.
  - பொருளாதார சமூகக் கொள்கை தயாரிக்கும்போது சார்பு வருமானப் பரம்பல் தொடர்பான தகவல் மிகவும் பிரயோசனமானது.
  - முழு வருமானப் பரம்பல், சார்பு வருமானப் பரம்பல் பின்வரும் அடிப்படையில் முன்வைக்கப்படலாம்.

| **முழு வருமானப் பரம்பல்** | | **சார்பு வருமானப் பரம்பல்** | |
|---|---|---|---|
| **மாதாந்த வருமானம் ரூபாவில்** | **வருமானம் பெறுவோர் வீட்டுத்துறை சதவீதம்** | **வருமானம் பெறுவோரின் வீட்டுத்துறை சதவீதமாக** | **வருமானம் சதவீதம்** |
| ரூபா 1 000 இற்கு கீழ் | 10 | முதலாவது (குறைந்த) 10% | 2.5 |
| ரூபா 1 001 - 2 000 | 30 | இரண்டாவது 10% | 5.0 |
| ரூபா 2 001 - 3 000 | 32 | மூன்றாவது 10% | 24.5 |
| ரூபா 3 001 - 4 000 | 20 | நான்காவது 10% | 28.0 |
| ரூபா 20 000 இற்கு மேல் | 08 | பத்தாவது 10% | 40.0 |
| | 100 | | 100.0 |

- வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வை அளவிடப் பின்வரும் அளவீடுகள் பயன்படுத்தப்படும்.
  (1) லோரன்ஸ் வளையி
  (2) கினிக் குணகம்
  (3) ஐயணை பரவல் விகிதம்
- லோரன்ஸ் வளையியினால் காட்டப்படுவது ஏதாவது வருமானப் பரம்பலின் திரள் சத வீதப் பெறுமதியை வரைபு ரீதியாகக் காட்டுவதாகும்.
- வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வை விளக்குவதற்கு மிகவும் பிரயோசனமான லோரன்ஸ் வளையியானது 1905 இல் அமெரிக்க பொருளியலாளரான மக்ஸ் லோரன்ஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது.
- கற்பித்த தரவுகளைப் பயன்படுத்திப் பின்வருமாறு லோரன்ஸ் வளையியை அமைக்கலாம்.

| **தனிநபர்கள்** | **வருமானம் ரூபா** | **மொத்தத்தின் சதவீதமாக** | | **திரள் வருமதி சதவீதமாக** | | **திரள் பெறுமதி சதவீதமாக** | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **தனிநபர்** | **வருமானம்** | **தனிநபர்** | **வருமானம்** | **தனிநபர்** | **வருமானம்** |
| 1 | 5 | 0.2 | 0.05 | 0.2 | 0.05 | 20 | 05 |
| 1 | 10 | 0.2 | 0.10 | 0.4 | 0.15 | 40 | 15 |
| 1 | 15 | 0.2 | 0.15 | 0.6 | 0.30 | 60 | 30 |
| 1 | 25 | 0.2 | 0.25 | 0.8 | 0.55 | 80 | 55 |
| 1 | 45 | 0.2 | 0.45 | 1.0 | 1.00 | 100 | 100 |
| 05 | 100 | | | | | | |

- அட்டவணையில் இறுதியாகவுள்ள இரண்டு நிரல்களில் காட்டப்படும் தரவுகளைக் குத்தச்சு, கிடையச்சில் காட்டி லோரன்ஸ் வளையியை அமைக்கலாம்.




- லோரன்ஸ் வளையியானது சம வருமானப் பரம்பல் வளையியிலிருந்து விலகிச் செல்வது அதிகரிப்பதானது நாட்டில் வருமானப் பங்கீட்டில் சமமின்மை உயர்வடைகின்றது என்றும் லோரன்ஸ் வளையியானது சம வருமானப் பரம்பல் வளையியை அண்மிக்குமாயின் சமமின்மை குறைவடைகின்றது என்பதையும் குறிக்கும். வருமானம் சமமின்மை இல்லை என்றால் லோரன்ஸ் வளையியானது சம வருமானப் பரம்பல் வளையி மீது அமையும்.

- வருமானப் பங்கீட்டில் நிலவும் சமமின்மையைத் தரவுகள் ரீதியாக எடுத்துக் காட்டுவது கினிக் குணகமாகும்.
- 1912 இல் இத்தாலியைச் சேர்ந்த புள்ளிவிபரவியலாளரான கொரர்டோ என்பவரால் இது அறிமுகப்படுத்தப்பட்டது. இது கணிப்பீடு செய்யப்படும் முறையை லோரன்ஸ் வளையியின் மூலம் நோக்கலாம்.
- மேலுள்ள வரைபில் சம வருமானப் பரம்பல் வளையி OA கோட்டினால் காட்டப்படும். லோரன்ஸ் வளையி மூலம் உண்மையான வருமானப் பரம்பல் கோடு காட்டப்படும்.
- கினிக் குணகமானது சம வருமானப் பரம்பல் வளையியிற்கும் லோரன்ஸ் வளையியிற்கும் இடைப்பட்ட பிரதேசத்தின் (C) பரப்பளவிற்கும் OAB முக்கோணத்தின் பரப்பளவிற்கும் இடையிலான விகிதமாக அமையும்.
- கினிக் குணகம் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{கினிக் குணகம்} = \frac{\text{C பகுதியின் பரப்பளவு}}{\text{OAB முக்கோணப் பரப்பளவு}}$$

- இந்த வாய்ப்பாட்டிற்கு ஏற்ப லோரன்ஸ் வளையியானது சமவருவாய் பரம்பல் வளையி மீது சந்திக்கும்போது கினிக் குணகத்தின் பெறுமதி பூச்சியமாகும்.
- லோரன்ஸ் வளையி OAB முக்கோணத்தை அடைந்தால் வருமான சமமின்மை உயர்வாகும். (கினிக்குணகம் 1 இற்கு சமனாகும்.)
- இதன்படி கினிக் குணகம் பூச்சியமாகும் போது வருமான ஏற்றத்தாழ்வு குறைவதுடன் 1 ஐ நோக்கிச் செல்லும் போது வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கும்.
- இது வருமானப் பங்கீட்டில் ஏற்றத் தாழ்வை அறிந்து கொள்வதற்குப் பயன்படுத்தப்படும் இன்னுமொரு அளவீடாக ஐயணை பரவல் விகிதம் காணப்படும்.
- இலங்கையில் குடித்தொகை மதிப்பீட்டு புள்ளிவிபரத் திணைக்களத்தினால் இக்கணிப்பீடு மேற்கொள்ளப்படும்.
- இங்கு இலங்கையில் வாழும் வீட்டுத்துறையினரை, குறைந்த வருமானப் பிரிவினரிலிருந்து உயர்ந்த வருமானப் பிரிவினர் வரை 5 கட்டங்களாகப் பிரிக்கப்படும். இவ்வீட்டுத் துறையின் வருமானம் பங்கானது ஐயணை பரவல் என்றழைக்கப்படும். இதனைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

  (1) முதலாவது ஐயணை (Low)

  வீட்டுத்துறையில் மிகக் குறைந்த வருமானத்தை உழைக்கும் 20% தினர்.

  (2) இரண்டாவது ஐயணை (Low Mid)

  வீட்டுத்துறையில் ஆகக் குறைந்த மற்றும் மத்திய வருமானப் பிரிவினருக்கு இடையில் உள்ள 20% தினர்.

  (3) மூன்றாவது ஐயணை (Mid)

  வீட்டுத்துறையினரில் நடுத்தர வருமானம் பெறும் 20% தினர்.

(4) நான்காவது ஐயணை (Mid Upper)

வீட்டுத்துறையில் நடுத்தர மற்றும் உயர்ந்த வருமானப் பிரிவினருக்கு இடையில் உள்ள 20% தினர்.

(5) ஐந்தாவது ஐயணை (Upper)

வீட்டுத்துறையில் உயர்வான வருமானம் பெறும் 20% தினர்.

- இவர்களை மேலுள்ளவாறு வகைப்படுத்திய பின்னர் அவர்களது சராசரி மாதாந்த வருமானம் கணிப்பிடப்படும்.

| வருமான வகுப்பு | குறைந்த வருமானம் பெறும் வகுப்பினர் | குறைந்த நடுத்தர வருமானம் பெறும் வகுப்பினர் | நடுத்தர வருமானம் பெறும் வகுப்பினர் | நடுத்தர உயர் வருமானம் பெறும் வகுப்பினர் | உயர் வருமானம் பெறும் வகுப்பினர் |
|---|---|---|---|---|---|
| சராசரி மாதாந்த வருமானம் (ரூபாவில்) | 8211 | 16 062 | 23 880 | 35 552 | 98 575 |

மூலம்: குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம்

- மேலுள்ள தகவல்களின் அடிப்படையில் ஐயணை பரவல் விகிதத்தைப் பின்வருமாறு கணிப்பிடலாம்.

$$\text{ஐயணைப் பரவல் விகிதம்} = \frac{\text{உயர்ந்த வருமான வகுப்பினருக்கு உரிமையான சராசரி மாதாந்த வருமானம்}}{\text{குறைந்த வருமான வகுப்பினருக்கு உரிமையான சராசரி மாதாந்த வருமானம்}}$$

- உதாரணத்தின்படி உயர்ந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு உடைமையான மாதாந்தச் சராசரி வருமானம் 98 575 ரூபாவாக இருக்க, குறைந்த வருமானம் பெறும் பிரிவினருக்கு உடைமையான மாதாந்த சராசரி வருமானமானது 8 211 ரூபாவாகும். இதன்படி;

$$\text{ஐயணை பரவல் விகிதம்} = \frac{98\ 575}{8\ 211} = 12$$

- இவ்விகிதத்தின் மூலம் பெறப்படும் பெறுமதியிலிருந்து குறைந்த வருமானம் பெறும் வகுப்பினரின் சராசரி மாதாந்த வருமானத்தைப் போல் எத்தனை மடங்குகளால் உயர்ந்த வருமானம் பெறுபவர்களின் சராசரி மாதாந்த வருமானம் உயர்வடைந்துள்ளது என்பதாகும்.

- மேலுள்ள உதாரணத்தின் அடிப்படையில் பெறுமதி 12 ஆகும். இதன் கருத்து குறைந்த வருமானம் பெறுபவரின் சராசரி மாதாந்த வருமானத்தை விட 12 மடங்குகளால் உயர்வாகச் சராசரி மாதாந்த வருமானத்தை உயர்த்த வருமானப் பிரிவினர் பெறுகிறார்கள் என்பதாகும்

**தேர்ச்சி 11.0:** **அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.5:** **வறுமை எண்ணக்கருவை விளக்கி அது கணிப்பிடும் முறையைக் காட்டுவார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- வறுமை எண்ணக்கருவை வரைவிலக்கணப்படுத்துவார்.
- வறுமையை அளவிடும் பல்வேறான அளவீடுகளைப் பெயரிடுவார்.
- தேசிய வறுமை நிகழ்வை விளக்குவார்.
- சனத்தொகை வறுமைச் சுட்டியை விளக்குவார்.
- சர்வதேச வறுமைச் சுட்டியை விளக்குவார்.
- சர்வதேச வறுமைக்கோட்டை விளக்குவார்.
- வறுமை அளவீடுகள் மூலம் நாடுகளுக்கிடையிலான வறுமையை நுணுக்கமாக விளக்குவார்.
- வறுமையின் இரண்டு வடிவங்களை அறிமுகப்படுத்துவார்.
- வறுமையின் இரண்டு கோணங்களை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- வறுமை என்பது ஒரு தனிநபர் அல்லது தனிநபர் சமூகத்தின் நல்வாழ்விற்காகத் தேவைப்படும் ஆகக் குறைந்த சமூகநலனை அடையாத நிலைமையாகும். அதாவது ஏதாவது நுகர்வு அல்லது வருமான மட்டத்திற்கு அல்லது உறையுள், சுகாதாரம், கல்வி வசதிகள், மனித தேவைகள் என்பவற்றில் நிலவும் பொருளாதார சமூக நிலைமைகளின் கீழ் தொழில், சொத்துக்கள், உரிமைகள் என்பவற்றை அனுபவிப்பதற்கான ஆகக் குறைந்த வசதிகளையேனும் அடைவதற்கு முடியாத நிலைமையாகும்.
- வறுமையைப் பல்வேறான எண்ணக்கருக்களின் மூலம் விளக்கலாம்.
- வறுமையை அளவீடு செய்வதற்குப் பின்வரும் குறிக்காட்டிகள் பயன்படுத்தப்படும்.
  (1) தேசிய வறுமை நிகழ்வு (கோடு)
  (2) ஆட்கணிப்பு வறுமைச் சுட்டெண்
  (3) சர்வதேச வறுமை நிகழ்வு (கோடு)
  (4) ஏனைய வறுமைக் குறிக்காட்டிகள்
    - மானிட மற்றும் சுட்டெண்
    - நுகர்வில் வறுமைச் சுட்டெண்
    - வறுமை இடைவெளிச் சுட்டெண்
    - பல்பரிமாண வறுமைச் சுட்டெண்

- தேசிய வறுமை நிகழ்வு என்பது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு அதிகரிக்கும் செலவை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் கீழ் தலைக்குரிய அன்றாட உணவுப் போசணை நுகர்வுத் தேவையும் உணவு அல்லாத அத்தியாவசிய நுகர்வுத் தேவை போன்றவற்றை நிறைவேற்றிக் கொள்வதுடன் தொடர்புடையதாகத் திட்டவட்டமாக அமைக்கப்பட்ட முழு வறுமைக் கோடாகும்.
- தனிநபர் ஒருவருக்கு மாதமொன்றிற்குக் குறைந்தபட்சம் உடல்ரீதியான சக்தியைத் தொடர்ந்து நிலவச் செய்வதற்குத் தேவையான கலோரிப் பெறுமானத்தைக் கொள்வனவு செய்வதற்கு உணவு அல்லாத அத்தியாவசியத் தேவைகளுக்குச் செலவிடும் பணத்தையும் அடிப்படையாகக் கொண்டு இது கணிப்பீடு செய்யப்படும்.
- வறியவர் ஒருவருக்கு வறுமையிலிருந்து விடுபடுவதற்கு அவசியமான ஆகக் குறைந்த போசனை மட்டத்தை அடைந்து கொள்வதற்கு அவசியமான வருமானம் தேசிய வறுமை நிகழ்வாகக் கருதப்படும்.

  (இதன்படி இலங்கையில் தனிநபர் ஒருவர் நாளொன்றிற்கு கலோரி கிலோ 2030 தேவைப்படுவதாகக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.)
- குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரத் திணைக்களம் விலை மாற்றத்தைக் கருத்திற் கொண்டு மாதாந்தம் தேசிய வறுமை நிகழ்வின் பெறுமதியை மெய்ப் பெறுமதியாக வெளியிடு கின்றது.
- இந்தத் தேசிய வறுமை நிகழ்வை (கோட்டை) விடக் குறைந்த வருமானம் உழைக்கும் தனிநபர் வறியவர்களாக அறிமுகப்படுத்துவர்.
- ஆட்கணிப்பு வறுமைச் சுட்டெண் என்பது வறுமைக்கோட்டின் கீழ் உள்ள வறிய சனத் தொகையின் அளவை மொத்தச் சனத்தொகையின் சதவீதமாக காட்டுவதாகும்.
- ஆட்கணிப்பு வறுமைச் சுட்டெண்ணைக் கணிப்பீடு செய்வதற்குப் பின்வரும் வாய்ப்பாடு பயன்படுத்தப்படும்.

$$\text{ஆட்கணிப்பு வறுமைச் சுட்டெண்} = \frac{\text{வறுமைக்கோட்டின் கீழ் உள்ள சனத்தொகை}}{\text{மொத்தச் சனத்தொகை}} \times 100$$

- 2015 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுடன் தொடர்புடையதாக நாளொன்றுக்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 1.9 ஐ விடக் குறைந்த வருமானத்தைக் கொண்டு வாழ்வை நடாத்தும் சனத்தொகை வீதத்தைப் பிரித்துக் காட்டும் கோடாக சர்வதேச வறுமைக் கோடு கருதப்படும்.
- 2015 ஆம் ஆண்டில் சர்வதேச வறுமையைக் கணிப்பிடும்போது நாள் ஒன்றிற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 2.5 ஐ விடக் குறைந்த வருமானம் பெறுவோரை உள்ளடக்கி யுள்ளது.
- நிகழ்காலத்தில் உலக நாடுகளின் வறுமை படிப்படியாகக் குறைவதை அவதானிக்கலாம்.
- வறுமையை அளவீடு செய்வதற்குப் பயன்படும் ஏனைய வறுமைச் சுட்டிகள் பல வருமாறு:
  - மானிட வறுமைச் சுட்டெண்
  - நுகர்வில் வறுமைச் சுட்டெண்

- வறுமை இடைவெளிச் சுட்டெண்
- பல்பரிமாண வறுமைச் சுட்டெண்

- (மேலுள்ள சுட்டெண்களின் அண்மைக்காலத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட நாடுகளுக்கிடையே வறுமை வேறுபடும் நிலைமையை மாணவர்களுக்கு விளக்குக.)
- மானிட வறுமைச் சுட்டெண் என்பது வாழ்க்கையை நடத்துவதற்குப் போதுமானளவு வருமானம் இன்மை போன்ற குறுகிய எண்ணக்கருவிற்குப் பதிலாகப் பல்வேறு உள்ளடக்கங்களைக் கொண்ட விரிவான எண்ணக்கருவாகும்.
- தனிநபர் ஒருவர் சீரான வாழ்வை நடத்துவதற்காகத் தேவையான தெரிவு மற்றும் வாய்ப்புக்கள் இழக்கப்படுவதும் மானிட வறுமையால் கருதப்படும்.
- ஐக்கிய நாடுகள் சபையானது மானிட வறுமையைக் கணிப்பீடு செய்வதற்குப் பிரதான 3 விடயங்களைக் கவனத்தில் கொள்கின்றன.
  (1) நெடுவாழ்வு அல்லது சுகமான வாழ்வு இன்மை
  (2) நல்வாழ்வு கிடைக்காமை
  (3) அறிவின்மை
- மானிட வறுமைச் சுட்டியின் வடிவங்கள் இரண்டாகும்.
  (1) அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் மானிட வறுமைச் சுட்டெண்.
  (2) அபிவிருத்தி அடைந்த நாடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் மானிட வறுமைச் சுட்டெண்.
- ஆகக் குறைந்த நாளாந்த தனிநபர் உணவுப் போசணை நுகர்வுத் தேவையையும், உணவு அல்லாத அத்தியாவசிய நுகர்வுத் தேவைகளின் அளவுகளையும் நுகர்வில் வறுமை சுட்டெண் கணித்துக் காட்டும்.
- உணவு, உணவு அல்லாத அத்தியாவசிய நுகர்வுத் தேவைகளின் அளவை அடிப்படை யாகக் கொண்டு, காலத்துடன் இணைந்ததாக, அதன் செலவிலான மாற்றத்தைக் கவனத்திற் கொண்டு இச்சுட்டெண்ணினால் வறுமையில் தோன்றும் மாற்றம் ஆய்வு செய்யப்படும்.
- வறியவர் ஒருவர், நுகர்வில் தோன்றும் வறுமையிலிருந்து வெளியேறுவதற்குத் தேவையான பணத்தின் அளவு (பற்றாக்குறையான பணத்தின் அளவு) வறுமை இடைவெளிச் சுட்டெண் என்பதனால் கருதப்படும்.

$$\text{வறுமை இடைவெளிச் சுட்டெண்} = \frac{\text{மாதமொன்றிற்கு ஏற்படும் வறியவருக்கான நுகர்வுச் செலவு}}{\text{வறுமைக்கோட்டின் பெறுமதிகளுக்கிடையிலான வேறுபாடுகள்}}$$

- வறியவரின் வறுமை இடைவெளிச் சுட்டெண் 0 எனக் கருதி இச்சுட்டெண் தயாரிக்கப்படும்.
- வருமானத்தை அடிப்படையாகக் கொண்ட எளிமையான அளவு மூலமாக வறுமையை அளவிடுவதற்குப் பதிலாகக் குடித்தள மட்டத்தில் தனிப்பட்டவர்கள் எதிர்கொள்ள நேரிடும் வெவ்வேறு பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு பல்பரிமாண வறுமைச் சுட்டெண் அளவிடப்படும்.

- சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரம் போன்ற விரிவான பிரிவுகள் மூன்றுடன் தொடர்புடைய 10 குறைபாடுகளை அடிப்படையாகக் கொண்டு பல்பரிமாண வறுமைச் சுட்டெண் தயாரிக்கப்படும்.
- இந்த குறைபாடுகள் அனைத்தையும் உள்ளடக்கியதாக தயாரிக்கப்பட்ட பலவீனச் சுட்டியின் பெறுமதி 30% ஐ விட அதிகமாகக் கொண்டுள்ள வீட்டுத் துறையினர் வறுமையில் பீடிக்கும் வீட்டுத்துறையினராக கருதப்படுவர்.
- ஆட்கணிப்பு வறுமை சுட்டி, பலவீனச் சுட்டி என்ற இரண்டையும் பெருக்குவதன் மூலம் பல்பரிமான வறுமை சுட்டி பெறப்படும்.

| பல்பரிமான வறுமை சுட்டி = ஆட்கணிப்பு வறுமை சுட்டி × பலவீனச் சுட்டி |
|---|

(மேலுள்ள சுட்டெண்களுடன் இணைந்ததாக அண்மைக்காலத் தரவுகளின் துணையுடன் நாடுகளுக்கிடையே வறுமை வேறுபடும் முறையை மாணவர்களுக்கு விளக்குக.)

- வறுமையின் வகைகள் இரண்டும் பின்வருமாறு:
  (1) முழு வறுமை
  (2) சார்பு வறுமை
- முழு வறுமை என்பது குறித்தவொரு நபர் அல்லது வீட்டுத்துறையினருக்கு அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குப் போதுமான வருமானம் பெறப்படாத நிலைமையாகும்.
- தேசிய வறுமை நிகழ்வு (கோடு), சர்வதேச வறுமை நிகழ்வு (கோடு) என்ற இரண்டும் முழு வறுமையைக் காட்டும்.
- சார்பு வறுமை என்பது வருமானப் பரம்பல் ஏற்றத்தாழ்வை அடிப்படையாகக் கொண்டு குறிப்பிட்டவொரு சனத்தொகைப் பிரிவினர், ஏனைய சனத்தொகைப் பிரிவினருடன் ஒப்பிடுகையில் குறைந்த வருமானம் பெறும் நிலைமையாகும்.
- குறைந்த வருமானம் பெறும் 40% த்தினர் மொத்த வருமானத்தில் எந்தளவு பங்கை வகிக்கின்றனர் என்பது இங்கு கருதப்படும்.
- ஒப்பீட்டு வறுமையானது வருமான ஏற்றத்தாழ்வின் மூலம் தோன்றும் வறுமையாகும்.
- வறுமையின் வடிவங்கள் இரண்டாகும்.
  (1) நுகர்வில் வறுமை (வருமான வறுமை)
  (2) மானிட வறுமை
- நுகர்வு அல்லது வருமான வறுமை என்பது குறைந்தளவு வாழ்க்கைத் தரத்தினையேனும் கொண்டு செல்வதற்குத் தேவையான நுகர்வு மட்டத்தை மேற்கொள்ளப் போதுமானளவு வருமானம் பெறப்படாத நிலைமையாகும்.
- நுகர்வில் வறுமையின் வடிவங்கள் இரண்டாகும். அவை முழு வறுமையும் ஒப்பீட்டு நன்மையுமாகும்.
- நுகர்வில் வறுமையானது போசணை மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டே கணிப்பிடப்படும். போசணை மட்டம் என்பதில் அன்றாட உணவு வேளையில் உள்ளடங்கும் கலோரியின் அளவு, புரத அளவும் நோக்கப்படும்.

- உலக சுகாதாரக் கூட்டமைப்பின் மதிப்பீட்டின்படி 20 - 30 வயதுக்கிடைப்பட்ட ஒரு நபருக்கு நாள் ஓன்றிற்கு 2500 கலோரி பெறுமானமும் புரதம் 53 கிராமும் அவசியம் எனக் கூறப்படும்.
- ஆயினும் உலக நாடுகள் நுகர்வில் வறுமையைக் கணிப்பீடு செய்வதற்குத் தமக்கே உரித்தான போசாக்கு மட்டத்தை பயன்படுத்துகின்றன.
- இதனடிப்படையில் இலங்கையின் போசாக்கு மட்டம் 2145 கலோரிப் பெறுமானம் ஆகும்.
- சுதந்திரம், தன்மானம், கணிப்பு என்பவற்றை அனுபவித்துக் கொண்டு தேகாரோக்கியம், மகிழ்ச்சிகரமான வாழ்க்கைத் தரத்தைப் பேணுவதில் வெற்றி கண்ட மானிட அபிவிருத்திக்கான வாய்ப்புகளையும் தெரிவுகளையும் இழந்த நிலைமை மானிட வறுமையாகும்.
- மானிட வறுமைச் சுட்டெண் மூலம் மானிட அபிவிருத்தியில் பாதிப்பை ஏற்படுத்தும் மாறிகளின் செல்வாக்குத் தொடர்பாகவே வெளிப்படுத்தப்படும்.
- நெடுவாழ்வின்மை, அறிவின்மை, நல்வாழ்வு கிடைக்காமை போன்ற காரணிகளை அடிப்படையாகக் கொண்டே மானிட வறுமை சுட்டெண் தயாரிக்கப்படும்.

**தேர்ச்சி 11.0:** **அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.**

**தேர்ச்சி மட்டம் 11.6:** **இலங்கையின் வறுமை பற்றி விமர்சிப்பார்.**

**பாடவேளைகள்:** 06

**கற்றற் பேறுகள்:**

- இலங்கையின் வறுமை மட்டத்தினை இனங்காண்பார்.
- இலங்கையின் வறுமையின் பிரதேச ரீதியான வேறுபாடுகளுக்குக் காரணங்களை முன்வைப்பார்.
- இலங்கையின் வறுமைக்குக் காரணமாகிய விடயங்களை முன்வைப்பார்.
- இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை முன்மொழிவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கையில் முழு வறுமை நுகர்வு வறுமையின் அடிப்படையில் அளவிடப்படுகிறது.
- இதனைக் கணிப்பிடுவதற்கு அவசியமான வருமானம் மற்றும் செலவுத் தரவுகள் குடித்தொகை புள்ளிவிபரத் திணைக்களத்தால் மூன்று வருடங்களுக்கொரு முறை நடத்தப்படும் குடும்ப வருமானம் மற்றும் செலவு சம்பந்தமான ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.
- இலங்கையின் நிர்வாக மாவட்டங்கள் 25 உம் உள்ளடங்கும் வகையில் அண்மைக் காலத்தில் இவ்வாய்வு 2012/2013 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டுள்ளது.
- இவ்வாய்வின்படி 2009/2010 ஆம் ஆண்டில் 8.9% ஆக இருந்த தேசிய வறுமை விகிதம் 2012/2013 ஆம் ஆண்டில் 6.7% ஆகக் குறைவடைந்துள்ளது.
- இலங்கையின் சனத்தொகை வறுமைச் சுட்டெண்ணின்படி பார்க்கும்போது மிகக் குறைந்த வறுமை விகிதம் 1.4% எனக் கொழும்பு மாவட்டத்துக்கும், ஆகக் கூடிய வறுமை விகிதமாக 28.8% முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பதிவாகியுள்ளது.
- மாகாண அடிப்படையில் பார்க்கும்போது மிகக் குறைந்த வறுமை விகிதமாகிய 2.0% மேல் மாகாணத்துக்கும், ஆகக்கூடிய வறுமை விகிதமாகிய 15.4% ஊவா மாகாணத்துக்கும் பதிவாகி உள்ளது.
- மொத்தமாகப் பார்க்கும்போது இலங்கையில் 2012/2013 ஆம் ஆண்டில் நகரத் துறை வறுமை விகிதம் 2.1% ஆகவும், கிராமியத் துறை வறுமை விகிதம் 7.6% ஆகவும், பெருந்தோட்டத் துறை வறுமை விகிதம் 10.9% ஆகவும் காணப்படுகிறது.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி இலங்கையின் வறுமையின் பிரதேச ரீதியான வேறுபாடு ஏற்படுவதில் தாக்கம் செலுத்தும் காரணிகள் கீழே காட்டப்படுகின்றன.
  - பொருளாதார வளர்ச்சி கீழ் மட்டத்தில் காணப்படல்.
  - சனத்தொகை விரைவாக வளர்ச்சி அடைதல்.

- இயற்கை அனர்த்தங்கள்
- கீழ்க் கட்டமைப்பு வசதிகள் பலவீனமடைதல்.
- பாதகமான அரச நிர்வாகம்
- போசாக்கு நிலைமை
- கல்வி, சுகாதார சேவைகளின் பலவீனம்
- சந்தையில் பிரவேசிப்பதற்கான தடைகள்
- குடும்பங்களின் விசாலாமான தன்மை
- கலாசாரச் செல்வாக்கு
- உள்நாட்டுப் பிரச்சினைகள்

- இலங்கையின் வறுமையில் கீழே தரப்படும் காரணிகள் தாக்கம் செலுத்துகின்றன.
  - பிரதேச ரீதியான காரணிகள்
    - நகரத்துக்கும் சந்தைக்குமிடையிலான தொடர்புகள் விரிவடைந்து செல்லல்
    - யுத்தப் பிரச்சினைளும் இனப் பிரச்சினைகளும்
    - விவசாயம் பிரதான வேலைவாய்ப்பு மூலமாக அமைதல்.
  - துறை ரீதியான காரணங்கள்
    - கல்வியின் பண்பு ரீதியான தன்மை கீழ் மட்டத்தில் காணப்படுதல்.
    - விவசாயத் துறையின் விளைதிறன் குறைந்த பெறுமதியைப் பெறுதல்.
  - குடும்ப ரீதியான காரணங்கள்
    - குடும்பத்தில் பிள்ளைகளின் தொகை அதிகமாக இருத்தல்.
    - குறைந்த கல்வி மட்டம்
    - மரபுரீதியாகப் பெறப்பட்ட சொத்துக்கள் குறைவடைதல்
    - போதைப் பொருட்களுக்கு அடிமையாதல்

- இலங்கையில் வறுமையைக் குறைப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் கீழ்க் காட்டப்படுகின்றன.

  (1) வறிய மக்கட் பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான சந்தர்ப்பங் களை விரிவுபடுத்தல்.
    - வேலைவாய்ப்புச் சந்தர்ப்பங்கள் அதிகரித்தல்.
    - சுகாதார வசதிகளை வழங்குதல்.
    - கீழ்க் கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்.
    - சிற்றளவுக் கைத்தொழில்களை வலுப்படுத்தல்.
    - பல்வேறு நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்தல்.

(2) தீர்மானமெடுக்கும் செயற்பாட்டில் பங்குபற்றும் மக்கட் பிரிவினரை வலுவூட்டம் செய்தல்.

- பொது நிர்வாகத்தை இலகுபடுத்தல்.
- சட்டரீதியான நடவடிக்கைகளில் பிரவேசிப்பதற்கான ஆற்றலை விரிவுபடுத்தல்.
- தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றலை விரிவுபடுத்தல்.

(3) பாதுகாப்பற்ற நிலைமையிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு அவசியமான கரிசனையைப் பெற்றுக் கொடுத்தல்.

- தொற்றும் நோய்க் கட்டுப்பாடு
- காப்புறுதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- மானியம் வழங்குதல்.

**தேர்ச்சி 11.0:** அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 11.7:** இலங்கையின் சனத்தொகைப் பரம்பலில் மாற்றமும் அதன் விளைவுகளையும் ஆராய்ச்சி செய்வார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- சனத்தொகை வளர்ச்சியையும் அதனைத் தீர்மானிக்கும் காரணிகளையும் அறிமுகப் படுத்துவார்.
- சனத்தொகையில் இயற்கை வளர்ச்சி வீதத்தையும் தேறிய குடிப்பெயர்வு வீதத்தையும் கணிப்பீடு செய்வார்.
- சனத்தொகைப் பரம்பலில் மாற்றத்தையும் அதன் பொருளாதார விளைவுகளையும் விளக்குவார்.
- வயதுக் கட்டமைப்பில் தோன்றும் மாற்றங்களினால் தோன்றும் விளைவுகளை விமர்சிப்பார்.
- இலங்கை சனத்தைதொகையில் துறை ரீதியான பரம்பலை விளக்குவார்.
- சனத்தொகை வளர்ச்சிக் கட்டங்களை வரைவிலக்கணப்படுத்தி விளக்குவார்.
- இலங்கையில் தங்கிவாழ்வோர் வீதத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையில் தங்கிவாழ்வோர் வீதத்தைக் கணிப்பீடு செய்வார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சனத்தொகை என்பது ஒரு மாறும் தரவு ரீதியான ஆய்வாகும்.
- நாடொன்றில் சனத்தொகை வளர்ச்சியைத் தீர்மானிக்கும் பிரதான காரணிகள் 3 ஆகும்.
  - (1) பிறப்பு
  - (2) இறப்பு
  - (3) குடிப்பெயர்வு
- பிறப்பு என்பது சனத்தொகையில் தோன்றும் உயிரியல் ரீதியான பிறப்புகளின் அளவாகும்.
- குறித்த வருடத்தின் நடுப்பகுதியில் சனத்தொகையில் உயிருடன் பிறப்பவர்களின் எண்ணிக்கையை ஆயிரம் பேருக்கு எத்தனை எனக் கூறுவது பருமட்டான பிறப்பு வீதமாகும்.

$$\text{பருமட்டான பிறப்பு வீதம்} = \frac{\text{உயிருடன் பிறப்பவர்களின் எண்ணிக்கை}}{\text{நடுவாண்டுச் சனத்தொகை}} \times 1000$$

- குறித்த வருடத்தில் நடுவாண்டுச் சனத்தொகையில் அவ்வருடத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையை ஆயிரம் பேருக்கு எத்தனை எனக் குறிப்பிடுவது பருமட்டான இறப்பு வீதம் எனப்படும்.

$$\text{பருமட்டான இறப்பு வீதம்} = \frac{\text{இறந்தவர்களின் எண்ணிக்கை}}{\text{நடுவாண்டுச் சனத்தொகை}} \times 1000$$

- சனத்தொகையில் இயற்கை வளர்ச்சி என்பது குறித்த வருடத்தில் இடம்பெற்ற பிறப்பு, இறப்புகளில் தோன்றும் வேறுபாடாகும்.
- இயற்கை வளர்ச்சி வீதம் பின்வருமாறு கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{இயற்கை வளர்ச்சி வீதம்} = \frac{\text{பிறப்புகளின் எண்ணிக்கை - இறப்புகளின் எண்ணிக்கை}}{\text{நடுவாண்டுச் சனத்தொகை}} \times 100$$

- குடிப்பெயர்வு என்பது ஒரு பிரதேசத்திலிருந்து இன்னுமொரு பிரதேசத்திற்குத் தோன்றும் இடமாற்றமாகும்.
- நாடுகளுக்கிடையே தோன்றும் குடிப்பெயர்வு என்றடிப்படையில் பிறநாடுகளிலிருந்து குறித்த நாட்டிற்குக் குடியிருக்க வருவதானது குடிவரவு என்றும், குறித்த நாட்டிலிருந்து பிற நாடுகளுக்குக் குடியிருக்கச் செல்வதானது குடியகல்வு என்றும் அழைக்கப்படும்.
- இந்தக் குடிவரவிலிருந்து குடியகல்வை நீக்க வருவதானது தேறிய குடிப்பெயர்ச்சி ஆகும்.
- தேறிய குடிப்பெயர்வானது நடுவாண்டுச் சனத்தொகையில் ஆயிரம் பேருக்கு எவ்வளவு எனக் கணிப்பிட்டுக் கூறுவது, தேறிய குடிப்பெயர்ச்சி வீதம் என அழைக்கப்படும்.

$$\text{தேறிய குடிப்பெயர்ச்சி வீதம்} = \frac{\text{குடிவரவுகளின் எண்ணிக்கை - குடியகல்வின் எண்ணிக்கை}}{\text{நடுவாண்டுச் சனத்தொகை}} \times 100$$

- கடந்த பல வருடங்களாக இலங்கையின் சனத்தொகைப் பரம்பலில் தோன்றிய மாற்றங்கள் பின்வருமாறு:
  - சனத்தொகை வளர்ச்சி வீதம் வீழ்ச்சியடைதல்.
  - வயதுக் கட்டமைப்பில் பெருமளவில் மாற்றம் ஏற்படுதல்.
  - சிறுவர் சனத்தொகை வீதம் குறைவடைதல்.
  - மொத்தப் பிறப்பு, மொத்த இறப்பு வீதங்கள் குறைவடைதல்.
  - ஆயுள் எதிர்பார்க்கை உயர்ந்த பெறுமதியைக் கொள்ளுதல்.
- சனத்தொகைப் பரம்பலில் வயதுக் கட்டமைப்பில் தோன்றும் மாற்றத்தினால் பின்வரும் விளைவுகளை எதிர்நோக்க நேரிடும்.
  - ஊழியப்படை வீழ்ச்சியடைதல்.
  - தங்கிவாழ்வோர் வீதம் உயர்வடைதல்.
  - ஊழிய விளைதிறன் குறைவடைதல்.
  - அரசாங்கத்தின் நடைமுறைச் செலவு உயர்வடைதல்.
  - பாதீட்டுப் பற்றாக்குறை உயர்வடைதல்.

- இலங்கைச் சனத்தொகையின் துறை ரீதியான உள்ளடக்கத்தைச் சமூக விஞ்ஞான ரீதியாகப் பின்வரும் இரு அடிப்படைகளில் காட்டலாம்.

  (1) ஆண் பெண் என்ற பால் அடிப்படையில்

  (2) வயதுக் கட்டமைப்பின் அடிப்படையில்

- சனத்தொகையினை ஆண், பெண் என்ற அடிப்படையில் கணிப்பீடு செய்யும்போது பால் விகிதம் (Sex Ratio) பயன்படுத்தப்படும்.

- பால்விகிதம் என்பது சனத்தொகையில் 100 பெண்களுக்கு எத்தனை ஆண்கள் உள்ளனர் எனக் குறிப்பிடுவதாகும்.

- பால்விகிதம் பின்வரும் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்படும்.

$$\text{பருமட்டான பால் விகிதம்} = \frac{\text{நடுவாண்டு ஆண்களின் எண்ணிக்கை}}{\text{நடுவாண்டுப் பெண்களின் எண்ணிக்கை}} \times 100$$

(அண்மைய ஆண்டுகளின் தரவுகளை மாணவர்களுக்கு வழங்குக.)

- வயதுக் கட்டமைப்பு என்பது வயதுப் பிரிவின் அடிப்படையில் சனத்தொகையை வகைப் படுத்திக் காட்டுவதாகும்.

  பல நாடுகளில் பின்வரும் அடிப்படையில் சனத்தொகையானது மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்படும். இது ஆராய்ச்சிகளை மேற்கொள்ள இலகுவாகக் காணப்படும். (இலங்கையில் இவ்வகைப்பாடு இடம்பெறும்.)

  (1) சிறுவர் சனத்தொகை (15 வயதிற்கு கீழ்)

  (2) வேலை செய்யும் வயதிலான சனத்தொகை (15 - 59 வயது வரை)

  (3) முதியோர் சனத்தொகை (60 வயதிற்கு மேல்)

- குடித்தொகை மதிப்பீட்டுப் புள்ளிவிபர திணைக்களத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட (வயது அடிப்படையிலான) சனத்தொகைக் கட்டமைப்புத் தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணையினால் காட்டப்படும். இங்கு அடியாண்டாக 2001 ஆம் ஆண்டு பயன்படுத்தப் பட்டுள்ளது.

| ஆண்டு | 15 வயதிற்கு கீழ்ச் சிறுவர்கள் | | வேலை செய்யும் வயதிலான சனத்தொகை (15-59 வயது) | | முதியோர் (60 வயதிற்கு மேல்) | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | வீதம் | தொகை | வீதம் | தொகை | வீதம் |
| 2001 | 4 922.4 | 26.3 | 12 080.5 | 64.5 | 1 731.4 | 9.2 |
| 2006 | 4 807.4 | 24.4 | 12 836.7 | 65.1 | 2 075.7 | 10.5 |
| 2011 | 4 692.4 | 22.8 | 13 294.8 | 64.7 | 2 570.4 | 12.5 |
| 2016 | 4 523.6 | 21.4 | 13 591.9 | 64.2 | 3 070.2 | 14.5 |
| 2021 | 4 196.1 | 19.4 | 13 378.8 | 63.8 | 3 605.1 | 16.7 |
| 2026 | 3 825.3 | 17.5 | 13 863.2 | 63.6 | 4 115.0 | 18.9 |
| 2031 | 3 520.3 | 16.1 | 13 826.2 | 63.2 | 4 536.1 | 20.7 |
| 2036 | 3 363.2 | 15.4 | 13 589.3 | 62.3 | 4 888.8 | 22.4 |
| 2041 | 3 299.0 | 15.2 | 13 026.7 | 60.0 | 5 386.7 | 24.8 |

- மேலுள்ள அட்டவணையின்படி சிறுவர் சனத்தொகையும் வேலை செய்யும் வயதிலான சனத்தொகையும் படிப்படியாகக் குறைவதுடன், முதியோர் சனத்தொகையானது படிப்படியாக அதிகரிப்பதையும் காணலாம்.
- ஐக்கிய நாடுகள் சபை (2015) அறிக்கைப்படி இலங்கையின் சனத்தொகையானது தென்ஆசியாவில் முதியோர் சனத்தொகையை அதிகளவில் கொண்டதாக இருப்பதுடன், உலகில் விரைவாக முதுமையடையும் சனத்தொகையைக் கொண்ட நாடுகளில் ஒன்றாகவும் காணப்படும்.
- 2015 ஆம் ஆண்டில் இலங்கையின் சனத்தொகையானது 20.96 மில்லியனாக இருப்பதுடன், அதில் 13.9% மான சனத்தொகையானது முதியோரைக் கொண்டதாக மதிப்பீடு செய்யப் பட்டுள்ளது.
- 2050 ஆம் ஆண்டில் 60 வயதுக்கு மேற்பட்ட முதியோர் சனத்தொகையானது 28.6% ஆகவும் 2100 ஆம் ஆண்டில் 40% ஆகவும் அதிகரிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும். (ஐக்கிய நாடுகள் சபை அறிக்கை - 2015)
- வயதுக் கட்டமைப்பில் தோன்றிய மாற்றம் காரணமாக வேலை செய்யும் வயதிலான சனத்தொகையின் சதவீதமானது, தங்கி வாழ்வோர் சனத்தொகையின் சதவீதத்தை விட உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இது பொருளாதார வளர்ச்சிக்குச் சாதகமான நிலைமையாகக் கருதப்படும்.
- ஆயினும் சனத்தொகையானது விரைவில் முதுமையடைவதனால் மிக விரைவாக இச்சாதக நிலைமையை இழக்க நேரிடலாம்.
- சனத்தொகை வளர்ச்சிக் கட்டம் மாற்றம் என்பது நாடொன்றில் அல்லது பிரதேசமொன்றில் குறிப்பிட்ட காலப்பகுதியில் மாற்றமின்றி உயர்ந்த மட்டத்தில் காணப்பட்ட பிறப்பு இறப்பு வீதமானது குறித்தவொரு காலத்தில் மாற்றத்திற்கு உட்பட ஆரம்பித்து, படிப்படியாகக் குறைத்து மீண்டும் குறைந்த மட்டத்தில் மாற்றமின்றி இருக்கும் நிலைமை யாகும்.
- சனத்தொகை வளர்ச்சிக் கட்டமானது (Demograph Transition) பெரும்பாலும் 4 கட்டங் களில் காட்டப்படும்.

  **கட்டம் 1:** பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் உயர்ந்த மட்டத்தில் காணப்படும். இயற்கை வளர்ச்சி வீதம் மிகக் குறைவாகும்.

  **கட்டம் 2:** பிறப்பு வீதம் உயர்ந்த மட்டத்தில் காணப்படும். இறப்பு வீதம் படிப் படியாகக் குறையும். இயற்கை வளர்ச்சி வீதம் படிப்படியாகக் கூடும்.

  **கட்டம் 3:** பிறப்பு வீதம் படிப்படியாகக் குறையும். இறப்பு வீதம் குறைந்த மட்டத் திலேயே இருக்கும். இயற்கை வளர்ச்சி வீதம் படிப்படியாகக் குறையும்.

  **கட்டம் 4:** பிறப்பு வீதமும் இறப்பு வீதமும் குறைந்த மட்டத்தில் மாற்றமின்றி இருக்கும். இயற்கை வளர்ச்சி வீதம் குறையும்.

- கைத்தொழில் புரட்சி, பொருளாதார, சமூக முன்னேற்றம் என்பவற்றின் காரணமாக பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளில் சனத்தொகைக் கட்டமைப்பு மாற்றமானது மேலுள்ள அடிப்படையில் இடம்பெற்றாலும், மத்திய கிழக்கு நாடுகளில் இதே அடிப்படையில் இடம்பெறவில்லை.

- பொருளாதார ரீதியாக மிகவுயர்ந்த மட்டத்தை அண்மிக்காத நிலையில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சிக் கட்டமைப்பானது கட்டம் மூன்று வரை இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.
- 2000 ஆம் ஆண்டில் இலங்கையில் சனத்தொகைக் கட்டமைப்பு மாற்றமானது கட்டம் மூன்றின் இறுதிக் கட்டத்தை அடைந்த போதிலும் (2006/2007 இலங்கையின் சனத்தொகை சுகாதார ஆய்வுகளின் மூலமும் வெளிப்படுத்தலின் அடிப்படையில்) மொத்தக் கருவுற்றோர் (Fertility) வீதமானது மீண்டும் உயர்ந்துள்ளதைக் காணலாம். இது இலங்கையின் சனத்தொகை வளர்ச்சிக் கட்டமைப்பில் மீண்டும் பின்னோக்கிச் செல்லும் போக்கை ஏற்படுத்தியுள்ளதை அவதானிக்கலாம்.
- ஆயினும் 2008 இல் இறப்பு வீதமானது குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன், பிறப்பு வீதமும் இயற்கை வளர்ச்சி வீதமும் குறைந்த மட்டத்தில் இருப்பதைக் காணலாம்.
- சமூகநலன், கல்வி, சுகாதாரம் என்பவற்றிற்காகப் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் காரணமாக ஆயுள் எதிர்பார்க்கை உயர்ந்துள்ளது. மேலும் கருவுற்றோர் வீதமானது விரைவாக வீழ்ச்சியடைய இது இலங்கை நாட்டிற்கு உரித்தான பண்பாக இருப்பதனால் தென் ஆசிய நாடுகளில் விசேடத்துவம் கொண்ட நாடாகக் கருதப்படும்.
- குறித்தவொரு சனத்தொகையில் வேலை செய்யும் தனிநபர்கள் 100 பேருக்கு, தங்கி வாழ்வோர் எத்தனை பேர் என ஒப்பீட்டு ரீதியில் நோக்குவதன் மூலம் பெறப்படும் பெறுமதியானது தங்கி வாழ்வோர் வீதமாகும்.
- தங்கிவாழ்வோர் வீதம் 3 வகைகளைக் கொண்டிருக்கும். அதன் வகைகளும் அவற்றைக் கணிப்பிடும் முறைகளும் பின்வருமாறு:

(1) சிறுவர் தங்கி வாழ்வோர் வீதம்

$$\text{சிறுவர் தங்கி வாழ்வோர் வீதம்} = \frac{\text{0 - 14 வயதிற்கு இடைப்பட்ட சனத்தொகையினர்}}{\text{15 - 59 வயதிற்கு இடைப்பட்ட சனத்தொகையினர்}} \times 100$$

(2) முதியோர் தங்கி வாழ்வோர் வீதம்

$$\text{முதியோர் தங்கி வாழ்வோர் வீதம்} = \frac{\text{60 வயதும் அதற்கு மேற்பட்டதுமான சனத்தொகை}}{\text{15 - 59 வயதிற்கு இடைப்பட்ட சனத்தொகை}} \times 100$$

(3) மொத்தத் தங்கி வாழ்வோர் வீதம்

$$\text{மொத்தத் தங்கி வாழ்வோர் வீதம்} = \text{சிறுவர் தங்கி வாழ்வோர் வீதம்} + \text{முதியோர் தங்கி வாழ்வோர் வீதம்}$$

**தேர்ச்சி 11.0:** அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 11.8:** இலங்கையின் ஊழியப்படையையும் அது கணிப்பீடு செய்யப்படும் முறையையும் விளக்குவார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- ஊழியப் படையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- கற்பனை ரீதியான தரவுகளைப் பயன்படுத்தி ஊழியப்படையைக் கணிப்பீடு செய்வார்.
- வேலை செய்யும் வயதிலான சனத்தொகைக்கும் ஊழியப்படைக்குமிடையில் உள்ள வேறுபாட்டை விளக்குவார்.
- ஊழியப்படையில் பங்குகொள்வோர் வீதத்தைக் கணிப்பீடு செய்வார்.
- இலங்கையின் ஊழியப்படையின் பண்புகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- குறித்தவொரு காலப்பகுதியில் சம்பளம் அல்லது ஏனைய பொருளாதாரப் பிரதிபலனை எதிர்பார்த்து, பொருளாதார ரீதியான பெறுமதியைக் கொண்ட, பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக, உழைப்பை வழங்குவதும், உழைப்பை வழங்குவதற்கு எதிர்பார்ப்பதுமான ஆகக் குறைந்த, ஆகக் கூடிய வயதுப் பிரிவில் காணப்படும் எல்லா நபர்களினதும் கூட்டுத்தொகையானது ஊழிப்படை என அழைக்கப்படும்.
- இன்னும் எளிமையாகக் கூறுவதாயின் ஊழியப் படை என்பது குறித்தவொரு நாட்டில் குறித்தவொரு காலப் பகுதியில் (கருதப்படும் காலப் பகுதியில்) தொழிலில் ஈடுபட்டவர் களையும் தொழிலற்றவர்களையும் சேர்த்து வருவதாகும்.
- ஊழியப்படையைக் கணிக்கும்போது உலகில் பல நாடுகள் வித்தியாசமான வயதெல்லை யைப் பயன்படுத்துகின்றனர்.
- இலங்கையில் குடிசன புள்ளிவிபரத் திணைக்களமானது ஊழியப்படையைக் கணிப்பிடும் முறை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| மொத்தச் சனத்தொகையில் வயது 15 உம் அதிலும் கூடிய சகலரும் (வேலை செய்யக்கூடிய வயதிலான சனத்தொகை) | | xxxx |
| கழிக்குக: | | |
| வீட்டுத் தலைவிகள் | xxx | |
| முழுநேர மாணவர்கள் | xxx | |
| அங்கவீனமுற்றோர் | xxx | |
| தொழில் செய்ய விருப்பமற்றோர் | xxx | (xxx) |
| ஊழியப்படை (15 வயதும் அதற்கு மேற்பட்டதுமான செயற்றிறன் வாய்ந்த சனத்தொகை) | | xxx |

- இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் 15 வயதும் அதனிலும் கூடிய வயதிற் கிடைப்பட்ட சனத்தொகையினர் வேலை செய்யும் வயதிலான சனத்தொகை எனப்படும். அத்துடன் இவ்வயதெல்லையில் காணப்படும் எண்ணிக்கையிலிருந்து வீட்டுத் தலைவிகள், முழுநேர மாணவர்கள், ஓய்வு பெற்றோர், வயோதிபர், பலவீனம் அல்லது ஊனமுற்ற வர்கள், விருப்பத்துடன் தொழில் செய்யாதவர்கள் போன்றோரை நீக்கி வரும் எஞ்சிய சனத்தொகையானது ஊழியப்படையாகக் கருதப்படும்.
- ஊழியப்படையை, வேலை செய்யும் வயதிலான சனத்தொகையின் வீதமாகக் காட்டப் படுவதானது ஊழியப்படையில் பங்குகொள்வோர் வீதம் என அழைக்கப்படும்.

$$\text{ஊழியப்படையில் பங்குகொள்வோர் வீதம்} = \frac{\text{ஊழியப்படை}}{\text{வேலை செய்யும் வயதிலான சனத்தொகை}} \times 100$$

- இலங்கையின் ஊழியப்படையில் அண்மைக்காலமாக அவதானிக்கக்கூடிய பண்புகள் சில வருமாறு:
  - வேலை செய்யும் வயதிலான சனத்தொகை குறைவடைதல்.
  - ஊழியப்படையில் பங்குகொள்வோர் வீதம் உயரவடைதல்.
  - பெண்களின் ஊழியர் பங்களிப்பு வீதம் உயர்வடைதல்.
  - பெண்களுடன் ஒப்பிடுமிடத்து ஆண்களின் ஊழிய பங்குபற்றல் வீதம் உயர்ந்த பெறுமதியைக் கொண்டிருத்தல்.

(இலங்கையின் ஊழியப்படை, ஊழியப்படையில் பங்குகொள்வோர் தொடர்பாக அண்மைக் காலத் தரவுகளின் துணையுடன் மாணவர்களுக்கு விளக்கமளிக்குக.)

**தேர்ச்சி 11.0:** அபிவிருத்தியின் பன்முகத் தன்மையினை விளக்கி நிலைபேறான அபிவிருத்திக்குப் பங்களிப்பதற்கான விருப்பத்தினை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 11.9:** இலங்கையில் தொழில் செய்வோர், தொழிலற்றோர் தொடர்பாகக் கட்டமைப்பு ரீதியான பண்புகளை விளக்குவார்.

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- தொழில்வாய்ப்பு என்ற பதத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையின் தொழில் வாய்ப்பின் பண்புகளை விளக்குவார்.
- தொழில் வாய்ப்பு வீதத்தைக் கணிப்பீடு செய்வார்.
- இலங்கையில் தொழில் வாய்ப்பின் வீதத்தையும் அதன் மாற்றங்களையும் விளக்குவார்.
- குறைதொழில் மட்டத்தை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையில் குறைதொழில் மட்டம் தோன்றுவதற்கான காரணங்களையும் அதன் விளைவுகளையும் விளக்குவார்.
- வேலையின்மையை வரைவிலக்கணப்படுத்துவார்.
- இலங்கையில் வேலையின்மை வீதத்தையும் அதன் மாற்றங்களையும் விளக்குவார்.
- இலங்கையில் வேலையின்மைக்கான காரணங்களை விளக்குவார்.
- வேலையின்மையின் பொருளாதார சமூக விளைவுகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- குடிசனப் புள்ளிவிபர திணைக்களத்தின் வரைவிலக்கணத்திற்கு ஏற்ப தொழில்வாய்ப்பு என்பது ஆய்வை மேற்கொள்ளும் திகதிக்கு முன் ஒரு வாரத்தினுள் குறித்தவொரு நபர் ஆகக் குறைந்தது ஒரு மணித்தியாலமாவது ஏதாவதொரு பொருளாதார செயற்பாட்டில் ஈடுபடுவதாகும்.

  எளிமையான வடிவில் கூறுவதாயின் தொழில் வாய்ப்ப என்பது சம்பளம் அல்லது வேறு ஏதாவது பொருளாதார ரீதியான பிரதிபலனை எதிர்பார்த்து ஒரு நபர் பயனுள்ள பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடுவதை இது குறிக்கும்.

- நாடொன்றின் தொழில்வாய்ப்பில் ஈடுபட்டுள்ள பிரிவினரை பின்வரும் 4 பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.
  (1) அரச தனியார் துறை தொழிலாளர்
  (2) தொழிலதிபர்கள்
  (3) சுய தொழில்களில் ஈடுபடுவோர்
  (4) கொடுப்பனவு (சம்பளம்) பெறாத குடும்ப ஊழியர்கள்

- தொழில்வாய்ப்பு வீதம் என்பது தொழில்வாய்ப்பில் ஈடுபட்டுள்ள சனத்தொகையை ஊழியப் படையின் வீதமாகக் கூறுவதாகும்.

$$\text{தொழில்வாய்ப்பு வீதம்} = \frac{\text{தொழில்வாய்ப்பிலீடுபட்டுள்ள சனத்தொகை}}{\text{ஊழியப்படை}} \times 100$$

(இலங்கையின் தொழில்வாய்ப்பு வீதம், அதன் மாற்றங்கள் தொடர்பாக மத்திய வங்கியின் அண்மைக்கால ஆண்டறிக்கையின் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களுக்கு விளக்குக.)

- குறைதொழில் மட்டம் என்பது ஊழிய வளத்தை முழுமையாகத் தொழில்வாய்ப்பில் ஈடுபடுத்தாத நிலைமையாகும்.
- குறைதொழில் மட்டம் இரண்டு முறைகளில் ஏற்படலாம்.
  (1) கட்புலனாகும் குறைதொழில் மட்டம்
  (2) கட்புலனாகாத குறைதொழில் மட்டம்
- கட்புலனாகும் குறைதொழில் மட்டம் என்பது குறித்த உற்பத்தி, தேவையான அளவு மணித்தியாலத்திற்கு, தொழில் இல்லாத நிலைமையாகும்.
- கட்புலனாகாத குறைதொழில் மட்டம் என்பது தேர்ச்சி மட்டத்தை விடக் குறைந்த தேர்ச்சி மட்டத்தில் தொழிலில் ஈடுபடுவதாகும்.

  உ+ம்:- பட்டதாரி ஒருவர் காரியாலயமொன்றில் எழுதுவினைஞராகக் கடமையாற்றுதல்.
- இலங்கையில் குறைதொழில் மட்டத்திற்குப் பின்வருபவை காரணங்களாக அமைகின்றன.
  - தொழிலுக்குக் கேள்வி ஏற்படுத்துபவர்களின் தகுதியும் இயலுமையும் ஊழியர் சந்தையின் தேவையுடன் இணங்காமை.
  - ஊழியச் சந்தைக்குத் தேவையான தேர்ச்சிகளை உருவாக்குவதில் அரசாங்கம் தோல்வியடைதல்.
  - ஊழியப்படையின் வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது பொருளாதார வளர்ச்சி வேகம் மந்த நிலையில் இடம்பெறுதல்.
  - நிறுவனத்தினுள் தேவையான ஊழியர்களின் அளவை விட அதிகமானவர்களை தொழிலில் அமர்த்துதல்.
- இலங்கையில் காணப்படும் குறைதொழில் மட்ட நிலைமைகளின் காரணமாகப் பின்வரும் விளைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.
  - பொருளாதாரத்தில் உற்பத்தி வீழ்ச்சியடைதல்.
  - உழைப்பு வீணடிக்கப்படுதல்.
  - வருமானப் பங்கீட்டில் சமமின்மை தோன்றுதல்.
  - ஊழியத்தின் விளைதிறன் குறைவடைதல்.
  - வறுமைக்கு முகங் கொடுத்தல்.
  - சமூக விரோதச் செயல்கள் அதிகரித்தல்.

- வேலையின்மை என்பது பொருளாதாரப் பிரதிபலன் ஒன்றை எதிர்பார்த்து, ஏதாவது பொருளாதார நடவடிக்கை ஒன்றில் ஈடுபடுவதற்கு விருப்பம் இருந்தும், அதற்குச் சந்தர்ப்பம் ஒன்று இல்லாதிருப்பதாகும்.

- வேலையின்மை 4 வகைப்படும்.
    - (1) பருவகால வேலையின்மை
    - (2) உராய்வு வேலையின்மை
    - (3) கட்டமைப்பு ரீதியான வேலையின்மை
    - (4) சுழற்சி வேலையின்மை

- வேலையற்ற சனத்தொகையினை ஊழியப்படையில் சதவீதமாகக் குறிப்பிடுவது வேலையின்மை வீதமாகும்.

$$\text{வேலையின்மை வீதம்} = \frac{\text{வேலையற்ற சனத்தொகை}}{\text{ஊழியப்படை}} \times 100$$

- இலங்கையில் வேலையின்மை வீதத்தையும் அதில் தோன்றிய மாற்றத்தையும் பின்வரும் அடிப்படையில் காட்டலாம்.
    - இலங்கையில் வேலையின்மை வீதமானது ஒப்பீட்டு ரீதியில் குறைந்த மட்டத்தில் இருத்தல்.
    - கல்வி கற்ற இளைஞர்களிடையே வேலையின்மை உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல்.
    - கிராமியத் துறையில் வேலையின்மையானது உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல்.
    - பெண்களின் வேலையின்மை ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுதல்.

- இலங்கையில் வேலையின்மை தோன்றுவதற்கான காரணங்கள் வருமாறு:
    - ஊழியர் சந்தைக்குப் பொருத்தமான வகையில் ஊழியர்கள் உருவாகாதிருத்தல்.
    - தொழிலுக்குக் கேள்வியை ஏற்படுத்துபவர்களின் தகுதியும் இயலுமையும் ஊழியச் சந்தையின் தேவையுடன் பொருந்தாமை.
    - தொழிலுக்கான கௌரவம், அங்கீகாரம் போன்ற காரணங்களால் தனியார் துறையின் தொழில்வாய்ப்புகளில் ஈடுபடாமல் அரச துறை தொழில்வாய்ப்பு கிடைக்கும் வரை காத்திருத்தல்.
    - ஊழியப்படையின் வளர்ச்சியுடன் ஒப்பிடுமிடத்து பொருளாதார வளர்ச்சி வேகம் மந்தமாக இடம்பெறுவதால் தொழில் உருவாக்கம் குறைவாக இருத்தல்.
    - சட்டவரையறைகள் காரணமாகத் தனியார் உற்பத்தி நிறுவனங்களுக்குத் தொழிலாளர் களைச் சேர்த்துக் கொள்வதில் வரையறைகள் காணப்படுதல்.

- இலங்கையில் வேலையின்மை உயர்வடைந்து செல்வதனால் பின்வரும் விளைவுகள் எதிர்நோக்கப்படுகின்றது.
    - சமூகத்திற்குக் கிடைக்க வேண்டிய உத்தம வெளியீட்டு மட்டம் இழக்கப்படுதல்.
    - வறுமை உயர்வடைதல்.
    - தேறிய குடிப்பெயர்வு உயர்வடைதல்.
    - அரசின் சமூக நலச் செலவுகள் உயர்வடைதல்.
    - சமூக அரசியல் உறுதித்தன்மை ஏற்படுதல்.
    - சமூக விரோதச் செயல்கள் உயர்வடைதல்.
    - பாடசாலை, பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுவோர், நவீன சிந்தனையை உள்வாங்கிக் கொள்வதில் தாமதமாக இருப்பதனால் நவீன வெளியீடுகளின் உருவாக்கம் குறைவாக இருத்தல்.

**தேர்ச்சி 12.0:** **இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பும் கொள்கைகளும் தொடர்பாக நுணுக்கமாக விமர்சிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 12.1:** **சுதந்திரத்தின் பின்னர் இலங்கையின் பொருளாதாரத்தில் தோன்றிய மாற்றங்களை விமர்சிப்பார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- சுதந்திரத்தின் பின்னர் பொருளாதாரத்தில் தோன்றிய மாற்றங்களை விளக்குவார்.
- ஏற்றுமதிப் பதிலீட்டுக் கொள்கையின் அடிப்படைப் பண்புகளைப் பெயரிடுவார்.
- கைத்தொழிற் கொள்கையின் அடிப்படைப் பண்புகளைப் பெயரிடுவார்.
- இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கையானது பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கத்தை விளக்குவார்.
- ஏற்றுமதி ஊக்குவிப்புக் கைத்தொழிற் கொள்கை, தடையில்லா வர்த்தகக் கொள்கை என்பவற்றை வரைவிலக்கணப்படுத்துவார்.
- ஏற்றுமதி ஊக்குவிப்பு கைத்தொழிற் கொள்கை தடையில்லா வர்த்தகக் கொள்கை என்பவற்றின் அடிப்படைப் பண்புகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- சுதந்திரத்தின் பின்னரான பொருளாதாரப் பண்புகளின் அடிப்படையில் பல்வேறான கட்டங்களை அவதானிக்கலாம்.
  - 1948 - 1960 வரையான காலம்
  - 1961 - 1977 வரையான காலம்
  - 1977 - 1994 வரையான காலம்
  - 1994 - 2015 வரையான காலம்

- 1948 - 1960 வரையான காலத்தின் பிரதான பண்புகள்
  - காலனித்துவ ஆட்சியில் காணப்பட்ட பண்புகள் சிறிய மாற்றங்களுடன் செயற்படுதல்.
  - உலக வங்கியின் தலையீடுகள் முதற் தடவையாகப் பொருளாதாரத்தில் ஏற்படுதல்.
  - பொருளாதார கைத்தொழிலுக்கும் பிரதான இடம் வழங்குதல்.
  - தங்கியிருக்கும் விவசாயத்திலும், விவசாய கூட்டுறவுத் துறையிலும் முன்னேற்றம் ஏற்படுதல்.
  - சென்மதி நிலுவைப் பற்றாக்குறை தோன்றுதல்.
  - பொருளாதாரத்தில் திட்டமிடல் நடவடிக்கைகள் தோன்றுதல்.
  - திறந்த பொருளாதாரக் கொள்கையைப் பகுதியளவில் பின்பற்றுதல்.
  - விரிவான அடிப்படையில் சமூக நல நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.
  - குடியேற்றத் திட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுதல்.

- 1961 - 1977 இல் இலங்கை பொருளாதாரத்தில் பண்புகள்
  - தேசிய ஊக்குவிப்புப் பொருளாதாரக் கொள்கைகள் செயற்படுத்தல்படுதல்.
  - நாணயமாற்று வீதக் கட்டுப்பாடு - இரட்டை நாணயமாற்று வீத முறை.
  - இறக்குமதிக் கட்டுப்பாடு
  - வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினை தோன்றுதல்.
  - இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை ஆரம்பமாகுதல்.
  - ஏற்றுமதிப் பன்முகப்படுத்தல்.
  - அரச துறையில் பேரளவு தொழிற்சாலைகள் உருவாகுதல்.
  - அரசியல், சொத்துக்கள் என்பவற்றைக் கொள்கை ரீதியாக மாற்றுதல்.
  - நாணயமாற்று வீத முறையைத் திருத்தியமைத்தல்.

- 1978 - 1994 வரையில் இலங்கைப் பொருளாதாரத்தின் பண்புகள்
  - ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கைச் செயற்பாடு
  - ஏக நாணயமாற்று வீத முறை தோன்றுதல்.
  - மிதக்கும் நாணயமாற்று வீத முறையைச் செயற்படுத்தல்.
  - நாணயமாற்று வீதக் கட்டுப்பாடு
  - கட்டுப்பாட்டுக் கொள்கையை நீக்கி கேள்வி நிரம்பல் சக்திகளினூடாக செயல்படுவதற்கு விலை முறைமைக்கு இடமளித்தல்.
  - சமூக நலக் கொள்கையை வரையறுத்தல்.
  - பொருளாதாரத்தைத் திறந்து விடுதல்.
  - முதலீட்டு ஊக்குவிப்பு வலயங்களை நிறுவுதல்.
  - தனியார் மயமாக்குதல், கட்டமைப்பு சீராக்கம் போன்ற நிரம்பல் பக்கக் கொள்கைகளைச் செயற்படுத்தல்.
  - வறுமையைக் குறைக்கும் கொள்கைகளைச் செயற்படுத்தல்.

- 1994 - 2015 வரையான காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் பண்புகள்
  - உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுவூட்டும் செயற்பாட்டினூடாக திறந்த பொருளாதாரக் கொள்கையை மேலும் செயற்படுத்தல்.
  - வெளிநாட்டு முதலீடு கட்டுப்படுத்தல்.
  - வடக்கு, கிழக்கு யுத்தத்தை நிறைவுக்கு கொண்டு வருவதற்கு அதிக செலவுகளை ஏற்றுக் கொள்ளல்.
  - உட்கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம்.
  - வெளிநாட்டுக் கடன்கள் மீது அதிகளவிலான ஈடுபாடு.
  - உள்நாட்டு விவசாயம், நிர்மாணக் கைத்தொழில், அரசின் விரிவான ஈடுபாடு காணப்படுதல்.

  (2015 பின்னரான இலங்கை பொருளாதாரத்தின் பண்புகள் தொடர்பாக அண்மைக் காலத் தரவகளை மாணவர்களுக்கு முன்வைக்குக.)

**இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை**

- இறக்குமதிப் பதிலீட்டுக் கொள்கை என்பது வெளிநாடுகளிலிருந்து பண்டங்களை இறக்குமதி செய்வதை வரையறுத்து, அந்தப் பண்டங்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும்.
- முதலில் ஆடம்பரப் பண்டங்கள், அத்தியாவசியமற்ற பண்டங்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி, அப்பண்டங்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப் பட்டது.
- இரண்டாவதாக அத்தியாவசியப் பண்டங்களின் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தி, அவற்றை உள்நாட்டு உற்பத்தி, உள்நாட்டு பரிமாற்றம் என்பவற்றின் மூலம் சந்தை இடையீட் டாளர்கள் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் மட்டுப்படுத்தப்பட்டது. (அரிசி, மிளகாய், உப்பு போன்றவை)
- உள்நாட்டுப் பதிலீட்டு உற்பத்திகளாக அரிசி, வெங்காயம், மிளகாய், கௌபி, சோயா, பயறு, குரக்கன் போன்றவற்றின் உற்பத்திகள் ஊக்குவிக்கப்பட்டன.
- இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை என்ற வகையில் சவர்க்காரம், வாசனைத் திரவியங்கள், ஆடைகள், துணி, மருந்து வகைகள் போன்ற நுகர்வுப் பண்டங்களின் உள்நாட்டு உற்பத்தி ஊக்குவிக்கப்பட்டது.
- இவ்வாறு நிலவிய வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினை சென்மதி நிலுவைப் பிரச்சினை என்பவற்றிற்குத் தீர்வுகளைக் காண்பதற்காக இந்த இறக்குமதிக் கட்டுப்பாடும், வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைக் கட்டுப்பாடும் மேற்கொள்ளப்பட்டது.

**ஏற்றுமதி ஊக்குவிப்புக் கைத்தொழில் கொள்கை**

- இறக்குமதி செய்யப்படும் பண்டங்களுக்குப் பதிலீடு என்ற வகையில் உள்நாட்டுச் சந்தைக்குப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக, வெளிநாட்டுச் சந்தையை இலக்காகக் கொண்டு போட்டியாகப் பண்டங்களை உற்பத்தி செய்யும் கைத்தொழிற் கொள்கை ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழிற் கொள்கை எனப்படும்.
- இந்த ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையானது, திறந்த சந்தைப் பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்ட 1977 இன் பின்னரேயே இலங்கையில் செயற்படுத்தப்பட்டது.
- ஏற்றுமதி ஊக்குவிப்பு கைத்தொழில் கொள்கையின் பிரதான இலக்கு யாதெனில் இறக்குமதியைக் கட்டுப்படுத்துவதல்ல; மாறாக ஏற்றுமதிப் போட்டி, ஏற்றுமதி பன்முகப் படுத்தல் என்பவற்றின் மூலம் உலகச் சந்தையில் நாட்டின் பங்கை விஸ்தரிப்பதாகும்.
- 1977 இன் பின்னர் இலங்கையில் செயற்படுத்தப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு கொள்கையின் ஏனைய இலக்குகளாவன:
  - சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வு
  - வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினைக்குத் தீர்வு
  - பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்தும் உபாயமாக ஏற்றுமதி ஊக்குவிப்புக் கைத்தொழிற் கொள்கை.
  - ஏற்றுமதியை இலக்காகக் கொண்ட கைத்தொழில் மீது வெளிநாட்டு முதலீடுகளை வரவழைத்தல்.

- நிறை தொழில் மட்டத்தை ஏற்படுத்த ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி.
- வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையை விரிவுப்படுத்த ஏற்றுமதி விரிவாக்கம்.

- ஏற்றுமதி, ஊக்குவிப்பு, கைத்தொழிற் கொள்கையின் பிரதான பண்புகள் வருமாறு:
  - திறந்த பொருளாதாரக் கொள்கையை இலக்காகக் கொண்ட பொருளாதாரக் கொள்கை.
  - சுதந்திர வர்த்தகத்திற்கு வசதி ஏற்படுத்தும் வகையில் ஏற்றுமதி, இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல்.
  - நாணயமாற்றுக் கட்டுப்பாடுகளை நீக்குதல்.
  - நிலையான நாணயமாற்று வீத முறையை அறிமுகப்படுத்தல்.
  - உத்தியோகபூர்வ நாணயமாற்று விகிதம், வெளிநாட்டுச் செலாவணி உரிமைச் சான்றிதழ் திட்டம் என்பவற்றை நீக்கி வெளிநாட்டுச் செலாவணிக்கான கேள்வி நிரம்பலின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். நெகிழ்ச்சியுடைய நாணயமாற்று வீத முறை யொன்றை ஏற்படுத்துதல்.
  - வெளிநாட்டுச் செலாவணிகள் நாட்டினுள் உட்பாய்ச்சப்படுவதை அதிகரிப்பதற்கு நாணயமாற்று வீத முறையானது 100% குறை மதிப்பு செய்தல்.
  - வெளிநாட்டு நாணயமாற்று சந்தை செயற்பாடுகளை இலகுப்படுத்தல், வெளிநாட்டு வங்கிகளும், நிதி நிறுவனங்களும் நாட்டினுள் வருவதற்கு வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
  - இறக்குமதித் தீர்வை வரிகளை நீக்குவதும் அவற்றைத் தளர்த்துதலும்.
  - இறக்குமதிக்காக நிலவிய அரசின் ஏகபோக நிலைமையை நீக்கிப் போட்டித் தன்மையின் அடிப்படையில் ஏற்றுமதிக்கு இடமளித்தல்.

**தேர்ச்சி 12.0:** **இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பும் கொள்கைகளும் தொடர்பாக நுணுக்கமாக விமர்சிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 12.2:** **இலங்கைப் பொருளாதாரத்தின் புதிய போக்கை ஆய்வு செய்வார்.**

**பாடவேளைகள்:** 08

**கற்றற் பேறுகள்:**

- அண்மைக்காலத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கைப் பொருளாதாரக் கட்டமைப்பில் தோன்றிய மாற்றத்தை விபரிப்பார்.
- இலங்கையில் தொழில் வாய்ப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கீழ்க் கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம், உல்லாசப் பயணத் தொழில், பிரதேச ரீதியான அபிவிருத்தி என்பவை தொடர்பாக அண்மைக் காலத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குவார்.
- வேலைவாய்ப்பு உயர்வடைவதற்கும் குறைவதற்கும் ஏதுவான காரணிகளை விளக்குவார்.
- உல்லாசப் பயணத் தொழிலின் போக்கை விளக்குவார்.
- பிரதேச ரீதியான அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- பொருளாதாரத்தில் பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வு தோன்றுவதற்கான காரணிகளை விளக்குவார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- இலங்கைப் பொருளாதாரத்தில் தோன்றிய கட்டமைப்பு மாற்றத்தைப் பின்வருமாறு விளக்கலாம்.
  - மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தோன்றிய கட்டமைப்பு ரீதியான மாற்றம்.
  - வேலைவாய்ப்புக் கட்டமைப்பில் தோன்றிய மாற்றம்.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கட்டமைப்பு ரீதியாகப் பின்வரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.
  - விவசாய உற்பத்தியின் சதவீத முக்கியத்துவம் குறைந்துள்ளது.
  - கைத்தொழில் உற்பத்தியின் சதவீத முக்கியத்துவம் அதிகரித்துள்ளது.
  - சேவை உற்பத்தியின் சதவீத முக்கியத்துவம் அதிகரித்துள்ளது. (மத்திய வங்கி அறிக்கைப்படி அண்மைக் காலத் தரவுகளின் உதவியுடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கட்டமைப்பு மாற்றங்களை விளக்குக.)

உதாரணம்:-

| துறை | 1950 | 1960 | 1970 | 1980 | 1990 | 2000 | 2010 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | 46.3 | 37.8 | 28.6 | 27.6 | 26.3 | 19.9 | 8.5 | 8.1 |
| கைத்தொழில் | 36.9 | 45.4 | 47.9 | 42.8 | 47.7 | 52.8 | 54.6 | 56.3 |
| சேவை | 37 | 34 | 29 | 37 | 40 | 40 | 44 | 44 |

மூலம்: மத்திய வங்கி அறிக்கை)

- வேலைவாய்ப்புக் கட்டமைப்பிலும் அண்மைக்காலங்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.
    - வேலைவாய்ப்புக் கட்டமைப்புச் சதவீதம் விவசாயத்தில் குறைந்துள்ளது.
    - வேலைவாய்ப்புக் கட்டமைப்புச் சதவீதம் கைத்தொழிலில் அதிகரித்துள்ளது.
    - வேலைவாய்ப்புக் கட்டமைப்புச் சதவீதம் சேவையில் அதிகரித்துள்ளது.

| **துறை** | **1963** | **1973** | **1981/1982** | **1996/1997** | **2003/2004** | **2013** | **2015** | **2016** |
|---|---|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | 46.3 | 37.8 | 28.6 | 27.6 | 26.3 | 19.9 | 8.5 | 8.1 |
| கைத்தொழில் | 36.9 | 45.4 | 47.9 | 42.8 | 47.7 | 52.8 | 54.6 | 56.3 |
| சேவை | 37 | 34 | 29 | 37 | 40 | 40 | 44 | 44 |

- 1977 இன் பின்னர் இலங்கையில் திறந்த பொருளாதாரத்தை நோக்கிச் சென்றதுடன், இலங்கைத் தொழிலாளர்கள் வெளிநாடுகளை நோக்கிச் செல்லும் நிலை அதிகரித்ததைக் காணலாம். இதன் விளைவாக வெளிநாடுகளிலிருந்துள்ள மாற்றல் வருமானம் அதிகரித் துள்ளது.
- மொத்த உள்நாட்டு உற்பத்தியில் துறை ரீதியான உள்ளடக்கத்திலும், வேலை வாய்ப்புக் கட்டமைப்பில் துறை ரீதியான உள்ளடக்கத்திலும் விவசாயத் துறையின் சதவீத முக்கியத்துவம் குறைந்து, கைத்தொழில், சேவைத் துறையின் சதவீதப் பங்களிப்பு உயர்ந்துள்ளது.

| **வெளிநாட்டு வேலைவாய்ப்பு** | **2017** | | **2015** | | **2016** | |
|---|---|---|---|---|---|---|
| | **எண்ணிக்கை** | **சதவீதம்** | **எண்ணிக்கை** | **சதவீதம்** | **எண்ணிக்கை** | **சதவீதம்** |
| மொத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு | 30 073 | 100 | 263 443 | 100 | 242 930 | 100 |
| பால்ரீதியாக | | | | | | |
| ஆண் | 190 217 | 63.3 | 172 788 | 65.6 | 16 032 | 66.0 |
| பெண் | 110 486 | 36.7 | 90 655 | 34.4 | 82 628 | 34.0 |
| ஊழியப்படை ரீதியாக | | | | | | |
| உயர் தொழில் | 5 372 | 1.8 | 6 251 | 2.4 | 6 574 | 2.7 |
| மத்திய | 20 778 | 6.9 | 6 951 | 2.6 | 8 232 | 3.4 |
| எழுத்தாளர், அதனுடன் தொடர்புடைய | 29 267 | 9.7 | 12 501 | 4.7 | 19 864 | 4.5 |
| பயிற்சித் தொழில் | 73 162 | 24.3 | 81 682 | 31.0 | 76 559 | 31.5 |
| அரைப் பயிற்சித்தொழில் | 3 977 | 1.3 | 4 847 | 1.8 | 3 939 | 1.6 |
| பயிற்சியற்ற தொழில் | 79 519 | 26.4 | 77 985 | 29.6 | 71 641 | 29.6 |
| வீட்டுத்தொழில் | 88 628 | 29.5 | 73 226 | 27.8 | 65 127 | 26.8 |

- வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பில் அண்மைக்காலப் போக்குகள்
    - 2016 இல் இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்குச் செல்பவர்களின் அளவு 7.8% ஆல் குறைந்துள்ளதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.
    - இவ்வாறு தொடர்ந்து குறைந்து செல்வதற்குப் பெண்கள் வீட்டு வேலைகளுக்கு வெளிநாடுகளுக்குச் செல்வதைக் குறைப்பதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கை ரீதியான செயற்பாடுகள், வேலைவாய்ப்புகளுக்குச் செல்வதற்கு முன்னர்

நிறைவேற்றப்பட வேண்டிய பயிற்சித் தேவைகள், மத்திய கிழக்கு நாடுகளில் தோன்றிய பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக ஊழியத்திற்காக கேள்வியில் தோன்றிய வீழ்ச்சி என்பன காரணங்களாகும்.

- தென் கொரியாவிற்குத் தொழில் வாய்ப்பின் நிமித்தம் சென்றவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு ஏற்பட்டதுடன், அதில் பெரும் பகுதி (97%) பயிற்றப்படாத ஊழியர்களாகும்.
- பயிற்றப்பட்ட தொழிலாளர்கள் வெளிநாடுகளை நோக்கிச் செல்லும் அளவில் அதிகரிப்பு ஏற்படுகையில் வெளிநாடுகளிலிருந்தான மாற்றல் வருமானத்திலும் அதிகரிப்பு ஏற்படும்.
- இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் 2017 பாதீட்டில் முன்வைக்கப்பட்டதற்கு ஏற்ப பயிற்றப்படாத தொழிலாளர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 350 $ ஆகவும் பயிற்றப்பட்ட தொழிலாளர்களின் ஆகக் குறைந்த சம்பளம் 450 $ என்றும் தீர்மானிக்கப்பட்டது.
- வெளிநாட்டு வேலைவாய்ப்பிலீடுபட்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களால் இந்த நாட்டிற்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டுப் பணமும் ஏனையவையும் வெளிநாட்டு மாற்றல் எனப்படும். இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் பெறுவனவுகளில் உயர்ந்ததொரு முக்கியத்துவத்தை வெளிநாட்டு மாற்றல் வகிக்கின்றது.

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு மாற்றல்**

| | ஐக்கிய அமெரிக்க டொலர் அடிப்படையில் | | | | |
|---|---|---|---|---|---|
| | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 |
| (1) மத்திய கிழக்கு | 3358 | 3562 | 3902 | 3796 | 3889 |
| (2) ஐரோப்பிய சங்கம் | 1071 | 1160 | 1270 | 1222 | 1282 |
| (3) தூர கிழக்கு ஆசிய நாடுகள் | 509 | 557 | 611 | 698 | 739 |
| (4) ஏனைய ஐரோப்பிய நாடுகள் | 275 | 308 | 337 | 307 | 333 |
| (5) வட அமெரிக்கா | 174 | 186 | 204 | 209 | 210 |
| (6) தென்கிழக்கு ஆசியா | 63 | 288 | 316 | 391 | 398 |
| (7) அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் | 132 | 147 | 161 | 161 | 174 |
| (8) தென் ஆசியா | 90 | 83 | 91 | 98 | 109 |
| (9) தென், மத்திய அமெரிக்கா | 48 | 58 | 63 | 63 | 51 |
| (10) ஏனைய | 66 | 58 | 63 | 63 | 51 |
| மொத்தம் | 5786 | 6407 | 7018 | 7008 | 7236 |

வெளிநாட்டு மாற்றலில் 2015 இல் குறைவு ஒன்று பதிவு செய்யப்பட்டபோதும் 2016 இல் அது நடுநிலைமையாகப் பதிவு செய்யப்பட்டது. சென்ற வருடங்களில் வெளிநாட்டு மாற்றல்களில் குறைவானது தோன்றுவதற்குக் காரணம் மத்திய கிழக்கு நாடுகளுக்குத் தொழில் நிமித்தம் சென்ற தொழிலாளர்களின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சியும் மத்திய கிழக்கு நாடுகளில் பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக ஊழியத்திற்கான கேள்வியில் ஏற்பட்ட வீழ்ச்சியும் ஆகும்.

- வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புகளும் வெளிநாட்டு மாற்றல் பெறுவனவுகளும் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம்.
    - வேலையின்மை வீழ்ச்சியடையக் காரணமாக இருத்தல்.
    - தனிநபர் வருமானம் உயர்வடைதல்.
    - வறுமை குறைவடைதல்.
    - வீட்டுத்துறைச் சேமிப்பு அதிகரித்து, சிறு முயற்சிகளும் உயர்வடைதல்.
    - வெளிநாட்டு மாற்றல் உயர்வடைதல்.
    - சென்மதி நிலுவைப் பிரச்சினைக்குத் தீர்வாக அமைதல்.
    - வெளிநாட்டுச் சொத்துக்களின் வலுவூட்டம் உயர்வடைதல்.
    - நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி உயர்வடைதல்.
    - உள்நாட்டு ஊழியச் சந்தையில் பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்படுதலும் சம்பள மட்டம் உயர்வடைதலும்.
    - பயிற்றப்பட்ட ஊழியர்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது வளத் திரட்சியில் சுருக்கம் ஏற்படுதல்.
    - வீட்டு வேலைகளுக்குப் பெண்கள் வெளிநாடுகளுக்கு செல்வதனால் சமூகப் பிரச்சினைகளும் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பற்ற சூழலும் ஏற்படுதல்.

(மத்திய வங்கி அறிக்கையின் அண்மைக்காலத் தரவுகளின் அடிப்படையில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு, மாற்றல் வருமானம் தொடர்பாக மாணவர்களுக்கு விளக்குக.)

**கீழ் கட்டமைப்பு வசதிகளில் முன்னேற்றம் ஏற்படுதல்.**

- நாடொன்றின் உற்பத்தி, பரிமாற்று செயற்பாடுகள் வினைத்திறனாகுவதற்கும் சமூகத்தின் வாழ்க்கைத் தரம் உயர்வடைவதற்கும் உந்து சக்தியாக அமையும் மூலதனமே கீழ் கட்டமைப்பு வசதியாகக் கருதப்படும். கீழ்க்கட்டமைப்பு வசதிகளைப் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

**கீழ் கட்டமைப்பு வசதிகள்**

- பொருளாதாரக் கீழ் கட்டமைப்பு வசதிகள்
    - வன் வசதிகள்
        - பெருந்தெரு
        - அதிவேகப் பாதை
        - பாலங்கள்
        - சுரங்கப் பாதை
        - புகையிரதப் பாதை
        - நீர்ப்பாசனம்
        - விமான நிலையம்
        - துறைமுகம்
        - தொலைத் தொடர்பு
        - போக்குவரத்துக் கட்டமைப்பு
    - மென் வசதிகள்
        - தொழில் பயிற்சி நிகழ்ச்சிகள்
        - நிதி நிறுவன வசதிகள்
        - ஆய்வு, அபிவிருத்தி வசதிகள்
        - தொழில்நுட்ப பரிமாற்றம்
        - ஏற்றுமதி ஊக்குவிப்பு
- சமூகக் கீழ் கட்டமைப்பு வசதிகள்
    - வன் வசதிகள்
        - வைத்தியசாலை
        - பாடசாலை
        - நீர்ப்பாசனம்
        - வீடமைப்பு
        - சிறுவர் பாதுகாப்பு
        - முதியோர் பாதுகாப்பு
        - சிறைச்சாலை
        - குப்பைகளை அகற்றுதல்
    - மென் வசதிகள்
        - சமூகப் பாதுகாப்பு
        - சமூகச் சேவை
        - சுற்றாடல் பாதுகாப்பு செயற் திட்டங்கள்

- கீழ் கட்டமைப்பு வசதிகளின் முதலீடுகள் என்பது பொருளாதார வினைத்திறனாக செயற்படத் தேவையான சேவைகளையும் வசதிகளையும் வழங்குவதற்குப் பௌதீக, அமைப்பு ரீதியான கட்டமைப்புகளை உருவாக்குவதாகும். கீழ் கட்டமைப்பு வசதி

களானவை. நாடொன்றில் அல்லது பிரதேசத்தில் அபிவிருத்தியைத் தோற்றுவிக்கும் முக்கிய குறிகாட்டியாகும்.

- கீழ் கட்டமைப்பு வசதிகள் பொருளாதாரம், சமூகம் என்ற இரண்டு பிரிவுகளாக வகைப்படுத்தலாம். பொருளாதாரக் கீழ் கட்டமைப்பு வசதி என்பது பெருந்தெரு, நீர் வழங்கல் வசதிகள், தொடர்பாடல் வசதிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். சமூக, கீழ் கட்டமைப்பு வசதிகள் என்ற வகையில் பாடசாலை, வைத்தியசாலை, பல்கலைக் கழகம், வீடமைப்புப் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

- கீழ் கட்டமைப்பு வசதிகளுக்கு மேற்கொள்ளப்படும் முதலீடானது பொருளாதார அபிவிருத்திக்குப் பல்வேறு அமைப்புகளில் பங்களிப்பு செலுத்தும். கீழ் கட்டமைப்பு வசதிகளில் தோன்றும் பற்றாக்குறையானது நாடொன்றில் பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டில் எதிர்நோக்கப்படும் பிரதான தடையாகும். வாகனத் தடைகள், குறைந்த தூரம் செல்வதற்கும் கூடிய காலம் செலவேற்படுதல் போன்றவை வளர்ச்சிச் செயற்பாட்டைப் பாதிக்கும் எளிய தடைகள் ஆகும். பெருந்தெரு பாலம், துறைமுகம், புகையிரதப்பாதை, தொலைத்தொடர்பு வலையமைப்பு, நீர்ப்பாசன வசதி அதிகரிப்பு போன்றவை பொருளாதார அபிவிருத்திக்குப் பாரிய உந்துசக்தியாகும்.

- கீழ் கட்டமைப்பு வசதிகளில் ஏற்படும் அபிவிருத்தியானது பொருட்கள் சேவைகளின் உற்பத்தி, அவற்றைச் சந்தைகளுக்கு விநியோகித்தல் போன்றவற்றை மிக இலகு வாகவும் வினைத்திறனாகவும் மேற்கொள்ள உதவும்.

- அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கு அமையக் கீழ் கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கும் ஒவ்வொரு 10% வீதத்திற்கும் நீண்டகால வெளியீடானது 1% தால் மட்டுமே அதிகரித்துள்ளது என்பதாகும்.

- கீழ் கட்டமைப்பு வசதிகளின் பொருளாதார சமூக முக்கியத்துவம்:
  - வினைத்திறன் அதிகரித்தல்.
  - பொருளாதார வளர்ச்சி தீவிரமடைதல்.
  - முதலீட்டாளர் கவர்வதற்கு வாய்ப்பு ஏற்படுதல்.
  - முதலீட்டாளர்களின் தனிப்பட்ட செலவுகள் குறைவடைவதற்கு வாய்ப்பு ஏற்படுதல்.
  - வீண்விரயங்களைக் குறைக்க முடிதல்.
  - முகாமைத்துவம், தொடர்பாடல் வினைத்திறனடைதல்.
  - மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடைய ஏதுவாகுதல்.
  - சமூக அபிவிருத்திக்குக் காரணமாதல்.
  - மனித மூலதனம் தோன்றுவதற்குக் காரணமாதல்.
  - பொருளாதாரத்தில் போட்டித்தன்மை உயர்வடைதல்.

- கீழ் கட்டமைப்பு வசதிகளை அணுகும் மூலகங்கள்:
  - கீழ் கட்டமைப்பு வசதிகளுக்கு அரச முதலீடு.
  - கீழ் கட்டமைப்பு வசதிகளுக்கு தன்னிச்சையான முதலீடு.
  - கீழ் கட்டமைப்பு வசதிகளுக்கு அரச தனியார் முதலீடு.

**கீழ் கட்டமைப்பு வசதிகளுக்கு அரசின் முதலீடு**

| ஆண்டு | பில்லியன் ரூபா | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக | பில்லியன் ரூபா | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக | பில்லியன் ரூபா | மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|---|
| 2012 | 343.8 | 3.9 | 71.2 | 0.8 | 415.0 | 4.8 |
| 2013 | 369.4 | 3.9 | 77.6 | 0.8 | 447.0 | 4.7 |
| 2014 | 330.1 | 3.2 | 112.3 | 1.1 | 442.5 | 4.4 |
| 2015 | 429.0 | 3.6 | 117.3 | 1.0 | 541.3 | 4.6 |

- இலங்கையில் கீழ் கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்காக அரச முதலீடானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சதவீதமாக 5% த்திற்கு கிட்டிய மட்டத்தில் காணப்படுகின்றது. ஆயினும் பொருளாதாரத்தில் போட்டித்தன்மையை அதிகரிப்பதற் காகவும் பொருளாதார வளர்ச்சியை உச்ச மட்டத்திற்கு நெருங்கச் செய்வதற்கும் வெளிநாட்டு நேரடி முதலீட்டை கவர்வதற்காகவும் கீழ் கட்டமைப்பு வசதிகளை மேலும் உயர்த்துவதில் முதலீடுகளை அதிகரிப்பதன் தேவைப்பாடு காணப்படுகின்றது. இதற்குக் காணப்படும் பிரதான தடையாக அரச வருமானம் வரையறுக்கப்பட்டிருத்தல், அரசின் கடன் உயர்வடைதல், அரச கடனை மீளச் செலுத்துவதன் இயலுமை வரையறுக்கப்படுதல் போன்றவை காரணங்களாகும். இந்த நிலைமையின் கீழ் அரச தனியார் பங்குடைமையின் மூலம் கீழ் கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக தனியார் முதலீட்டைக் கவர்வது முக்கியமாகும்.

- அரச தனியார் பங்குடைமையின் கீழ், கீழ் கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்காகத் தனியார் துறையினரை ஊக்குவிப்பதற்கு உலக வங்கி, USIAD நிறுவன உதவியுடன் நிதியமைச்சில் அரச தனியார் பங்குடைமை அலகு ஒன்றை உருவாக்குவதற்கு 2017 ஜனவரி மாதத்தில் அமைச்சிற்கு அனுமதி கிடைத்தது.

- அரச தனியார் பங்குடைமையை ஊக்குவிப்பதற்கு அரச கொள்கைச் சட்டகத்தின் மூலம் அரசியல்வாதிகள், கொள்கை தயாரிப்பாளர்கள் உள்ளடங்கலாக எல்லா பிரிவினரும் அறிந்துள்ளதை உயர்த்துவதுடன், தனியார் முதலீட்டை உயர்த்துவதுடன் சேவைகளின் தரத்தையும் சாதாரண விலைகளை உறுதிப்படுத்துவதற்கும் பொருத்தமாகச் சட்டத்தையும் நிர்வாகப் பொறிமுறையையும் அமைத்தல் வேண்டும். பொருளாதாரச் சமூக கீழ் கட்டமைப்புகளில் தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதற்கு நிலையான கொள்கை, நல்லாட்சி, நிறுவன ரீதியான இயலுமையை உயர்த்துதல், விளைதிறனான சட்டம், வினைதிறனான நிதிச்சந்தைகள் போன்ற முதற் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கும். இத்துடன் வினைதிறனான முறையில் வள ஒதுக்கீட்டை மேற்கொள்வதை உறுதிப்படுத்துவதற்கு பொருளாதாரத்திற்கு அதிக நன்மைகள் கிடைக்கும் வகையில் திட்டங்களின் முக்கியத்துவ ஒழுங்கை அறிந்து கொள்வதற்குக் கீழ் கட்டமைப்பு வசதி செயற்திட்ட விரிவாக்க வலுவானது ஆய்விற்கு உட்படுத்த வேண்டியிருக்கும்.

**கீழ் கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியில் அரச தனியார் பங்குடைமை**

- அரச தனியார் பங்குடைமையானது கீழ் கட்டமைப்பு வசதிகளின் வளர்ச்சியில் மிகவும் வெற்றிகரமான முறையாகும். தனியாக அரசாங்கம் அல்லது தனியாக தனியார் துறையினர் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குப் பதிலாக இருவரும் இணைந்து ஒவ்வொரு துறையினரும் தம்மால் சிறப்பாக மேற்கொள்ள முடிந்த விடயங்களை தெரிவு செய்து திட்டங்களில் ஈடுபட முடியும்.

- செயற்றிட்டத்தை நிறைவேற்றுவதற்கான காலத்தை விரைவுபடுத்துவதன் மூலம் கால தாமதத்தை தவிர்க்க முடியும். செயற்பாட்டுத் திறனை மதிப்பீடு செய்யும் சுட்டெண்ணாக செயற்றிட்டத்தை நிறைவு செய்வதற்கு எடுக்கும் காலத்தை பயன் படுத்தலாம்.

- அரசாங்கமோ அல்லது தனியார் துறையினரோ தனியாக செயல்திட்டத்தை மேற் கொள்வதை விட இருவரும் இணைந்து உயர்ந்த முதலீட்டு இலாப விகிதத்தை திட்டமிடல், நிதிப் பயன்பாடு போன்றவற்றில் நவீன முறைகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பம் தோன்றும்.

- செயற்றிட்டத்தை ஆபத்தை ஏற்கும் தன்மை மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு அதன் இயலுமை தீர்மானிக்கப்படும். அரசாங்கமானது அரசியல் நோக்கமோ அல்லது வேறேதும் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தும்போது தனியார் துறை அதனை நிராகரிக்கவும் முடியும்.

- செலவுகளைக் கட்டுப்படுத்துவதில் அனுபவம் வாய்ந்த தனியார் துறையினரிடம் செயற்றிட்டத்தை அமுல்படுத்தும் விடயத்தை அரசாங்கம் ஒப்படைப்பதற்கு வாய்ப்பு தோன்றும்.

- பெருமளவிலான அரச தனியார் பங்குடைமையில் செயல் திட்டங்களை நேரத்திற்கு நிறைவு செய்வதற்கு மேலதிகக் கொடுப்பனவு (Bonus) வழங்கப்படுவதனால் செயல் திட்டங்கள் வினைத்திறனாக நிறைவேற்றும் வாய்ப்பு தோன்றும்.

- அரச நிதியானது மிகவும் வினைத்திறனான முறையில் இப்பங்குடைமையின் கீழ் பயன்படுத்த வாய்ப்பு தோன்றுவதனால், சமூக பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய துறைகள் மீது அரச நிதியைப் பயன்படுத்தும் வாய்ப்பு தோன்றும்.

- இப்பங்குடைமையில் செயல் திட்டங்களின் வினைத்திறன் உயர்வாக இருப்பதனால், அரசின் நிதி செயற்பாட்டிற்கு நன்மையளிக்கும். இது பாதீட்டு பற்றாக்குறையைக் குறைத்துக் கொள்ள உதவும்.

- செயற்றிட்ட இயக்கத்தின் போது உயர்ந்த தரத்தைப் பேணுவதற்கு வாய்ப்பு தோன்றும்.

- அரச செலவு குறைவதன் காரணமாக பொது மக்களின் மீது விதிக்கப்படும் வரியும் குறையலாம்.

- தனியார் மயமாக்கலுக்கு கடுமையான எதிர்ப்பு சமூகத்திலிருந்து எழும்போது அதனை வெற்றிகரமான முறையில் முகம் கொடுப்பதற்கு அரச - தனியார் பங்குடைமையே ஒரு மாற்று முறைத் திட்டமாக அமைகின்றது.

**உல்லாசப் பயணத் தொழில்**

- இலங்கைப் பொருளாதாரத்தில் வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும் பிரதான துறையாக உல்லாசப் பயணத் தொழில் தொடர்ந்து வளர்ச்சிப் போக்கைக் காட்டும். வரலாற்றில் முதற் தடவையாக இரண்டு மில்லியனைத் தாண்டி 2016 ஆம் ஆண்டில் உல்லாசப் பயணிகளின் வருகையானது 2050 832 வரை 14% குறிப்பிடத்தக்க வருடாந்த அதிகரிப்பைப் பதிவு செய்தது.

- உல்லாசப் பயணத் தொழிலின் முன்னேற்றத்திற்குக் காரணமாக இருந்தவை.

    - உல்லாசப் பயணத் தொழிலுடன் தொடர்புடைய கீழ் கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்கு மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் அதிகரிப்பு.
    - புதிய விமானச் சேவை, கப்பற் சேவை என்பவற்றின் செயற்பாட்டில் உயர்வு.
    - சர்வதேச தொடர்பை உயர்த்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப் படுதல்.

- ஆபிரிக்கா தவிர்ந்த ஏனைய பிரதான வலயங்கள் எல்லாவற்றிலிருந்தும் உல்லாசப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு ஏற்பட்டது. இலங்கைக்குப் பெருமளவில் வருகை தந்த உல்லாசப் பயண வலயம் மேற்கு ஐரோப்பாவாகும்(31%) . 2016 இல் இவ் வலயத்திலிருந்து வந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையானது 64 333 ஆகும்.

- கிழக்கு ஆசியாவிலிருந்து வருகை தந்த உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 20.7% ஆகும். 2016 ஆம் ஆண்டில் அதிகளவான உல்லாசப் பயணிகள் வந்த நாடு இந்தியாவாகும். அடுத்தது சீனாவாகும் மூன்றாவது நாடு ஐக்கிய இராச்சியமாகும். உல்லாசப் பயணிகளின் வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் நோக்கும்போது அதிகளவிலான வீதம் ஓய்வைக் கழிப்பதற்கு ஆகும்.

- அண்மை ஆண்டுகளில் உல்லாசப் பயண வருமானம் இடைவிடாது அதிகரித்ததுடன் அதன் மூலம் சேவைக் கணக்கானது உறுதியானது. 2016 ஆம் ஆண்டில் மொத்த உல்லாசப் பயண வருமானமானது 3518 மில்லியன் டொலர்களாகும். அது முன்னைய வருடத்தை விட 18% வளர்ச்சியாகும்.

- அண்மைய ஆண்டுகளில் உல்லாசப் பயணத் துறையில், முதலீட்டில் தொடர்ந்தும் வளர்ச்சி ஏற்பட்டது. 2015 இல் அனுமதிக்கப்பட்ட ஹோட்டல் செயற்திட்டங்கள் 37 உடன் ஒப்பிடும்போது 2016 இல் 526 மில்லியன் டொலர்களை உள்ளடக்கிய 41 ஹோட்டல் செயற் திட்டங்களுக்கு அனுமதி கிடைத்தது.

- நாட்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உல்லாசப் பயணத் தொழிலில் உயர்ந்த நிலையை அடைவதற்கு உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கவனம் செலுத்தப்பட்டதுடன் அம் மாகாணங்களில் உல்லாசப் பயணத் தொழிலில் இடை விடாத வளர்ச்சி ஏற்பட்டது.

- சென்ற பல வருடங்களாக வினைத்திறனான திட்டங்களும் உல்லாசப் பயணத் தொழிலுடன் தொடர்புடைய கீழ் கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்ட அபிவிருத்தியானது இந்நாட்டிற்கு உல்லாசப் பயணிகளை ஈர்த்தபோதும் இலங்கையானது உலக மயமாக்கப்பட்ட சந்தையில் தனது முழுமையான சாத்தியத் தன்மையை அடைய வில்லை.

### உல்லாசப் பயணத் துறையின் செயற்பாடுகள்

| பிரிவு | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 (அ) | வருடாந்த மாற்றம் % 2016 |
|---|---|---|---|---|---|---|
| உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை | 1 000 605 | 1 274 593 | 1 527 153 | 1 798 380 | 2 050 382 | 14.0 |
| வருகையின் நோக்கத்தின் அடிப்படையில் | | | | | | |
| களியாட்டம் | 748 436 | 915 208 | 1 037 644 | 1 198 240 | 1 710 027 | 42.7 |
| வியாபாரம் | 90 040 | 67 946 | 20 270 | 23 323 | 37 121 | 59.2 |
| ஏனைய | 167 129 | 291 439 | 469 239 | 576 817 | 303 684 | -47.4 |
| உல்லாசப் பயணிகள் கழித்த இரவுகள் | 10 056 | 10 909 | 15 119 | 18 163 | 20 918 | 15.2 |
| அறைகளின் பாவனை | 71.2 | 71.7 | 74.3 | 74.5 | 74.8 | 0.4 |
| மொத்த உல்லாசப் பயணப் பெறுவனவு | 132 427 | 2 172 | 31 779 | 405 492 | 512 373 | 26.4 |
| தனிநபர் உல்லாசப் பயணப் பெறுவனவு | 131 688 | 173 594 | 207 889 | 225 476 | 6 249 837 | 10.8 |
| மொத்த வேலைவாய்ப்பு | 162 869 | 270 150 | 299 890 | 319 436 | 335 659 | 5.1 |
| நேரடி வேலைவாய்ப்பு | 67 862 | 112 550 | 129 790 | 135 930 | 146 115 | 7.5 |
| மறைமுக வேலைவாய்ப்பு | 95 007 | 157 600 | 170 100 | 183 506 | 189 544 | 3.3 |

**மூலம்:** இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்தி சபை - இலங்கை மத்திய வங்கி

- வெளிநாட்டுச் செலாவணி உழைப்புகளிலும் தொழில் வாய்ப்பிலும் உல்லாசப் பயனத் துறையின் பங்களிப்பு வெளிநாட்டு செலாவணி உழைப்பு.

| நாணய அலகு | 2015 | 2016 |
|---|---|---|
| இலங்கை - மில்லியன் ரூபா | 405 492 | 512 294 |
| ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் | 2 981 | 3 518 |

- இலங்கையின் மொத்த வெளிநாட்டு உழைப்பு வருமானத்தில் உல்லாசப் பயணத் தொழிலின் பங்களிப்பானது 2015 இல் 12% ஆக இருந்ததுடன் 2016 இல் 14.2% ஆக இருந்தது. வெளிநாட்டு மாற்றல், ஆடைகள் என்பவற்றிற்கு அடுத்ததாக வெளிநாட்டு நாணய வருமானத்தை உழைப்பதில் மூன்றாவது இடத்தை உல்லாசப் பயணத் துறை வகிக்கின்றது.

| வேலைவாய்ப்பு பங்களிப்பு | 2014 | 2015 | 2016 |
|---|---|---|---|
| நேரடி வேலைவாய்ப்பு | 129 790 | 135 930 | 146 115 |

- உல்லாசப் பயணத் துறையானது நேரடி, மறைமுக வேலைவாய்ப்பு என்ற வகையில் 2015 இல 319 436 இலிருந்து 2016 இல் 335 659 ஆக இருந்தது.
- உல்லாசப் பயணத் தொழில் எதிர்நோக்கும் சவால்கள் பலவாகும்.
- உல்லாசப் பயணிகளின் எதிர்பார்த்த வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் ஹோட்டல் அறைகள் போதாமலிருக்கிறது. எதிர்பார்க்கும் பெருமளவிலான உல்லாசப் பயணி களுக்கு வசதிகளை வழங்குவதற்குக் ஹோட்டல் அறைகள் 40 000-50 000 தேவை யென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் 2016 இன் இறுதியில் உல்லாசப் பயணிகளின் ஹோட்டல்களும் மேலதிக நிறுவனங்களுக்கும் 34 000 ஹோட்டல் அறைகள் மட்டுமே உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- உல்லாசப் பயணத் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கையில் பயிற்சி பெற்ற தொழிலாளர் களில் அதிக எண்ணிக்கையினர் உயர்வான சம்பளத்திற்காக வெளிநாடுகளில் தொழிலில் ஈடுபடுகின்றன. உல்லாசப் பயணத் தொழிலில் பயிற்சி பெற்ற தொழிலாளர் களுக்கான தேவையை ஈடுசெய்வதற்கு, தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பயிற்சியைத் தனியாக அரசாங்கத்தினால் மட்டும் நிறைவேற்ற முடியாததனால், இதற்கென அரச - தனியார் பங்குடைமை அவசியமாகின்றது.

- உல்லாசப் பயணத் தொழிலில் முறைசார் அமைப்பானது சிறப்பாக நிறுவப்பட் டிருப்பினும், இத்தொழிலில் குறிப்பிடத்தக்க முறைசாரா அமைப்பும் செயற்படுகின்றது. முறைசாரா அமைப்பில் உல்லாசப் பயணத் தொழிலின் பாதுகாப்பினையும் நல்லொழுக்கத்தையும் அதிகரிப்பது அவசியமாக இருப்பதுடன், இதனை அடைவதில் தோல்வி காண்பதானது, நாடு தொடர்பாக உள்ள நன்மதிப்பை இழக்க வைக்கின்றது.

- பெருமளவிலான சாத்தியத்தன்மையை ஏற்படுத்தும் சீன உல்லாசப் பயணிகளின் வருகைக்கு ஏற்பத் தேவையான வசதிகளை வழங்கும் இயலுமையானது ஒரு சவாலாக அமைந்துள்ளது. இந்நிலையில் சீன மொழியிலான தொலைக்காட்சி சேவை, வானொலி சேவை, சீன மொழியைக் கதைக்கும் உல்லாசப் பயண வழிகாட்டுனரின் தேவை காணப்படும்.

- தங்கியிருக்கும் இரவுகளின் எண்ணிக்கையானது பல வருடங்களாக ஒரே அமைப் பிலேயே காணப்படுகின்றது. நாளாந்த உல்லாசப் பயணச் செலவுகள் சென்ற பல வருடங்களாகத் தொடர்ந்து உயர்வடைந்து சென்றதுடன், பிரதானமாக உல்லாசப் பயணிகளுக்காக வழங்கப்படும் சேவைகளில் வீழ்ச்சியின் காரணமாக பயணியொருவர் தங்கியிருக்கும் காலங்களின் எண்ணிக்கை சராசரியாக 10 இரவுகள் என்ற வகையில் மாற்றமின்றி இருக்கின்றது. இதனால் இலங்கையில் உல்லாசப் பயணத் தொழிலின் ஈர்ப்புத்தன்மையைப் பன்முகப்படுத்துவதற்குக் கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியிருப்பதுடன், அந்நிலையில் பயணிகள் தங்கியிருக்கும் குறைந்த பட்ச இரவுகள், இரண்டு வாரங்கள் என இலக்கிடப்படுவதுடன் அதற்கேற்ப கப்பல், கடல் பயணம், ஓய்வு நோக்காகக் கொண்ட பயணம், களியாட்டத்தை நோக்காகக் கொண்ட பயணம் போன்ற பல்வேறான துறைகளின்பால் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

- தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு மட்டுமன்றி பாய், வாடகைக்கார், ஹோட்டல் ஒதுக்குதல், கையடக்கத் தொலைபேசி, வை - பை (Wi-Fi) தொடர்பு, பயணிகளின் திட்டம் போன்ற பரந்தளவிலான சேவையை வழங்கும் வகையில் பல்லின உல்லாசப் பயணிகளின் தகவல் மத்திய நிலையங்களின் எண்ணிக்கைகளைப் பிரதான உல்லாச பயணப் பகுதிகளிலும் பிரதான போக்குவரத்து மத்திய நிலையங்களிலும் மேலும் அதிகரிப்பதன் தேவைப்பாடுகள் காணப்படுகின்றன.

- உல்லாசப் பயணத் தொழிலுடன் தொடர்புடைய அரச, தனியார் துறை உள்ளடங்கலாக இத்துறையில் ஈடுபட்டுள்ள எல்லாப் பிரிவினரையும் மேற்பார்வை செய்வதற்காக, உயர் மட்டத்திலான அரச கட்டமைப்புத் தேவைப்படுவதுடன், அதன் மூலம் உயர்ந்த மட்டத்திலான சிறந்த தொடர்பு தோன்றவும் வாய்ப்பு ஏற்படும்.

- அறிவுசார் பொருளாதாரமானது நுண்ணறிவு மூலதனத்தின் மீது அடிப்படையாகக் கொண்ட நுகர்வு, உற்பத்திச் செயற்பாடாகும். அறிவுசார் பொருளாதாரமானது பொதுவாக அபிவிருத்தி அடைந்த நாடுகளில் எல்லாப் பொருளாதாரச் செயற்பாடு களிலும் பிரதான பிரிவாக அமைகின்றது. அறிவுசார் பொருளாதாரமானது இயற்கைப் பெறுமதிகளுடன் கவனிக்கப்பட வேண்டியதொன்றாக இருக்க, தொட்டுணர முடியாத சொத்தாகவும் உள்ளது. இதில் தொழில் அறிவு (நுண்ணறிவு மூலதனம்) பெறுமதியைக் கொண்டிருந்தபோதும், பொதுவாக் ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கியல் எண்ணக்கருவின் படி, இந்தச் சொத்தானது ஐந்தொகையில் பதியப்படுவதில்லை.

- தகவல் யுகத்தில் உலகப் பொருளாதாரமானது, அறிவுசார் பொருளாதாரத்தின் பக்கம் கவனத்தைச் செலுத்தியது. தகவல் யுகத்திற்கு இத்தகைய நகர்வை நோக்கிவ் செல்வதற்குச் சேவையிலான வினைதிறன், உற்பத்தி வினைதிறன், ஊழியர் செறிவான பொருளாதார வளர்ச்சியின் மூலம் பெறப்பட்ட சிறந்த பயன்பாடுகள் காரணங்களாக அமைகின்றன. அறிவும் அறிவை அடிப்படையாகக் கொண்ட காரணிகளைச் சேர்த்த இடைத்தொடர்புகளும் உலகப் பொருளாதாரத்தில் நுழைவதற்கான அறிவு, வர்த்தக இரகசியங்கள் என்பன பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கும் காரணிகளாக அமைவதுடன், பொருளாதார வளமாகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

- அறிவும் கல்வியும் என்ற வகையில் அறிமுகப்படுத்தப்படுகின்ற மனித மூலதனமானது விளைதிறனான சொத்தாக அல்லது வியாபார உற்பத்தியாகப் பயன்படுத்தும் முறை தொடர்பாகக் கவனத்தைச் செலுத்துகின்றது.

- உற்பத்தியை நுகர்விற்காக அல்லது ஏற்றுமதிக்காக பயன்படுத்த முடிவதுடன், மனித மூலதனமானது வியாபாரத்திற்கும் பொருளாதாரத்திற்கும் நன்மை பயப்பதற்குப் பயன்படுத்தப்படும்.

- அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் முக்கிய எண்ணக்கருக்கள்:
    - அறிவுசார் நுட்பவியலாளர்கள்
    - அறிவுசார் பொறியியலாளர்கள்
    - அறிவுசார் மூலதனம்
    - நுண்ணறிவு மூலதனம்
    - நுண்ணறிவுச் சொத்து

**அறிவுசார் பொருளாதாரத்தை நோக்கிச் செல்வதில் எதிர்நோக்கும் சவால்கள்:**

- இலங்கையில் பொருளாதார வளர்ச்சி வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுதல்.

- இதனால் சமூகக் கல்வி மட்டம், பயிற்சி மட்டம் என்பன குறைந்த மட்டத்தில் காணப்படும். இதனால் மனித மூலதன திரட்சி குறைவாக இருத்தல்.

- ஆராய்ச்சி, அபிவிருத்தி மீது மேற்கொள்ளும் செலவுகள் குறைவாக இருத்தல்.

- இலங்கையில் நிலவும் குறைந்த தேர்ச்சி மட்டம், குறைந்த சம்பள மட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் மயமாக்கச் செயற்பாடு காரணமாக, அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சிச் செயற்பாட்டை நோக்கிச் செல்லும் நிலை குறைந்துள்ளது.
- 1998 ஆம் ஆண்டை அண்மிக்கும்போது இலங்கையானது குறைந்த வருமானம் பெறும் நாடுகளிலிருந்து குறைந்த - மத்திய வருமானம் பெறும் நாடாக மாற்றமடையும் போது இலங்கைக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைத்த நன்கொடை உதவிகள் மட்டுப் படுத்தப்பட்டன.
- இதனால் கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முதலீடு களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.
- நேரடி வெளிநாட்டு முதலீடுகளானது குறைந்த தொழில்நுட்பத்துடன் ஊழியச் செறிவான தொழில்களை நோக்கி அதிகளவில் உட்பாய்ச்சப்படுவதனால் மனித மூலதனத்தை உயர்த்துவதற்கான வாய்ப்புக் குறைவாக இருத்தல்.

**அறிவுசார் பொருளாதாரச் சுட்டெண்**

- அறிவுசார் பொருளாதாரச் சுட்டெண்ணைத் தயாரிப்பதற்குப் பின்வரும் நியமங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
    - பொருளாதார ஊக்குவிப்புகளும் பயன்பாட்டின் கட்டமைப்பும்
    - புத்தாக்கமும் தொழில்நுட்ப பயன்பாட்டின் ஈடுபாடும்
    - கல்வியும் பயிற்சியும்
    - ICT கீழ் கட்டமைப்பு வசதிகள்
- இந்தச் சுட்டெண்ணின் அடிப்படையில் 2012 இல் பிரதான இடத்தைப் பெற்றுக் கொண்ட நாடுகள் வருமாறு:
    - சுவீடன்
    - பின்லாந்து
    - டென்மார்க்
    - நெதர்லாந்து
    - நோர்வே
- இலங்கையில் சுதந்திரத்திற்குப் பின்னர் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற் திட்டங்களில் நகரத் துறைக்கே அதிக நன்மைகள் கிடைத்தன. இதனால் இலங்கையில் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியையும் சமூக அபிவிருத்தியையும் மேல் மாகாணத்தைச் சேர்ந்த கொழும்பு நகரமே அடைந்து கொண்டது. நாட்டில் ஏனைய மாகாணங்களும் மாவட்டங்களும் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வளர்ச்சியை அடைந்ததன் காரணமாக சமநிலையான பிரதேச அபிவிருத்தித் திட்டங்களைத் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மேற்கொள்ள வேண்டியிருந்தது.

- இலங்கையில் கிழக்கு மாகாணம், வடக்கு மாகாணம், ஊவா மாகாணம் போன்ற மாகாணங்களில் வேலையின்மை, வருமானச் சமமின்மை, வறுமை என்பன உயர்ந்த மட்டத்தில் இருந்ததுடன், கீழ் கட்டமைப்பு வசதிகளும், மனித வள அபிவிருத்திகளும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. இதனால் இம்மாகாணங்களில் பிரதேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள் எழுந்தன. இதற்காக பல்வேறான திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

  **உதாரணம்:-** கிராமிய சக்தி வேலைத்திட்டம், கம்பெரலிய வேலைத்திட்டம், உதாகம வேலைத்திட்டம், கமநெகும, கெமிபுபுதுவ, கெமிதிரிய எண்ணக்கரு. (அண்மைக்கால உதாரணங்களை முன்வைக்குக.)

**தேர்ச்சி 12.0:** **இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பும் கொள்கைகளும் தொடர்பாக நுணுக்கமாக விமர்சிப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 12.3:** **நிகழ்கால பொருளாதாரச் செயற்பாடுகளையும் கொள்கை களையும் விபரிப்பார்.**

**பாடவேளைகள்:** 04

**கற்றற் பேறுகள்:**

- பொருளாதாரத்திற்கு உள்நாட்டு, சர்வதேச நிகழ்வுகள் தாக்கம் செலுத்தும் முறையை விபரிப்பார்.
- உள்நாட்டு, சர்வதேச பொருளாதார நிகழ்வுகளுக்கு உதாரணம் கூறுவார்.
- உள்நாட்டு, சர்வதேச பொருளாதார நிகழ்வுகளில் தாக்கம் செலுத்தும் காரணிகளை விபரிப்பார்.
- தற்கால பொருளாதாரக் கொள்கைகளை விபரிப்பார்.

**பாடவிடயங்களை விளங்கிக் கொள்வதற்கான வழிகாட்டல்கள்:**

- நிகழ்காலத்தில் உலகில் உள்ள எல்லா நாடுகளும் வெளிஉலகத்துடன் பல்வேறான அளவுகளில் ஒன்றிணைந்துள்ளன. அதாவது மூடிய பொருளாதாரம் என்பது காண்பதற் கில்லை. இதனால் பொருளாதாரம் ஒன்றின் செயற்பாடு மீது நிகழ்வுகளைப் போலவே சர்வதேச நிகழ்வுகளும் தாக்கம் செலுத்துகின்றன.
- இங்கு தேசிய, சர்வதேச நிகழ்வுகள் பொருளாதாரத்தில் துறைகள் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் தாக்கத்தைச் செலுத்துகின்றன. அதாவது பேரினப் பொருளாதாரத்தில்,
  - உற்பத்தி
  - தொழில்வாய்ப்பு
  - பொதுவிலை மட்டம்
  - வட்டி வீதம்
  - சர்வதேச வர்த்தகம்
  - சென்மதி நிலுவை
  - நாணயமாற்று வீதம்
  - மூலதனச்சந்தை

  போன்ற துறைகள் மீது தாக்கத்தைச் செலுத்தும்.
- பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் தேசிய நிகழ்வுகளுக்குச் சில உதாரணங்கள்:
  - அரசாங்கம் மாற்றமடைதல்.

**உதாரணம்:-**

- 1977 இல் ஆட்சிக்கு வந்த அரசு செயற்படுத்திய திறந்த பொருளாதாரக் கொள்கை யானது சர்வதேச வர்த்தகப் போக்கு, உள்நாட்டு வர்த்தகப் போக்கு, தொழில் ரீதியான கட்டமைப்பு, வங்கி நிதிக் கட்டமைப்பு என்பவற்றில் முழுமையான மாற்றத்தை ஏற்படுத்தியது.

- 1994 இல் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து பொருளாதாரக் கொள்கை ரீதியான மாற்றத்தினால், பொருளாதாரம் பயணித்த திசையில் குறிப்பிட்டளவு மாற்றம் ஏற்பட்டது. அதாவது பொருளாதாரத்தில் திறந்து விடப்பட்ட நிலைமையானது மிகவும் குறுகிய அளவால் குறைத்தல், தனியார் மயமாக்கல், கொள்கையை மாற்றுதல், விலை உறுதிப்பாடு, வேலையில்லாப் பிரச்சினையைக் குறைத்தல், சட்டத்தையும் ஒழுங்கையும் மேலும் வலுப்படுத்தல் போன்ற காலத்துடன் இணைந்ததாக மாற்றங்கள் மேற் கொள்ளப்பட்டன.
- 2006 இல் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் புதிய பொருளாதாரக் கொள்கைகளும் சீராக்கங்களும் இடம்பெற்றன.
    - உள்நாட்டு விவசாயத் துறையை வலுப்படுத்தல்.
    - தனியார் மயமாக்கல் செயற்பாட்டைக் கட்டுப்படுத்தல்.

- 2015 இல் ஆட்சி மாறியதைத் தொடர்ந்து நிதியின் இறைமைத் தன்மையை உறுதிப் படுத்தல், சமூக சந்தைப் பொருளாதாரத்தை நோக்கிச் செல்லுதல், நல்லாட்சி தொடர்பான முன்மொழிவு, தேசிய ஒன்றிணைப்பை ஏற்படுத்துதல் போன்ற மாற்றங்கள் இடம்பெற்றன.
- 1983 - 2009 வரை (30 வருடங்கள்) இடம்பெற்ற யுத்தம்

  இதனால் நாட்டில் கீழ் கட்டமைப்பு வசதிகள், தொழிற்சாலைகள், விவசாய நிலங்கள் என்பன அழிவடைந்து, உற்பத்தி வீழ்ச்சி, வேலையின்மை உயர்வு, உள்நாட்டு வளங்களின் குறைவான பயன்பாடு என்பன தோன்றின. அரசின் பாதுகாப்புச் செலவினங்கள் மிக உயர்வாகக் காணப்பட்டன.

- 1989 - 1991 வரை நாட்டில் ஏனைய பிரதேசங்களில் காணப்பட்ட உள்நாட்டு யுத்தங்கள்:

  இவை நாட்டின் உற்பத்தி வீழ்ச்சியடையவும் விலை மட்டங்கள் உயர்வடையவும் சொத்துக்களும் கீழ் கட்டமைப்பு வசதிகளும் அழிவடையவும் ஏதுவாகின.

    - இடையிடையே ஏற்பட்ட இயற்கை அழிவுகள்
    - 2004 இல் ஏற்பட்ட சுனாமி
    - இடையிடையே ஏற்பட்ட வெள்ள நிலைமை
    - இடையிடையே ஏற்பட்ட வரட்சி நிலைமை
    - காட்டு விலங்குகளால் தோன்றும் பாதிப்பு

- பொருளாதாரத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்திய சர்வதேச நிகழ்வுகளுக்குப் பின்வரும் உதாரணங்களைக் குறிப்பிடலாம்.
    - ஆசிய நிதி நெருக்கடி:

      இதனால் ஆசியாவில் நிதிச் சந்தை உயர்வான அழுத்தத்திற்கு முகம் கொடுத்த தனால் இவ்வலையத்தில் வெளிநாட்டுச் சட்டப் பணமானது பெருமளவில் குறை மதிப்புடையதாக மாறியது. இதனால் இலங்கை ரூபா குறைமதிப்புடையதாக மாற்ற மடைந்ததுடன், இவ்வலயத்திலிருந்து இறக்குமதி செய்யும் பண்டங்களின் விலையும் உயர்வடைந்தது.

- ஐரோப்பிய பொருளாதாரப் பிரச்சினை:

  2006 இலிருந்து அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் தோன்றிய பொருளாதாரப் பின்னடைவின் காரணமாக உற்பத்தி வீழ்ச்சி, வேலையின்மை உயர்வு, விலை மட்டத்தில் விரைவான அதிகரிப்பு என்பன தோன்றின. PEEGS நாடுகளில் கடுமையான அரசின் கடன் பிரச்சினை தோன்றியது. இவை இலங்கையின் ஏற்றுமதிச் சந்தை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, வெளிநாட்டு முதலீடு என்பவற்றில் பெருமளவு வீழ்ச்சி யைப் பதிவு செய்தது.

- சர்வதேச பொருளாதாரத்தில் நாடுகளுக்கிடையே தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினைகள்:

  விசேடமாக ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா, வட கொரியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளின் காரணமாக கனிய எண்ணெயின் விலை உயர் வடைதல், இலங்கையின் இறக்குமதிச் சந்தை வீழ்ச்சியடைதல், வெளிநாட்டு முதலீடு குறைவடைதல் என்பன ஏற்பட்டன.

- உலகில் கனிய எண்ணெய், தங்கம் என்பவற்றின் விலைகள் உயர்வடைதல், இதனால் இலங்கையின் இறக்குமதிச் செலவுகள் உயர்வடைதல், சென்மதி நிலுவைப் பிரச்சினை, ரூபாவின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சி, எரிபொருளுடன் இணைந்ததாக பணவீக்கம் உயர்வடைதல் போன்றவை இலங்கைப் பொருளாதாரத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது.

- சர்வதேச உணவுப் பற்றாக்குறை:

  2000 ஆம் ஆண்டின் முற்பகுதியில் உலகில் உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் நாடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்பின் காரணமாகப் பாரியளவிலான உணவுப் பற்றாக் குறை தோன்றியது. இதன் விளைவாக இலங்கை இறக்குமதி செய்யும் கோதுமை மா, பால் மா, சீனி போன்ற உணவுகளின் விலைகள் விரைவாக அதிகரித்தது.

- சர்வதேச ரீதியாகப் புவி வெப்பமடைதலில் உயர்வும் பல நாடுகளில் தோன்றிய இயற்கை அழிவுகளும்:

  விரைவான கைத்தொழில் மயமாக்கத்துடன் இணைந்ததாக வளிமண்டலத்திற்கு அனுப்பப்படும் அசுத்தமான வாயுக்களின் காரணமாக உலக வெப்பநிலை விரைவாக உயர்வடைவதனால் கலஸியர் கரைவதனால் கடலின் நீர் மட்டம் உயர்வடையும். இதனால் கடல் வளங்கள் அழிவடைதல் போன்றவை ஏற்படும். இது விவசாய நாடு என்ற வகையில் இவ்வகையின் பொருளாதாரத்தில் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தும்.